Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 25-11-2011 Issued : 25-11-2011

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஆகஸ்ட் 25, 2011—தொகுதி 10—எண் 2**

**Thursday, the 25th August 2011—Volume 10—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**25–8–2011**

**உள்ளடக்கம்**


*பக்கங்கள்*

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 219-265

**2. தகவல் கோரல்—**

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 265

திரு. சு. குணசேகரன் 265

**3. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் *26*—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(ஆ) கோரிக்கை எண் *49*—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(இ) கோரிக்கை எண் *53*—சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(ஈ) கோரிக்கை எண் *31*—தகவல் தொழில்நுட்பவியல் துறை

266-299
302-375

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 266, 280, 291, 308, 309, 310, 313, 322-323, 333, 336, 337, 338,

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 270, 280, 321,

| | பக்கங்கள் |
|---|---|
| மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 274, 281, 320, 360-375 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 276, 277, 281, 340-360 |
| திரு. கே.சி. வீரமணி | 282-287 |
| *திரு. அ. அஸ்லம் பாஷா | 287-291 |
| *திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 272, 279, 292-299 |

3. **மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் *26*—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(ஆ) கோரிக்கை எண் *49*—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(இ) கோரிக்கை எண் *53*—சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(ஈ) கோரிக்கை எண் *31*—தகவல் தொழில்நுட்பவியல் துறை

} தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 295 -296, 297- 298 299, 327, 339 |
| திரு. எம். ஆறுமுகம் | 268-269 296, |
| திரு. சு. குணசேகரன் | 267, 299 |
| *திரு. ஆர். சீனிவாசன் | 302-307 |
| திரு. கே. தங்கவேல் | 307-311, 316-320 324 |





| | பக்கங்கள் |
|---|---|
| திரு. பு. வெற்றிவேல் | 312-314 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 314-315 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 315 |
| செல்வி கே. பாலபாரதி | 279, 315, 321, |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 322, 323 |
| திரு. வி.பி. கலைராஜன் | 323-324 |
| திரு. ஆர். சந்திரசேகர் | 324-330 |
| திரு. வெ. பொன்னுப்பாண்டி | 330-340 |
| மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 334-335 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 338 |

4. **விதி 110–ன்கீழ் அறிக்கை—**

| | |
|---|---|
| நபார்டு வங்கி உதவியுடன் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 300-302 |

5. **அரசினர் தீர்மானம்—**

| | |
|---|---|
| விதி *32*—ஐத் தளர்த்துதல் | 375 |

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 376

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 8

## 2011 ஆகஸ்ட் 25, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்"

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்க வல்லது வேறொன்றும் இல்லை.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**57—**

### துணை மின் நிலையம்

***1769—திரு. ம. முத்துராமலிங்கம்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2011 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். திருமங்கலம் தொகுதி, பேரையூரில் புதியதாக ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் நிறுவுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஊருக்கு உழைத்தாலே
ஏழை உரிமையை மதித்தாலே
பெருமைகள் தேடிவரும்
தானே பதவிகள் நாடிவரும்”

என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லிய பொன்மொழிக்கேற்ப, மக்களின் நலனையே முன்வைத்து பணியாற்றிக்கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பதவியும் வந்தது, நாடு முழுவதும் மக்களுடைய அன்பும், பாசமும் கிடைத்துக்கொண்டிருக்கிற இந்த வேளையில், திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட பேரையூர், மிகமிக பின்தங்கிய பகுதி, விவசாயம் நிறைந்த பகுதி, வளர்ந்து வரக்கூடிய பேரையூர் நகராட்சியை ஒட்டியிருக்கக்கூடிய பகுதியில் அதிக மின்பற்றாக்குறை இருந்ததை உணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது எப்போது அமைக்கப்படும்? இந்த நிதியாண்டிலே அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படுமா? விரைந்து அதை முடிப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரையூர் பகுதியிலே அதிகரித்துவரும் மின்பளுவைக் குறைப்பதற்காக தற்போது, திருமங்கலம் தொகுதி, பேரையூர் பகுதி, டி. கல்லுப்பட்டி 110/33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து அந்தப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. அந்தப் பகுதியிலே, அதிகரித்துவரும் மின்பளுவைக் குறைப்பதற்காக இப்போது அந்தப் பேரையூர் பகுதிக்கென்று, சிலைமலைப்பட்டி என்னும் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி, முடிவடைந்துவிட்டது. எனவே, அந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்படுகின்ற பணி, எவ்வளவு விரைவிலே முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக முடிக்கப்படும். 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திலே அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையத்தை அறிவித்து, நடைமுறைப்படுத்தப்படுமென்று சொல்லியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கல்லுப்பட்டி ஒன்றியம் பேரையூர் வட்டப் பகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் மற்றும் அனைவருக்கும் வணக்கம். செஞ்சி தொகுதிக்குட்பட்ட, செஞ்சி ஒன்றியத்தில், நல்லான்பிள்ளைபெற்றான் என்ற ஊராட்சிக்கருகில் ஏற்கெனவே இரண்டு ஏக்கர் நிலம் இந்த 33/11 துணை மின் நிலையத்திற்காகப் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒப்புதலுக்காக இருப்பதாகத் தெரிகிறது. இதை நிறுவித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில், இந்தத் திட்டம் 12-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே இடம் பெற்றிருக்குமேயானால், அதற்குரிய நிலம் கையகப்படுத்தப்பட்டு, உடனடியாக, நிதிநிலைக்கேற்ப அங்கே புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படுகின்ற பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பீளமேடு பகுதியில், ஆயிரக்கணக்கான மோட்டார் தொழிற்சாலைகள் உள்ளன. அந்தப் பகுதியிலே மின்சாரம் ஒரே சீராக இல்லாமல் அடிக்கடி low voltage ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் தொழிற்சாலைகள் சிறப்பான முறையில் இயங்குவதற்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் மேயராக இருந்தபோது அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2½ ஏக்கர் இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும் நல்ல முறையில் இயங்குவதற்கு ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுப்பார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் கடந்த ஆட்சியில் தொடர் நடவடிக்கை இல்லாததன் காரணமாக, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்த திட்டமிட்ட பணிகள் தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கப்படாத காரணத்தினால் இப்பொழுது இப்படிப்பட்ட





இடர்பாடுகளை நாம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற உடனே இப்படிப்பட்ட மின் தடைகள், அடிக்கடி ஏற்படுகின்ற low shut down பிரச்சினையை, கோவை பகுதியில் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தமாகத் தமிழகம் முழுவதும் அந்தக் குறைபாட்டை நீக்கிட வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையில் கோவை நகரம் உட்பட, சென்னை பெருநகரம் உட்பட அனைத்து நகரங்களிலும், ஒட்டுமொத்தமாகத் தமிழகம் முழுவதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தத் துறை விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, அரசனூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நீண்ட காலமாகத் திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டு, கடந்த ஆட்சியில் நிலமெல்லாம் கையகப்படுத்தப்பட்டு தயார் நிலையில் இருக்கிறது. எனவே, முன்னுரிமை கொடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை இப்போதே நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் ஏற்கெனவே நிலம் தேர்வு செய்யப்பட்டு, 12 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 25

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஊராட்சி, அதைச் சுற்றியிருக்கக்கூடிய கோட்டூர், தோட்டம், புழுதுகுடி, கீழப்பனையூர், மேலப்பனையூர் ஆகிய ஊராட்சிகளைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினாலே அங்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மிகப் பெரிய சிரமங்கள் ஏற்படுகின்றன. சென்ற ஆட்சியில்கூட கோட்டூர் பகுதியில் நிலம் தேர்வு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். எதனாலோ அந்தப் பணி தடைபட்டிருக்கின்றது. ஆகவே, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் சென்ற பதிலின் தொடர்ச்சியாகத்தான் சொல்ல விரும்புகின்றேன். எடுக்கப்பட்ட புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு, இங்கே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பணிகள், நிலம் கையகப்படுத்துகின்ற பணியினால் காலதாமதம் ஏற்பட்டாலும், நிலம் கையகப்படுத்துகின்ற பணிகளை விரைந்து முடித்து, நிலத்தைக் கையகப்படுத்தியிருந்தால் அடுத்து தொடங்கயிருக்கின்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு போன்ற பிரச்சினைகள் இருந்தால் அதையும் விரைவுபடுத்தி, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கிள்ளியூர் தொகுதியில், கருங்கல் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு கடந்த ஆட்சியின்போது இடங்களெல்லாம் கையகப்படுத்தி அதற்கு டெண்டர் விட்டார்கள். ஏதோ காரணத்தினால் டெண்டர் பணி முடங்கிக் கிடக்கிறது. இதை உடனடியாக செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2011 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட கேட்கப்படுகின்ற கேள்விகள் அத்தனையுமே ஒரே பொருளைச் சார்ந்துதான் இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த ஆட்சியில் நிலங்கள் தேர்வு செய்தார்கள், ஆனால் பணிகள் நடைபெறவில்லை என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற பொதுவான கேள்வியாக இருக்கின்றது. ஆகவே, நானும் பொதுப்படையாகவே சொல்கிறேன். இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒட்டுமொத்தமாகத் தீர்வு கண்டிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே, 12 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிலுவையிலே இருக்கின்ற இடங்கள் அனைத்திலும் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விரைவாக அரசு எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

*முற்பகல் 10-10*

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில், ராமாபுரம் ஊராட்சியில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் துணை மின் நிலையம் அமைக்க ஆரம்பித்தார்கள். அதை இதற்கு முன்னால் இருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு கிடப்பில் போட்டுவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் உடனே அதை அமைத்துத் தர, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு மாண்புமிகு

[2011 ஆகஸ்ட் 25

உறுப்பினர்களுடைய துணைக் கேள்விகளுக்கு நான் சொன்ன பதில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கனிதா சம்பத் அவர்களுக்கும் பொருந்தும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில், திருப்புவனம் ஒன்றியப் பகுதியில், தூதை கிராமம் அருகில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அம்மாவின் பொற்கால ஆட்சியில், தூதை கிராமம் அருகில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டது. அதைக் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தில் பலமுறை எடுத்துக்கூறியும், இறுதியாக அதைப் பெயரளவுக்குத் திறந்தார்கள். இப்போது அது சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், திருப்புவனம் பகுதியில் இருக்கின்ற விவசாய பம்புசெட்டுகள், குடிநீர்க் குழாய்கள் போன்றவை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன், துணைக் கேள்விகள் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் குறிப்பிட்ட அந்த நேரத்திற்குள் கேட்பதன் காரணமாக எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. நீங்கள் இப்படியே பேசிக்கொண்டு போனால் அடுத்த முறை உங்களுக்கு வாய்ப்புக் கொடுப்பது குறித்து யோசிக்கப்படும்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பராமரித்துத் தர மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதோடு அதிலே ஏற்கெனவே அமைக்கப்பட்ட துணை மின் நிலையங்களில் பராமரிப்பு இல்லாததன் காரணமாகப் பழுதடைந்திருக்கின்றன. அதனால் அந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற துணை மின் நிலையங்கள் முழுமையாகச் செயல்பாட்டுக்கு வருவதற்கு அதிலே ஏதேனும் பழுதடைந்திருந்தால், உடனடியாகப் பழுதை நீக்கி முழுமையான திறனுடன் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்மாற்றிகள் பழுதடைந்துவிட்டால் அதை மாற்றுவதற்கு மாதக் கணக்கில் ஆகின்றது. விவசாயிகள் முதலீடு செய்த விவசாயம் முழுவதும் அழிந்துவிடுகின்றது. இதனால், விவசாயிகள் வறுமைக்குள் தள்ளப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்ற, transformer-களுக்கு standby transformer-களாக வைத்து மறு நாளே மாற்ற ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை என்றாலும் அதற்கும் பதில் சொல்ல விரும்புகின்றேன். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, எங்கு பார்த்தாலும் transformer-கள் இல்லை, மின் மாற்றிகள் இல்லை, இல்லை, இல்லை என்று இங்கே சொல்கிறார்கள். இந்த நிலை யதார்த்த நிலைதான். நீங்கள் சொல்வது உண்மைதான். நான் மானியக் கோரிக்கைமீதான விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலேயே சொன்னேன். Transformer-கள் இல்லை, materials இல்லை, எல்லாம் இல்லை, இல்லை என்றும் எந்த materials-ம் இல்லை என்பதையும் விவரமாகச் சொல்லிவிட்டேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், கடந்த ஓராண்டுக் காலமாக எந்த materials-ம், மின்சார வாரியத்திற்குத் தேவையான

[2011 ஆகஸ்ட் 25

உபகரணங்கள் எதையுமே கொள்முதல் செய்யவில்லை. அதனால் அங்கே எந்த இருப்பும் இல்லை. சாதாரண ஒரு single transformer கூட அங்கே இருப்பிலே இல்லை. Transformer மட்டுமல்ல துணை உபகரணங்கள், தேவையான feeder-கள் இல்லை, conductor-கள் இல்லை, cable இல்லை, மீட்டர் இல்லை, எல்லாமே இல்லை, எதுவுமே இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அமைந்ததற்குப் பின்பு இப்படிப்பட்ட நிலையை உணர்ந்து உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களால் இடப்பட்ட ஆணையை ஒட்டி, ஆய்வுப் பணியின் காரணமாக எடுத்த முடிவின் அடிப்படையில் இப்போது transformer கொள்முதல் செய்ய விரைவான நடவடிக்கை எடுத்து அநேகமாக இந்த வாரத்திற்குள்ளாகவே அதற்கான டெண்டர்கள் இறுதி செய்யப்பட்டுவிடும். ஆகவே, அந்தப் பணி முடிந்ததற்குப் பின்பு, ஓரிரு வாரங்களில் தேவைப்பட்ட அனைத்து ஊர்களுக்கும் புதிய transformer-கள் வழங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முன்பாக ஒரேயொரு சிறிய வேண்டுகோளையும் உங்கள் முன்வைக்கின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உங்களுடைய பகுதியிலே, நான் யாரையும் குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நிலை உருவாவதற்கு மற்றொரு காரணம் இருக்கிறது. ஆங்காங்கே transformer-கள் அடிக்கடி பழுதாகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்கூட அடிக்கடி சொல்வார்கள். அவருடைய பகுதியிலேகூட அடிக்கடி பழுதடைகின்றன என்று சொல்வார்கள். இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அந்தப் பகுதியினுடைய மின் பளுவிற்குத் தேவையான அளவிற்கு அங்கே transformer அமைக்கப்படுகிறது.

*முற்பகல் 10-15*

ஆனால், மின்சாரத் தேவை விவசாயிகளுக்கு இருப்பதால் அதற்காக 6 மணி நேரம் பகலிலே மும்முனை மின்சாரம் கொடுத்தாலுங்கூட, மற்ற நேரங்களில் அவர்களே ஒரு கெபாசிடர், அதாவது கெபாசிடர் என்று ஒரு கருவி இருக்கிறது, அந்தக் கருவியை அவர்களே மின் மாற்றிகளில் பொருத்திக் கொண்டு மற்ற நேரங்களிலும் கூடுதலாக மின்சாரத்தை எல்லோரும் பயன்படுத்துகிறார்கள்.



2011 ஆகஸ்ட் 25]

ஒட்டுமொத்தமாக அனுமதிக்கப்பட்ட பளுவிற்குமேல் ஒரே நேரத்தில் அத்தனைபேரும் அந்த மின்சாரத்தை உறிஞ்சுகின்றபொழுது, எடுக்கின்றபொழுது மிகக் கூடுதலான மின் பளு ஏற்பட்டு உடனடியாக அந்த transformer போய் விடுகிறது. அதிலே அனுமதிக்கப்பட்டதற்கு மேல் அங்கே அவர்களுக்குத் தேவை இருக்கிறது. அதற்காக ஒவ்வொருவரும் பெரும்பாலான இடங்களிலே கெபாசிடர்களை தாங்களே சொந்தமாக வாங்கி அந்த transformerகளில் அவர்களே பொருத்தி, அது சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தாலும்கூட, விவசாயிகள் அதைச் செய்து, ஒரே நேரத்திலே அவ்வாறு மின்சாரத்தை எடுப்பதால், அதனால் மின் பளு அதிகரிப்பதால் இந்தப் பிரச்சினை அடிக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உரிய அளவில் அனுமதிக்கின்ற அளவிற்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு இருந்தால் இந்தப் பிரச்சினை வருவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலுங்கூட விவசாயிகள் நலன் கருதி, அவை பழுதடைந்திருந்தாலும் உடனுக்குடன் அவை மாற்றி அமைக்கப்படுகின்றன அல்லது தேவைப்பட்டால் புதியதாக அல்லது அந்த மின் மாற்றியினுடைய திறனைக் கூடுதலாகச் செய்தும் புதிய மின் மாற்றிகள் வழங்கப்படுகின்றன. ஆகவே, அந்த நடவடிக்கைகளில் விவசாயிகளும் கொஞ்சம் ஒத்துழைப்புத் தர வேண்டும். அங்கே உள்ள மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள் அவர்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் இந்தப் பிரச்சினை வந்து கொண்டேயிருக்கும். கூடியமட்டும் மின் பளு அதிகரிக்கின்ற இடங்களில் தேவைப்பட்ட அளவிற்கு புதிய கூடுதல் திறன் கொண்ட மின் மாற்றிகளை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, இதே பொருள் குறித்து தங்கள் தொகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று திரு. அ. பாப்பா சுந்தரம், திரு. சோழன் சித. பழனிச்சாமி, திரு. வே. குணசீலன் ஆகியோர் துணைக் கேள்விகள் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார்கள். காலத்தின் அருமை கருதி மாண்புமிகு உறுப்பினர்கள், அமைச்சரிடத்தில் அவற்றை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவர் நடவடிக்கை எடுப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 ஆகஸ்ட் 25

வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**58—**

**பாதாள சாக்கடை**

***1320—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேடு பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேடு பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, நூறு நாட்களிலே, நூற்றாண்டு சாதனைகளை நிகழ்த்திவரும் கருணை உள்ளம் கொண்ட எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கிட திட்டங்களை வகுத்து செம்மைப்படுத்திடும் எங்கள் இதய தெய்வமே, தமிழகம் தலைநிமிர்ந்திட தமிழக மக்களின் வாழ்வு உயர நாளொன்றுக்கு 22 மணி நேரம் கண் துஞ்சாமல் உழைக்கும் எங்கள் இதய தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண எளிய தொண்டனான என்னை, கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய கழக துணைச் செயலாளராகவும், ஒன்றிய இளைஞர் அணியினுடைய துணைச் செயலாளராகவும், மாவட்ட மாணவர் அணியினுடைய செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், அமைச்சராகவும், இந்த 14-வது சட்டமன்றப் பேரவையிலே மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்த்திடும் எங்கள் இதய தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற் பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன் தாயே! எனது வெற்றிக்குப் பாடுபட்ட தோழமைக் கட்சியினருக்கும் அதிக வாக்குகளை அளித்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த காஞ்சிபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.



2011 ஆகஸ்ட் 25]

காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட செவிலிமேடு பேரூராட்சி என்பது வளர்ந்துவரும் நகரமாக மாறி வருகிறது. இங்கே சுமார் 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். அந்தப் பகுதி மக்களினுடைய நெடுங்காலக் கோரிக்கை அந்தப் பகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்பது. அந்தக் கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே கோரிக்கையாக மனு கொடுக்கப்பட்டு கடந்த 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்கள். தமிழகத்தின் வளத்தை உறிஞ்சி குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொண்ட மைனாரிட்டி தி.மு.க. சர்க்கார் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தத் திட்டம் என்பதால், கடந்த 5 ஆண்டுக் காலமாக அதைக் கிடப்பிலே போட்டார்கள். நீண்டநாள் கோரிக்கை போர்க்கால அடிப்படையிலே தீர்த்து வைக்கப்படும் என்று கூறிய தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களினுடைய சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன்.

[2011 ஆகஸ்ட் 25

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலிமேடு பேரூராட்சி 23,500 மக்கள் தொகை கொண்ட ஒரு பேரூராட்சி ஆகும். இந்தப் பேரூராட்சிக்குப் பாதாள சாக்கடை அமைப்பதற்காக கடந்த ஆட்சியாளர்கள் 21-10-2008-ல் ஒரு அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். 7.7 கோடி ரூபாய் அளவில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும் என்று அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த அரசாணையின் வாயிலாக மாநில அரசு நிதி ஒதுக்கியதா என்று சொன்னால் இல்லை. மாறாக மத்திய அரசின் ஒருங்கிணைந்த சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் இந்த நிதியை மைய அரசிடத்திலே கேட்டிருக்கிறார்கள். மைய அரசு உடனடியாக அந்த நிதியை அளிக்கவில்லை. அதற்கு அடுத்தபடியாக, மீண்டும் மறு மதிப்பீடு போட்டு 9.17 கோடி ரூபாய்க்கு மீண்டும் திட்டத்தைத் தீட்டி மைய அரசிடத்திலே கேட்டிருக்கிறார்கள். மைய அரசு அந்த நிதியை அளிக்காத காரணத்தினால் 2-9-2010-ல் இந்தத் திட்டத்தையே முந்தைய அரசு கைவிட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது, கடந்த 24-6-2011 அன்று இந்தத் துறையினுடைய ஆய்வை எடுத்துக்கொண்ட நேரத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்த ஆணையின் அடிப்படையில் தமிழகத்திலிருக்கின்ற எல்லா நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாகத் திட்டங்கள் தீட்டப்பட்டு வந்துகொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே இந்தப் பேரூராட்சிக்கும் திட்டம் தீட்டப்படுகிறது. இருந்தாலும் இந்தப் பேரூராட்சி இப்பொழுது காஞ்சிபுரம் நகராட்சியோடு இணைய இருக்கிறது. இப்படி இணைய இருக்கின்ற காரணத்தினால், காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளையும் ஒன்றுபடுத்தி ஒரு திட்ட வரைவு ஏற்படுத்தி, உடனடியாக பாதாள*



2011 ஆகஸ்ட் 25]

*சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள்.*

**திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு, சாலைகள் அமைக்கிற பணியை நிறைவு செய்வதற்கு ஆறு மாத காலம்தான் தேவை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால், தி.மு.க.-வைச் சார்ந்த நகரமன்றத் தலைவர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் 1½ ஆண்டுகள், இரண்டு ஆண்டுகள் ஆகியும்கூட சாலை வசதிகள் செய்யப்படுவதில்லை. நான் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, பாதாள சாக்கடைப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு, சாலை அமைப்பதற்கு எவ்வளவு காலம் அரசு எடுத்துக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே முந்தைய ஆட்சியாளர்கள் எடுத்த அந்தத் திட்டத்தின் வாயிலாக பல நகராட்சிகளில் சாலைகள் பணி முழுமையாக நடைபெறவில்லை என்று சொல்லுகிறார்கள், அது உண்மை. காரணம் முந்தைய ஆட்சியாளர்கள், ஏதோ தான்தோன்றித்தனமாக மக்கள் மத்தியிலே தமிழகம் முழுவதுமே பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வருகிறோம் என்ற ஒரு மாயையை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நகராட்சியிலும் குழியைத் தோண்டினார்கள். அப்படி குழியைத் தோண்டி முழுமையாக நிறைவேற்றினார்களா என்று சொன்னால், இல்லை. எல்லா தெருக்களிலுமே குழியைத் தோண்டிவிட்டார்கள். எல்லா இடங்களிலுமே முழுமையாக பாதாள சாக்கடை போட முடியவில்லை. அதனால்தான், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்*

இப்போது ஒரு புதிய அறிவுரையை இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். என்னவென்று சொன்னால், இப்போது எடுக்கப்படுகின்ற பாதாள சாக்கடைத் திட்டங்கள் அத்தனையும் முறையாக ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியை முடித்து, அந்தப் பகுதி முடித்த பின்பு மக்கள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு சாலைகளை அமைத்த பின்பு, அடுத்தப் பகுதிக்குச் செல்லுங்கள் என்று அறிவுரை கூறியிருக்கிறார்கள். எனவே, வருங்காலத்தில் நடைபெறுகின்ற அத்தனை பாதாள சாக்கடைத் திட்டங்களும் அங்கே வாழ்கின்ற மக்களுக்கு எந்த வகையிலும் இடையூறு இல்லாமல் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். இப்பொழுது முன்னாள் ஆட்சியாளர்கள் கொண்டுவந்த பாதாள சாக்கடைத் திட்டத்திலே இருக்கின்ற குறைகளை நீக்கி விரைவாக புரட்சித் தலைவி அரசு நிறைவேற்றும் என்பதைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் கோவை மாநகராட்சியில் தொடங்கப்பட்டு கிட்டத்தட்ட ஓராண்டிற்கும் மேலாகியும்கூட அனைத்துப் பகுதிகளிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, தோண்டி படுகுழிகளாக, அந்த இடங்களில் சுகாதாரக் கேடு ஏற்படக்கூடிய வகையிலும், நடமாடவே முடியாத அளவிற்கு மோசமான நிலைகள் உருவாகியிருக்கக்கூடிய சூழ்நிலையில், கோவை மாநகராட்சியில் அந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்ன கருத்தையே மாண்புமிகு தோழருக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், மாநகராட்சியானாலும் சரி,





நகராட்சியானாலும் சரி, பேரூராட்சியானாலும் சரி, முந்தைய ஆட்சியாளர்கள் விளம்பரத்திற்குத்தான் வந்து சென்றார்களேயொழிய, அங்கிருக்கின்ற மக்களினுடைய தேவைகளை, அவர்களுடைய உணர்வுகளை மதித்தார்களா என்று சொன்னால், கடந்த ஆட்சியாளர்கள் மதிக்கவில்லை. தமிழக மக்களின் உணர்வுகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு, நேற்றுக்கூட பார்த்திருப்பீர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மிக அழகாக, மனம் உருகுகின்ற வகையிலே, நேற்று கிட்டத்தட்ட 20 நிமிட நேரம், இந்த மக்களுக்காக தன்னை எப்படி அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையொட்டி, இந்த அரசு நிச்சயமாக, மக்களினுடைய நலனில் அக்கறை கொண்டு, அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து, எல்லா பணியையும் நிறைவேற்றும் என்பதை மாண்புமிகு தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றத்தைத் தந்துகொண்டிருக்கின்ற எங்களது பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது தொகுதியில், துறையூர் நகரத்தில் கிட்டத்தட்ட 24 வார்டுகள் உள்ளன. அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடைகள் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல, 559 பேரூராட்சிகளுக்கும் பாதாள சாக்கடை போடுகின்ற திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இப்பொழுது செயல்முறைப்படுத்திக் கொண்டு வருகிறது. அதில் ஓர் அங்கமாக,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பேரூராட்சியும் அதிலே அடங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம். (குறுக்கீடு) செல்வத்தை அழைத்தால் செல்வராஜ் எழுந்திருக்கிறார். திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.*

**திரு. எஸ்.கே. செல்வம்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டு சாதனைகளை 100 நாட்களில் நிகழ்த்தி சாதனை புரிந்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், அம்மா அவர்களுக்கு நன்றியினைக் கூறி, சேலம் மாநகரில் பாதாள சாக்கடை அமைக்கின்ற பணியைப் பொறுத்தவரை, தமிழகத்திலேயே மிக மெதுவாக நடைபெறுகின்ற பணிகளில் அதுவும் ஒன்று என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர், மைக்கை சற்று தொலைவில் வைத்துப் பேசுங்கள். சரி, இது* correct position.

**திரு. எஸ்.கே. செல்வம்**: *திராவிட முன்னேற்றக் கழக மாமன்ற உறுப்பினர்கள் எங்கெங்கெல்லாம் வெற்றி பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் பகுதிகளிலே மட்டும் அந்தப் பணிகள் நடைபெறுகின்றன. ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அத்துணை பகுதிகளுக்கும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, கடந்த ஆட்சியாளர்கள் சுயநலத்தினால், மக்களைச் சந்தித்ததால்தான் நடைபெற்ற தேர்தலில் அவர்கள் ஆட்சியைவிட்டே வெளியேறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், 'தலைவன் எவ்வழியோ தொண்டன் அவ்வழி' என்று சொல்லுவார்கள். அவர்களுடைய தலைவர் எப்படிச் செயல்பட்டாரோ, அதைப்போல அவர்களுடைய தொண்டர்களாக இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள், தங்கள்



பகுதிகளுக்கு மட்டும் போதும் என்ற நிலையிலே அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, எல்லோருக்கும் சமமான உரிமையைப் பெற்றுத் தருகின்ற ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, விரைவாக, சேலம் மாநகராட்சியில் எல்லா பகுதிகளிலும் பணிகளை எடுத்துக்கொண்டு, விரைவாகப் பணிகள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகரத்திற்குப் பாதாள சாக்கடைத் திட்டம், சென்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 2005-லே தொடங்கப்பட்டு, கடந்த தி.மு.க. ஆட்சியிலே பணிகள் சரிவர செய்யாத நிலையிலே, இப்போது மழை பெய்யக்கூடிய நேரத்திலே இராமநாதபுரம் போவதற்கே எனக்குப் பயமாக இருக்கிறது. ஏனென்றால் நகரத்தில் பல்வேறு இடங்களிலே வெள்ளக்காடாக ஆகக்கூடிய ஒரு சூழல். இந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் போர்க்கால அடிப்படையிலே இராமநாதபுரம் நகரத்திலே விரைந்து முடித்தால் இந்த நிலை சீராகும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று உங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதிக்குட்பட்ட திங்கள் நகர் பேரூராட்சி மற்றும் குளச்சல் நகராட்சிப் பகுதிகளில் சுகாதாரக் கேடு ஏற்பட்டிருக்கிறது. அதை நீக்கும் வகையிலே பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 25

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலைத் தொகுதியிலே இலுப்பூர் மற்றும் அன்னவாசல் பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன மேற்படி திட்டத்தின்கீழே வளர்ச்சியடைந்த ஊராட்சிகளுக்கும் இந்த நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழே பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்துவார்களா? அதிலே விராலிமலை ஊராட்சி, பேரூராட்சி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சி. அதேபோன்று, பட்டுக்கோட்டை தொகுதியிலே இருக்கக்கூடிய அதிராம்பட்டினம், இஸ்லாமிய பெருமக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதியிலே மிகப் பெரிய, சிறிய தெருக்கள், மிகக் குறுகலான சந்துகள் இருக்கின்றன. அங்கே அதிகமான வீடுகள் இருக்கக்கூடிய காரணத்தினாலே அதற்கு அதிக முன்னுரிமை கொடுத்து பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய பொதுச் செயலாளர், 3-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஆகஸ்ட் 25]

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், ஒன்றியப் பேரவைச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 1996-லே சட்டமன்றத் தேர்தலில் வந்தவாசியில் எனக்கு போட்டியிட வாய்ப்பு தந்து, வெற்றிவாய்ப்பை இழந்தாலும், மீண்டும் 2011ஆம் ஆண்டு தேர்தலிலே வந்தவாசி தொகுதியிலே 26 ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு வெற்றி வேட்பாளராக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் திருக்கரங்களால் உருவாக்கப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மைக்கிலிருந்து கொஞ்சம் தூரமாக நின்று பேசுங்கள்.

**திரு. வே. குணசீலன்:** பின்தங்கிய தொகுதியான வந்தவாசி நகரத்தில் 26 வார்டுகள் உள்ளன. அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமா? அந்தப் பகுதியிலே லைட்டுகள் எரியவில்லை. கேட்டால் டெண்டர் விடப்பட்டு தனியாரிடம் அந்தப் பொறுப்பு விடப்பட்டிருக்கிறது என்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழக அரசிலே 4 கோடியே 90 இலட்சம் ரூபாயில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. வே. குணசீலன்:** பேருந்து நிலையம் திறக்கப்பட்டு கிடப்பில் உள்ளது. அந்த இடத்திலே தனியாருக்கு விடப்பட்ட பொறுப்பை நகராட்சி நிருவாகமே எடுத்துக்கொண்டு லைட்டுகளை மாற்ற மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.

**திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி, திருநின்றவூர் பேரூராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமா, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர்

[2011 ஆகஸ்ட் 25

அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உறுப்பினர்களையும் கேள்வி கேட்க அனுமதித்து அவர்களைப் பேச வைப்பது உங்களுடைய நல்ல நோக்கம். ஆனால், கேள்வி நேரம் என்பது மிகவும் முக்கியமானது. அதனுடைய தன்மையை நாம் மாற்றக் கூடாது. இது இன்னொரு துணை மானியக் கோரிக்கையாக மாறிவிடக் கூடாது. ஆகவே, ஒவ்வொரு உறுப்பினருடைய கேள்விக்கும் குறிப்பிட்ட நேரத்தைப் பயன்படுத்தி பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு உறுப்பினருடைய பெயரைச் சொல்லித்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** நீங்கள் மொத்தமாக எல்லா உறுப்பினர்களையும் பேச அனுமதித்து அதன் பிறகு பதில் சொல்ல வேண்டுமென்றால் அது மானியக் கோரிக்கை. கேள்வி நேரம் என்பது இன்னொரு மானியக் கோரிக்கை மாதிரி ஆகிவிடும். ஆகவே, கேள்வி நேரம் என்பது ஒரு உறுப்பினர் கேள்வி கேட்பார், அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன் அவர்கள்.

**திரு. செ. அருண் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கு வந்து நூறு நாட்களாகிவிட்டன. இதுவரை எந்த வார்த்தையையும் பேசாமல் அமைதியாக இருந்து, இன்றைக்குப் பேசுகிறேன். நீங்கள் கொடுத்த Assembly Rules புத்தகத்தை மிகவும் நன்றாகப் படித்துவிட்டேன். கேள்வி நேரத்தில் இத்தனைக் கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு மிக்க நன்றி. Assembly Rules-ல் துணைக் கேள்வியைப் பற்றி மிகத் தெளிவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் எதைக் கேட்கவேண்டும் என்று தெளிவாக உள்ளது. அதனை மீறியும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும்



2011 ஆகஸ்ட் 25]

அழகாக அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். நிச்சயமாக இதுமாதிரியிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லுகிற மாதிரிதான் நடக்கும். மீண்டும் எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகராட்சி, பவானி ஆற்றங்கரையின் ஓரத்திலே அமைந்திருக்கிற ஒரு நகராட்சி. இந்த நகராட்சிப் பகுதி கழிவு நீர் பவானி ஆற்றிலே கலக்கிற காரணத்தினால், தண்ணீர் மாசுபடுகிறது. அதைக் கருத்தில்கொண்டு, மேட்டுப்பாளையம் நகராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்து, பாதாளச் சாக்கடை மூலமாக வருகின்ற கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, பவானி ஆற்றிலே கலக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, உரிய மூலக் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றார்கள். துணைக் கேள்விக்கு உரிய பதிலையும் சொல்கின்றார்கள். மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அதுசம்பந்தமாக மூலக் கேள்வியுடன் தொடர்புடைய துணைக் கேள்விகளைக் கேட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஒரு நல்ல பதில் கிடைக்கும். நிறைய உறுப்பினர்கள் இன்றைக்கு துணைக் கேள்வி கேட்பதற்கு முன்வந்திருக்கிற நேரத்தில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களும் அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் கேள்விகளைக் கேளுங்கள் என்று அனுமதியளித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும்

[2011 ஆகஸ்ட் 25

குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அனைவருக்கும் பொதுவாக, மொத்தமாக பதில் அளிப்பாரென்ற ஒரு நிலையினை எடுத்திருந்தார்கள். ஆகவே, இனி வருங்காலங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்வியைக் கேட்கும்போது மூலக் கேள்வியுடன் தொடர்புடைய துணைக் கேள்விகளைக் கேட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய பதிலைத் தருவதற்கு வசதியாக இருக்கும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்களுக்கு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 49 (1), 'துணை வினாக்களும், அவைகளை அனுமதித்தலும்', என்ற தலைப்பின்கீழ் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது என்னவென்றால், "உடுக்குறியிட்ட வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடையின்மீது மேற்கொண்டு விளக்கம் பெறும் வகையில் வினாவிற்கு முன்னறிவிப்பு கொடுத்த எந்த உறுப்பினரும் துணை வினா அல்லது வினாக்களைக் கேட்கலாம்.

மேலும் பேரவைத் தலைவர் தம் விருப்பப்படி மற்ற உறுப்பினர்களையும் துணை வினாக்கள் கேட்பதற்கு அனுமதி அளிக்கலாம்." எனவே, நீங்கள் சொன்னபடி அந்த விதி எதிலுமே குறிப்பிடப்படவில்லை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே முன்னாள் ஆட்சியிலே துவக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும்கூட முடிவுபெறவில்லை என்று சொன்னார்கள். அதோடுமட்டுமல்லாமல், அங்கு செல்வதற்கே பயமாக இருக்கிறது என்ற ஒரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழகத்தில் எல்லா இடங்களுக்கும், எந்த நேரத்திலும் தைரியமாக செல்லலாம். அதற்கேற்ற திட்டங்களைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவரவிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய



2011 ஆகஸ்ட் 25]

உணர்வுகளுக்கு ஏற்றவாறு விரைவாக இராமநாதபுரம் நகரத்தினுடைய பாதாள சாக்கடைத் திட்டம் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, குளச்சல் சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கோரியிருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்னதுபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டங்களைத் தீட்டச் சொல்லியிருக்கிறார்கள். அவை நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, விராலிமலை தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் மருத்துவர் அவர்கள் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அந்தப் பணியும் இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் அதிராமப்பட்டினம் திட்டத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதுபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள், மேட்டுப்பாளையத்தில், அந்தத் திட்டத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இப்பணி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிற நகராட்சிகளில் விரைவாக முடிப்பதற்கும், மற்ற நகராட்சி, பேரூராட்சிகளில் முறையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக திட்டங்கள் தீட்டப்பட்டு, அந்தத் திட்டங்கள் முறைப்படுத்தப்பட்டு, முறைப்படுத்தப்பட்ட பின்பு, ஒவ்வொரு திட்டமாக எடுத்து, இந்த 5 ஆண்டுகளுக்குள் விரைவாக முடிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**59—**

## நியாய விலைக் கடை

*__242—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:__

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, மா. மேலப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக்கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, மா. மேலப்பட்டி கிராமத்திலுள்ள 185 குடும்ப அட்டைதாரர்களும் 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாங்கோட்டை தாய் அங்காடியில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகிறார்கள். மா. மேலப்பட்டி கிராம மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற 3 கிலோ மீட்டர் தொலைவு செல்ல வேண்டியுள்ளதைக் கருத்தில்கொண்டு தற்போது, நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளையெல்லாம் தளர்த்தி, மா. மேலப்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.*

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கக்கூடிய பதிலுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். பகுதிநேர அங்காடியில் பணியாளர் நியமனம் என்பது, 500 குடும்ப அட்டைகள் இருக்கக்கூடிய ஒரு தாய் அங்காடியில் பணியாற்றுகின்ற அதே பணியாளரை, பகுதிநேர அங்காடிக்கும் பணியமர்த்துகிறபோது, இரண்டு அங்காடிகளுக்குமே பிரச்சினையாக இருப்பதால்,*





*பகுதிநேர அங்காடிக்கென்று தனியாகப் பகுதிநேரப் பணியாளர் நியமனத்தையும் சேர்த்துச் செய்யப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதி நேர கடைகளுக்கும் தாய் கடைகளைப்போல் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்று கேட்டுள்ளார். தற்போது, அரசுக்கு அதுமாதிரியான கருத்துரு ஏதுமில்லை. இருந்தாலும், ஒரு தாய் கடையை நடத்துவது என்பது, தாய் கடையிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பகுதி நேர கடைகளை நடத்துவதற்குத்தான் இப்போது அனுமதியுள்ளது. அதுவும் அந்தத் தாய் கடையில் இருக்கின்ற பணியாளர்கள்தான் மூன்று நாட்கள் துணைக் கடையையும், மூன்று நாட்கள் தாய்க் கடையையும் நடத்துவதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.*

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாங்கோட்டை மேலப்பட்டி கிராமத்தில் எந்தக் கால அளவிற்குள் இந்தப் பகுதிநேர அங்காடி துவக்கப்படும் என்பதனை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுகோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட கரம்பக்குடி வட்டத்திலுள்ள மா. வேலப்பட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர அங்காடி அமைப்பதற்கான செயற்குறிப்பு, புதுக்கோட்டை மண்டல இணைப் பதிவாளர் கடிதம் எண் 1649/2011 பொது விநியோகத் திட்டம்-4, நாள் 18-7-2011 இல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு, மாவட்ட வழங்கல் அலுவலகத்தின்*

*செயற்குறிப்பின்மீது கரம்பக்குடி வட்ட வழங்கல் அலுவலரின் குறிப்பினை கடித எண் கே2/20694/2011 நாள் 9-8-2011 இல் கோரியுள்ளார். வட்ட வழங்கல் அலுவலரின் இக்குறிப்பினைப் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத் துறை ஆணையருக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அதன் பின்னர் அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு, ஆய்வுக்குப் பின்னர் உரிய ஆணைகள் அரசால் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்கள் மற்றும் வனப் பிரதேசங்களில் 100 குடும்பங்கள், 80 குடும்பங்கள், 70 குடும்பங்கள் என்று தனித் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 8 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் இடைவெளிகளில்தான் கிராமங்கள் இருக்கின்றன. எனவே, அப்படி வாழ்கின்ற சிறு, சிறு கிராமங்களுக்குப் பகுதி நேர கடைகள் அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, அரசுக் குறிப்பில், மலைப் பகுதிகளில் 400 குடும்ப அட்டைக்கு ஒரு தாய் கடையும், 100 குடும்ப அட்டைகள் உள்ள கிராமத்திற்கு ஒரு பகுதி நேர கடையும் அமைக்கலாம் என்றுதான் விதி உள்ளது. எனவே, 400 குடும்ப அட்டைகள் அல்லது 100 குடும்ப அட்டைகள் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரே முடிவு எடுத்து கடை அமைக்கலாம். ஆனால், அதற்கும் குறைவாக கார்டுகள் உள்ள கிராமங்களில் கடைகள் அமைக்க வேண்டுமென்றால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலைப் பெற்று, உணவுத் துறை ஆணையாளருக்கு கருத்துருவை அனுப்பி அனுமதி பெற்று, அதற்குப் பிறகே கடைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

**திரு. கா.கோ. ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ராஜமங்கலம், அனுப்பம்பட்டி, சின்னகந்திலி ஆகிய பகுதிகளில் பகுதி நேர கடைகள் வேண்டி கோரிக்கைகள் வைக்கப்பட்டன. ஆனால், அவை கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் நிராகரிக்கப்பட்டன. அந்தப் பகுதி மக்களெல்லாம் பகுதி நேர கடைகள் இல்லாமல் நீண்ட நாட்களாக அவதிப்பட்டு வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலையை மாற்றித் தந்து தொகுதி மக்களுடைய குறைகளைப் போக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளவாறு, குறிப்பாக அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப, கடைகள் திறப்பதற்குரிய அனைத்துத் தகுதிகளும் இருந்தால், நிச்சயமாக பகுதிநேர கடைகள் விரைவாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

**திரு. ஆர். சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியிலுள்ள பல பகுதிகளுக்கு பகுதி நேர ரேஷன் கடைகளைப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதுகுறித்து நான் அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்கின்றபொழுது, தாய்க் கடையில் 500 கார்டுகள் அல்லது அதற்குமேல் இருந்தால்தான் கடைகள் பிரித்துத் தரப்படுமென்று சொல்கிறார்கள்.*

[2011 ஆகஸ்ட் 25

ஏற்கெனவே 2 பகுதி நேரக் கடைகள் பிரிக்கப்பட்டிருந்தால், 3-வது கடையைப் பிரிக்க இயலாதென்று அதிகாரிகள் சொல்லிவிடுகிறார்கள். ஆகையால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதனை கொண்டு சென்று, 100 அல்லது 150 கார்டுகள் இருக்கிற பகுதிகளுக்கு உடனடியாக பகுதி நேர ரேஷன் கடையை என்னுடைய மேலூர் தொகுதியிலுள்ள வெள்ளிமலை போன்ற மலைப் பகுதிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3-வது பகுதி நேர நியாய விலைக் கடையை அமைப்பது குறித்து இங்கே கேள்வி எழுப்பியுள்ளார்கள். பொதுவாக, 500 குடும்ப அட்டைகள் அல்லது 150 குடும்ப அட்டைகள் உள்ள கிராமங்களில் துணை நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கும் குறைவாக, ஒன்றுக்கும் மேற்பட்ட 2 நியாய விலைக் கடைகள் அல்லது 3 பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துருவினைப் பெற்று, அவசியம் கருதி உணவுத் துறை ஆணையாளரின்மூலம் கருத்துருவினைப் பெற்று அந்தக் கடைகள் அமைக்கப்படும். அப்படி அமைக்கப்படுகின்றபொழுது தாய் கடைகளினுடைய எண்ணிக்கை குறைவாகி விடுவதால், அவை பகுதி நேரக் கடைகள்போல் ஆகிவிடும். ஏனென்றால், இன்றைக்கு நியாய விலைக் கடைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊக்கத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. பணியாளர்கள் பற்றாக்குறையும் இருக்கின்றது. இதுபோக, இன்றைக்குப் பகுதி நேர கடைகளினுடைய எண்ணிக்கையும், தாய்க் கடைகளினுடைய எண்ணிக்கையும் குறைவாக இருந்தால், எது தாய்க் கடை என்ற சிக்கலை உருவாக்குகின்ற வகையில் இருக்கின்றது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அந்தக் கடைகளை அமைக்க வேண்டியதன் நோக்கம் மற்றும் அதற்கான கருத்துருவினைப் பெற்று அனுப்புவார்களேயானால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா



2011 ஆகஸ்ட் 25]

அவர்களுடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**60—**

### மாற்றுப் பாதை

***1338—திரு. ப. சம்பத்குமார்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோட்டிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்கு மாற்றுப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தக் கோயில் 650 அடி உயரத்தில் மலையின் மேல் அமைந்துள்ளது. பக்தர்கள் இந்தக் கோயிலுக்குச் செல்வதற்கு வசதியாக 1,200 படிகள் கொண்ட படிக்கட்டுப் பாதை உள்ளது. மேலும், மலைக் கோயிலுக்குச் செல்வதற்கு வசதியாக 2 கிலோ மீட்டர், 550 மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலையும் உள்ளது. பக்தர்களின் வசதிக்கு இது போதுமானதாக இருப்பதன் காரணமாக இந்தப் பாதையே போதுமென்ற நிலைமை இருந்து வருகிறது. மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம் ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 ஆகஸ்ட் 25

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**61—**

**அணை**

***1640—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சி, பெரியபாலேகுழி அருகில் அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சியில் அணை கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை திட்ட உருவாக்கத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட, பேவநத்தம் ஊராட்சியில், பெரியபாலேகுழி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்காக, 1992 ஆம் ஆண்டு துறையின் சார்பாக ஆய்வு செய்து, திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, கடந்த 19 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. கடந்த 2009-2010 ஆம் ஆண்டு 175 இலட்சம் ரூபாய்க்கு திருத்திய மதிப்பீடு செய்யப்பட்டு கடந்தகால ஆட்சியாளர்கள் நிலுவையில் வைத்துவிட்டார்கள். ஆகவே, இந்த ஆண்டு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2011 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சியில் பெரியபாலேகுழி அருகில் அணை கட்டும் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு 2010-2011 ஆம் ஆண்டின் விலை விகிதப்படி 190 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டப் பயன் செலவு விகிதம் 0.79:1 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 19.4 ஏக்கர் பட்டா நிலமும், 38.2 ஏக்கர் புறம்போக்கு நிலமும் மற்றும் 2.1 ஏக்கர் வனத் துறைக்குச் சொந்தமான நிலமும் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி, தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை திட்ட உருவாக்கம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது. மதிப்பீட்டுடன்கூடிய கருத்துரு பெறப்பட்டு, நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்று சொன்னார்கள். எனவே, இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திட்டமிடப்பட்ட அந்த அணை கட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 19 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள அந்தத் திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[2011 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சிக் காலத்தில் வாயலூர் அருகில், பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. அந்தத் திட்டத்தை, இப்பொழுது செயல்படுத்த அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குறிப்பிடுகின்றபொழுது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட திட்டம் என்று குறிப்பிடுவதால், உடனடியாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சித்திரைத் திருவிழாவையொட்டி, கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும்பொழுது, அவ்வப்போது பல இலட்சம் ரூபாயில் பாலம் அமைக்கப்படுகிறது. எனவே, ஆழ்வார்புரத்தில் நிரந்தரமாகப் பாலம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், இதற்கான பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

### புதிய கட்டடம்

***399—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பொன்னமராவதி வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான உரிய செயற்குறிப்பினைப் பெற்று, பரிசீலனை செய்து, அரசு விரைவில் முடிவெடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க அல்லும், பகலும் அயராது உழைக்கும் எங்கள் அம்மாவின் ஆட்சியில், திருமயம் தொகுதி, பொன்னமராவதி தாலுகா அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதனால் பொதுமக்களுக்கு வசதிக் குறைவாக உள்ளது. அரசு அலுவலகங்கள் அனைத்தும் படிப்படியாகச் சொந்தக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நடப்பு நிதியாண்டிலேயே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2011 ஆகஸ்ட் 25

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பது உண்மை. மாதம் ரூ.12,000 வாடகை கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு இடம் தேர்வு செய்வதற்குக் காலதாமதமாகி, இப்பொழுது பொன்னமராவதியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தள்ளி, தூத்தூர் என்ற கிராமத்திலே ஒரு கள்ளாங்குத்து புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்துகின்ற அளவிலே இருக்கின்றது. நிலம் கையப்படுத்தப்பட்டதற்குப் பின்னால், 2.25 கோடி ரூபாய் செலவாகும் என்பதால் இந்த நிதியாண்டில் முடியுமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து ஆராயப்படும். அதுமட்டுமல்லாமல், உங்கள் மாவட்டத்திற்கு ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்போது கந்தர்வக்கோட்டை தாலுகா அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள். வருங்காலத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, பரிசீலிக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து.

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதி அருகில் இரண்டு இடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஆய்வு செய்யச் சொல்லி, இரண்டு இடங்களில் ஏதாவது ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அதை இந்த நடப்பு ஆண்டிலேயே கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. மூர்த்தி அவர்கள்.

**திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து என்னுடைய துணைக் கேள்வியைத் தொடங்குகின்றேன். மாதவரம் தொகுதியிலே, மாதவரம் தாலுகா அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அந்தத் தாலுகா அலுவலகத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தர முடியுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் மொத்தம் 12 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதைப்போல, படிப்படியாக அதற்கு நிதியை ஒதுக்கி உரிய வகையிலே கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், பெண்ணாகரம் வட்டத்திலுள்ள வட்ட அலுவலகம் நீண்ட காலமாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து செயல்பட்டு வருகிற கட்டடமாக உள்ளது. அதைப் புதிய கட்டடமாக உருவாக்கித் தர தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, பழைய கட்டடமாக இருக்கின்றது, அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர முடியுமா என்று கேட்டு இருக்கின்றார்கள். ஏற்கெனவே, 12 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டு வருகின்றன. முதல் உரிமை அவற்றிற்குக் கொடுக்கப்பட்டு, பிறகு இதுபோன்ற கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

**நீதிமன்றம்**

***164—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்னாலே, நித்தம் நித்தம் நாங்கள் போற்றி வணங்குகின்ற எங்களுடைய இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், கடந்தகால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியால், நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக இருண்டு கிடந்த தமிழகத்தில் ஒளியேற்ற வந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கி பதில் சொல்ல விழைகிறேன்.



2011 ஆகஸ்ட் 25]

ஒட்டப்பிடாரத்தில் குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும் பட்சத்தில், செயற்குறிப்பின் நிதிச் செலவினத்திற்கேற்ப அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் நீதிமன்றம், சுதந்திர காலத்திற்கு முன்பே கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்தச் செம்மல் வழக்கறிஞராகப் பதிவு பெற்று, அவர் தன்னுடைய தொழிலை அங்கே நடத்தியிருக்கிறார். அந்த அளவிற்கு ஒட்டப்பிடாரம் நீதிமன்றம் சுதந்திரத்திற்கு முன்பே செயல்பட்டிருக்கிறது. ஒரு தாலுகாவிற்கு ஒரு குற்றவியல் நீதிமன்றம் என்ற அடிப்படையிலும், ஏறக்குறைய 150-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களிலேயிருந்து, தற்போது 50 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள விளாத்திகுளத்திற்கும், கோவில்பட்டிக்கும், அதேபோல, தூத்துக்குடிக்கும் செல்ல வேண்டிய ஒரு அவல நிலை இருக்கிறது.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதேபோல, 2001-லிருந்து 2006 வரை, இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கு முதல்வராக இருந்தபோது, ஏற்கெனவே ஒட்டப்பிடாரத்திலே நீதிமன்றம் அமைப்பதற்குண்டான எல்லாவிதமான முன்னேற்பாடுகளையும் செய்தார்கள். இருந்தாலும்கூட, அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. எனவே, இந்த நிதியாண்டிலேயே ஒட்டப்பிடாரத்திலே குற்றவியல் நீதிமன்றத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2011 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்திலே தற்போது மாவட்ட நீதிமன்றம் 1, விரைவு நீதிமன்றம் 2, சார்பு நீதிமன்றம், முதன்மைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உட்பட 4, மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் 2, குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் 2; அதேபோல, கோவில்பட்டியில் சார்பு நீதிமன்றம், முதன்மைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உட்பட 1, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 1, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2; ஸ்ரீவைகுண்டத்திலே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 1, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, விளாத்திகுளத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1; திருச்செந்தூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 1, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1; சாத்தான்குளத்திலே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 1, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1 என, மொத்தம் 22 நீதிமன்றங்கள் தற்போது இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் 2001-2006 ஆம் ஆண்டு பொற்கால ஆட்சியில், ஒட்டப்பிடாரத்திலே குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கடந்த கால ஆட்சியாளர்களால் அது புறக்கணிக்கப்பட்டது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவரம் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். சென்னை உயர் நீதிமன்றத் தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில், ஒட்டப்பிடாரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான நிலம் அங்கே இருக்கிறது. அதாவது, தீர்வை இல்லாத 16 ஏக்கர் தரிசு நிலம், ஒட்டப்பிடாரம்



2011 ஆகஸ்ட் 25]

தாலுகா அலுவலகத்தையொட்டி இருக்கிறது. மேலும், தற்போது 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய விளாத்திகுளம் மற்றும் கோவில்பட்டியில் உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு, அங்குள்ளவர்கள் அதிகாலை 4-00 மணிக்கு எழுந்தால்தான், நீதிமன்றங்களுக்கு 10-00 மணிக்குள்ளாக வந்து சேரக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. எனவே, இந்த ஆண்டே இதைப் பரிசீலனைக்கு எடுத்து, அமலாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்றால், சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளரிடமிருந்து வருகின்ற பட்டியலின் அடிப்படையிலே, பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, அந்த அடிப்படையில் அங்கே நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள். (குறுக்கீடு) டாக்டர், proposal High Court-லிருந்து வரவேண்டும்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களும் உற்றுநோக்கும் ஒப்பற்றத் தலைவி, இந்தியத் திருநாட்டின் வழிகாட்டி, தாய்த் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர், இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், எங்கள் குல சாமி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொன்னேரி தொகுதியில், பொன்னேரியில் 5 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 4 நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. எனவே, அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டித் தர

*மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுக்கு சொன்ன அதே பதில்தான். சென்னை உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும் அடிப்படையில், அங்கே நீதிமன்றம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**64—**

### சத்துணவுக் கூடம்

***1509—திரு. சு. ரவி:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, சயினாபுரம் ஊராட்சி, புதுக்கண்டிகை கிராமத்திற்கு சத்துணவுக்கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தங்கத் தாரகை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய பதிலை அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*





*(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, சயினாபுரம் ஊராட்சி, புதுக்கண்டிகை கிராமத்திற்கு ரூபாய் 2 இலட்சம் மதிப்பில் புதிய சத்துணவுக்கூடம் கட்ட மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*(ஆ) மூன்று மாதத்திற்குள் கட்டி முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

**திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த புதுக்கண்டிகை கிராமத்திற்கு உடனடியாக சத்துணவுக்கூடம் அமைப்பதற்கு உத்தரவு பிறப்பித்தார். 100 நாட்களில் நூறாண்டு சாதனைகளைப் புரிந்தவரும், கேட்காமலேயே கொடுக்கும் "அட்சய பாத்திரமாக" விளங்கிவரும், தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தக் கிராமத்து மக்களின் சார்பாக என்னுடைய கோடானுகோடி நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**65—**

### ஜவுளி சந்தை

***1366—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், தெக்கலூர் ஊராட்சியில் ஜவுளி சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2011 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், தெக்கலூர் ஊராட்சியில் தனியே ஒரு ஜவுளி சந்தை அமைக்க அப்பகுதி தொழில் முனைவோர்கள் எவரேனும் முன்வருவார்களாயின், அரசின் உதவியுடன் இப்பகுதியில் ஜவுளி சந்தை அமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இரண்டு முறை பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, அவினாசி தொகுதி வாக்காளர் பெருமக்களின் நல்ல உள்ளங்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்ட சட்டமன்றத் தொகுதியில் உள்ள தெக்கலூர் ஊராட்சியில் விசைத்தறிகள் அதிகமாக உள்ளன. தெக்கலூரில் ஜவுளி சந்தை அமைப்பதற்குப் போதுமான இடம் உள்ளது. மேலும் மக்களின் பயன்பாட்டுக்கு வசதியாக அந்த இடத்தில் ஜவுளி சந்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் முதலமைச்சராக இருந்தபோது, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பகுதியிலே நான்கு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அவற்றில் மூன்று திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இன்னொரு திட்டம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், கடந்த ஐந்தாண்டுக் காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல், திருப்பூர், செங்கம்பள்ளியிலே இருக்கின்ற திட்டம், பிப்ரவரி 2012*



2011 ஆகஸ்ட் 25]

*இல் தொடங்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின்படி, அங்கே விசைத்தறி கிளஸ்டர் குழுமங்கள் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி விசைத்தறி மக்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவினாசி தொகுதி* Industrially backward *பகுதி என்று அறிவிக்கப்பட்டு, தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கக்கூடிய பகுதி. தெக்கலூரில் விசைத்தறிகளும், பஞ்சாலைகளும் நிரம்பி இருக்கக்கூடிய பகுதியில் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் உடனடியாக அந்த ஜவுளி சந்தையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அவினாசி சட்டமன்ற உறுப்பினருக்கு அளித்த பதில்தான். விசைத்தறி குழுமங்கள் அமைப்பதற்கு ஆய்வுகள் செய்து, தேவையான நடவடிக்கைகள் நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2011 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்து, அந்தத் தொகுதியை வளமைமிக்க தொகுதியாக மாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், ஆண்டிப்பட்டியில் Hi-tech Park என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். விழாவும் நடத்தப்பட்டது. வங்கியில் அரசு சார்பாகப் பணமும் போடப்பட்டது. அந்தத் திட்டம் தொடங்கிய சில நாட்களில் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால், அதைக் கிடப்பிலே போட்டு, ஐந்தாண்டுக் காலம் அந்தத் திட்டம் என்ன ஆனது என்றே தெரியவில்லை. கடந்த வாரம் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ஆண்டிப்பட்டிக்கு வந்து அந்தப் பகுதியைப் பார்த்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற அந்த Hi-tech park நிறைவுபெற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் பயன்பெறக்கூடிய திட்டம் என்பதை எடுத்துச்சொல்லி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைத் தொடங்கி 4¼ கோடி ரூபாய் அரசு மானியமாக இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தார்கள். அந்தப் பணம் இன்றையதினம் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியிலே வைப்பு நிதியிலே 5½ கோடி ரூபாயாக வட்டியுடன் சேர்ந்து உயர்ந்துள்ளது. நானும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கடந்த வாரம் அந்த வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவை ஆய்வு செய்தோம். அங்கே பணிகள் வேகமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன. பிப்ரவரி, 2012-லே தேனி-வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா



2011 ஆகஸ்ட் 25]

செயல்படும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகளை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறோம். அதை இனிமேலாவது தினந்தோறும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மத்தியிலே ஊழலுக்கு எதிரான ஒரு வலுவான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அன்னா ஹசாரே தொடர்ந்து காலவரையற்ற உண்ணாவிரதத்தில் இருந்துகொண்டிருக்கிறார். அதனுடைய ஒரு பகுதியாக தமிழகத்தில், சென்னை நகரில் சட்டமன்றம் நடைபெறுகிற நேரத்தில் 9-வது நாளாக ஊழலுக்கு எதிரானவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அரசு சார்பிலே யாரும் சந்தித்தார்களா? அதைப் பற்றி ஏதாவது அறிக்கை இந்த நேரத்திலே அளித்தால் சரியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து என்னிடத்திலே எந்த அறிவிப்பும் கொடுக்காமல் இப்படி எழுந்து பேசினால், அது எந்தவிதத்திலே சரி என்று நான் கேட்கிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர், நாளை ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும். இது இல்லை. இதுகுறித்து என் அறையில் வந்து பேசுங்கள்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### (ஆ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

### (இ கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

### (ஈ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

-----

### (அ) கோரிக்கை எண் 26–வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லுக்கு வடிவம் கொடுத்து, 100 ஆண்டுகளில் செய்ய வேண்டியதை 100 நாட்களில் செய்து சாதனை படைத்த எங்கள் வரலாற்றுத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, பேரவைத் தலைவர் அவர்களே,*

*"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.157,65,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 13, திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை.*

*வெட்டுத் தீர்மானம் எண் 498, திரு. ஆர். சுந்தர்ராஜன், இருக்கையில் இல்லை.*



*வெட்டுத் தீர்மானம் எண் 2080, திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.*

*வெட்டுத் தீர்மானம் எண் 1200, திரு. அ. கணேஷ்குமார்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2205, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.*

*வெட்டுத் தீர்மானம் எண் 1954, திரு. சு. குணசேகரன்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2508, திரு. டி. இராமச்சந்திரன்.*

**திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 204, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட ஆலங்குளம் ஹவுசிங் யூனிட் மற்றும் பூங்கா நகர் ஹவுசிங் யூனிட் வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளுக்கு போதுமான காவிரி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 501, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1217, திரு. கு. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1530, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1587, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1885, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் ஆனைமலை வேட்டைக்காரன் புதூர், உடையகுளம், கோட்டூர் சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் 20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டுள்ள கான்கிரீட் வீடுகளைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1907, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2025, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி நகரத்தில் வீட்டு வசதித் துறைமூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2302, திரு. ர.ம. பாபு முருகவேல் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2590, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மார்த்தாண்டம் மற்றும் நாகர்கோவில் நகரங்களில் நகர் நிர்மாணத் திட்டத்தின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.495,83,45,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.954,20,87,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,65,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.68,92,79,000/-, மூலதனக் கணக்கில் ரூ.84,80,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 14, திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1201, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,92,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.84,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2172, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2504, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,92,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.84,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 231, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் உள்ள நேரு ஸ்டேடியத்தை நவீன வசதிகளுடன்கூடிய ஸ்டேடியமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,92,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.84,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 420, திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1149, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1212, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் தொகுதியில் கடல் தொழில் செய்யும் நல்ல கட்டுமஸ்தான உடல்திறன் கொண்ட இளைஞர்கள் ஏராளமானோர் உள்ளனர். அவர்களுக்கு வசதியாக குளச்சல் தொகுதிக்குள் நல்ல நீச்சல் பயிற்சிக் குளம் அமைத்து, நல்ல பயிற்சியாளரையும் நியமித்து, சர்வதேச அளவில் நீச்சல் வீரர்களை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,92,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.84,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1411, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1918, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள இளைஞர்கள் நலன் கருதி விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,92,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.84,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1863, திரு. து. முருகேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2026, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி நகரத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,92,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.84,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2034, திரு. எல். வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2059, திரு. க. தினகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2082, திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2096, திரு. அ. பாஸ்கர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2227, திரு. க. பாண்டியராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2300, திரு. ர.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2321, திரு. ப. பார்த்தசாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2330, திரு. கு. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 53 – சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. மாண்புமிகு சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானிய கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,252,94,05,000/-, மூலதனக் கணக்கில் ரூ.912,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 15, திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1361, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2079, திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1202, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,252,94,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.912,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2006, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,252,94,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.912,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2501, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,252,94,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.912,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2167, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 209, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் சொந்தமாக மாடுகள் வைத்திருப்பவர்களுக்கு வீட்டு உபயோகத்திற்கு சாண எரிவாயு அடுப்பு வழங்கும் சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,252,94,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.912,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1145, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1906, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பின்தங்கிய தருமபுரி மாவட்டம் சமூக-பொருளாதாரக் கல்வியில் வளர்ச்சி அடைந்திட சிறப்புத் திட்டம் தீட்டி, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,252,94,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.912,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2305, திரு. ர.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

**(ஈ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லோரைக் காப்பதற்கும், கெட்டவரை அழிப்பதற்கும், தர்மத்தை நிலை நாட்டுவதற்கும், யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன் என்று கீதையில் கடவுள் கண்ணன் கூறி இருக்கின்ற வார்த்தைக்கு உயிர் கொடுக்கின்ற வகையில்,



இன்றைக்கு இந்த நாட்டிலுள்ள கெட்டவர்களை எல்லாம் அழித்திட, நல்லோரை எல்லாம் காப்பாற்றிட, தர்மத்தை நிலை நாட்டிட தெய்வத் திருமகளாக அவதரித்திருக்கிற வாழும் மனித தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.21,13,27,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.3,00,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 16, திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 503, திரு. ஆர். சுந்தர்ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1203, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,13,27,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2007, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,13,27,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2497, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,13,27,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2141, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 213, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பத் துறைமூலமாக ஆதி திராவிட மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,13,27,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 570, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.



**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்து, வேலையில்லா பட்டதாரி இளைஞர்களின் எதிர்காலத்தை வளமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,13,27,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1359, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1585, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1780, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கேபிள் இணைப்பில் தமிழ்ச் சேனல்களை இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,13,27,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2226, திரு. க. பாண்டியராஜன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

---

*@377 முதல் 414 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

*@@415 முதல் 470 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.*



**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை$ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை$$ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக்

---

$ *471 முதல் 482 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

$$ *483 முதல் 539 வரையிலான பக்கங்களில் இணைப்பு IVஆக அச்சிடப்பட்டுள்ளது.*

கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.

**திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கம். "வெற்றிமீது வெற்றி வந்து தமிழ்நாட்டைச் சேரும். அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சேரும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புரட்சித் தலைவர் அவர்களுடைய பாடல் வரிகளுக்கேற்ப அன்பின் திருவுருவாய், ஆற்றலின் பிறப்பிடமாய், வீரத்தின் விளைநிலமாய், வெற்றியின் விலாசமாய், அன்பு, அறிவு, துணிவு இவை யாவும் ஒருங்கே பெற்ற ஒப்பற்றத் தலைவியாய் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், சமூக நீதிகாத்த வீராங்கனை, எந்நாளும் உலகத் தமிழர்களின் பாதுகாவலர், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அலைகடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழ் நெஞ்சத்தின் இதயத்திலெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பவர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் தங்கத் தாரகை, உலகம் வியக்கச் செயலாற்றும் செம்மல், ஏழைகளின் வயிற்றில் பால்வார்க்கும் பசுமைத் தாய், விலையில்லா அரிசி தந்து வீழ்ந்தவர் வாழ்வை உயர்த்தி, அகிலமே வியக்க வைத்த வள்ளல், புரட்சித் தலைவரின் வாரிசு, காற்றுக்கு கை அசைக்கும் ஏழைக்கு மின்விசிறியும், உரலில் அரிசியிட்டு கூட்டுக்குப் பொருள் சேர்த்து அரைக்கக் காத்திருக்கும் மாதரசிகள் கைகளுக்கு மிக்ஸியும், கிரைண்டரும் வழங்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களே!

ஏழைகளின் ஓய்வூதியத்தை 1,000 ரூபாயாக உயர்த்தித் தந்து அவர்களின் இதயத்தைக் குளிர வைத்த ஏழைகளின் அன்னையே! அரசினர் தோட்டத்தில், சென்னையைக்கூட பார்க்காத ஏழைகளுக்கும் மருத்துவமனையுடன்கூடிய மருத்துவக் கல்லூரி தொடங்க ஆணையிட்ட அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)



மலைமுகடுகளுக்கு முண்டாசு கட்டிவிடும் மேகங்களும், பூமித்தாயின் முந்தானையாய் நெளிகின்ற நதிகளும், தென்றல் காற்றும், தெம்மாங்கு பாட்டும் என்றும் உங்கள் புகழ்பாடி விண்ணிலும், மண்ணிலும் வலம் வருகிறது அம்மா.

அம்மா, நீங்கள் ஆட்சி பொறுப்பேற்கும்போதெல்லாம் தென்பொதிகைச் சாரல், தங்க இழைநெய்து மழையாய் வந்து மண்ணில் கலக்கிறது. மக்கள் மனமெல்லாம் செம்மண்ணில் கலந்த மழையாய் உங்கள் பெயர் சொல்லி வாழ்த்துவது உலகமே கேட்கிறது அம்மா. தமிழரும், தமிழ்நாடும் உள்ளவரை நீங்கள் நிரந்தர முதல்வராய் வரலாற்றின் ஏடுகளில் இனிவரும் காலம் பதிவு செய்யும் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

சீரில்லா கல்விக்கு சிலர் சமச்சீர்க் கல்வி என்று தம்பெயரை தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள். நில அபகரிப்பு வழக்கிலே ஊழல் புரிந்தவர்களை ஊருக்கும் உலகிற்கும் காட்டிய அம்மா, 100 நாள் ஆட்சியில் ஒரு கோடி நாட்களின் சாதனை, உலகத்தின் செவிகளில் வெற்றிச் செய்தியாய் வலம் வருகிறது அம்மா.

படியளக்கும் பரமனை நான் பார்த்தது இல்லை, நம் தமிழர் பரமனின் அவதாரமாய் அவதரித்த தாயே, உங்களை மட்டுமே இப்புவியில் பரமனாய் காண்கின்றேன் தாயே. நீங்கள் வள்ளல் பட்டியலில் என்றுமே முதல்வர், முதலிடமே உங்களுக்குத்தானே அம்மா.

இனி ஓர் உலகம் படைத்தாலும் அதில் என்றுமே வரலாற்றின் பக்கங்களில் நீங்கள் மட்டுமே எங்களின் அன்னையாய், உங்கள் பாதங்களில் என்றும் உண்மைத் தொண்டனாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் வணங்கி மகிழ்கிறேன்.

தமிழக மக்கள் மனங்களிலே எழுந்த போராட்டங்களுக்கு நிலையான முற்றுப்புள்ளி வைத்த எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் தயவால் கிடைத்ததுதான் கிளைக் கழகத்தினுடைய செயலாளர், வேலூர் மாவட்ட கழகத்தினுடைய துணைத் தலைவர், அதனைத் தொடர்ந்து ஜோலார்பேட்டை ஒன்றிய கழகச் செயலாளர், பசுமைப் புரட்சி செய்த புரட்சித் தலைவியின் இதய ஈர்ப்பால் மாவட்ட விவசாயப் பிரிவுச் செயலாளர், தராசு முள்ளாய் நேரிய பார்வையின் சீரிய வாய்ப்பாய் அரசுப் பணியில் ஜோலார்பேட்டை

ஒன்றியக் குழு துணைத் தலைவர், அதனைத் தொடர்ந்து ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் என வரிசையாய் வரம் தருவதையே அறமாகக் கொண்டிருக்கும் அறத்தின் இருப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

*முற்பகல் 11-25*

உங்கள் மனம் கனிவால், வேலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அதைத் தொடர்ந்து ஜோலார்பேட்டையின் முதல் சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து ஜோலார்பேட்டையில் தங்கள் பொற்பாதம் பட்டதால் தங்களின் திருமுகத்தைக் காணவும், தங்களின் ஆணையினைக் கேட்கவும், திரண்டனர் இலட்சக்கணக்கில் இரத்தத்தின் இரத்தங்கள். மக்கள் மனதிலே ஒரு மாற்றத்தைக் காண ஏங்கிய நேரத்தில், வானத்திலிருந்து தேவதையாக இறங்கி வந்து ஏங்கியவர்களின் ஏக்கம் தீர்க்கவும், தமிழகத்தைத் தழைக்கச் செய்யவும் தாங்கள் காட்டிய இருவிரலின் அசைவால், அசைக்க முடியாத அம்மாவின் முழு முயற்சியால், விளைந்ததுதான் எங்களின் வெற்றியாகும். எங்களை வெற்றி பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், மாவட்ட கழகத் தொண்டர்கள் சார்பாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து நன்றி மலர்களைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் மானியக் கோரிக்கைகளின்மீது கன்னிப் பேச்சு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அரசு என்றாலே விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குப் பொற்காலம்தான். இது உலகறிந்த வரலாற்று உண்மை. 2001-2006 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், சமூக விரோதிகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, சிறந்ததோர் விளையாட்டு அரங்கம் ஒன்றை ஜோலார்பேட்டையில் உருவாக்கித் தந்தார்கள். இவ்விளையாட்டு அரங்கத்தில் சுற்றுவட்டார கிராமப்புறப் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் பயிற்சி பெற்று சிறந்த வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் உருவாகியுள்ளனர்.



வேலூர் மாவட்டத்தில் அரசு விளையாட்டு மைதானம் எதுவும் கிடையாது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் ஜோலார்பேட்டையில் தற்போதுள்ள விளையாட்டு அரங்கத்தை மேலும் விரிவுபடுத்தி, மேம்படுத்துவதன்மூலம் அனைத்து வசதிகளுடன்கூடிய சிறப்புமிக்க உள் விளையாட்டு அரங்கம், செயற்கை ஓடுதளம் மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கி சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு விடுதிகள் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்.

எங்களது வேலூர் மாவட்டம், அரக்கோணம் முதல் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் எல்லைவரை உள்ள 13 சட்டமன்ற தொகுதிகள் அடங்கிய தமிழகத்தில் மிகப் பெரிய மாவட்டமாகத் திகழ்ந்து வருகின்றது. மக்களின் நீண்ட நாள் கனவான, இம்மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய மாவட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்ராம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

வேலூர் மாவட்டத்தில் கல்வி வளர்ச்சியில் நகர்ப்புற மாணவர்களுக்கு இணையாக, கிராமப்புற மாணவர்களை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வி முன்னேற்றம் அடையவும், அரசு வேலைவாய்ப்பைப் பெருக்கிக்கொள்ளவும், மத்திய அரசால் நடத்தப்படும் Union Public Service Commission மற்றும் மாநில அரசால் நடத்தப்படும் Tamilnadu Public Service Commission போன்ற உயரிய போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற ஏதுவாக அரசு பயிற்சி மையம் (Government Coaching Centre) ஒன்றை ஜோலார்பேட்டை தொகுதிக்குட்பட்ட ஏலகிரி மலையில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைக் கனிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி பெங்களூர்-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. ஆந்திர மாநிலத்தின் எல்லைப் பகுதியை ஒட்டியிருக்கின்ற காரணத்தால் ஒரு தகவல்

தொழில்நுட்பப் பூங்கா அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தில் திருப்பத்தூர் பகுதிக்கு அரசு கலைக் கல்லூரி அமைத்துக் கொடுத்ததற்கும், அதேபோல் எங்கள் மாவட்டத்திலுள்ள நான்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திக் கொடுத்ததற்கும் மாண்புமிகு அம்மாவின் பொற்பாதங்களுக்கு நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Attack on poverty is my priority - வறுமையை ஒழிப்பதே என் முதல் கடமை என அல்லும் பகலும் தமிழக மக்களின் நலனுக்காக அயராது பாடுபட்டு வரும் தங்களை தமிழ் மக்களும், உலகத் தமிழர்களும், உலக வரைபடத்தில் தமிழ்நாடு உள்ளவரை வியந்து பாராட்டுவார்கள் அம்மா! என்னைவிட என் நாடு பெரியது, என் நாட்டைவிட என் மக்கள் பெரியவர்கள் என்ற கொள்கைப் பிடிப்போடு உழைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணத்தோடு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் நம் தலைவர் ஆகியோரின் கொள்கைக் கோட்பாடுகளை ஆண்களுக்கு நிகர் பெண்கள் என்ற இவர்களின் கனவுகளை எல்லாம் நிறைவேற்றுகின்ற வகையில் அயராது உழைத்து வருகின்றவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இம்மானியக் கோரிக்கைகளிலே, கடந்த மைனாரிட்டி ஆட்சியில் பாலைவனமாக்கப்பட்ட தமிழகத்தை மீண்டும் சோலைவனமாக்க நிதி ஆதாரங்களைத் தேடிப் பிடித்து (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிலடங்கா பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைத் தந்தும், ஏழை, எளிய மக்களுக்கு பசுமை வீடுகள் தந்தும், பசுமைத் தமிழகம் காணத் துடிக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் நலத் திட்டங்கள் அனைத்தும் வேலூர் மாவட்ட பொது மக்களைச் சென்று சேர்வதற்கு உற்ற கருவியாய் இருந்து செயலாற்றி, என்றென்றும் அம்மாவின் அரசுக்கு வலுசேர்ப்போம் என்று மாவட்டக் கழகம் சார்பாகவும், தொகுதி சார்பாகவும் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வாழும் காலத்தில் நாங்கள் வாழ்கிறோம் என்பதே எங்களுக்குப் பிறந்த பயனை அடைந்த பெருமை என்று (மேசையைத் தட்டும் ஒலி)



நன்றியோடு மீண்டும் ஒருமுறை தெரிவித்து, அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடான கோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

முற்பகல் 11-30

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**'திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்திலுள்ள அனைத்து மக்களின் வீட்டு வசதித் தேவையினைப் பூர்த்தி செய்யவும், அனைவருக்கும் வீடு என்ற நோக்கத்தினைக் கொண்டு 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடங்கப்பட்டது. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் 2011-2012 -இல் தமிழ்நாடு முழுவதும் 2,427 அலகுகள் 118.92 ஏக்கரில் ரூபாய் 340 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளதை மனித நேய மக்கள் கட்சி வரவேற்கிறது.

அதேபோல், நகர்ப்புற ஏழைகளுக்கான வட்டி மானியத்துடன்கூடிய வீடு கட்டக் கடன் வழங்கும் திட்டம், பழுதடைந்த வாரிய கட்டடங்கள் மறு சீரமைப்புத் திட்டம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2011-2012இல் பல்வேறு திட்டங்களில் 10,000 குடியிருப்புகள் / மனைகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளும், 4,000 குடியிருப்புகள் / மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்களும் வழங்கப்படும் என்பதை மனித நேய மக்கள் கட்சி வரவேற்கின்றது.

அதேசமயம், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடியிருப்புகளுக்குப் பணம் முழுவதையும் செலுத்தியவர்களுக்கு இன்னும் விற்பனைப் பத்திரம் வழங்காமல் உள்ளது. பத்திரங்கள் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

சென்ற தி.மு.க. ஆட்சியில் ஆளுங்கட்சியினரின் தலையீட்டால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடங்கள்/ மனைகள் குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வாரியத்திற்குப் பல

கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணமானவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகளை ஒதுக்கப்பட்டவர்களாகப் பார்க்கின்றனர். அவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுக்கவும் மறுக்கின்றனர். ஆகவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகளில் அவர்களுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது வீட்டு மனைகள் விலை அதிகமாக உள்ளதால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வாங்குவது மிகவும் கடினமாக உள்ளது. வீட்டு மனை விலையைக் கட்டுப்படுத்தவும், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் சொந்த வீடு வாங்கவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நகரப் பகுதிகளில் அதிகப்படியான வீடுகளைக் கட்டி விற்பனை செய்ய வேண்டும். அவற்றில் சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை ஆய்வு செய்து, மிகவும் மோசமாக உள்ள குடியிருப்புகளைச் சீர் செய்ய ஆவன செய்ய வேண்டும். சென்ற 2007 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் இடிந்து விழுந்து 20 பேர்கள் மரணமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் கடன் பெற்றவர்கள் வட்டி, வட்டிக்கு வட்டி, அபராத வட்டி போன்றவைகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாங்கிய கடனைவிட வட்டி அதிகம் செலுத்தியவர்கள்தான் அதிகம். ஆகவே, வாங்கிய அசல் தொகையைவிட வட்டி அதிகமாகக் கட்டியவர்களுடைய கடன்களைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மனைகள் அல்லது வீடுகள் ஒதுக்கீடு செய்யும்போது 15 சதவீதம் அரசின் விருப்பு



உரிமை கோட்டாவில் ஒதுக்கப்படும். விதவைகள், சமூகச் சேவகர்கள், பத்திரிகையாளர்கள், முன்னாள் இராணுவத்தினர், மூத்த குடிமகன்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், விளையாட்டு வீரர்கள், அப்பழுக்கற்ற அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு இவை ஒதுக்கப்படும். ஆனால், சென்ற தி.மு.க. ஆட்சியிலே பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு, ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு, தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு விதிமுறைகள் மீறப்பட்டு மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆகவே, தமிழக அரசு இவர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறை மானியம் தொடர்பாக ஒரு அவசியமான கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். கணினித் தமிழுக்கென சீரான முறையோ, உலக அரங்கில் ஒருங்கிணைப்போ, வளர்ச்சித் திட்டமோ, பன்னாட்டு நிறுவனங்களில் கூட்டுப் பணியோ இல்லை. ஒரு கணினியில் பயன்படுத்திய உரையை, பிற கணினியில் பார்க்கப் பொதுவான எழுத்துரு தேவைப்படுகின்றது. பதிப்பு மற்றும் அச்சுப் பணிக்கும் அது தேவைப்படுகிறது. இணையத்தை அனைவரும் பார்வையிட எழுத்துருவைக் கண்டிப்பாகப் பதிவிறக்கம் செய்ய வேண்டிய நிலையுள்ளது. இந்தக் கவலைகளைப் போக்குவதற்கு ‘யுனிகோட்’ தமிழ் பிறந்துள்ளது.

வருங்காலத்தில் ‘யுனிகோட்’ தமிழே நிலைக்கும். ‘யுனிகோட்’ தமிழின் அருமை அறிந்தும், இவற்றைச் சீர்படுத்த சென்ற தி.மு.க. அரசு தவறிவிட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையும், தமிழ் வளர்ச்சித் துறையும் கூட்டாக ‘யுனிகோட்’ தமிழுக்கு முயற்சி எடுக்காததாலேயே நாம் சீரழிவைச் சந்திக்க நேர்கிறது. ஆனால், ‘யுனிகோட்’ சம்பந்தமாகப் பிரச்சினைகளைச் சந்தித்ததால், சென்ற தி.மு.க. ஆட்சியாளர்கள் உடனடியாகப் பணிக் குழுவை உருவாக்கிப் பிரச்சினைகளைச் சமாளிக்க முயன்றார்கள். ஆனால், நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் எண்ணம் செம்மொழி மாநாட்டிற்குக் கோடிக்கணக்கில் செலவழித்த அந்த ஆட்சிக்கு இருக்கவில்லை. தமிழ் இணையப் பல்கலைக்கழகம்தான், தமிழக அரசின் தமிழ்க் கணினிப் பணிகளைச் செய்வதாகக் கூறுகின்றார்கள். அந்நிறுவனத்தின் தமிழ்க் கணினிப் பணி தொய்வு நிலையிலேயே உள்ளது.

*முற்பகல் 11-35*

கல்விப் பணியை மட்டும் அந்நிறுவனத்துக்கு ஒதுக்கி, தமிழக அரசின் தமிழ் கணினிப் பணிக்காக தகவல் தொழில்நுட்பத் துறையும், தமிழ் வளர்ச்சித் துறையும் இணைந்து, தனி வாரியமோ அல்லது அரசு நிறுவனமோ தொடங்க வேண்டும்.

யுனிகோட் கன்சார்ட்டியத்தில் தமிழக அரசு உறுப்பினராக வேண்டும். உறுப்பினராக இருந்தால்தானே பன்னாட்டு அறிஞர்களின் அறிவையும் நம் மொழிக்குப் பெறமுடியும். நம்மொழி சார்ந்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியும்.

தமிழக அரசு 9.75 இலட்சம் லேப்டாப்களை தேர்தல் அறிக்கைப்படி அளிக்கவுள்ளது, மாணவர்கள் பலன் பெறவுள்ள வரவேற்க வேண்டிய திட்டமாகும். இந்த லேப்டாப்களில் தமிழ் மென்பொருள்கள் அளிக்கப்படுகின்றன. லேப்டாப்பின் அடிப்படை ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை தமிழில் அளிக்க இந்த அரசு முன்வர வேண்டும். லேப்டாப்பில் உள்ள கீ-க்கள் தமிழில் இருந்தால் குறைந்தபட்சம் 20 சதவீதம் தமிழக மாணவர்களாவது தமிழ் தட்டச்சு அறிவைப் பெறுவார்கள்.

லேப்டாப்பை டெண்டர் அடிப்படையில் விநியோகிக்கும் நிறுவனங்களைத் தமிழக (தமிழ் 99) அரசாணைப்படி விசைமுறைகளைப் பெற்ற விசைகளுடன் லேப்டாப்களை தயாரிக்க உத்தரவிட வேண்டும்.

ஆசிய அளவில், தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் செல்போன்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த செல்போன்களும் தமிழ் விசைகளோடுதான் விற்க வேண்டுமென இந்த அரசு உத்தரவிட வேண்டும்.

தமிழ் கணினிப் பயன்பாடுகள் பள்ளி மற்றும் கல்லூரிப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குத் தமிழ்க் கணினிச் சேவைகளையும், கலைச்சொற்களையும் ஊட்டினால், சமுதாய மாற்றத்தைக் காணலாம்.

அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை மற்றும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் தமிழக அரசின் தமிழ்க் கணினி அரசாணையைத்தான் தத்தம் நாடுகளில் அமல்படுத்துகிறார்கள்.



சிறப்பான நலப் பணிகளைச் செய்து வரும் புதிய அரசு தமிழ்ப் பற்றுடன் கணினித் தமிழ்ப் பணிகளை முடுக்கிவிட வேண்டும். தமிழ் மொழி எழுத்துகள், கிரந்த எழுத்துகள் ஆகியவற்றை கணினிப் பயன்பாட்டுக்கு, ஒருங்குறி அட்டவணையில் அதாவது யுனிகோட் அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வரின் தமிழ் கணினிப் பணி உலகத் தமிழ் மக்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என நம்புகிறோம்.

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு என்னுடைய ஆம்பூர் தொகுதியிலே, ஆம்பூர் நகரத்திலே 1984 ஆம் ஆண்டு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அந்தக் குடியிருப்புகள் இடிந்து விழும் நிலையில், மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. சென்ற தி.மு.க. ஆட்சியில் நாங்கள் பல்வேறு கோரிக்கைகள் வைத்தும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றை தயவு செய்து ஆய்வு செய்து, அதுபோன்ற. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டிலேயே அந்தக் குடியிருப்புகள் பழுதுபார்த்துத் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய ஆம்பூர் நகரத்திலே 1,15,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். மிகப் பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாகும். மக்கள் தொகை நாளுக்குநாள் பெருகி வருகிறது. ஏற்கெனவே இருக்கின்ற அடுக்குமாடிக் குடியிருப்புகள் போதாமல் உள்ளன. மீண்டும் Phase-2, Phase-3 போன்ற இன்னும் நிறைய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.

***திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் விவாதத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே நன்றி சொல்கின்றேன். இந்தக் கம்ப்யூட்டர் உலகத்தில், Globalisation வளர்ச்சியில், தமிழகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதர மாநிலங்களைப் பார்க்கின்றபோது நம்முடைய பரிணாம வளர்ச்சியைப் பெருமையாகச் சொல்லலாம். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், தகவல் தொழில்நுட்பத் துறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முந்தைய ஆட்சியிலே தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தினார்கள். அதனால் மற்ற நாடுகளிலிருந்து பல தொழில்நுட்ப கம்பெனிகளை ஆரம்பிக்கக் காத்துக் கிடக்கின்றார்கள் என்பது நம்முடைய வளர்ச்சியினைக் காட்டுகிறது. 35 விழுக்காடு கம்ப்யூட்டர் இன்ஜினியர்கள் அமெரிக்காவிலே பணிபுரிகின்றார்கள் என்பது பெருமை சேர்க்கின்றது. அமெரிக்க அதிபர், தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் அமெரிக்காவிலே ஏற்படும் என்று இதைத் தடைசெய்ய வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

நம் மாநிலத்தின் பல மாவட்டங்களில், I.T. Park, I.T. கம்பெனிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், கல்வியில் number one என்று சொல்லக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலைமை பரிதாபமாக இருக்கிறது. சுமார் 44 பொறியியல் கல்லூரிகள் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்திலே இன்றுவரை ஒரு I.T. Park இல்லை. மக்களுடைய தேவை, பிள்ளைகளைப் படிக்க வைத்து, வெளிநாடுகளிலே, வெளி மாநிலங்களிலே வேலைக்காக அனுப்பிய பெற்றோர்கள் எங்களுடைய மாவட்டத்திலே ஒரு I.T. Park கிடைக்குமா என்ற ஏக்கத்தை வைத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே, வெளி நாடுகளிலே, வெளி மாநிலங்களிலே வேலை செய்கின்ற இன்னும் வேலையில்லாமல் கஷ்டப்படுகிற இன்ஜினியரிங் பட்டம் படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு



கொடுக்கும்பட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு I.T. Park ஆரம்பிக்க வேண்டுமென இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் I.T. Park அமைப்பதற்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. National Highway-யிலே பல இடங்களில் சுமார் 50-க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், 50 கி.மீ அருகிலே விமானதளம் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட வசதிகள்கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, ஒரு படித்த மாவட்டத்திற்கு, நிச்சயமாக ஒரு I.T. Park தர வேண்டுமென மிகவும் பணிவன்பாக மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புனிதமான ஆட்சியிலே 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் வழங்கும் ஒரு அற்புதமானத் திட்டத்தை, வருங்கால தலைமுறையினரைக் கட்டிக் காப்பதிலே அக்கறைகொண்டு ஏற்படுத்திய திட்டத்தை வரவேற்கிறேன். ஆனால், 'Computer Boy' என்று அன்புத் தலைவர் ராஜீவ்காந்தி அவர்களைக் கொச்சைப்படுத்திய நண்பர்கள்கூட இன்று கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவாளர், வீட்டு வசதி, அவர்களின்கீழ் இயங்கும், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், பல வருடங்களாக, உறுப்பினர்களுக்கு வீடு கட்டக் கடன் வழங்காததால், சங்கம் செயலிழந்து, சங்கப் பணியாளர்கள் இரண்டு வருடங்களாக சம்பளம் பெறாமல் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கும் சம்பளம் வழங்கி அவர்களின் துயர் துடைப்பதற்கு அந்தச் சங்கத்திற்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

இளைஞர்கள் இந்த நாட்டின் சொத்து. இளைஞர்களைப் பாதுகாப்பதும் அவர்களது நல்வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும் மாண்புமிகு அரசின் முக்கிய பங்கு. இளைஞர்கள் அழிந்துவிட்டால் இந்தத் தேசத்தின் வருங்காலமே அழிந்து விடும். ஆகவே, இளைஞர்களின் வாழ்க்கையை மேன்மைப்படுத்த

விழிப்புணர்வு முகாம்கள் மாவட்டம், வட்டந்தோறும் நடத்தவும் Sports Clubs அமைத்துக் கொடுக்கவும் மாண்புமிகு அரசு முன்வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

மேலும், தேசபக்தி, நற்பண்பு, சமூகத் தொண்டு செய்ய ஊக்குவிப்பது போன்றவற்றை முன்வைத்து பயிற்சி முகாம்கள் நடத்தி வருங்கால தலைமுறையினரைக் காப்பாற்ற வேண்டுகின்றேன். எங்கள் மாவட்டத்தில் ஆரம்பிக்க இருந்த மத்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையத்தினை சென்ற ஆட்சியிலே பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாற்ற ஏற்பாடு நடந்தது. அந்த விளையாட்டு பயிற்சி மையத்தை எங்கள் மாவட்டத்திற்குத் திருப்பித்தர வேண்டும் என வேண்டுகிறேன். மேலும், என்னுடைய தொகுதிக்குட்பட்ட திங்கள் நகர், குளச்சல், கப்பியறை, முளகுமூடு, பள்ளியாடி ஆரூர், கல்லுக்கூட்டம், கடியபட்டினம் ஆகிய இடங்களில் Gym Centre அமைத்துத் தரவேண்டுகிறேன்.

மேலும், இந்த அரசு பல்வேறு திட்டங்களை ஏழையெளிய மக்களுக்கு அள்ளி வழங்கியிருக்கிறது, நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கிறது. அவற்றையெல்லாம் வரவேற்பதோடு விவிலியத்திலே ஒரு வார்த்தை, தந்தையிடம் பிள்ளை சோறை கேட்டால் கல்லையா கொடுப்பான்? தந்தையிடம் பிள்ளை மீனை கேட்டால் பாம்பையா கொடுப்பான்? நீங்கள் நல்ல திட்டத்தைக் கொடுத்திருக்கிறீர்கள், வரவேற்கிறேன். தொடர்ந்து நல்ல திட்டங்களைக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-Respectable Hon'ble Speaker Sir, எனக்கு வேறு ஒரு காரியத்தைப் பற்றிப் பேச வேண்டும். எங்கள் மாவட்டத்திலே முக்கியமான பிரச்சினை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** 3 நிமிடங்கள் சார். தமிழகம் இழந்த தமிழ் மன்னர்கள் ஆண்ட மண்ணை மீட்டுத் தந்த ஒருவர் வரலாற்றில் உண்டா என்றால் குமரி தந்தை மார்சல் நேசமணி அவர்கள். நேசமணி பதவி சுகம் அனுபவித்த தலைவர்கள் வரிசையில் பார்க்கிறபோது . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது மாணவர்கள், இளைஞர்கள் இந்த நாட்டின் சொத்து. அவர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று கூறினார். அவர்களுக்கு இலவச கம்ப்யூட்டர் வழங்குவதைப் பற்றியும் இங்கே பாராட்டுத் தெரிவித்தார். ஆனால், இளைஞர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை மாநில அரசுக்கு மட்டும் இல்லை, மத்திய அரசுக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு மாணவர்களுக்கு இலவச கம்ப்யூட்டர் வழங்குவதற்காக மொத்தம் 912 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஏதாவது ஒரு பங்கையாவது கொடுங்கள் என்று மத்திய அரசிடம் எவ்வளவோ கேட்டுப் பார்த்தோம். இதுவரை இந்த இலவச கம்ப்யூட்டர் வழங்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒரு ரூபாய்கூட நமக்கு ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்வது இருக்கட்டும். இந்த நாட்டின் இளைஞர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை மாநில அரசுக்கு மட்டும்தான் உண்டா, மத்திய அரசுக்கு இல்லையா என்று நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்வதோடு, நிச்சயமாக எங்களுக்கும் அந்த உணர்வு இருக்கிறது. மத்திய ஆட்சியாளர்களிடம் கேட்டு சிறப்பாக அதைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்வோம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றதை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் திருப்பிக் கேட்டார்கள், மத்திய அரசுக்கு பங்கே இல்லையா என்று. அதற்குச் சரியான விடை இல்லை. இப்பொழுதும் நான் கேட்கிறேன், இந்த இளைஞர்களுக்குக் கொடுக்கக்கூடிய இலவச laptop வழங்கும் திட்டத்திற்கு மாநில அரசு ஒதுக்கியுள்ள 912 கோடி ரூபாயை மத்திய அரசிடம் கேட்டு, அந்தத் தொகையைப் பெற்றுக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன், கேட்டால் கிடைக்கும். நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் திரும்பத் திரும்ப கேட்டுக் கேட்டு எதுவும் கிடைக்காததால்தான் இப்போதும் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் மாண்புமிகு உறுப்பினரிடம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்ப்யூட்டர் விஷயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் நிதி கேட்டார்கள் என்பது எனக்கு இப்போதுதான் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் டெல்லியில் சந்தித்தபோது அவரிடம் தமிழ்நாட்டின் சார்பில் என்ன என்ன கோரிக்கைகள் வைத்தேன் என்பதை ஒரு புத்தகமாகவே போட்டு, அதைப் பத்திரிகைகளுக்கெல்லாம் கொடுத்தோம். எல்லா பத்திரிகைகளிலும் செய்தி வெளி வந்தது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகைகளைக்கூட படிப்பதில்லை என்று தெரிய வருகிறது.

நான் சொல்ல விரும்புவது இதுதான். சமீபத்தில் ஏறக்குறைய ஒரு 4 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் வருவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் சில வரிகளை அதிகப்படுத்தினோம். இங்கே நான் சொல்ல விழைவது இதுதான், மத்திய அரசிடம் தமிழ்நாட்டிற்குச் சிறப்பு உதவி தேவை என்று கேட்டபோது, 2½ இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உதவி கேட்டோம். இரண்டரை இலட்சம் கோடி ரூபாயைக் கொடுக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. நாங்கள் கேட்டதில் ஒரு 10 ஆயிரம் கோடி ரூபாயைக் கொடுத்திருந்தால்கூட இந்த வரிகளை நாங்கள் போட்டிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய கோரிக்கை மிகவும் முக்கியமானது. இந்தக் கோரிக்கையை நாங்களும் நம்முடைய பிரதம மந்திரி அவர்களிடம் சொல்லி, நிச்சயமாகத் தமிழ்

மக்களுடைய நலத்திற்காக இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தரவேண்டும் என்று நிச்சயமாகக் கேட்டுக்கொள்வோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை விரைவில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகம் இழந்த, தமிழ் மன்னர்கள் ஆண்ட மண்ணை மீட்டுத் தந்த தலைவர், ஒப்பற்றத் தலைவர் தமிழினத் தலைவர் மார்ஷல் நேசமணி அவர்களுக்கு மணி மண்டபம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். அவர் இறந்து 45 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. A longing request - எத்தனையோ முறை கேட்டிருக்கிறோம். ஆனால் எத்தனையோ தலைவர்களுக்கு, தமிழ்த் தலைவர்களுக்கு மணி மண்டபம் அமைத்துச் சிறப்பித்திருக்கிறார்கள். எங்களுக்கு அதை அமைத்துத் தரவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் முக்கியமான Collectorate பகுதியிலே அதை அமைத்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். குறிப்பாக அன்புக்குரிய தலைவருடைய செயல்பாடு தனக்காக அல்ல, மக்களுக்காகச் செய்திருக்கிறார். எத்தனையோ தமிழ்த் தலைவர்கள் இந்த மண்ணிலே தோன்றினாலும் அப்படிப்பட்ட ஒப்பற்றத் தலைவரைப் பார்த்து இருக்க முடியாது. அவர்களை நினைவுகொள்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ஷல் நேசமணி அவர்களின் நினைவாக மணி மண்டபம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.



**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கூற்றிற்கு, சிறப்பான விடைக்கு நன்றி சொல்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பது இந்த மாநில அரசுக்குத்தான் பொருத்தமாக இருக்கிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல், மத்திய அரசுக்கு இது பொருத்தமாக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தன்மையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தட்டுங்கள் கொடுக்கப்படும்" என்ற பதிலைத் தந்திருக்கிறார்கள். இதைப்போல, மத்திய அரசையும் தட்டுவோம், நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" மாநில அரசு கேட்கிறது, மத்திய அரசு கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். கண்டிப்பாக நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையிலே, ஒரு மாற்றத்தை மத்தியிலே கொண்டு வந்து, கேட்டதைக் கொடுக்கக்கூடிய ஒரு மத்திய அரசை, வெகு விரைவிலே உருவாக்குவோம் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2011 ஆகஸ்ட் 25

## 4. விதி 110–ன்கீழ் அறிக்கை

### நபார்டு வங்கி உதவியுடன் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண்மையே பொருளாதாரத்தின் உயிர்நாடியாகும். தமிழகத்தில் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, வேளாண்மைத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன்மூலம், வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட எனது அரசு உறுதி பூண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில், இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை எனது அரசு நிர்ணயித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமல்லாது, வேளாண் பெருமக்கள் விளைவித்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து, அவர்களின் தனி நபர் வருமானம் உயரும் வகையிலும் எனது அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தை எனது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 8 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு வசதி உள்ளது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், உறுப்பினர்களின் விவசாய விளைப் பொருட்களுக்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. அறுவடைக் காலங்களில் வேளாண் விளைப் பொருட்களின் விலை வீழ்ச்சி அடையும்போது, விவசாயிகள் தங்கள் விளைப் பொருட்களை கிடங்கில் 1 முதல் 2 மாதங்கள் சேமித்து வைத்து, தானிய ஈட்டுக் கடன் பெற்றுக்கொள்வதுடன், விலை ஏற்றத்தின்போது விளைப் பொருட்களைக் கிடங்கிலிருந்து எடுத்து நல்ல விலைக்கு விற்பதால், விவசாயிகளுக்கு 10 முதல் 30 சதவீதம் அதிக விலை கிடைக்கிறது.



2011 ஆகஸ்ட் 25] *[செல்வி ஜெ ஜெயலலிதா]*

நடப்பாண்டில், 185 கோடி ரூபாய் அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாலும், கூட்டுறவுத் துறையில் தற்போதுள்ள கிடங்குகளின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதாலும், மாநிலத்தில் கிடங்கு வசதியினை விரிவுபடுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு, NABARD வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் கடன் உதவி பெற்று, மொத்தம் 105 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில், மாநிலம் முழுவதும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 6 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், 1 இலட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்கு கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தப்படும்.

*முற்பகல் 11-55*

இதன்மூலம் தானிய சேமிப்பு இழப்பு குறைக்கப்படுவதுடன், தானிய ஈட்டுக் கடன் வசதியும் அதிகரிக்கப்படுவதால்

*[செல்வி ஜெ ஜெயலலிதா]* [2011 ஆகஸ்ட் 25

*விவசாயிகளுக்கு ஆண்டுக்கு சுமார் 26 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் மனநிறைவுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை—*தொடர்ச்சி*

### (ஆ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை—*தொடர்ச்சி*

### (இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை—*தொடர்ச்சி*

### (ஈ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

****திரு. ஆர். சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு! வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை, இது நான்கு மறை தீர்ப்பு!' என்ற பொன்மனச் செம்மலின் பாடல் வரிகளுக்கேற்ப, தமிழக மக்களின் எண்ணங்களின் செயல்வடிவமாய்த் திகழ்ந்து, நாடு வாழ, நாட்டு மக்கள் வாழ, நாட்டிலுள்ள ஏழை, எளிய மக்களுக்காகவே எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, வாழும் காலத்திலேயே வரலாறாகி, சாதனைகள் பல செய்து, சரித்திரம் படைத்திட்ட பொன்மனத் தலைவி, மனிதர்குல மாணிக்கம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையில் என்னைப் பேச வைத்த தாயுள்ளம் கொண்ட எங்கள் தங்கத் தலைவிக்குக் கோடானு கோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.*



2011 ஆகஸ்ட் 25] *[திரு. ஆர். சீனிவாசன்]*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2ஜி ஸ்பெக்ட்ரம், இமாலய மெகா ஊழல், மணல் கொள்ளையர்களின் அட்டூழியம், நில அபகரிப்புமூலம் மோசடிகள், கட்டப் பஞ்சாயத்துமூலம் ரௌடிகளின் அட்டகாசம், திரைப்படத் துறையினர் பட்ட இன்னல்கள், வழிப்பறி, கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களினால் நாட்டையே சுரண்டிக் கொண்டிருந்த அராஜகக் குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சியூட்டி, தடுமாறிக் கொண்டிருந்த தமிழக மக்களைத் தலைநிமிரச் செய்து, இருண்டு, வறண்டு கிடந்த தமிழக மக்களின் வாழ்வுக்காக ஆலய மணியாய், ஆறுதல் குரலாய், தனியொரு தலைவியாய், தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றியே தீருவேன் என்று சபதம் ஏற்று, புனித ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் தெய்வத் தாய் அமர்ந்திருக்கும் திசையை நோக்கி என் உயிரினும் மேலான நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்கி என் சிறிய உரையை இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதியுதவியுடன் கடந்த 2005 ஆம் ஆண்டில் நிர்வாகச் சீரமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் வருகின்ற 2012 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட உள்ளது. இதில், 2011-2012 ஆம் ஆண்டில் கட்டமைப்பு, வீட்டு வசதித் திட்டங்களுக்கென ரூ.1,361 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*ஜெர்மன் வளர்ச்சி வங்கியின்மூலம் நீண்டகாலக் கடன் பெறப்பட்டு குடிநீர், மழைநீர் வடிகால், பாதாளச் சாக்கடைத் திட்டம், நகரப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், கழிவு நீரகற்றும் திட்டம் போன்ற திட்டங்களின்மூலம் 13 பணிகள் ரூ.335 கோடி செலவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை எங்கள் ஆற்காடு தொகுதியில் உள்ள ஒரே நகரமான ஆற்காடு நகரத்திற்குக் கொண்டுவந்து செயல்படுத்த வேணுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பேரூராட்சிகளின் சாலைகளை மேம்படுத்தும்பொருட்டு 2011-2012 ஆம் ஆண்டில் 228 பேரூராட்சிகளில் 615.27 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ.102.62 கோடி செலவில் நபார்டு வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் மேம்படுத்தப்படவுள்ளன. இதில் எங்கள் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் உள்ள கலவை பேரூராட்சி, திமிரி பேரூராட்சி, விளாப்பாக்கம் பேரூராட்சி ஆகிய மூன்று பேரூராட்சிகளின் சாலைகளை இத்திட்டத்தில் சேர்த்து மேம்படுத்த வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்பட்டுவரும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III நிறைவடைய உள்ளதால், நகர்ப்புறங்களின் கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும், அடிப்படை வசதிகளுக்காகவும் நிதி குறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு இரண்டு புதிய திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால அரசு உருவாக்கியுள்ளது.

அதில் ஒன்று, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் என்றும், இரண்டாவதாக பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கென ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என இரண்டு சிறப்புத் திட்டங்களைத் தொடங்கவுள்ளது. இதில், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ.750 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள திட்டங்கள் இந்தப் புதிய திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தெருக்கள், குடிநீர் வசதி, கழிவு நீர் சுத்திகரிப்பு, வெள்ளநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிறுத்த வசதிகள், வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகளை எங்கள் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆற்காடு நகரம் மற்றும் கலவை, திமிரி, விளாப்பாக்கம் போன்ற பேரூராட்சிகளிலும் செயல்படுத்த வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.



நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரை கோடி மக்களின் இல்லங்களில் குடிகொண்டிருக்கும் உத்தமத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே வீட்டு வசதித் திட்டங்கள் அனைத்துமே சிறப்பு வாய்ந்த திட்டங்களாக மாறி வருகின்றன.

ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பல்வேறு திட்டங்களின்கீழ் 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் 10,768 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.72 இலட்சம் குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 2011 முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் 400 கோடி ரூபாய் அளவில் 8,733 குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்படவுள்ளன. மேலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்மூலம் 1,939.48 கோடி ரூபாய் மதிப்பில் 44,870 குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் 340 கோடி ரூபாய் செலவில் 2,247 குடியிருப்புகளைக் கட்டித் தர நமது மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. இதை ஆற்காடு நகரத்தில் வீட்டு வசதி வாரியம் Phase-I, Phase-II ஆகிய பகுதிகளில் விரிவுபடுத்தி மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் எங்கள் ஆற்காடு தொகுதி வாழ் மக்களுக்காகச் செயல்படுத்த வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

சரித்திரப் புகழ்பெற்ற ஆற்காடு நகரத்திற்கு ஏழை எளிய மக்கள் கல்வி பயில அரசுக் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர கோரிக்கை வைக்கின்றேன்.

ஆற்காடு பாலத்திலிருந்து மேல்விஷாரம் வரை உள்ள நான்குவழி தேசிய நெடுஞ்சாலையில் மாவட்டத்திலேயே அதிக அளவு வாகன விபத்து ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுவதைத் தவிர்க்க தானியங்கி சிக்னல் அமைத்துத் தர கோரிக்கை வைக்கிறேன்.

ஆற்காட்டில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, கடந்தகால ஆட்சியில் சரிவரச் செய்யப்படாத பேருந்து நிலையத்தை மாற்றி, புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர கோரிக்கை வைக்கிறேன்.

ஆற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயத் தொழில் வளம்பெற இலவச விவசாய உபகரணங்கள் வழங்க கோரிக்கை வைக்கிறேன்.

ஆற்காடு நகரமானது நகராட்சியாக மாறிய நாள்முதல் இன்றுவரை சரியான சாக்கடை வசதி இல்லாததால் பல்வேறு தொற்று நோய்கள் பரவி வருவதால் பாதாளச் சாக்கடை அமைத்துத் தர வேண்டுகோள் வைக்கிறேன்.

ஆற்காடு நகரம் கல்வித் துறையிலும், தொழில் துறையிலும் பின்தங்கி உள்ளதால், படிப்பறிவில்லா மக்களும் பயன்பெறும் வகையில் அரசு ஏதாவது தொழிற்சாலை அமைத்து ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டுகோள் வைக்கிறேன்.

ஆற்காடு மற்றும் அதன் அருகில் உள்ள சரித்திரப் புகழ்மிக்க தொன்மை வாய்ந்த பழைய கோயில்களைப் புதுப்பித்து ஆற்காடு நகரம் ஆன்மிக நகரமாக மாற தங்கள் ஆணையை எதிர்பார்த்து கோரிக்கை வைக்கிறேன்.

ஆற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பழைய காவல் நிலையங்களைப் புதுப்பிக்கவும், காவல் நிலைய பழைய குடியிருப்புகளைப் புதுப்பித்துத் தரவும் கோரிக்கை வைக்கிறேன்.

தங்கள் பொற்கால ஆட்சியில், மக்கள், பெற்றுவருகின்ற அனைத்து நல்ல திட்டங்களும், இலவசத் திட்டங்களும் எனது ஆற்காடு தொகுதியின் அனைத்து மக்களையும் சென்றடையும் வண்ணம் அதிகாரிகளுக்கு உத்தரவு அளித்து உதவிடும்படி கோரிக்கை வைக்கிறேன்.

கழகத்தின் சாதாரண அடிமட்டத் தொண்டனாகிய என்னை இந்தப் புனித ஜார்ஜ் கோட்டையிலே அமர வைத்து அழகு பார்க்கும் எங்கள் ஆராதனைக்குரிய தெய்வமே, இந்த உலகம் உள்ளவரை, எங்கள் குடும்பம் மட்டுமல்லாது, எங்கள் தலைமுறையே என்றென்றும் வணங்கும் எங்கள் ஆயுட்காலம் அனைத்தும் தங்களுக்கு அளித்து பல்லாண்டு காலம் தமிழகத்தை



ஆட்சி செய்ய அருணாச்சலேஸ்வரனை வேண்டி, வணங்கி, இடம் அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். குறித்த நேரத்தில் உரையை முடித்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரினுடைய வாழ்வாதாரமான பனியன் தொழிலைப் பாதுகாத்திட, சாயக் கழிவு நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண சுத்திகரிப்புத் தொழில்நுட்பம் நிறுவ 200 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடன் வழங்கவும், விவசாயிகளுக்கு உடனடி நிவாரணமாக 18 கோடியே 38 இலட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்டத்திற்கு பெருந்திட்ட வளாகம் ஒன்று 25 கோடி ரூபாய் செலவில் கட்டும் பணி நடப்பாண்டிலே தொடங்கப்படும் என்றும், இந்த வளாகத்தில் மாவட்டக் காவல் துறை அலுவலகம் உட்பட பல்வேறு துறைகளினுடைய அலுவலகங்கள் இடம் பெறும் என்றும் அறிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வீட்டு வசதி வாரியத்தின்கீழ் வீடுகள் ஒதுக்கப்படுவதில் பலவிதமான முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. இம்முறைகேடுகள் குறித்து விரிவாக விசாரணை நடத்தப்பட்டு ஒதுக்கீடுகள் முறைப்படுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இவற்றின் பணிகளை மேம்படுத்த வேண்டும்.

வீட்டு வசதி வாரியம் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யும்போது இருந்த நில மதிப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைக் கட்டிய பின்னரும் விற்பனைப் பத்திரம் வழங்கப்படவில்லை. மாறாக, இன்றைய மதிப்பீட்டின் அடிப்படையில் கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு அத்தொகையையும் அதற்கான முன்தேதியிட்ட வட்டி, அபராத வட்டியையும் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம், வீட்டு மனைகள் மற்றும் வீடுகளுக்காக நில உரிமையாளர்களிடமிருந்து நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். வீடு வாங்குபவர்களிடம், இறுதி விலைப்படி நீங்கள் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் வீடுகள் கொடுக்கப்படுகின்றன. கோர்ட் தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகு, அந்த விலையோடு, வட்டி சேர்த்து வீட்டு வசதி வாரியத்திற்குக் கட்டினால்தான் Sale Deed இதுவரையில் கொடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல், மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த வட்டியைக் குறைக்க வேண்டுமென்றெல்லாம் பல கோரிக்கைகள் இந்த வெட்டுத் தீர்மானங்களில் வந்திருக்கின்றன. அதை அம்மாவினுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று அதன்மூலம் அவர்களுக்கு ஒரு நல்ல வழி காட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இப்படிப்பட்ட பத்திரம் வழங்கப்படும் நிலை கோவை, திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சி, சென்னை, தாராபுரம் மற்றும் மதுரை உட்பட்ட பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்றது. குடிசை மாற்று வாரியத்தின்கீழ் வழங்கப்பட்ட



வீடுகளுக்கான விற்பனைப் பத்திரம் வழங்குவதிலும் புதுக்கோட்டை உள்ளிட்ட பல மாவட்டங்களில் இதேபோன்ற பிரச்சினைகள் உள்ளன. தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு ஆயிரக்கணக்கானோரின் குறைகளை நிவர்த்தி செய்ய பத்திரம் வழங்க . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் விற்பனைப் பத்திரம் கொடுப்பதில் காலதாமதமாவதற்குக் காரணம் நில உடைமை மாற்றத்தில் ஏற்படும் தாமதம். மேய்ச்சல் புறம்போக்கு என்று இருக்கும். அதிலே குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடு கட்டி இருப்பார்கள். வருவாய்த் துறைக்குச் சென்று நில உடைமை மாற்றம் ஆனதற்குப் பிறகுதான் Sale Deed கொடுக்கப்படும். கடந்த 5 வருடங்களில் எந்த நடவடிக்கையும் கடந்த ஆட்சியாளர்கள் எடுக்கவில்லை. இப்போது அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அது மாற்றப்பட்டவுடன் Sale Deed வழங்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** இதேமாதிரியான நிலைமைகள் சென்னை பழைய மஸ்தான் தோட்டத்தில் உள்ள சி.ஐ.டி. நகர் வரிசைக் குடியிருப்புப் பகுதிகளில் 50 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் வீடுகளுக்குரிய விற்பனைத் தொகையைச் செலுத்திய பின்னரும் உரியவர்களுக்கு அந்தப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

அதேமாதிரி, போக்குவரத்து கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக ஏற்கெனவே காஞ்சிபுரம் மாவட்டம், தையூரில் 88 ஏக்கரா நிலங்கள் 1,500 பேர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதிலுள்ள 80 சென்ட் வழித்தடம் நீர்நிலைப் புறம்போக்கை மாற்றினால் அந்த 1,500 பேரும் வீடு கட்டுவார்கள், அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தினால் கட்டப்பட்ட வீடுகள் நீண்ட காலமாகப் பராமரிக்கப்படாமல் சேதமடைந்த நிலையில் உள்ளன. போதிய நிதி ஒதுக்கீடு செய்து அவற்றைப் புதுப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு புதிய கடன்கள் வழங்கப்படவில்லை. இதனால் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் நலிவடைந்துள்ளன. எனவே, போதிய நிதி ஒதுக்கீடு செய்து கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்குத் தமிழக அரசு புத்துயிர் ஊட்ட வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் அதிகமாக, கிட்டத்தட்ட நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டு கடந்த 2001-2006-ல் 1,165 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டு அதன்மூலம் இணையத்திற்கு 13.7 கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் 2006-2011-ல் 228 கோடி ரூபாய்தான் கடன் வழங்கப்பட்டது. அதிலே 90 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** நன்றி. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் பணியாற்றும் 3,500 ஊழியர்களுக்கு ஓய்வூதியம், முதலமைச்சர் மாநில காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இன்றைய தகவல் தொழில்நுட்பப் புரட்சிக் காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்ற அரசின் பார்வை வரவேற்கத்தக்கது.

11-8-2011 அன்று மாநிலங்களவையில் தகவல் தொழில்நுட்ப மசோதா ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டமுன்வடிவு, இந்தியாவில் உலகத் தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப



நிறுவனத்தைத் தனியார்-அரசு கூட்டு அடிப்படையில் நிறுவுவதை அனுமதிக்கிறது. அத்திட்டத்தின்கீழ் அந்தத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் நிறுவப்படும் எனத் தெரிகிறது. இந்த நிறுவனத்தில் மாணவர் சேர்க்கைக்கான இட ஒதுக்கீட்டை உத்தரவாதப்படுத்த தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். இந்தத் திட்டத்தில் தனியார் பங்களிப்பை தவிர்த்திடவும் வலியுறுத்த வேண்டும். தமிழ்நாட்டில் மென்பொருள் ஏற்றுமதியின் மதிப்பு 40,000 கோடியாக வளர்ந்துள்ளது மகிழ்ச்சியான செய்தியே. அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதிமொழி ஏற்றிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

தகவல் தொழில்நுட்பத் துறையிலும், மென்பொருள் ஏற்றுமதியிலும் தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றுகிற வகையில் இத்துறை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தகவல் மற்றும் தொழில்நுட்பப் பூங்காவை இரண்டாம் நிலை நகராட்சிகளிலும், கிராமப்புறங்களிலும் உருவாக்கிட தமிழக அரசு உதவி செய்யும் என்ற நிலையை அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. தமிழகத்தில் உருவாகியுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் சுமார் 1,699 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் சுமார் 50 சதவீத நிலங்கள் எந்தத் தொழில் நிறுவனங்களுக்கும் இன்றுவரை ஒப்படைக்கப்படவில்லை. அப்பூங்காக்களின் கட்டமைப்பு வசதிகளுக்காக சுமார் 173 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், கடந்த தி.மு.க. ஆட்சியின் மெத்தனப் போக்கால் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் பூவும் இல்லை, செடியும் இல்லை. அ.தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதைப்போல செயல்படாத இப்பூங்காக்களை மேம்படுத்தி, சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும். 15 ஆயிரம் இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், ஒரு இலட்சம் கிராமப்புற மக்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பும் ஏற்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் கிராமங்களில் 150 கிராமப்புற BPO மையங்கள் ஏற்படுத்தப்படும் என்ற அ.தி.மு.க.-வினுடைய தேர்தல் வாக்குறுதியையும், பல வாக்குறுதிகளையும் நிறைவேற்றியதைப்போல், இதையும் நிறைவேற்ற வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல், என்ன point of order?

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இந்தப் பூங்காக்களை எல்லாம் செயல்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். நானும் 2001-லிருந்து போராடிக்கொண்டு வருகிறேன். 10,000 square meter-க்கு மேலே யாராவது ஒரு building கட்டவேண்டும் என்றால் Open Space Reservation விட்டாக வேண்டும். அந்த Open Space Reservation-ஐ விலை கொடுத்து வாங்க முடியாது. அதனால் அதை Breathing Lung Space ஆக விட்டாக வேண்டும். அந்தமாதிரி விட்டுவிட்டு அதற்கு compound போட்டு, park for public என்று சொல்லும்போது, அந்த park-க்குத் தனியாக வழி வைத்தாக வேண்டும். நில ஆக்கிரமிப்புகளுக்கெல்லாம் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இப்போது கருணாநிதியே ஒரு நில ஆக்கிரமிப்பாளர்தான். அறிவாலயத்திற்கு முன்னால் 10 ground இடத்தை compound போடாமல், அறிவாலயத்தின் வழியாகத்தான் park-க்குப் போக வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். அதற்கு உள்ளே தார் ரோடு எல்லாம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில், Hyatt Hotel-இல் பார்த்தீர்கள் என்றால் OSR Land கொடுத்து இருப்பார்கள். அதற்கு compound போட்டிருப்பார்கள். இந்த நில ஆக்கிரமிப்பில் கருணாநிதிதான் முதன்மையானவர். இன்றைக்குக்கூட இங்கே வந்து ஒரு statement கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார். என்னவென்றால், Mini Emergency போல் உள்ளதாம். நில ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று அவரால் சொல்ல முடியாது. Mini Emergency என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர் நில ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று சொல்லட்டும். இந்த 10 ground இடம் main road இல் இருக்கிறது. இதன் value இன்றைக்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. நானும் 2001-லிருந்து போராடிக்கொண்டிருக்கிறேன். எனக்கும் வயதாகிவிட்டது. நான் Councillor-ஆக இருந்து, இப்போது M.L.A. ஆகியிருக்கிறேன். இப்போதாவது இதற்கு ஒரு விடிவு காலம் வருமா என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் பொதுமக்களிடமும் நில அபகரிப்பு செய்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியத்தில் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை அபகரிப்பு செய்திருக்கிறார்கள். அவையெல்லாம் இப்பொழுது நடவடிக்கையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பு. வெற்றிவேல்:** இது பொதுமக்களுடைய இடம்தான், Park. உள்ளே தார் ரோடு இருக்கிறது. அவர்கள் Parking-ஆக use செய்கிறார்கள். பொதுக் குழுவிற்கும், செயற் குழுவிற்கும் use செய்கிறார்கள். அதை compound செய்ய வேண்டும். உள்ளே hidden agenda இருக்கிறது. இதை நாளைக்கு வேறு எதற்காகவாவது use செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமானது அந்த park. மாநகராட்சி Mayor திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு மாதத்தில் மாநகராட்சித் தேர்தல் வரப்போகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் யாரை கை காண்பிக்கின்றார்களோ அவர்தான் மாநகராட்சி Mayor. கடுமையான நடவடிக்கை எடுத்து அந்தப் பூங்கா கைப்பற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் ஒரு சிறிய சட்டச் சிக்கல் என்னவென்றால், அந்த park-ஐ மாநகராட்சிக்கு hand over பண்ணினார்கள். ஆனால் அவர்களே maintain பண்ணுகிறோம் என்று சொல்லி திரும்ப எடுத்துக்கொண்டார்கள். Maintenance-க்குத்தான் அவர்களிடம் park கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் maintenance-க்கு கொடுத்த park-ஐ சொந்த நிலமாக use பண்ணுகிறார்கள். இதில்

Mayor நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. Mayor ஒரு அரசியல் புள்ளிதான் அங்கே. மாநகராட்சி நிர்வாகமே நடவடிக்கை எடுக்கலாம், C.M.D.A. நடவடிக்கை எடுக்கலாம், Housing Minister நடவடிக்கை எடுக்கலாம், உள்ளாட்சித் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்கலாம், தயவுசெய்து நடவடிக்கை எடுங்கள். இல்லாவிட்டால் கருணாநிதிக்கு இப்போது உடம்பு சரியில்லை என்பதால் வேறு எதற்காகவாவது use செய்துவிடுவார்கள் அதை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-15

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக உணர்ச்சிப்பூர்வமாக கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். 2001-லிருந்து போராடிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவாலயத்தில் மட்டும் அவர்கள் ஆக்கிரமிப்புச் செய்யவில்லை. முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மட்டும் ஆக்கிரமிப்புச் செய்யவில்லை. அவர்களுடைய அமைச்சரவையிலேயிருந்த முன்னாள் உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடிகூட தன்னுடைய மாமியார் பெயரில் மாநகராட்சியினுடைய சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததோடு மட்டுமல்லாமல், கட்டடமே கட்டியிருக்கிறார். அதுவும் வழக்கிலே நிலுவையிலே இருந்துகொண்டிருக்கிறது. முறையாக எல்லாவற்றிலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அதை முறைப்படுத்தி, நகராட்சியினுடைய சொத்தாக மாற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நகராட்சிச் சொத்தாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.



***திரு. அ. சவுந்தரராசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமியார் பெயரிலே சொத்தை அபகரித்தவரை எப்போது மாமியார் வீட்டுக்கு அனுப்புவீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 5 முறை முதலமைச்சராக இருந்தேன் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற முன்னாள் முதலமைச்சருக்கு சட்டமே தெரியவில்லை என்று அழகாக, ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின்படி நடக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, சட்டப்படி நடவடிக்கை எடுத்து, சட்டப்படி அவர்களைக் கைது செய்து, சட்டப்படி சிறைக்கு அனுப்பும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பூவும் இல்லை, செடியும் இல்லை என்று வர்ணித்துப் பேசிக்கொண்டிருந்தார். ஆனால், விவாதம் இன்னொரு பூங்காவின் பக்கம் திரும்பிவிட்டது. ஆகவே, எங்களுடைய உறுப்பினர், அந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் எந்த ஏற்பாடும் இல்லை, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உங்கள் உறுப்பினரின் பேச்சை இன்னும் முடிக்கச் சொல்லவில்லை. அவர் பேச்சைத் தொடரப் போகிறார்.

**செல்வி கே. பாலபாரதி**: இல்லை, விவாதம் வேறு பக்கமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதனால் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உறுப்பினர் பேச்சைத் தொடரட்டும். திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மென்பொருள், வன்பொருள் தொழிற்சாலைகளை வளர்க்கும்முகமாக புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2011-ல் அறிவிக்கப்படும் என நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய தொழில்நுட்பக் கொள்கை, தகவல் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மையங்களில் பணியாற்றும் இலட்சக்கணக்கான இளைஞர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தை உள்ளடங்கியதாக இருக்கவேண்டும். சுதந்திரம் மற்றும் திறந்த மென்பொருள் அரசின் கணினி உபயோகக் கொள்கையாக அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் குடும்ப ஆதிக்கம் செலுத்திய துறைகளில் ஒன்று கேபிள் டி.வி. தொழில் துறை. அத்தொழிலை தமிழக அரசு அரசுடைமையாக மாற்றியது மிகச் சரியான நடவடிக்கை. இதனால் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கானோர் ஏகபோக நெருக்கடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். விருப்பமுள்ள அனைத்து மக்களும் அரசு கேபிள் டி.வி இணைப்பைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவதன்மூலம் தமிழக அரசின் இச்சிறந்த நடவடிக்கை நிலைப்படுத்தப்படும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற முறை முதல்வராக இருந்தபோது, "தினத்தந்தி நாளிதழின் நிறுவனர் திரு. சி.ப. ஆதித்தனார் அவர்களுடைய திருவைகுண்டம் இல்லம் நினைவு இல்லமாக அமைக்கப்படும் என்றும், அங்கு கணினி நூலகம் அமைத்திட அரசு ஆவன செய்யும்" என்றும் அறிவித்தார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அந்த அறிவிப்பு செயலாக்கம் பெற்றிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொதுத் துறை நிறுவனங்களை விற்பதற்கென்றே தனியான துறையை மத்திய அரசு தொடங்கியது. ஆனால், இன்று தமிழக அரசோ, ஏழையெளியோருக்குச் சிறப்புத் திட்டச் செயலாக்கத்திற்கென்று தனித் துறையைத் தொடங்கியுள்ளது. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை என்ற தனித்துறையை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கென்றே ஏற்படுத்தியுள்ளதற்காகத் தமிழக அரசை மனதாரப் பாராட்டலாம்.



தமிழக அரசின் ஏழையெளிய மக்களுக்கான இலவசத் திட்டங்களைக் கேலி பேசும் கூட்டமும், கேள்வி கேட்கும் கூட்டமும் உள்ளது. ஆனால், அக்கூட்டங்களுக்கு மத்திய அரசு நவீன தாராளமயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது முதல் இன்றுவரை பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பெரும் முதலாளிகளுக்கும் 21 இலட்சம் கோடி ரூபாய் வரிச் சலுகையாக அள்ளி வழங்கியுள்ளதைக் கேள்வி கேட்பதில்லை. ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகிற அதேநேரத்தில் ஏழை மக்களின் இன்னல்களைப் போக்கும் சிறப்பு நலப் பணித் திட்டங்கள் தவிர்க்க முடியாதது. எனவேதான், தமிழக அரசு விலையில்லா அரிசி வழங்குதல் போன்ற சிறப்பு நலப் பணித் திட்டங்களைத் தலைநிமிர்ந்து நடைமுறைப்படுத்துவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உளமார வரவேற்கிறது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரிசி கடத்தல், டி.வி. வழங்குவதில் முறைகேடு, பல ஊழல்கள் மலிந்திருந்தன. அக்குறைகளை நீக்கும் வகையில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை விழிப்போடு சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

*பிற்பகல் 12-20*

இச்சிறப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்றால் அதனை நடைமுறைப்படுத்திட வருவாய்த் துறையில் பிரத்தியேக அதிகாரிகளும், பணியாளர்களும் நியமிக்கப்பட வேண்டும். தமிழகத்தில் படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிற இலட்சக்கணக்கான இளைஞர்கள் இருக்கிறார்கள். எனவே, அரசுத் துறைகளில் உடனடியாக காலியாக உள்ள சுமார் 2 இலட்சம் காலிப் பணியிடங்களை நிரப்புவதன்மூலம் இளைஞர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்ய முடியும்.

பல மாவட்டங்களில் உள்ள கனிம வளங்களைப் பயன்படுத்தி இவற்றை ஆழ்ந்தெடுக்கும் தொழிலை மாநில அரசின்கீழ் கொண்டுவந்து, பொதுத் துறை நிறுவனங்கள் ஏற்று, ஏராளமான இளைஞர்களுக்குக் கண்ணியமான வேலைவாய்ப்பை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் உருவாக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்ட

விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பணி சிறக்க மனம்நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற முறை முதல்வராக இருந்தபோது சென்னையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அச்சமயத்தில் சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தை சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்தியதை எவரும் மறந்திருக்க முடியாது.

அதேபோன்று, அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற திருப்பூர் மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான விளையாட்டு வளாகங்கள் நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரிடம் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** அதிகமாகக் குறுக்கீடுகள் வந்தன. நான் தயாரித்திருக்கிற பேச்சுக்கே மொத்தம் 15 நிமிடங்கள்தான் ஆகும். ஆறு பக்கம்தான் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகளுக்கு 5 நிமிடங்கள் கழித்தால்கூட மொத்தம் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். ஆக மொத்தம் 20 நிமிடங்கள். 12-01-க்குப் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது 12-22 ஆகிறது. (குறுக்கீடு) பரவாயில்லை, அதைப் பேசியே ஒரு நிமிடத்தைக் கடத்திவிடாதீர்கள். பேசுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டுக்கென்று சிறப்பான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மாநிலம் முழுவதும் விளையாட்டுத் துறை சிறப்பாக வெற்றி பெற மாணவர்களுக்கு உயர் கல்வியும், வேலைவாய்ப்பும், குறிப்பிட்ட சலுகைகளும், முன்னுரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

கோவில்பட்டிப் பகுதியில் ஹாக்கி விளையாட்டு மைதானத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

தொகுதிகள். புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம் என்பதால் பல்வேறு துறை அலுவலகங்களில், போதுமான பணியிடங்களை



நிரப்ப வேண்டியுள்ளது. திருப்பூர் தொழில் நகரம் என்பதால் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கேற்ப காவல் துறைக்குத் தேவையான எண்ணிக்கையில் காவலர்களையும், வாகனங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மக்கள்தொகைப் பெருக்கத்திற்கேற்ப திருப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Demand-ல் உள்ள கருத்துகளையெல்லாம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** சரி. திருப்பூரில் பல ஆண்டுகளாகக் குடியிருந்தும் மனைப் பட்டா பெற முடியாதவர்களும், சொந்தமாக வீட்டுமனை இல்லாதவர்களுமாக சுமார் 50 ஆயிரம் பேர்கள் அரசிடம் மனு செய்துள்ளார்கள். இவர்களுக்கு அரசு வகை மாற்றம் செய்து பட்டா வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பாரம்பரிய சிற்பக் கலை வாழும் இடமாக திருமுருகன் பூண்டி பகுதி விளங்குகிறது. இங்கு 20-க்கும் அதிகமான சிற்பக் கலைக்கூடங்களும், திறமை வாய்ந்த சிற்பிகளும் வாழ்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இத்தகைய சிறப்பு பெற்ற பகுதியில் நவீன பயிற்சிகளை உள்ளடக்கிய சிற்பக் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்கள், உங்களுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவை அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும்.

**திரு. கே. தங்கவேல்:** மக்களுக்குச் சாதகமான குடிநீர் கிடைக்கச் செய்வதே அரசின் முதன்மை நோக்கமாக அளிக்கப்பட்டுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதியினுடைய பிரச்சினைகளை ஏற்கெனவே சொல்லியிருக்கக்கூடிய வழிகாட்டுதலின் அடிப்படையில் எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.

திருப்பூர் மக்கள்தொகை வளர்ச்சியைக் கணக்கில் கொண்டு 4-வது குடிநீர்த் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் மாநகராட்சி, நல்லூர் நகராட்சி, 15. வேலம்பாளையம் நகராட்சிகளில் போதுமான எண்ணிக்கையில் துப்புரவுப் பணியாளர்கள் இல்லை. மக்கள் தொகை எண்ணிக்கைக்கேற்ப நிரந்தர துப்புரவுப் பணியாளர்களை நியமித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரில் அமைந்துள்ள சிறு-குறு தொழில் நிறுவனங்கள் குறைந்த அழுத்த மின்சாரத்தால் பாதிக்கப்படுகின்றன. எனவே, சீரான மின் விநியோகத்திற்கான துணை மின் நிலையங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் பழைய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனை ஏராளமான பொது மக்கள் வந்து செல்ல வசதியாக அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையை மேம்படுத்தி, நவீன மருத்துவமனையாகச் செயல்படச் செய்ய வேண்டும்.

மேலும் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சுமார் 38 ஏக்கர் இட வசதியைப் பயன்படுத்தி மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில் மருத்துவக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக மாவட்ட வருவாய் அலுவலர், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை போன்ற மூத்த அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் மூலமாக இந்தச் சிறப்புத் திட்டங்களை உடனடியாக மக்களுக்குக் கொண்டு செல்வதற்கு முழுமையாக இந்தச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, கோவில்பட்டியிலே ஹாக்கி விளையாட்டு மைதானத்தை மீட்டெடுக்க வேண்டுமென்று சொல்கின்றார்கள். மீட்டெடுக்க வேண்டுமென்றால் என்னவென்று தெரியவில்லை. ஒருவேளை தி.மு.க. ஆட்சியில் அதையும் கொள்ளையடித்து சென்றிருக்கிறார்களா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், திருநெல்வேலியிலே சிறந்த ஒரு ஹாக்கி விளையாட்டு அரங்கம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

பிற்பகல் 12-25

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஹாக்கி மைதானத்தை சில தனிநபர்கள் ஆக்கிரமிப்பதற்கு முயற்சி செய்ததால், மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி, அந்த வழக்கில் உயர் நீதிமன்றம் வழிகாட்டியிருக்கிறது. தேசிய அளவில் ஹாக்கி போட்டி கோவில்பட்டியிலேதான் நடைபெற்றது. ஆகவே, அந்த மைதானம் விளையாட்டுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. ஆகவே, நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலின்படி, தீர்ப்பின்படி அந்த மைதானத்தை ஹாக்கி விளையாட்டு அறக்கட்டளைக்கு ஒப்படைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அதை அறக்கட்டளை சார்ந்த சில தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள் என்பதுதான் அதிலே இருக்கக்கூடிய விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு சிறிய clarification. தூத்துக்குடி மாவட்டம், சங்கரப்பேரி கிராமத்தில் 1988 முதல் 1993 வரை 82.5 ஏக்கர் நிலம் வீட்டு வசதி வாரியத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகச் செய்தித்தாள்களில் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 5 அல்லது 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கின்ற 30 பெரிய நிலச்சுவான்தார்கள் நீதிமன்றம் சென்று ஏறக்குறைய நிலங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டார்கள். ஆனால், 3 சென்ட், 4 சென்ட், 5 சென்ட் நிலம் வைத்திருக்கக்கூடிய ஏறக்குறைய 130 ஏழையெளிய மக்கள் இப்பொழுது வீட்டு வசதி வாரியத்தினுடைய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். இப்பொழுது EB connection-ஐ disconnect செய்திருக்கிறார்கள். Water connection இல்லை. இதுபோன்ற தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே ஏழைகள். எனவே, ஏற்கெனவே 82.5 ஏக்கர் நிலத்தில் 50 ஏக்கருக்குமேல் உள்ள நிலத்தை, இன்னும் சொல்லப்போனால், தி.மு.க.வினுடைய முன்னாள் அமைச்சர் அவர்களின் தந்தையும், தி.மு.க-வின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் பெரியசாமியும் அந்த ஏழைகளுக்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலத்தையும் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். ஏழையெளிய மக்கள் 133 பேருடைய 30 ஏக்கர் நிலத்தை எடுப்பதற்கு வீட்டு வசதி வாரியம்மூலம் பெரிய நெருக்கடி கொடுக்கிறார்கள். எனவே, தூத்துக்குடி மாவட்டம், சங்கரப்பேரி கிராம ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்கு, அந்த நிலத்தை அவர்களே வைத்துக்கொள்வதற்கு வீட்டு வசதி வாரியம்மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு இதுபோல் வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை வாரியக் கூட்டத்தில் வைத்து, முறை தவறி திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியமான பிரமுகர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல், இந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தாலும், வாரியம் உச்ச நீதிமன்றம்



செல்லும். இப்படி வழக்குகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்பீல் செய்யாமல், வாரியத்தில் வைத்து, அவர்களுடைய அதிகாரத்தைச் செலுத்தி, வீட்டு வசதிவாரியத்தினுடைய நிலங்கள் முறைகேடாக அபகரிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தி.மு.க.-வினுடைய மாவட்டச் செயலாளர் பெரியசாமி அவர்கள் நிலத்தை வாங்கியிருக்கிறார் என்று சொல்கிறார்கள்; ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இதை விரிவாக ஆய்வு செய்து, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பெரியசாமி வாங்கியிருந்தாலும், அது சட்டத்திற்குப் புறம்பாகக் கொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஏழையெளிய மக்களினுடைய பிரச்சினையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டுசென்று, சட்டத்திற்கு உட்பட்டு, கொடுக்க முடிந்தால் வாரியம் நிலத்தைத் திருப்பிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். Clarification முடிந்தது. மாண்புமிகு அமைச்சர் கொடுத்த பதிலுக்கு நன்றி சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, ஹாக்கி விளையாட்டு மைதானத்தைப் பற்றிச் சொன்னார்கள். எங்களுடைய அம்மா அவர்கள் பள்ளியிலே படிக்கிறபோது, தடகளப் போட்டிகளிலே சிறந்த சாம்பியனாக விளங்கியவர் என்பது இந்த நாடறிந்த உண்மையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஹாக்கி போட்டிக்காக astro turf என்கிற விளையாட்டு மைதானத்தை உருவாக்கி, சென்னையிலே Champions Trophy போட்டியை நடத்தி,

உலகத்திலிருக்கிற தலைசிறந்த அணிகளையெல்லாம் வரவழைத்து, விளையாட வைத்து, தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தன்னலமின்றி மற்றவர்களுக்காக தனது சேவையை அர்ப்பணிக்கிறவர்தான் சமுதாயத்தில் உயர்ந்தவர்" என்பது சுவாமி விவேகானந்தரினுடைய பொன்மொழி. இந்தப் பொன்மொழிக்கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

*பிற்பகல் 12-30*

"பூலோக வைகுண்டம்" என்று அழைக்கப்படும் புண்ணிய பூமியாம், ஸ்ரீரங்கம் தொகுதி, திருச்சி மாவட்டம், மாண்புமிகு முதலமைச்சர் மாவட்டம் என்ற பெருமையை வழங்கிய எங்கள் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)* திருச்சி மாவட்ட மக்களின் சார்பாகவும், மணப்பாறை தொகுதி மக்களின் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை உங்கள் பாதங்களிலே வைத்து வணங்குகிறேன்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு



அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து எனது கன்னிப் பேச்சை தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், பளுவஞ்சி என்னும் குக்கிராமத்தில் சாதாரண ஏழை உழவர் குடும்பத்தில் பிறந்த என்னை 6 ஆண்டுக் காலம் கழகத்தினுடைய கிளைக் கழகச் செயலாளராகவும், மருங்காபுரி ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக 15 ஆண்டுக் காலம் பணியாற்ற வாய்ப்பளித்து, தற்போது நடந்த சட்டமன்றத் தேர்தலில் மணப்பாறை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவித்து எனது வெற்றிக்காக மணப்பாறைக்கு வருகை தந்து தேர்தல் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் மட்டுமல்ல என்னுடைய குடும்பத்தாரும், எனது சந்ததியினரும் உயிருள்ளவரை நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்போம் அம்மா!

ஜனநாயகத்திற்கும், பணநாயகத்திற்கும் நடந்த இந்தத் தேர்தலில் பணத்தைப் பெரியதாக எண்ணாமல் ஜனநாயகத்தை நிலைநாட்டக்கூடிய வகையில் மருங்காபுரி தொகுதியை மணப்பாறைத் தொகுதியாக்கினாலும், மணப்பாறைத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எஃகு கோட்டை என்பதை நிரூபிக்கும்வண்ணம் என்னை வெற்றிபெறச் செய்த மணப்பாறைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு, என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், பாராட்டுகளால் மயங்குவதும் இல்லை, விமர்சனங்களால் தயக்கம் கொள்வதுமில்லை. உலகில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான் அம்மா! மாண்புமிகு அம்மா தாங்கள் மிகுந்த தன்னம்பிக்கை உடையவர். தமிழகத்தில் தனிப்பெரும் தலைவியாக தடைகளை உடைத்து தரணி ஆள மூன்றாம் முறையாக முதல்வராக வீற்றிருக்கிறீர்கள் அம்மா!

அம்மா! உங்களின் அருள் பார்வையில் ஆயிரம் குளிர் நிலவில் ஒளியையும், நீங்கள் சினந்து நின்றால் சூரியனும் சுட்டெரிக்கப்படும் என்பதுதான் இன்றைய உண்மை.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் பள்ளிக் கல்வி முடித்து, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கால்கடுக்க நின்றதை மாற்றி அவரவர் பயிலும் பள்ளிகளிலேயே தகவல் தொழில்நுட்பவியல் துறைமூலம் கல்வித் தகுதியை பதியும் முறையைக் கொண்டுவந்த அம்மா அவர்களைத் தமிழக மக்கள் நன்றியுடன் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மின்னணு ஒய்வூதிய முறையைக் கொண்டுவந்து வயதானவர்களும், கைம்பெண்களும் சிரமமின்றி தவறானவர்கள் பயன்பெறாமலும், உண்மையானவர்கள் முழுமையாகப் பயன்பெறும் வகையில் பயோமெட்ரிக் முறையில் கைரேகையைப் பதிந்து செயல்படுத்த திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகாவிலும், கடலூர் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தியுள்ளீர்கள் அம்மா! இத்திட்டத்தினை அனைத்து மக்களும் வரவேற்கிறார்கள் அம்மா!

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அதன்வசம் உள்ள நிலத்தில் அந்த வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தியும் தனியார் கூட்டு முயற்சியிலும் புதிய குடியிருப்புகளைக் கட்டித் தர 2011-2012 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம்மூலம் 340 கோடி ரூபாய் செலவில் 2,427 குடியிருப்புகளைக் கட்டித் தர நிதி ஒதுக்கியுள்ள அம்மா அவர்களுக்கு, ஏழை எளிய மக்கள், சொந்த வீடு கட்ட கனவு காணும் மக்கள், வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்பார்கள் அம்மா!

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் முதன்முதலாக தெற்காசிய விளையாட்டுப் போட்டி சென்னையில் சீரும் சிறப்புமாக உலகம் வியக்கும் வண்ணம் நவீன நீச்சல் குளங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள் போன்ற பல்வேறு விளையாட்டுத் துறைகளுக்கென உள்கட்டமைப்புகளை அன்று அம்மா உருவாக்கியதில், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு வருகை தந்து, வெளிநாட்டு வீரர்கள் தங்கிய இடம்தான் இன்றைக்கு சென்னையில், மிக முக்கியப் பகுதியான, கோயம்பேடு பேருந்து நிலையத்தை ஒட்டியிருக்கிற தெற்காசிய விளையாட்டு கிராம



குடியிருப்பு ஆகும். அங்குதான் I.A.S., I.P.S., போன்ற அரசு உயர் அதிகாரிகள் குடியிருந்து குடிமைப் பணிகளைச் செவ்வனே செயலாற்றி வருகின்றனர். அம்மா அவர்கள் ஒரு திட்டம் தீட்டினால் அதற்கு ஒரு பலன் மட்டும் கிடைக்காது. பல நோக்கு பலன் கிடைக்கும் வகையில்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டம் இருக்கும். இளைஞர் நலனில் பெரும் அக்கறை கொண்டு அனைவருக்கும் முன்னோடியாக, நமது இயக்கத்தில் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை எனும் மாபெரும் அமைப்பை உருவாக்கி, இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

அம்மா, தங்கள் ஆட்சியின் மாட்சிமையினால், திருடியவர்கள் திஹார் சிறையிலும், கொள்ளையடித்தவர்கள் கோவை சிறையிலும், அப்பாவிகளைக் கொன்ற பாவிகள் பாளையங்கோட்டை சிறையிலும், மக்களை ஏமாற்றியவர்கள் மதுரை சிறையிலும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் திருந்தாத தி.மு.க. ஜென்மங்களுக்காக திருச்சி சிறை திறந்தேயிருக்கிறது. அடைக்கப்பட வேண்டியவர்கள் வெளியே இருக்கிறார்கள். அவர்களை வா, வா என அழைக்கிறது வேலூர் சிறைச்சாலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியடையும் வகையில் ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்று காலை முன்னாள் அமைச்சர் நேரு அவர்களும், திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர் பெரியசாமி அவர்களும் கைது செய்யப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு திருச்சி மாவட்டத்தின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர், தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் கொடுத்துவிட்டால், அவைக் குறிப்பில் அவை பதிவு செய்யப்படும். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலும் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மணப்பாறை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக கீழ்க்கண்ட கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன்:

மிகவும் பின்தங்கிய தொகுதியான எனது மணப்பாறை தொகுதியில், ஒரு அரசுக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறையிலுள்ள பல ஊர்களிலிருந்து மக்கள் தாலுகா அலுவலகத்திற்கு வர 35 கிலோ மீட்டர் முதல் 40 கிலோ மீட்டர் தூரம் வரை பயணிக்க வேண்டியுள்ளது. எனவே, மருங்காபுரியைத் தலைமை இடமாகக் கொண்டு புதிய தாலுகா அலுவலகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறையில் 25-9-1974 ஆம் ஆண்டு முதல் சுமார் 38 வருடங்களாக தீயணைப்பு நிலையம் துவங்கப்பட்டு தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மணப்பாறை டி.எஸ்.பி. அலுவலகம் அருகில் 0.78 சென்ட் இடமுள்ளது. அந்த இடத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் வேண்டுகிறேன்.

துவரங்குறிச்சியில் 8-8-1992 முதல் சுமார் 20 வருடங்களாகத் தீயணைப்பு நிலையம் துவக்கப்பட்டு தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அரசுக் கட்டடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் வேண்டுகிறேன்.

வையம்பட்டியில் ஒரு புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டுகிறேன்.



திண்டுக்கல் மாவட்டம், கரந்தைமலையில் தொடங்கும் பாலாறு மணப்பாறை தொகுதியில் சுமார் 50 கி.மீ. தூரம் செல்கிறது. இதன் குறுக்கே மருங்காபுரி ஒன்றியம், அக்கியம்பட்டி அருகில் 1972 ஆம் ஆண்டு அணை கட்டத் திட்டமிட்டு இதுவரை செயல்முறைக்கு வரவில்லை. இந்தத் திட்டம் நிறைவேறினால், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பயன்பெறுவதோடு நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, பல ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேணுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் துவரங்குறிச்சி சுற்று வட்டாரப் பகுதியில் தக்காளி அதிக மகசூல் செய்வதாலும், மாங்கனி அதிக மகசூல் செய்வதாலும், குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுக்க வேணுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் எலுமிச்சை மரம் அதிகமாகப் பயிரிடப்பட்டு அதிக மகசூல் பெறுவதால், எலுமிச்சம் பழம் ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

எனது தொகுதியைச் சார்ந்த கோவில்பட்டிக்கு துணை சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க வேணுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கிறேன்.

மணப்பாறையில் சார்பு நீதிமன்றம் அமைத்திட வேண்டுமாய் பணிவுடன் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திட வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறையிலிருந்து நேரடியாக மதுரைக்கும், மணப்பாறையிலிருந்து சென்னைக்கும் பேருந்து வசதி செய்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

“தரணி போற்றுகின்ற தங்கத் தாரகையே!
தன்மான உணர்வுமிக்க தலைவியே!
மண்ணிலே உலவுகின்ற மகத்தான சரித்திரமே!
ஏங்கி நிற்கும் ஏழைகளை, தாங்கி நிற்கும்
தமிழகத்தின் தலை மகளே!
ஏழையின் துயர் துடைக்கும் வான்மேகமே!
உங்களின் பாதம் தொட்டு வணங்கினால்,
எங்கள் வாழ்நாளே வளம் கொழிக்கும்.
அம்மா இரு விரல் காட்டி, தாங்கள் புன்னகை செய்தால்,

இந்தியத் திருநாடே தங்கள் பின்னால் அணி வகுக்கும்.”
*(மேசையைத் தட்டும் ஒலி)*

எந்நாளும் எங்களின் கழகப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் இருக்கும் இடம் நோக்கி, தாழ்பணிந்து வணங்கி, சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் உரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி, எந்தன் உரையை நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-வது சட்டமன்றப் பேரவையின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த, அனைவருக்கும் வீடு என்ற அரசின் கொள்கையினை நிறைவேற்றுகின்ற வகையில், 20 அம்சத் திட்டத்தின்கீழ் வீட்டு வசதித் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் வகையில், முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவக்கப்பட்ட திட்டம், வீட்டு வசதித் திட்டம். உலகில்



பிறந்த மனித சமுதாயத்திற்கு 3 தேவைகள் மிகவும் முக்கியமானவை. உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு, இவை மூன்றும் அவசியம். இன்றைக்கு 3-வது முறையாகப் பதவியேற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில், தமிழக மக்களுக்கு இவை மூன்றும் கிடைக்குமென்ற நம்பிக்கை பிறந்துள்ளது. இந்த மூன்றில் உண்ண உணவு என்பது 1,83,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு ‘விலையில்லா அரிசியை’ வழங்கியதன்மூலம் நிறைவேற்றித் தந்துள்ளார்கள்.

*பிற்பகல் 12-40*

அடுத்து, உடுக்க உடை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவ, மாணவிகளுக்கு டிரவுசர், சட்டைக்குப் பதில் பேன்ட், சட்டை வழங்கப்படும் என்றும், மாணவிகளுக்கு பாவாடை, சட்டைக்குப் பதில் சல்வார், கமீஸ் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ள நல்ல அறிவிப்புகள்மூலம் இதுவும் நிறைவேறியுள்ளது.

மூன்றாவதாக, குடியிருக்க வீடு. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு குழப்பங்கள் நிறைந்த திட்டமாக, திருச்சியிலே அன்றைக்கு முதல்வருடைய பெயர் போடப்பட்டு அறிவித்த திட்டம், “ஐந்து முறை முதல்வராக இருந்தும் முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு சட்டங்கள் தெரியவில்லை” என்று நேற்றையதினம்கூட நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை, அவர்களுக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் குளறுபடி ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். காரணம், கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட பல திட்டங்கள் குழப்ப நிலையிலேயே இருந்துள்ளன.

குடிசையில் வாழ்ந்தவனை தெருக் கோடியில் குடியிருக்க வைத்த திட்டம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்றிருக்கிறது. அதனால், பல குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளன. ஆனால், இன்றைக்கு தமிழக அரசு, எங்களது இடதுசாரி கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்திவந்த நல்ல காற்றோட்டத்துடன், கழிப்பறை வசதியுடன், சூரிய

ஒளியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதுவும் 300 சதுர அடியில் அமைத்துத் தரப்படுமென்று அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இப்படி இந்த மூன்று திட்டங்களையுமே மிகவும் தீர்க்க தரிசனத்தோடு நிறைவேற்றியிருக்கிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாகத் தேர்தல் நடத்தாததன் விளைவால் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் சீரழிந்த நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

தமிழகத்தில் 197 வட்டக் கூட்டுறவுச் சங்கங்களும், 837 தொடக்க நிலைக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்களும் உள்ளன. இவற்றில், 3,500 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 20-5-2008 அன்று அரசாணைமூலம் அனைத்துக் கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக அறிவிப்பு மட்டும் செய்தது. ஆனால், தள்ளுபடி செய்யப்பட்ட தொகைகள் முழுமையாக பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இன்றைக்கு அந்தச் சங்கங்களைக் காப்பாற்றுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு மணல் விற்பனை, கிரானைட் கொள்ளை போன்றவற்றில் கவனம் செலுத்திய அளவுக்கு கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை. சாமானிய ஏழை, எளிய மக்கள் கடந்த காலங்களில் தீ விபத்து மற்றும் இயற்கை இடர்பாடுகள் நிகழ்ந்த காலங்களில் இந்தச் சங்கங்கள்மூலம் பயன் பெற்றுள்ளார்கள். இப்படிப்பட்ட சங்கங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு சீரழித்துவிட்டுச் சென்றுள்ளது. கடனைத் திரும்பக் கட்டியவர்களுக்கு இன்றுவரை பத்திரம்கூட வழங்கப்படாமல் இருந்து வருகிறது. தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரிய இடங்கள், பிளாட்டுகள், மதுரை போன்ற பகுதிகளில் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



மதுரையில் 'பொட்டு சுரேஷ்' போன்றவர்களும், 'அ'-னா, 'ஆ'-வன்னா, 'க'-னா, 'இ'-னா 'பெ'-வன்னா போன்றவர்களின் ஆதரவாளர்களும் பெருமளவில் நிலங்களை அபகரித்துப் பயன் பெற்றுள்ளனர். பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துகளை அபகரித்துள்ளனர். இவற்றையெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அ'-னா என்றால் யார், 'ஆ'-வன்னா என்றால் யார், 'இ'-னா, 'பெ'-வன்னா என்றால் யார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கலாம். தவறு செய்தவர்களைத் தண்டிப்பதில் அம்மா அவர்கள் என்றைக்கும் தயக்கம் காட்டியதில்லை. இப்பொழுது அம்மா அவர்கள் சொன்னதுபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தில் தவறு செய்தவர்கள், நிலம் அபகரிப்புச் செய்தவர்கள் சிறைச்சாலைகளிலே அடைக்கப்படுகிறார்கள். இதில் 'அ'-னாவும், 'ஆ'-வன்னாவும் யார், 'இ'-னாவும், 'பெ'-வன்னாவும் யார் என்று சொன்னால், அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அ'-னா என்றால் அழகிரி; 'ஆ'-வன்னா என்றால் ஆவுடையப்பன்; 'க'-னா என்றால் கருப்பசாமி; 'இ'-னா 'பெ'-வன்னா என்றால் இந்தத் துறைக்குத் தலைமை வகித்த இ. பெரியசாமி அவர்கள்.

*பிற்பகல் 12-45*

மத்திய, மாநில அரசுகளின் மானிய உதவியுடன்கூடிய தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் என்பது மதுரை மீனாட்சி மில்ஸ் லிமிடெட் முன்னாள்

பணியாளர்களுக்காகத் தொடங்கப்பட்ட திட்டம். மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தியாகராஜர் காலனி கிராம ஊராட்சிக் குடியிருப்பில் இது இருக்கின்றது. இந்தத் திட்டத்தின்படி, தமிழக அரசு G.O. எண் 3276/1957-ன்படி அரசு நிலம், இராணுவ நிலம், புறம்போக்கு நிலம் மற்றும் நிர்வாகத்தினரிடம் உள்ள நிலம் என மொத்தம் 23 ஏக்கர் நிலங்கள் தமிழக அரசின் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி, தமிழக அரசால் கையகப்படுத்தப்பட்டு, அதே சட்டத்தின் பிரிவு எண் 37/ஏ-ன்படி பாதுகாப்பாகவும், பராமரித்தும் அரசு உத்தரவு எண் 1012/1993-ன்படி ஒப்படைக்கப்பட்ட நிலம், மீனாட்சி மில்ஸ் லிமிடெட், தற்போது குஜராத் ஹெவி கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர், உதவித் தலைவர் மற்றும் அதிகாரிகள், மதுரை புறநகர் மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் கோ. தளபதி மற்றும் அவரின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் சேர்ந்து, கூட்டாகச் சதி செய்து கொள்ளையடித்துள்ளனர். இந்தக் குடியிருப்பு வளாகத்திலுள்ள காலி நிலங்கள் சட்ட விரோத விற்பனையை இரத்து செய்து, முன்னாள் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைகளை வழங்க வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக, காவல் துறைக்குப் புகார் கொடுத்தும், நில மோசடி சம்பந்தமான நடவடிக்கைகள் இதுவரை இல்லை. எனவே, மேற்படி பிரச்சினைகள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இதோ இருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதுரை புறநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ. தளபதி என்று குறிப்பிட்டார்கள். அவர் மதுரை மாநகர மாவட்ட தி.மு.க. செயலாளர். ஏற்கெனவே, நில அபகரிப்புக் குற்றச்சாட்டில் அவர்மீது திருமங்கலம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையில் அவர் கைது செய்யப்பட்டு, இப்போது அவர் ஜாமீனில்



வெளிவந்திருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக கைது செய்திருக்கிறார்கள். இப்போது இந்த வழக்கும், நம்முடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் விசாரணையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலாக விவரங்கள் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூடுதல் விவரங்கள் இருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** விவரங்களைக் கண்டிப்பாகக் கொடுத்துவிடுகிறேன். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம், பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். புதிய வீடுகள் கட்டுவதற்காக வாரியத்தின்மூலம் நிலங்களைக் கையகப்படுத்துகின்றனர். ஆனால், அதன்பிறகு கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றன. மேற்படி ஆக்கிரமிப்பு உள்ள இடங்களைக் கண்டறிந்து, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும்.

நகர்ப்புறத்தை மட்டும் உள்ளடக்கியதாக மட்டுமல்லாமல், வளர்ந்துவரும் சிறிய நகரங்கள் மற்றும் போக்குவரத்து வசதி உள்ள இடங்களில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிய வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட இடங்களில் நிலங்களைக் கையகப்படுத்திடவும் வேண்டுகிறேன். இதுபோன்று செய்தால், கிராமப்புற மக்களும் பயன் அடைவார்கள். பல இடங்களில் கடந்த ஆட்சியில், வீட்டு வசதி வாரியத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, நில உடைமைதாரர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாமல் உள்ளது. இதனால் கூடுதல் வட்டி, நீதிமன்றச் செலவு போன்றவற்றால் வாரியத்திற்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகின்றது. மேற்படி நிலுவையிலுள்ள புகார்களை விசாரணை செய்து நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். அதேபோல, கடந்த ஆட்சியில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது, நில உரிமையாளர்கள் வழக்குத் தொடுத்து நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். 10 வருடம், 15 வருடம் நீதிமன்றத்தில் வழக்குகள் நடக்கின்றன. நீதிமன்றத் தீர்ப்பினையேற்று, நீதிமன்றம் என்ன விலையை நிர்ணயிக்கின்றதோ, அந்த விலையை வீட்டு வசதி வாரியம் நில உடைமைதாரர்களுக்குக் கொடுத்து, நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. வாரிய நிலம், மனைகள் மற்றும் வர்த்தகக் கடைகள், கடந்த ஆட்சியிலே அவர்களுக்கு வேண்டிய நபர்களுக்கு மட்டும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. இதனால் வாரியத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. நகர்ப்புற வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கடன் வாங்கி வீடு கட்டியவர்கள், வட்டி, அபராத வட்டி, பலவித செலவினங்கள் என்ற அடிப்படையில், இதுவரை வாங்கிய கடனுக்குமேல் பணத்தைத் திருப்பிக் கட்டியும், இன்னும் கட்டவேண்டிய தொகை பல மடங்கு கூடுதலாக உள்ளது. பல நிலைகளில் கடன் பெற்றப் பயனாளிகளுக்கு முழுமையாக வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதோடு, வாங்கிய கடனுக்குமேல் பணம் செலுத்தியவர்களுக்கு முழுத் தள்ளுபடியும் செய்து, விற்பனைப் பத்திரங்களைத் திரும்பக் கொடுத்திட அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், முழுப் பணம் செலுத்தியவர்களுக்குப் பத்திரங்கள் திரும்பக் கிடைக்காத நிலை உள்ளது. உடன் பத்திரங்களைத் திரும்ப ஒப்படைக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் 100 நாள் ஆட்சியில், 9,136 விற்பனைப் பத்திரங்கள் வீட்டு வசதி வாரியத்தால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இந்த 100 நாட்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நிகழ்வில், பணம் கட்டாமல் இருக்கலாம்; பணம் குறைவாக இருக்கலாம்; இல்லையென்றால், வருவாய்த் துறையில் நில மாற்றம் செய்யப்படாமல் இருக்கலாம். கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில், மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களில் வீட்டு வசதி வாரியத்தால் அல்லது குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டப்பட்டு, நில மாற்றம் செய்யாமலே போய் விட்டார்கள். இப்பொழுது நில மாற்றம் செய்வதற்குக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது முடிந்தவுடன், பணம் கட்டியவர்களுக்குக் கூடியவிரைவில் sale deed கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள். உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பணி நிறைவு செய்த பணியாளர்களுக்கு, கடந்த ஆட்சியில் ஓய்வூதிய நிதிப் பலன்கள் எதுவும் வழங்கப்படாமல் உள்ளன. இவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றுகின்ற வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓய்வூதியப் பலன்களை, நிதிப் பயன்களை வழங்கிட வேண்டும். கடந்த 5 ஆண்டுக் கால தி.மு.க. ஆட்சியில், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்குக் கடன் ஏதும் வழங்காமல், கடந்த 30 ஆண்டுக் காலமாக வழங்கப்பட்ட கடன் தொகைகள் முழுவதையும் தள்ளுபடி செய்துவிட்டு, சங்கம் ஈட்டும் வட்டி வருமானத்திலிருந்து 1 சதவிகிதம் மட்டும் கணக்கிட்டுச் சம்பளம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை வீட்டு வசதிச் சங்கங்களின் பதிவாளர், சென்னை, அவர்கள் விதித்துள்ளார்கள். மேற்படி நிபந்தனையை இரத்து செய்து,

மேற்படி பணியாளர்களுக்கு நிலுவையிலுள்ள சம்பளத் தொகையை வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)* கிராமிய வீட்டு வசதிச் சங்கங்கள் புத்துணர்ச்சி பெறுகின்ற வகையிலே. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் 2001-2006 ஆம் ஆண்டுக் கால ஆட்சியில், 1,165.67 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் வீட்டு வசதி வாரிய இணையம் 13.07 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் கொடுத்த கடன் தொகை, வெறும் 228.5 கோடி ரூபாய். அதிலும் 90 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்று விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு, நிச்சயமாக வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை பார்க்கின்ற அலுவலர்கள் மற்றும் அதில் கடன் வாங்கியிருப்பவர்களுக்கு ஒரு நல்ல தீர்வு காணப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடு)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற புரட்சிகரமான திட்டமான, விலையில்லா அரிசித் திட்டத்தைப் பற்றிக் கூறுகின்றபோது, 1,83,000 அட்டைதாரர்கள் என்று சொன்னார்கள். 1,83,00,000 அரிசி பெறத் தகுதியுடைய அட்டைதாரர்கள் அனைவருக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் புரட்சிகரமானத் திட்டமான, விலையில்லா அரிசித் திட்டத்தின்மூலம் அரிசி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்த செய்தியை முழுமையாக இந்த அவைக்கு இப்போது தெரிவிக்க விரும்புகிறேன். இன்று அதிகாலை நில அபகரிப்பு வழக்கு தொடர்பாக முன்னாள் தி.மு.க. அமைச்சர் திரு. கே.என். நேரு, முன்னாள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி, திரு. குடமுருட்டி சேகர், தி.மு.க. உறுப்பினர் ஷெரிப் ஆகிய நான்கு பேர்களும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று துறைகள் தொடர்பான கோரிக்கைகளை தங்களிடம் நான் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அதிலே என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளும் இருக்கின்றன.

பள்ளிக் கல்வித் துறையில் தொடர்ந்து மாநிலத்தில் முதலிடம் பெற்றுவரும் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு விளையாட்டுத் திடல் உருவாக்கித் தர வேண்டும். வத்திராயிருப்பை மையமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கி, வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு மாணவர்கள் எல்லாம் தெருக்களில் கிரிக்கெட் விளையாடுகிறார்கள். இதனால் சில நேரங்களில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படுகிறது. எனவே, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மினி ஸ்டேடியம் என்ற முறையில் அரசு அமைத்துத் தர வேண்டும். இளைஞர்களை நல்வழிப்படுத்துகின்ற வகையில் யோகா, உடற்பயிற்சி போன்ற பயிற்சிகளை அளித்திட திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த அளவில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காப்பியங்கள் பலவற்றில் கண் பதித்துப் பார்த்தாலும், ஈடுசொல்ல எவருமில்லா ஈகை குணம் கொண்ட கருணைத் தாயே! கலைமகளும், மலைமகளும், அலைமகளும் கலந்துதித்த எங்கள் தெய்வத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) இமயத்தின் உயரத்தைத் தன் இரக்க குணத்தால் வென்றிட்ட இணையற்ற தலைவியே! ஆழ்கடலின் ஆழத்தை தன் அறிவாற்றலால் வென்றிட்ட அற்புதத் தலைவியே! ஆகாயத்தின் பரப்பினை தன் அயரா பணியினால் வென்றிட்ட அன்புத் தலைவியே!

"பட்டங்க ளாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"

என்ற பாரதியின் பொன்மொழிக்கு உயிர் கொடுத்த பெண் குலத்தின் திருவிளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) வரியின்றி பட்ஜெட்டையும் தந்து, அந்த பட்ஜெட்டில் வரிக்கு வரி திட்டங்களையும் தந்து, மக்களின் வயிற்றில் பால் வார்த்திட்ட வெற்றித் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

பேரறிஞர் அண்ணா சொன்னார் "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்" என்று. அதை ஏட்டோடு விட்டுவிட்ட தலைவர்களின் மத்தியிலே, எளியோர் வாழ்வு சிறந்திடவே, அம்மாவின் சிந்தனையில்தான் எத்தனை, எத்தனை திட்டங்கள் உதிக்கின்றன.

மாண்புமிகு அம்மாவின் சிந்தனையில் உதிக்கின்ற, முத்தான, சத்தான அத்தனை திட்டங்களையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தி, அன்றாடம் ஆயிரம், ஆயிரம் சாதனைகள் நிகழ்த்தி, அன்னை தமிழகத்தை வாழ வைக்கின்ற வரலாற்றுத் தலைவியே அம்மா! கடந்த தி.மு.க. ஆட்சியிலே செய்ததெல்லாம் வெறும் சூழ்ச்சி. அதனால் இன்றைக்கு வந்திருக்கின்றது கருணாநிதிக்கு



வீழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, செய்வதெல்லாம் அற்புதத்தின் மாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, செய்வதெல்லாம் அற்புதத்தின் மாட்சி. அதனால் இங்கே என்றென்றைக்கும் இருக்கப் போவது அம்மாவின் அரசாட்சி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்கு நடைபெற்று முடிந்த தேர்தலின் வெற்றியே சாட்சி. கழகத்திலே சப்பாணியாக இருக்கின்ற தொண்டரையும், champion-ஆக மாற்றிக் காட்டுகின்ற மகா சக்தியைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற தெய்வ சக்தியே அம்மா, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தங்களின் பொற் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

கிளைக் கழகச் செயலாளரின் மகனாகப் பிறந்து, வளர்ந்து கழகத்தின் கடைக்கோடி சாதாரணத் தொண்டனாக கழகப் பணியாற்றி வந்த என்னை, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவரணிச் செயலாளராகவும், மதுரை மாநகர் மாவட்ட மாணவரணித் தலைவராகவும், சமயநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக் குழு உறுப்பினராகவும், மதுரை மாநகர் மாவட்ட மாணவரணிச் செயலாளராகவும், கழக மாணவரணிச் செயலாளராகவும், மதுரை மாநகர், புறநகர் மாவட்ட இளைஞர், இளம்பெண்கள் பாசறை அமைக்கின்ற பொறுப்பாளராகவும், மதுரை நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளராகவும், இராமநாதபுரம் நாடாளுமன்றத் தேர்தல் பொறுப்பாளராகவும், திருவள்ளூர் மாவட்டக் கழக அமைப்புத் தேர்தல் பொறுப்பாளராகவும், கருணாநிதியின் மைனாரிட்டி ஆட்சியைக் கண்டித்து, மாவட்டக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு கண்டன ஆர்ப்பாட்டங்களில் கண்டன உரையாற்றுகின்ற பொறுப்பினையும், மதுரை மாநகர், விருதுநகர் மாவட்டப் பொறுப்பாளராகவும், இத்தனை பொறுப்புகளிலும் கழகப் பணியாற்றுவதற்குக் கருணை உள்ளத்தோடு வாய்ப்பு வழங்கி, இன்றைக்கு சாத்தூர் சட்டமன்ற உறுப்பினராகவும், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராகவும், மக்கள் பணியாற்றுவதற்கு தெய்வ உள்ளத்தோடு வாய்ப்பு வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் வாழ்வில் நான் நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலைக்கு என்னை ஆளாக்கி, வரலாற்றுச்

சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே அமர வைத்து, இன்று உலகம் போற்றுகின்ற அளவிலே நடைபெற்று வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அற்புத ஆட்சியின் 101-வது நாளிலே, தகவல் தொழில்நுட்பத் துறையின் மானியக் கோரிக்கைக்குப் பதிலுரைக்கின்ற வரலாற்று வாய்ப்பினை வழங்கிய, வாழும் மனித தெய்வமே அம்மா, தங்கள் காலடியே என் திருவடி எனக் கொண்டு, ஏழேழு பிறவி எடுத்து, விசுவாசத்துடன் உழைத்து வந்தாலும், என் நன்றிக் கடன் தீராது தாயே. ஆகவே, இனி எத்தனை, எத்தனை பிறவி எடுத்தாலும், அத்தனைப் பிறவியிலும் தங்கள் காலடியிலே விசுவாசத்துடன் வாழ்ந்து, என் நன்றிக் கடனைச் செலுத்திட உறுதியேற்று தங்களின் பொற் பாதம் பணிந்து வணங்கி வேண்டி என் பதிலுரையைத் தொடங்குகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீட்டிற்கு இன்றியமையாத தேவைகளான, அறிவியல் மற்றும் சமூக கட்டமைப்பும், மனித ஆற்றலையும் தமிழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதை முழுமையாகப் பயன்படுத்தி தகவல் தொழில்நுட்பத்தை வளர்ச்சியடையச் செய்யவும், மக்களுக்கு அரசின் முழு பயன்பாட்டையும் பெற்றுத் தந்துவிடும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தி, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆற்றல்மிக்க சீரிய தலைமையின்கீழ், இந்தியாவிலேயே தமிழகத்தை, தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒப்புயர்வற்ற முதன்மை மாநிலமாக உருவாக்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சி எப்பொழுதெல்லாம் வருகின்றதோ, அப்பொழுதெல்லாம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சியிலே முதலிடத்தைப் பிடித்து வருகின்றது என்பதை நாங்கள் சொல்லவில்லை, உலகப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டுகின்றன.

2001 முதல் 2006 வரை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தமிழகம் தொழில் வளர்ச்சியில் முதல் நிலையில் இருந்ததை fDi என்கிற சர்வதேச தொழில் பற்றிய பத்திரிகையின் செய்தி நமக்குச் சொல்கின்றது. உலகிலேயே அதிக வெளிநாட்டுத் தொழில் முதலீட்டை ஈர்க்கும் பகுதியாக ஆஸ்திரேலிய நாட்டிலுள்ள New South Wales முதலிடத்திலே இருந்தது. அது இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான தமிழகம் முதலிடத்தைப் பிடித்திருக்கின்றது என்று ஆதாரப்பூர்வமாக செய்தி வெளியிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



மேலும், "Tamil Nadu wins the title 'Asian Region of the Future 2005/06' taking the first place in the all-important category of best fDi potential" என்று 2005-2006 ஆம் ஆண்டில் வருங்கால ஆசியாவின் சாதனையாளர் தமிழ்நாடு என்று தேர்ந்தெடுக்கப்பட்டது என Financial Times நாளிதழின் ஒரு அங்கமான fDi பத்திரிகை கூறுகின்றது.

பிற்பகல் 1-00

பொதுவாக ஒரு மாநிலம், அது சார்ந்துள்ள மற்ற மாநிலங்களோடு போட்டி போடுகின்ற வரலாற்றைத்தான் நாம் பார்த்திருக்கின்றோம், படித்திருக்கின்றோம், கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தமிழகம் உலக நாடுகளோடு போட்டியிட்டு, வெற்றி பெற்று முதலிடத்தைப் பிடித்திருப்பது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய தொலைநோக்குப் பார்வை கொண்ட அயராத உழைப்பிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்தத் தகவல் தொழில்நுட்பத் துறையில் மாண்புமிகு அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் நாள் அறிவிக்கப்பட்ட 2002 தகவல் தொழில்நுட்பவியல் கொள்கைதான், Information Technology Policy, 2002 தான் தமிழகத்தின் தகவல் தொழில்நுட்பத் துறையைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையிலே அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) கீழ்க்கண்ட வளர்ச்சியின் வரலாற்றைப் படிக்கின்றபோது நாம் புரிந்துகொள்ளலாம். 2000 முதல் 2001 வரை ரூ.3,111 கோடியாக இருந்த மென்பொருள் ஏற்றுமதி, மாண்புமிகு அம்மா அவர்கள்

ஆட்சி அமைந்தவுடன் 2001 முதல் 2002 வரையிலே ரூ.5,223 கோடியாகவும், 2002 முதல் 2003 வரையிலே ரூ.6,316 கோடியாகவும், 2003 முதல் 2004 வரையிலே ரூ.7,621 கோடியாகவும், 2004 முதல் 2005 வரையிலே ரூ.10,703 கோடியாகவும், 2005 முதல் 2006 வரையிலே ரூ.15,000 கோடியாகவும் உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 5 ஆண்டுகளிலே ரூ.11,887 கோடிகள் மதிப்புள்ள மென்பொருள் ஏற்றுமதி செய்து, 67 சதவிகிதத்திற்கு மேலே வளர்ச்சி கண்டது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான். துறைதோறும், துறைதோறும் வளர்ச்சி என்பதைப்போல, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இன்று தமிழகத்தை ஆண்ட, ஆண்டுதோறும், ஆண்டுதோறும் வளர்ச்சி என்ற நிலையை உருவாக்கிக் காட்டிய வெற்றித் தலைவியே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்.

ஒரு வெற்றிகரமான தலைவியினுடைய சிறப்பைப் பற்றி ஒரு அறிஞன் சொல்கிறான் “Intelligence-புத்திக் கூர்மை, Self-Confidence-தன்னம்பிக்கை, Sociability-தோழமை, Will power-மனத் திட்பம், Initiative-முயற்சித் தொடக்கம், Persistence-உறுதி, Ambition-பேராவல், Oratorical skill-சிறந்த பேச்சாற்றல், Cheerfullness-இன்முகம், Geniality-அன்பாதரவு, Enthusiasm-உற்சாகம், Expressiveness-தெளிவான வெளிப்பாடு, Alertness-விழிப்புணர்வு, Originality-தற்படையாற்றல், இவை அனைத்தும் ஒரு வெற்றித் தளபதியின் சிறப்பு அம்சங்கள்” என்று குறிப்பிடுகின்றார்.

அம்மா, இந்த நாட்டிலே எத்தனை, எத்தனைத் தலைவர்கள், எத்தனை அம்சங்கள் கொண்டிருந்தாலும், இங்கே குறிப்பிட்ட அத்தனை அம்சங்களையும் மொத்தமாய்ப் பெற்றிருக்கின்ற ஒரே தலைவி நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த தேர்தலை மனதிலே வைத்து திட்டம் தருபவர் அரசியல்வாதி ஆவார். அடுத்த தேர்தலை மனதிலே வைத்து திட்டம் தருபவர் அரசியல்வாதி ஆவார். அடுத்த தலைமுறையை மனதிலே வைத்து திட்டம் தருபவர் அரசியல் ஞானியாவார். அடுத்த தலைமுறை மட்டுமல்ல, இனி வருகின்ற அனைத்துத் தலைமுறைக்கும் திட்டம் தந்த நம் அம்மா அவர்கள், அரசியல் ஞானிகளுக்கெல்லாம் ஞானி ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையால் அறிவுசார்ந்த தொழில் நகரியத்திற்கு Knowledge Industrial Township -தேவையான முதன்மைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த முதல்நிலை செயல் திட்டம் Blue print ஒன்று உருவாக்கப்பட்டு, அறிவுசார்ந்த தொழில் நகரியம் சென்னையில் தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், இரண்டாம் நிலை நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் நிறுவி, முதலீட்டைப் பெருக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டது. அந்தத் தொலைநோக்குப் பார்வையின் Vision அடிப்படையிலே தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாகி இருக்க வேண்டும். ஆனால், கடந்த ஆட்சியில் நடந்தது என்னவென்றால், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சென்னை, கோயம்புத்தூர், சேலம், ஓசூர் ஆகிய மாவட்டங்களிலெல்லாம் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் திறக்கப்பட்டுள்ளன. அதனால் தமிழகத்திற்கு வரிசை வரிசையாகப் பன்னாட்டு நிறுவனங்கள் படையெடுத்து வருகின்றன. மென்பொருள் ஏற்றுமதி ஏறுமுகமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இனி, படித்த இளைஞர்களெல்லாம் கவலைப்படத் தேவையில்லை. தகவல் தொழில்நுட்பப் பூங்காவிலே நேரடியாக இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளும், மறைமுகமாக இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளும் வந்துவிட்டன என்று கருணாநிதியும், அவரது கூஜா சகாக்களும் வாய் கிழிய அறிவித்தார்கள். இதைப் பார்த்து எச்சில் கையிலேகூட காக்காயை விரட்டாத கருமி கருணாநிதிக்குக்கூட கருணை இருக்கிறதா என்று எல்லோரும் அன்றைக்கு ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், இருக்கின்ற உண்மை நிலையோ வேறு. கருணாநிதியும், அவரது மகன் ஸ்டாலினும் திறந்து வைத்திருக்கின்ற அத்தனைத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களும் மோசடிப் பூங்காக்களாக காட்சியளிக்கின்றன. சிறுவர் பூங்காவிற்குக்கூட தகுதி இல்லாத தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அத்தனையும் வெறும் Real Estate Layout-களாகத்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழில் நடவடிக்கையைத் தொடங்கிட ஏற்ற இடத்திலே,

ஏற்ற வகையிலே உருவாக்கப்படவில்லை. கருணாநிதியால் உருவாக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்களை நம்பி ஏமாந்துபோன பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 100-க்கு மேலே செல்கின்றது. இதை நம்பி ஏமாந்து போன இளைஞர்களுடைய எண்ணிக்கை இலட்சத்திற்கு மேலே செல்கின்றது. இதை நம்பி ஏமாந்துபோன மக்களுடைய எண்ணிக்கை கோடிக்கு மேலே செல்கின்றது. இதுவரை 7 மாவட்டங்களிலே 8 இடங்களிலே தொடங்கப்பட்டுள்ளதாக சொல்லி இருக்கின்ற S.E.Z., I.T. Park சிறப்புப் பொருளாதார மண்டல தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ஒன்றுகூட முழுமையாக இல்லை. அத்தனை தொழில்நுட்பப் பூங்காக்களும் எலும்புக் கூடுகளாகத்தான் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன. எலும்புக் கூடுகளாக உயிரற்றுக் கிடக்கின்ற இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு புது இரத்தம் பாய்ச்சி, உயிர் பிழைக்கச் செய்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தன் தொலைநோக்குச் சிந்தனையால், ஆழ்ந்த அறிவாற்றலால், சிறந்த மதி நுட்பத்தால், அயராத கடுமையான உழைப்பால், சிறந்த நவீன சிகிச்சையை மேற்கொண்டு இருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே இந்தத் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் நிலவிய மந்த நிலையை உடனே அகற்றி, பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக இத்தகவல் தொழில் நுட்பப் பூங்காக்களின் தரத்தினை மேம்படுத்தி, தொழில் நிறுவனங்களின் முதலீடுகளைக் கவரும் வகையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டை உகந்த மாநிலமாக மாற்றுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 1-05

இது தவிர மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்பேரில் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களைத் தொடங்கிட ஏதுவான சூழ்நிலைகளை உருவாக்கிடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



தமிழ்நாட்டினைத் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் உலகளாவிய விரும்பி தேர்ந்து எடுக்கும் இடமாக, விரைவாக மாற்றுவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, தமிழ்நாட்டைத் தகவல் தொழில் நுட்பத்திற்கு ஏதுவான மாநிலமாக உருவாக்கிட எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசு அலுவலகங்களிலே மின் ஆளுமை e-governance மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஊரகப் பகுதிகளுக்கும் கணிப்பொறிப் பயன்பாட்டை அளித்து, ஊரகப் பகுதிகளுக்கும், நகரப் பகுதிகளுக்கும் இடையே தகவல் தொழில்நுட்பத்தினுடைய இடைவெளியைக் குறைத்திட எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தகவல் தொழில்நுட்பத்தினுடைய வளர்ச்சிக்கான செயல்பாடுகளை மேம்படுத்திட எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மொத்தத்தில் வளர்ச்சிக்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல், வளர்ச்சிக்கென ஒதுக்கீடு செய்த நிதியை மட்டும்தான் எடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் தமிழக மக்களுடைய ஒட்டுமொத்த எதிர்காலத்தைக் கெடுத்தார்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தங்கள் குடும்ப கேபிள் தொழிலை வளப்படுத்திட, இலவச டி.வி. பெட்டி வழங்கும் திட்டத்தை தகவல் தொழில்நுட்பத் துறையின் ஒரு அங்கமான எல்காட்மூலம் செயல்படுத்தினார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆறு கட்டங்களாக டி.வி. பெட்டிகள் பல்வேறு எண்ணிக்கையில், பல்வேறு விலையில் வாங்கி இருக்கின்றார்கள். ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒவ்வொரு விலையை நிர்ணயித்து டி.வி. பெட்டிகளை வாங்கியிருக்கிறார்கள். இதில், ஆறாவது கட்டமாக தேர்தலையொட்டி அவசர, அவசரமாக பத்து இலட்சம் டி.வி.-களுக்கு டெண்டர் கொடுத்ததில் உண்மை நிலையைப் பார்த்தோம் என்று சொன்னால் 5-வது கட்டத்தில் அவர்கள் நிர்ணயித்திருக்கின்ற விலையைக் காட்டிலும் 6-வது கட்டத்தில் ஒரு டி.வி.-க்கு 436 ரூபாய் வீதம் 43 கோடியே 60 இலட்சம் ரூபாயைக் கூடுதலாக அரசுப் பணத்தை

வாரி வாரி வழங்கி இருக்கின்றார்கள். தேர்தலை மையாக வைத்து தேர்தல் தேதிக்கு முன்னரே இந்த டி.வி. பெட்டிகளை அவசர, அவசரமாக வாங்கி, மக்களிடத்தில் கொடுத்து பார்த்தீர்களா! பார்த்தீர்களா! மைனாரிட்டி தி.மு.க அரசின் சாதனைகளை என்று கருணாநிதி சொல்வதற்காக அரசு பணம் ரூ.43 கோடியே, 60 இலட்சம் ரூபாய் கூடுதலாக செலவழித்து டெண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஊரான் வீட்டு நெய்யே! எங்கள் அப்பன் வீட்டு கையே!" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கிராம பழமொழிக்கேற்ப அதிலே இன்னொரு கொடுமையும் நடந்திருக்கிறது.

ஆதி திராவிட மக்களின் நல்வாழ்விற்காக, வளர்ச்சிக்காக செலவழிக்கப்பட வேண்டிய பணத்தை டி.வி. வாங்கும் அந்தத் திட்டத்திற்குத் திருப்பிவிட்ட படுபாதகச் செயலைச் செய்திருக்கின்றார் கருணாநிதி. இதைத்தான் கடந்த 2007 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப மானியக் கோரிக்கையில் கருணாநிதி இம்மான்றத்தில் வைத்தபோது தற்போதைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், தற்போதைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் டி.வி. பெட்டி வாங்கியதிற்கான நிதிச் செலவினம் பற்றியும், நிதி ஒதுக்கீடு பற்றியும் விவரம் கேட்டு, அதிலே தவறு நடந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தில் வைத்தார்கள். அப்போது இந்த அவையில் கருணாநிதி சொல்லியதை நான் அப்படியே சொல்கிறேன். "டி.வி. பெட்டி வாங்கியதில் குறை இருந்தால் நான் தூக்குக்குப் போவதற்கும் தயாராக இருக்கிறேன்" என்று கருணாநிதி சொன்னார். அங்கே இருக்கிற சபாநாயகரைப் பார்த்து நீங்கள் ஏதற்குத் தயாராக இருக்கிறீர்கள் என்று சொன்னார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணாநிதியைப் பார்த்து நான் கேட்கிறேன் தங்கள் குடும்ப கேபிள் டி.வி-யை வளப்படுத்திட, டி.வி. வாங்கும் திட்டத்தைச் செயல்படுத்திய குற்றத்திற்காக, 6-வது கட்டத்தில் வாங்கிய டி.வி.-க்காக 43 கோடியே 60 இலட்சம் ரூபாய் பணத்தை வாரி, வாரி வழங்கிய குற்றத்திற்காக, ஆதி திராவிடர் நலன் காத்திட வந்திட்ட நிதியை தன் குடும்ப நலம் காத்திட திருப்பிவிட்ட குற்றத்திற்காக மாவட்டந்தோறும் டி.வி. சர்வீஸ் சென்டர்கள் அமைப்பதற்குப் பதிலாக, டி.வி. கொள்முதலில் கமிஷன் பெற்ற குற்றத்திற்காக கருணாநிதியே தூக்குக்குப் போவதற்குத் தயாரா என்று இந்த மாமன்றத்தில் கேட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டைச் சுரண்டி



கொழுத்திட்ட சர்வாதிகாரிகளை எல்லாம் கடைசியில் தூக்கிலேதான் தொங்க விட்டிருக்கின்றார்கள் மக்கள் என்பதை கருணாநிதிக்கு ஞாபகப்படுத்தி, தான் பெற்றெடுத்தப் பிள்ளைகளை அதிகார பாகப்பிரிவினைச் சண்டையால் தூக்கத்தைத் தொலைத்துவிட்ட கருணாநிதியின் உயிர் தூக்கத்திலே போகப் போகின்றதா? அல்லது தூக்கில் போகப் போகின்றதா என்பதைப் பார்த்திட இந்த நாட்டு மக்கள் ஆவலாக காத்திருக்கின்றார்கள் தாயே! பூமியைத் தோண்ட, தோண்ட தண்ணீர் ஊற்று வரும். ஆனால் கருணாநிதியின் கடந்த கால மைனாரிட்டி ஆட்சியின் திட்டங்களைத் தோண்ட, தோண்ட ஊழல் ஊற்றுகள் வந்து கொண்டே இருக்கின்றன.

பிற்பகல் 1-10

மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் கேபிள் டி.வி.-க்களை வழங்கிட வேண்டுமென்று அரசு கேபிள் டி.வி. திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், இந்தத் திட்டத்தை அமல்படுத்தாமல் கருணாநிதியின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள் நடத்துகின்ற தன் குடும்ப கேபிள் டி.வி. நிறுவனம் என்ன ஆவது என்று இந்தத் திட்டத்தை முடக்கி வைத்தார். கருணாநிதி குடும்பத்திற்குத் தினந்தோறும் வருகின்ற கோடிக்கணக்கான வருமானம் என்ன ஆவது என்று இத்திட்டத்தை முடக்கி வைத்தார்கள், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே. எப்படி பாம்பும் நோகாமல், கம்பும் நோகாமல் பாம்பை அடிக்கின்ற வித்தையைக் கற்று வைத்திருக்கிற கருணாநிதி ஒரு திட்டத்தை வகுத்தார். அரசு கேபிள் டி.வி.யும் இருக்கும், தன் குடும்ப கேபிள் டி.வி.யும் இருக்கும். தன் குடும்ப கேபிள் டி.வி.-யிலே அனைத்து சானல்களும் வரும், ஆனால் அரசு கேபிள் டி.வி.-யிலே தன் குடும்ப கேபிள் டி.வி.யான சன் டி.வி.-கூட வராது என்றும், இதிலே யாருக்கு எது வேண்டுமோ அதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்றும் ஒரு சிறப்புச் சலுகையை அளித்தார். அரசு கேபிள் டி.வி.யிலே கனெக்ஷன் பெற்றவர்களுக்கு வெறும் கனெக்ஷன் மட்டும்தான் இருக்கும், அதிலே சானல்கள் தெரியாது; அத்தனை சானல்களும் தன்னுடைய குடும்ப நிறுவன கேபிள் டி.வியில்தான் தெரியும் என்று சொல்லப்பட்டது. இது எவ்வளவு பெரிய மோடி மஸ்தான் வேலை என்பதையும், இந்த நாட்டு மக்களையெல்லாம் எவ்வளவு பெரிய முட்டாளாக்கி இருக்கிறார் என்பதையும்

பார்க்கின்றபோது கருணாநிதியை இந்தத் தேர்தலிலே தோற்கடித்தது மட்டுமல்ல, கருணாநிதியின் வாழ்க்கையிலே இனி வருகின்ற அனைத்துத் தேர்தல்களிலும் தோற்கடித்து கருணாநிதிக்கு சரியான பாடம் புகட்டிட (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் சக்தியைப் பற்றி கருணாநிதிக்குத் தெரிய வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயிர் இழந்து செயலற்றுக் கிடக்கிற அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு இன்றைக்கு புத்துயிரூட்டி அனைத்து மக்களுக்கும் நியாயமான கட்டணத்திலே கம்பிவட தொலைக்காட்சி சானல்களை வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணைக்கிணங்க, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையிலே உதித்த வழிகாட்டுதலுக்கிணங்க இந்த நிறுவனத்தினுடைய நடவடிக்கைகளை மறு சீரமைப்பதற்கான அனைத்து தீவிர முயற்சிகளையும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே வழிகாட்டுகின்ற வகையிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், உலகத்திலே முதன்முறையாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகளில் பயின்றுவரும் மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எப்படிப்பட்ட திட்டம் என்றால் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்ற கனி யார் மடியிலே விழுமோ என்று எதிர்பார்த்திருந்தபோது அது என் மடியிலே விழுந்தது; என் மடியிலே விழுந்த கனியை எடுத்து என் இதயத்திலே வைத்துக்கொண்டேன்' என்றார் பேரறிஞர் அண்ணா. அன்று முதல் பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனியானார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பின்னர், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராகவும் ஆனார். அதனால், தமிழகத்திற்குச் சத்தான சத்துணவுத் திட்டம் கிடைத்தது, அதனால் மாணவச் சமுதாயம் உயிர் பிழைத்தது. இதுபோல் கருணாநிதி மைனாரிட்டி ஆட்சியிலும் மாணவச் சமுதாயம் தங்கள்



மடியிலே ஏதாவது கனி விழுமா என்று எதிர்பார்த்தார்கள்; ஆனால், எதுவும் விழவில்லை. கருணாநிதி மடியிலே தவழ்ந்த கனிமொழிதான் கருணாநிதியின் இதயக்கனியானார். அதனால், இன்றைக்கு திகார் சிறையினுடைய நிரந்தரக் கைதியானார். கருணாநிதி மடியிலே தவழ்ந்த கனிமொழிதான் கருணாநிதியின் இதயக் கனியானார். அதனால், இன்றைக்கு திகார் சிறையினுடைய நிரந்தரக் கைதியானார்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தந்திட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மடிக்கணினித் திட்டத்தால் கோடானு கோடி மாணவ, மாணவிகளுடைய மடியிலே வெறும் கனி அல்ல, மடிக்கணினியே வர இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மடிக்கணினி பெற்று வல்லரசு நாடுகளுக்கும் வழிகாட்டிட, மடிக்கணினி பெற்று வல்லரசு நாடுகளுக்கும் வழிகாட்டிட புறப்பட்டுவிட்ட மாணவச் சமுதாயம், மடிக்கணினி தந்திட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை தங்கள் இதயக் கனியாக வைத்து வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மடிக்கணினி தந்திட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை தங்கள் இதயக் கனியாக வைத்து வணங்கி வருகின்றார்கள்.

தாய் தமிழகத்திலே மாணவச் சமுதாயத்திற்கு மட்டும் கிடைத்திட்ட மடிக்கணினி இந்தியாவிலே உள்ள, ஏன் உலகத்தில் உள்ள அனைத்து மாணவச் சமுதாயத்திற்கும் கிடைத்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இன்றைக்கு இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே வழிகாட்டுகின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இன்றைக்கு தலைமைப் பொறுப்புக்கு வரவேண்டுமென்று, உலகத்திற்கே வழிகாட்டுகின்ற தலைமைப் பொறுப்புக்கு வர வேண்டுமென்று அத்தனை மாணவச் சமுதாயமும் ஒட்டுமொத்தமாகப் பிரார்த்தனை செய்து காத்துக் கொண்டிருக்கிறது அம்மா.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர் படை அம்மா ஆணை கிடைக்கும் வரை அமைதிப் படை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர் படை அம்மா ஆணை கிடைக்கும் வரை அமைதிப் படை. மாண்புமிகு அம்மா

அவர்களுடைய ஆணை கிடைத்துவிட்டால் புரட்சிப் படை எனப் புறப்பட்டுவிடும் போர்க் களத்திற்கு. இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களின் நிலை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கே ஒரு கட்சியினுடைய தொண்டர்களின் நிலையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், இதை நான் கண்டிப்பாகச் சொல்லியாக வேண்டும். கட்சிக் கொடி மரத்திலே தொண்டர்கள் சிலர் ஒருவர் மேலே ஒருவர் ஏறி, ஒருவர் தோளிலே ஒருவர் ஏறி அந்தக் கொடிக் கம்பத்தை அளந்து கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப் பக்கமாக வந்த வழிபோக்கர் ஒருவர், “என்னங்க, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார். அதற்கு, “கண்ணு தெரியலையா? நாங்கள் எங்கள் தலைவரிடம் சொல்வதற்காக கொடி மரத்தினுடைய உயரத்தை அளந்து கொண்டிருக்கிறோம்” என்றார் அந்தத் தொண்டர்களில் ஒருவர். அதற்கு அந்த வழிபோக்கர் சொன்னார், “கொடி மரத்தைத் தூக்கி நடுவதற்கு முன்னாலே, தரையிலே கீழே போட்டு அதை அளந்து இருக்கலாமே” என்றார். அதற்கு, “எங்களுக்குத் தெரியாதா? நாங்கள் கொடி மரத்தினுடைய உயரத்தை அளந்து கொண்டிருக்கிறோம், நீ நீளத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறாயே” என்றார் அந்தத் தொண்டர். அந்த நேரத்தில் கட்சித் தலைவர் அங்கு வந்தார். அவரிடம் வழிப்போக்கர், ‘என்னங்க, உங்கள் தொண்டர்கள் கொடி மரத்தின் நீளமும் உயரமும் ஒன்றுதான் என்றுகூடத் தெரியாமல் இருக்கிறார்களே! இவர்களை வைத்துக் கொண்டு எப்படி கட்சி நடத்துகிறீர்கள். தொண்டர்களைத் திருத்தக்கூடாதா!’ என்று கேட்டார். அதற்கு அந்தக் கட்சித் தலைவர் சொன்னார். அமைதியாகச் சொன்னார், ‘இதோ பாருங்கள். கொடி மரத்தின் நீளமும் உயரமும் ஒன்றுதான் என்றுகூடத் தெரியாமல் இருக்கின்ற வரைதான் நான் அவர்களுக்குத் தலைவராக இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) எனக்குப் பின்னால் என் பிள்ளைகள், எனக்குப் பின்னால் என் பிள்ளைகள், powder Boy-ம், Bad Boy-ம், always high girl-ம் தலைவராக இருக்க முடியும்’ என்று சொன்னார். கொடி மரத்தினுடைய நீளமும், உயரமும் ஒன்று தான் என்றுகூட தொண்டர்களுக்குக் கற்றுக் கொடுக்காத கருணாநிதி, கோடி கோடியாகக் கொள்ளையடிப்பதற்கு மட்டும் கற்றுக் கொடுத்ததினால் இன்றைக்கு பாளையங்கோட்டையிலும், சேலம் கோட்டையிலும், திருச்சி கோட்டையிலும், திகார்



கோட்டையிலும் பாடம் படித்துக் கொண்டிருக்கின்றார்கள் பாவம் கருணாநிதியினுடைய கொடி ஊன்றும் தொண்டர்கள்.

*பிற்பகல் 1-15*

இப்படிப்பட்ட தலைவனுக்கு மகனாகப் பிறந்த உதவாக்கரை மு.க. அழகிரிதான், தான் அரசியலில் நிலைபெற வேண்டுமென்பதற்காக தன்னை எதிர்ப்பவர்கள் யாரும் இருக்கக்கூடாது, அரசியலில் மட்டுமல்ல, இந்த உலகத்திலே யாரும் உயிரோடு இருக்கக்கூடாது என்று மதுரை வீதியிலே நடத்திக் காட்டிய உயிர் பறிக்கும் கொலைச் சம்பவங்கள் பற்றி இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தன்னைப் பற்றி உயர்வாக எழுதவில்லை என்ற அற்ப காரணத்திற்காக 3 அப்பாவிகளுடைய உயிர் பறித்திட்ட கொலைச் சம்பவங்களைப் பற்றியும் இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். உலக வரலாற்றிலே ஓட்டுக்குப் பணம் கொடுப்பதனைத் தமிழகத்திலே கின்னஸ் புத்தகத்திலே இடம் பெறச் செய்யும் அளவிற்கு அழகிரியால் நிகழ்த்தப்பட்ட ஒரு தேர்தல் வியாபாரம்தான் திருமங்கலம் பார்முலா என்பதையும் இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

அதைப்போல, ஹார்லிக்ஸ் வண்டி காணாமல் போனதற்கு நான் காரணமல்ல, எறும்புதான் காரணம் என்று எப்.ஐ.ஆர். போட்டு வழக்கு முடிக்கிற நிலையை உருவாக்கியதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். உலக அளவிலே, தமிழகத்தைத் தலை குனியச் செய்திட்ட இந்தத் திருமங்கலம் பார்முலாவைக் கொண்டே வரப்போகும் சட்டமன்றத் தேர்தலிலும், தமிழக மக்களை விலைக்கு வாங்கி விடலாம். அதன்மூலம் கோட்டையை மீண்டும் பிடித்துவிடலாம். அதன்பின்னர் செலவழித்தப் பணத்தை மீண்டும் குடும்பத்துடன் சேர்த்துக் கொள்ளையடித்துவிடலாம் என்ற பகல் கனவில்தான் அறிக்கையை வெளியிட்டார் அரைவேக்காடு அழகிரி.

வருகின்ற தேர்தலோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கம் இருக்காது என்று சொன்னார். சொன்னவர் இங்கே காணவில்லை. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய தலைமையிலே வலிவோடும் பொலிவோடும் இருக்கின்றது.

(மேசையைத் தட்டும் ஒலி) வலிவோடும் பொலிவோடும் இருக்கின்றது. ஆனால் அதைச் சொன்னவர் இன்றைக்கு மதுரை பக்கமே காணவில்லை. ஒருவேளை கடந்த தேர்தலிலே காணாமல் போன தன்னுடைய தி.மு.க. கட்சியைத் தேடித் தேடி அலைகிறார் போலும். தன்னுடைய அப்பாவோடும், தன்னுடைய தம்பி ஸ்டாலினோடும், தன்னுடைய தங்கை கனிமொழியோடும் பாளையங்கோட்டைக்கும், திகார் கோட்டைக்கும் தேடப் போய்விட்டார்களோ என்னவோ. எப்படித் தேடினாலும் எங்கே தேடினாலும், எத்தனை முறை தேடினாலும் தொலைந்து போன கட்சி இனி தொலைந்து போனதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இனி என்றைக்குமே காண முடியாது என்பதைச் சொல்லி, எப்படி கருவாடு மீனாகாதோ, எப்படி கருவாடு மீனாகாதோ, எப்படிக் கறந்த பால் மடி புகாதோ, அதைப்போல ஒழிந்துவிட்ட கருணாநிதி ஆட்சி இனி மீண்டும் வரவே வராது என்று சொல்லி, கருணாநிதி கொள்ளையடித்தப் பணத்தைக் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் கருணாநிதியை தெருக்கோடியிலேதான் நிறுத்துவோம், தர்மத்தைக் காத்து நிற்கிற தர்மத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கோட்டையிலே அமர்த்துவோம் என்று மக்கள் தெளிவாகத் தீர்ப்பு அளித்திருக்கின்றார்கள். ஆகவே, இன்றைக்கு இரட்டை இலையை மலரச் செய்து, சூரியனை அஸ்தமிக்கச் செய்திருக்கிறார்கள் தமிழக மக்கள். இதன்மூலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கிறேன் என்று சொன்னவன்தான் அழிந்து போய் இருக்கிறானேயொழிய, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிப்பதற்கு எவனும் இங்கே பிறக்கவில்லை என்பதை இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், இன்றைக்கு உலகத்தை ஆளும் வல்லமை கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள்.

ஆகவே, புறநானூற்றுத் தாயே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, பல்வேறு மக்கள் நலம் சார்ந்த இத்துறையினுடைய அறிவிப்புகளை இப்பேரவைமுன் வைப்பதிலே நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

2011-2012 ஆம் ஆண்டுக்கான மின் ஆளுமைக்கான



முதலமைச்சரின் உயரிய விருது. மின் ஆளுமையின்மூலம், அரசின் அனைத்துச் சேவைகளையும் மக்களின் இருப்பிடத்திற்குக் கொண்டு சேர்ப்பதே தமிழக அரசின் சீரிய நோக்கமாகும். ஒவ்வொரு அரசுத் துறையும், தங்களது துறை சார்ந்த அனைத்து சேவைகளையும் மின் ஆளுமைத் திட்டத்தின்மூலம் மக்களிடம் கொண்டு செல்லப் பாடுபட வேண்டும். இந்த நோக்கத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்திடும் துறைகளுக்கு ஊக்கமும், உரிய அங்கீகாரமும் அளித்திட "மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது" ஆண்டுதோறும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயத்தினர், மாணவர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களுக்கிடையேயும் மின் ஆளுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலே, புதுமையான மென்பொருள் உருவாக்குகின்ற போட்டிகள் நடத்தப்பட்டு, அப்போட்டிகளிலே புதுமையான மற்றும் சிறந்த மின் ஆளுமைக்கான மென்பொருட்களை உருவாக்கிய வெற்றியாளர்களுக்கு "மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது" ஆண்டுதோறும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மின் ஆளுமைக்கான உயரிய விருதுகள், தமிழகம் மின் ஆளுமையின் உச்சத்தினை எட்டிட வழி வகுக்கும்.

பிற்பகல் 1-20

மதுரையில் பேரிடர் மீட்பு மையம். அரசுத் துறைகளின் அனைத்து மென்பொருட்கள் மற்றும் சேவைகள் மாநிலத் தரவு மையத்தின் (State Data Centre) மூலம் பாதுகாப்பான சூழலில் வழங்கப்பட்டுவரும் அதேவேளையில், இவற்றிற்கு குந்தகம் ஏற்படாத வகையில், தொடர்ந்து சீராக செயல்படுத்திட விரிவான தொடர் வணிகத் திட்டமிடல் (BCP - Business Continuity Planning) அவசியமாகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் பேரில் இந்தியாவிலேயே முதன்முறையாக, 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில் நிறுவப்படவிருக்கின்ற பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre) மற்ற அனைத்து

மாநிலங்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும். மாநிலத் தரவு மையத்தில் உள்ள தரவுகள் மற்றும் மென்பொருட்களுக்கு எந்த ஒரு இழப்புமின்றி முழுமையாக அவற்றைப் பாதுகாத்திடும் வகையில், மாநிலத் தரவு மையத்தின் மறுபிம்பமாக இப்பேரிடர் மீட்பு மையம் அமையும்.

கிராம நிருவாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களுக்கு மேக கணினியியம் (Cloud Computing) தொழில்நுட்பத்தில் கணினி வழங்குதல். இணைய சேவைகளை உடனுக்குடன் வசதியான முறையில் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கணினி சார்ந்த வளங்களை, அதாவது, வலையமைப்புகள், மூலக்கணினிகள், சேமிப்பகங்கள், மென்பொருட்கள் மற்றும் சேவைகள் போன்றவற்றை வழங்கிடுவதில் மேக கணினியியம் (Cloud Computing) ஒரு முன்மாதிரியாகும். பயனர் கணினியில் மென்பொருட்கள் முன்னரே பதியப்படாத நிலையிலும், பயனரின் வலை உலாவிமூலம் மூலக்கணினியில் பதியப்பட்டுள்ள மென்பொருளைப் பயன்படுத்திடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதால், மேகக் கணினியியம் பயனர் கணினி-மூலக்கணினி அமைப்பிலிருந்து மாறுபடுகின்றது.

மின் மாவட்டத் திட்டம் சார்ந்த மென்பொருட்களைப் பயன்படுத்துதல், கிராமக் கணக்குகளைக் கணினிமயமாக்கி கையாளுதல் மற்றும் பல்வேறு சேவைகளைத் தமது அலுவலகத்தில் இருந்தபடியே வழங்கிடும் வகையில் அனைத்து கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்களுக்கும் மேகக் கணினியிய தொழில்நுட்பத்தில் கணினி வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான தொடரா செலவினம் கணினி ஒன்றுக்கு 8,000 ரூபாய் ஆகவும், அகன்ற அலைவரிசை இணைப்புக்கானத் தொடர் செலவினம் ஆண்டொன்றிற்கு 9,000 ரூபாய் ஆகவும் இருக்கும். இத்திட்டம் முதற்கட்டமாக முன்னோடி மின் மாவட்டங்களான கிருஷ்ணகிரி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 1.50 கோடி ரூபாய் தொடரா செலவினத்திலும், 1.70 கோடி ரூபாய் தொடர் செலவினத்திலும் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகளுக்கு அகன்ற அலைவரிசை இணைப்பு வழங்குதல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சியில் கிராம ஊராட்சிகளைக் கணினிமயமாக்கிட 2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் அகன்ற அலைவரிசை இணைப்பு வழங்கிட இசைவளித்துள்ளார்கள். அகன்ற அலைவரிசை இணைப்பு ஒன்றிற்கான ஆண்டு செலவினம் 7,000 ரூபாய் என்ற அளவில் இத்திட்டத்திற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றிற்கு 10.00 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிமக்கள் தொடர்பு மையம். மக்களுக்குத் தேவையான தகவல்களைத் தெரிவிக்கவும், மக்களுடனான அரசின் தொடர்புகளை மேம்படுத்தவும் மற்றும் பல்வேறு அரசுத் துறை சார்ந்த சேவைகளைக் குடிமக்களுக்கு வழங்கவும், குடிமக்கள் தொடர்பு மையம் ஒன்றினை சென்னையில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் 6.00 கோடி ரூபாய் ஆகும். இம்மையத்தின்மூலம் மக்கள் குறை தீர்ப்பு, அரசுத் திட்டங்கள் குறித்த விளக்கங்கள், அரசு அலுவலகங்களின் தொடர்பு விவரங்கள், சேவைகளுக்கான விண்ணப்பம்/மனுக்களின் தற்போதைய நிலை போன்றவை அளிக்கப்படும்.

மேம்படுத்தப்பட்ட ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கை. கிராமப்புற இளைஞர்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கிட, கிராமப்புறங்களில் ஊரக வணிக வெளிப்பணி மையங்கள் அமைக்கப்படும். இம்மையங்களை அமைப்பதற்கு ஆர்வமுள்ள தொழில்முனைவோரை ஈர்ப்பதற்காகத் தற்போதுள்ள ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கையை மேம்படுத்தி, மறுவடிவமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதன்மூலம் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களுக்கு இணையாக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இந்த மேம்படுத்தப்பட்ட ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கையின் அடிப்படையில், முதற்கட்டமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு ஊரக வெளிப்பணி மையம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புற இளைஞர்களுக்குத் தகவல் தொழில்நுட்பவியல் பயிற்சி அளித்தல். தகவல் தொழில்நுட்பத்தில் உலகளாவிய போட்டிகளையெல்லாம் எதிர்கொண்டு, பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களில், வேலைவாய்ப்பினைக் கிராமப்புற இளைஞர்களுக்கும் பெற்றுத் தருகின்ற வகையிலே, அவர்களைத் தயார்படுத்திடும் வகையிலே, சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு தேவையான பயிற்சி அளித்திடும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் இச்சிறப்பு வாய்ந்த திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை நிச்சயம் உருவாக்கும். இதன்மூலம் சுமார் 2,500 மாணவர்களுக்கு 2011-2012 ஆம் ஆண்டில் 5.00 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நகர்ப்புற பொது சேவை மையங்கள். முன்னோடி மின் மாவட்டமான கிருஷ்ணகிரி மாவட்டம், அரசின் சேவைகளைக் கடைநிலை குடிமக்கள் வரை சிறப்பாகவும், திறம்படவும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மின் மாவட்டத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. ஏற்கெனவே, பொது சேவை மையங்கள்மூலம் வருவாய்த் துறை, சமூக நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகிய துறைகளின் சேவைகள் கிராம அளவில் வழங்கப்பட்டு வருகின்றன.

*பிற்பகல் 1-25*

இதன்மூலம், குடிமக்கள், அரசின் சேவைகளான பட்டா, சிட்டா, பல்வேறு சான்றிதழ்கள், திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை போன்றவற்றிற்கு விண்ணப்பிக்கவும், பெற்றுக்கொள்ளவும் இயலும். இதைப்போன்ற மையங்கள், சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் அமைக்கப்படும். இம்மையங்களின்மூலம், ஒளி, ஒலி மற்றும் தரவு வாயிலாக மின் ஆளுமை, கல்வி, சுகாதாரம், தொலை மருத்துவம், பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் இதர தனியார் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கிட முடியும்.

மாநிலத் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்குக் கணினிப் பயிற்சி. தமிழக அரசு நிர்வாகத்தில் தலைமைச் செயலகம் ஒரு அச்சாணியாக விளங்குவதால், தலைமைச் செயலகப் பணிகள் துரிதமாக நடைபெறுவது அவசியமாகிறது. ஆகவே, மாநிலத் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சியில், கணினிப் பயிற்சியினையும் ஒரு பாடமாகச் சேர்த்து வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் தலைமைச் செயலகப் பணிகளைத் துரிதமாகவும், தரமாகவும், குறித்த நேரத்திலும் பணியாளர்கள் மேற்கொண்டிட வழிவகை ஏற்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*



மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம். “அரசைத் தேடி மக்கள்” என்ற நிலையை மாற்றி மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய தலைமையிலே, “மக்களை நாடி அரசு” என்ற நிலையை உருவாக்குவதே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய சிந்தனையாகும். அச்சீரிய சிந்தனையைச் செயலாக்கிட மின் ஆளுமை அவசியமாகும். ஆகவே, மின் ஆளுமை குறித்த விழிப்புணர்வைக் கடைக்கோடி பாமர மக்களுக்கும் கொண்டு சென்றிட மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம்கள் வட்டார அளவில் மக்கள் இயக்கமாகவே நடத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆகவே, இதை அறிவித்து, எதையும் தாங்கும் இதயம்கொண்டவர் எங்கள் அம்மா அம்மா. எதிர்ப்பவரெல்லாம் இங்கே சும்மா சும்மா. எனவே, அன்னைத் தமிழகம் வாழ்ந்திட, வையகம் நம்மை வாழ்த்திட, இனி அம்மா அம்மா என்று அழைப்போம், நாம் சும்மா சும்மா இருக்காமல் என்று சொல்லி, இனி வரும் திட்டங்கள் எல்லாம் அம்மாவின் திட்டங்கள். இனி வரும் சட்டங்கள் எல்லாம் நம் அம்மாவின் சட்டங்கள். இனி வரும் வரலாறுகள் யாவும் நம் அம்மாவின் வரலாறு. இனிவரும் சாதனைகள் யாவும் நம் அம்மாவின் சாதனைகள். இனிவரும் காலங்கள் யாவும் நம் அம்மாவின் காலம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இனிவரும் உலகம் நம் அம்மாவின் உலகம். ஆகவே, வாழும் மனித தெய்வம், இந்தியத் திருநாட்டினுடைய வழிகாட்டி, உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் கொண்டிருக்கின்ற, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்திலே நாமும் வாழ்ந்தோம் என்ற வரலாறு படைக்கின்ற வாய்ப்பை இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். உயிருக்கும் மேலான தலைவியே, அம்மா, உங்கள் பொற்பாதங்கள் வணங்கி நான் சமர்ப்பிக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்துகள் எல்லாம் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளித்து, ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு, என் இதயதெய்வம், வாழும் மனித தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த தாய், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை பற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் எடுத்து வைக்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு மிகுந்த தாய், அருள் கனிந்த தாய், அறிவார்ந்த தாய், ஆற்றல் மிகுந்த தாய், அண்டியோர்க்கு ஆதரவான தாய், எதற்கும் அஞ்சாத தாய், ஒருகணமும் ஓயாத தாய், அயர்வு அறியாது உழைக்கின்ற தாய், சோதனைகளுக்கு கலங்காத தாய், அகிலமே இன்று அம்மா என்று அழைக்கின்ற, அன்போடு அழைக்கின்ற தாய், எங்கள் தாய், தனிநிகர் தாய், தன்னலம் கருதாத தன்நிகரில்லாத தாய், புரட்சித் தலைவர் புகழுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து, அனைவரின் வாழ்விற்கு ஏற்றம் தருகின்ற தாய், எங்கள் தர்மத்தாய், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் தொட்டு பணிந்து வணங்கி, இந்த சீர்மிகும் செயலாக்கம் நிறைந்த நல்லாட்சியின் சாட்சியாக, சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை மானியக் கோரிக்கையை மாமன்றத்தின் முன்வைக்க விரும்புகின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இன்னல் தீர்க்க, எளியோரின் துயரம் போக்க, ஆயிரம் சாதனைகள் நடத்திக்காட்டி, அழியாத சரித்திரம் படைக்க இருக்கும் எங்கள் தாய், தங்கத் தாயின் பாதம் தொட்டு, பணிவோடு மனமார மீண்டும் ஒருமுறை வணங்குகின்றேன்.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று ஊனுருக, உளமுருக, உயிருருக பாடிய அருட்பெருஞ்ஜோதியாய், தனிப்பெருங் கருணையாய் “அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும், ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செலுத்த வேண்டும்” என்ற உயர்ந்த எண்ணத்தில், வன விலங்குகள் வனப் பகுதி அருகிலுள்ள விவசாயிகளின் விளை நிலங்களைச் சேதப்படுத்தி உயிர் உடமைகள், குடியிருக்கும் வீடுகளைச் சேதப்படுத்தி, கோடி போன்ற பறவைகளை உட்கொண்டு, இடர்பாடுகள் ஏற்படுத்தினாலும் அதற்கும் நிவாரணம் அளிப்பேன் என்று, கருணை உள்ளம் கொண்டு வாழும் வள்ளலாராக ஆருயிர்க்கெல்லாம் அன்பு வைத்துள்ள வள்ளலாராக, அம்மாவை நாம் இங்கு பார்க்கின்றோம்.

*பிற்பகல் 1-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன வேண்டும், எப்படி வேண்டும், எப்போது வேண்டும் என்று கேட்டு, அதை எந்த நேரத்தில் ஏழையெளிய மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தமிழர்களுக்கும், குறிப்பாக மகளிருக்கும், உதவிக்கரம் தந்து நல்லாட்சி நடத்திவரும், பாசமிகு தாய், நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர்ந்த, தெளிந்த சிந்தனை கொண்ட, தொலைநோக்கு எண்ணம் கொண்ட அம்மா அவர்கள், 10 ஆவது சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது நிகழ்த்திக்காட்டிய தொட்டில் குழந்தைத் திட்டம், ஊட்டச் சத்துணவுத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம், மகளிர் பொருளாதார சுதந்திரத்தை மேம்படுத்தும் திட்டம், மகளிருக்காக தனியாக மகளிர் காவல் நிலையம் அமைத்தது போன்ற சாதனைகள் ஏராளம், ஏராளம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுபோல் 12 ஆவது சட்டமன்றப் பேரவையின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கந்துவட்டி ஒழிப்பு, லாட்டரிச் சீட்டு தடை,

பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச சைக்கிள் மற்றும் இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கியது, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் தருவிப்பதற்காகப் புதிய வீராணம் திட்டம், இந்தியாவிலே அனைத்துத் தரப்பினரும் வியந்து போற்றும் உன்னதத் திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டம் *(மேசையைத் தட்டும் ஒலி)* போன்ற எண்ணற்ற திட்டங்கள் தீட்டப்பட்டன; சட்டங்கள் இயற்றப்பட்டன என்பதை யாராலும் மறக்க இயலாது என்பதை இம்மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஆவது சட்டமன்றத் தேர்தலிலும் மாபெரும் வெற்றி பெற்று மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகத்தான திட்டங்களைக் கொண்டு வந்து, திட்டங்களின் பயன் ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, வாழ்வின் அழிவின் விளிம்பிலிருக்கும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உரிய நேரத்தில், உரிய வகையில் தகுதிவாய்ந்த பயனாளிகளுக்குச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி ஏற்ற நாளான 16-5-2011 அன்று 7 கோப்புகளில் ஆணையிட்டார்கள். அதில் ஒரு கோப்புதான் தமிழக வரலாற்றில் ஒரு மைல் கல்லாக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என ஒரு புதிய துறையை *(மேசையைத் தட்டும் ஒலி)* முதன் முறையாக உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் இத்துறை வேளாண்மை, கல்வி, நீர், சுகாதாரம், ஊரக வளர்ச்சி, தொழில்கள் மற்றும் கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகளின் சீரான திட்டமிடுதலுடன், நீடித்த வளர்ச்சியடைய தொடர்புடைய துறைகளுடன் இணைந்து செயலாற்றும். தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களும் ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் மற்றும் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறப்பு அறிவிப்புகளும், முறையாக செயல்படுவதற்கான ஒருங்கிணைப்புப் பணியினை மேற்கொள்ளும். இந்த அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் தொடர்புடைய துறைகளின்



ஒருங்கிணைப்போடு, சீரிய முறையில் செயல்படுத்தும் என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட இத்துறையின் அமைச்சராக என்னைப் பணி செய்ய அனுமதி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களில் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தொடர்ந்து 3 தினங்கள் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் சாராம்சம் என்ன, அத்துறை எப்படி திறம்பட செயல்பட வேண்டும் என்பதற்காக நல்ல உரிய, உயரிய தெளிவான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் அம்மா அவர்களின், மாணவ மாணவியர்க்கு விலை ஏதுமின்றி மடிக்கணினி வழங்கும் திட்டம். இது ஒரு மகத்தான திட்டம், பார் போற்றும் திட்டம் என்பதை இப்பேரவையில் பதிவு செய்துகொள்ள பெருமை கொள்கிறேன். இத்திட்டத்திற்கு 912 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், இத்திட்டத்தின்மூலம் 9 இலட்சத்து 12 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் இந்தாண்டில் பயன் பெறுவார்கள். பிளஸ் 2 மாணவ மாணவியர் 5 இலட்சத்து 47 ஆயிரம் நபர்கள், இளங்கலை பட்டப் படிப்பு மற்றும் அறிவியல் மாணவ மாணவியர்கள், முதலாமாண்டு, மூன்றாமாண்டு மாணவர்கள், 2 இலட்சத்து 91 ஆயிரம் நபர்கள். பொறியியல் பட்டப் படிப்பு மாணவ மாணவியர்கள், இரண்டாமாண்டு, நான்காமாண்டு படிப்பவர்கள் 24 ஆயிரத்து 600 பேர். தொழில்நுட்ப மாணவ, மாணவியர்கள், முதலாமாண்டு, மூன்றாமாண்டு படிப்பவர்கள், 50 ஆயிரம் பேர். ஆக மொத்தம் 9 இலட்சத்து 12 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் இந்த இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தினால் முழுமையாகப் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பெரும்பாலான மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி ஒரு எட்டாக் கனி. குறிப்பாக, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு மிகவும் எட்டாத கனியே. இந்த எட்டாக் கனியாக இருந்த மடிக்கணினியை மாணவ சமுதாயத்தினிடையே ஏற்றத்தாழ்வு பாராது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், பொறியியல் கல்லூரிகளில் மற்றும் பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கும் விலை ஏதுமின்றி மடிக்கணினி வழங்கும் திட்டம், இந்த உன்னதத் திட்டம் உலக அளவில் பேசப்படுகின்ற ஒரு மகத்தானத் திட்டம் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மடிக்கணினி வழங்கும் திட்டம் அறிவியல் ரீதியாக ஒரு மிகப் பெரிய விஞ்ஞானப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். பொருளாதார ரீதியாக மாணவ, மாணவியர்கள் அவர்களுடைய சொந்தக் காலில் நிற்க, பொருளாதார மேம்பாடடைய, அடிப்படை உயர்வுக்கு வழி வகுக்கும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் இத்திட்டம் நம் நாட்டுத் தலைவர்கள் மட்டுமின்றி, அயல் நாட்டுத் தலைவர்களாலும் வியந்து பாராட்டப்படுகிற ஒரு திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இப்படி ஒரு தலைமையா? இவ்வளவு ஒரு சீரிய சிறப்பான திட்டமா? அடுத்தத் தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கும் இப்படி ஒரு அரிய தலைவரா? எனப் பல்வேறு தரப்பினரும் வியப்பும் ஆச்சரியமும் அடைகிறார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சியாளர்கள் இருந்தார்கள். அவர்களுக்காகவே திட்டம். தங்கள் நலம், தங்கள் குடும்ப நலம், தங்கள் மனைவி நலம், தன் பிள்ளைகள் நலம், தன் பேரன் நலம், தன் கொள்ளுப் பேரன் நலம் என்று தலைமுறை தலைமுறையாகச் சிந்தித்து தங்கள் குடும்ப நன்மைக்காகவே பல திட்டங்களை வகுத்தார்கள். ஆதாயம் ஏதுமின்றி ஆதவன் ஆற்றில் இறங்கமாட்டான். அவர்கள் எதுவுமே யாருக்கும் செய்ய மாட்டார்கள் என்பது அனைவரும்



நன்கு அறிந்ததே. ஆனால் ஒரேயடியாக பெரிய ஆதாயம் எதிர்பார்த்து ஆதவன் ஆற்றில் இறங்கிவிட்டு இப்போது ஊழல் சேற்றில் ஆழச் சிக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அவதிப்படும் வரலாற்றை, உண்மை நிலைமையை உலகமே பார்க்கிறது, எள்ளி நகையாடுகிறது அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்கள் கஜானாவைக் காலி செய்துவிட்டு, தமிழ்நாட்டை எவ்வளவு கடன் சுமையுள்ள நிலைக்கு ஆழ்த்தியிருந்தாலும், இந்தியாவிற்கே வழிகாட்டியாக மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக, இதுவரை எங்கும் கேட்டிராத, இதுவரை எங்கும் கண்டிராத வகையில் மாணவ, மாணவியர்கள்தான் எனது இரண்டு கண்கள் என்று பாவித்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த அற்புதத் திட்டம்தான் இந்த விலையேதுமின்றி மடிக்கணினி வழங்கும் திட்டம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பதிவு செய்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இத்திட்டத்தினால் முதற்கட்டமாக ரூபாய் 9 இலட்சத்து 12 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு விலையேதுமின்றி மடிக்கணினி வழங்கப்படவுள்ளது என்பதை உலகமே கூர்ந்து கவனிக்கிறது. இதன்மூலம் இந்தியாவில், ஏன் உலகிலே, எந்த அரசும் இதுவரை செய்யாத இமாலயச் சாதனையைப் படைத்துள்ளீர்கள் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியாளர்கள் டி.வி. பெட்டி வழங்கியதற்கான காரணம் நாடறிந்த ஒன்று. வழங்கிய டி.வி.-க்குக் கேபிள் இணைப்பின்மூலம் ஏழை மக்களிடமிருந்து சுரண்டியது பல ஆயிரம் கோடி ரூபாய். தள்ளாத வயதிலும் தானும் மானாட மயிலாட பார்த்து, தமிழர்களையும் பார்க்க வைத்து, ஒட்டுமொத்த மாணவச் சமுதாயத்தையும் சீரழித்த முந்தைய ஆட்சியாளர்கள் எங்கே, இப்போது காணாமல் போய்விட்டார்கள். இப்படி முன்னாள் ஆட்சியாளர்கள் கொண்டு வந்த ஊழல் திட்டம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தால், உரை முடிய இன்னும் நிறைய நாட்கள் ஆகும். மக்களே கொடுத்துவிட்டார்கள் மரண அடி தங்கள் மௌனப் புரட்சியின்மூலமாக. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சியாளர்கள் செய்த சீரழிவு பற்றிச் சிந்திப்பதே அவமானம் என்றே கருதுகிறேன்.

இங்கே மாண்புமிகு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் குறிப்பிட்டார்கள், தேர்தல் காலத்திலே இலவச டி.வி. கொடுத்தார்கள், டி.வி.-யைப் பற்றி ஒரு பேச்சாளர் பேசினார், டி.வி. குட்டி போடுமா என்று. ஆனால் மடிக்கணினி மாணவச் சமுதாயம் மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சியை அடைய வழிசெய்யும் என்பதை நான் ஆழப் பதிவு செய்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, ஆற்றல், இனிமை, ஈகை, உண்மை, ஊக்கம், எளிமை, ஏற்றம், ஒற்றுமை, ஓங்கு புகழ் போன்ற ஆக்கப்பூர்வமான குணங்கள் கொண்ட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய சிறப்பான திட்டங்கள் பற்றிச் சிந்திப்பதே வெகுமானம் எனக் கருதி, சமுதாயப் பொருளாதார மாற்றங்களினால் ஏற்படும் துயரத்தைக் குறைத்திடுவோம். ஏழையெளிய தாழ்த்தப்பட்ட மக்களினுடைய பொருளாதாரம் மேம்பட வேண்டும். இவை கல்வித் தரத்தை உயர்த்துவதால்தான் உயர்த்த முடியும். அதுவும் மாணவச் சமுதாயத்தினால்தான் முடியும். அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், கல்வியின் தரத்தை, மாணவச் சமுதாயத்தைச் செம்மைப்படுத்தி, வளப்படுத்தக் கொண்டு வந்துள்ள திட்டம், இந்த மகத்தான விலையேதுமின்றி மடிக்கணினி வழங்கும் திட்டம்.

*பிற்பகல் 1-40*

உள்நாட்டு மற்றும் பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் விரும்பும் மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகியுள்ளது. இது தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான புதிய பாதையை உருவாக்கியுள்ளது. இன்றைய உலகில், மாணவச் சமுதாயத்திற்கு மடிக்கணினி ஒரு இன்றியமையா கல்விச் சாதனமாக உள்ளது. சமூகப் பொருளாதார அடுக்கின் அடித்தட்டுப் பிரிவைச் சேர்ந்த மாணவ மாணவியரும், வளர்ந்துவரும் உலகளாவிய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பங்குகொள்ள ஏதுவாக அவர்கள் தயார் செய்யப்பட வேண்டும். தற்போது நவீனக் கல்வியின் இடைவெளியைக் குறைத்திடவும், மாணவ மாணவியருக்கு சம வாய்ப்பு நல்கிடவும், இவ்வாயிரமாண்டின் வளர்ச்சிக்கு, இலக்கிற்கு ஏற்றவாறு



மாணவர்களின் திறனை மேம்படுத்துவது அவசியமானது. வளரும் சமுதாயம், அறிவியல்பூர்வமாக வளர வேண்டும். வருங்கால இந்தியாவை, தமிழ் இளைஞர்கள் தாங்கிப் பிடிக்கின்ற ஒரு இளைஞர் பட்டாளம் உருவாக்கப்பட வேண்டும். இளைஞர்களுக்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் இடையிலான இடைவெளி குறைக்கப்பட வேண்டும். நம் இளைஞர்கள் உலகளவில் போட்டியில் வெற்றிபெற்று, வேலைவாய்ப்பு பெற்று முன்னேற வேண்டுமென எல்லா வகை நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு எவ்வித உள்நோக்கம் இல்லாமல், சுயநலம் இல்லாமல், பரந்து விரிந்த பல்நோக்கு எண்ணத்துடன்தான் இந்த மடிக்கணினித் திட்டம், தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ளதை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டுவதில் மிகவும் பெருமிதம் கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டம், மிகப்பெரிய வரப்பிரசாதம் என்று என்றென்றும் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்கள், பிள்ளை கேட்ட மடிக்கணினியை வாங்கிக் கொடுக்க முடியவில்லையே, கடன் கிடைக்கவில்லையே, அடகு வைக்கக்கூட நகை இல்லையே, யாரிடம் கேட்பது, பெற்றெடுத்தப் பிள்ளை பாவம் என்ன செய்தான் என ஏங்கித் தவிக்கின்ற இந்த வேளையில்-ஏன் சட்டமன்ற உறுப்பினர்கள்கூட, தங்களுக்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்வசம் மடிக்கணினி வாங்கித் தருவார்களாவென்று எதிர்பார்த்த இந்த வேளையில், இதோ நான் இருக்கிறேன், தாயாக, தந்தையாக, உற்றாராக, உறவினராக *(மேசையைத் தட்டும் ஒலி)* உங்கள் படிப்பிலும், வாழ்விலும் உண்மையான அக்கறை கொண்டவராக, குடும்பத்தில் ஒருவராக இருந்து உங்களை நல்ல நிலைக்குக் கொண்டு வர விலையேதுமின்றி மடிக்கணினி வாங்கித் தருகிறேன் என்று கூறி, மாணவச் செல்வங்கள்மீது கொண்ட கருணையால், அன்பால், பாசத்தால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காக்கும் கடவுளாக, கல்விக் கடவுளாக இருந்து கொண்டுவந்த இந்த மகத்தானத் திட்டம், விலையேதுமின்றி மடிக்கணினி வழங்கும் திட்டம் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்திட்டத்தால், அனைத்து மக்களின் இதயதெய்வமாக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான இந்தத் திட்டத்தினால் பயன்கள் ஏராளம். உலகளவில், இந்திய அளவில் இளைஞர்களுடைய திறமை விரைந்து முழுமை பெற்றதாக வெளிப்படப்போவது திண்ணம். பாடத்திட்டங்களைப் பதிவு செய்துகொள்ளவும், வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளவும் இத்திட்டம், மகத்தான பொக்கிஷம் அம்மா. இனி மாணவச் சமுதாயத்தில், அவன் வசதி படைத்தவன், laptop வைத்திருப்பவன் என்ற ஏற்றத்தாழ்வு களையப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்துப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் இந்த விஞ்ஞான யுகத்தில் தனக்கு வசதி இல்லையேயென்று வருத்தமில்லாமல், சம அந்தஸ்துடன் அறிவை வளர்த்துக்கொள்ளும் அற்புதமான சம வாய்ப்பை மாணவச் சமுதாயத்தினரிடையே ஏற்படுத்தியுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த மகத்தானத் திட்டம் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விச் செல்வத்தை யாராலும், எப்போதும் அழிக்க முடியாது. 22-08-2011 அன்று மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே அவையில் பொன்மேனித் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தை 29 ஆண்டுகளுக்கு முன், 1982 ஆம் ஆண்டு கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தை, இது முதன்மை வாய்ந்த திட்டம், இது வாழுகின்ற திட்டம், இது வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டம் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல்தான் அம்மா இந்தத் திட்டம். விலையேதுமின்றி மடிக்கணினி வழங்கும், இதய தெய்வம் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள, இம்மகத்தான திட்டம், காலத்தால் என்றுமே அழியாது. மாண்புமிகு அம்மா அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்தில், இந்த நூற்றாண்டு சந்ததியினர் மட்டுமல்லாது, இனி வருங்கால நூற்றாண்டு சந்ததிகள் அனைவரும் அம்மாவை தங்களுடைய இதய தெய்வமாக நினைத்துக்கொண்டிருப்பார்கள் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)



சமுதாயப் பொருளாதார ஏற்றத்தாழ்வினால், இல்லத்தரசிகள் அடையும் இடர்பாடுகளைக் களையும்பொருட்டு, தமிழகத்திலுள்ள அனைத்துக் குடும்பத் தலைவிகளுக்கும் வறுமையின் காரணமாக வாட்டியெடுத்த அம்மி உரலையும், ஆட்டுரலையும் காட்சிப் பொருளாக அருங்காட்சியகத்தில் மட்டுமே காண முடியும் என்ற நிலையினை உருவாக்கிடப்போகும் இன்னுமொரு பெண் அடிமை விடுதலைத் திட்டம்தான் இல்லத்தரசிகளுக்கு வீட்டு உபயோகச் சாதனங்களான மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-45

இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள விலை ஏதுமின்றி அரிசி பெறத் தகுதியுள்ள 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குப் பயன்படும் வகையில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு ரூ.1,250 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக நடப்பு நிதியாண்டில் 25 இலட்சம் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் ஒரு முற்போக்கு சமுதாயப் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்.

என்னதான் நாடு முன்னேறியிருந்தாலும் அழிவின் விளிம்பில் உள்ள ஏழை, எளிய மக்கள் இன்னும் அன்றாடப் பணிகளைச் செய்வதற்கு அம்மி, ஆட்டுக்கல் ஆகியவற்றைத்தான் நம்ப வேண்டிய நிலை உள்ளது. ஏழைப் பெண்கள் பொருளாதாரம் மற்றும் சமுதாயச் சுதந்திரம் பெற்றிட அவர்கள்தம் பணியினை எளிதாக்கி, தம்மை கடுமையானப் பணியிலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் எனத் திண்ணமாக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தன்னிகரில்லாத் தாய், கொண்டு வந்த சீரிய திட்டம்தான் விலை ஏதுமின்றி மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம்.

இத்திட்டத்தினால் விடுதலை; விடுதலை; இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இல்லத்தரசிகளுக்கு விடுதலை. விடுதலை; விடுதலை; அம்மியும், ஆட்டுரலும் பிடித்து அரைத்த கரங்களுக்கு கருணை உள்ளம்

கொண்ட தாயினால் விடுதலை. குழவி பிடித்து மாவு ஆட்டிய பெண்டிரின் கரங்களுக்கு விடுதலை; விடுதலை. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடுக்களைப் புரட்சி செய்துள்ளார்கள் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாய்க்குத்தான் இல்லத்தரசிகளின் அடுக்களைக் கஷ்டங்கள் தெரியும். அம்மா அவர்கள் மிக்சியுடன் ஒரு ஜார் மட்டும் வழங்கவில்லை, ஊறுகாய் மற்றும் மசாலா போன்ற பொருட்களை அரைக்க கூடுதலாக ஒரு சிறிய ஜாரும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் தானாகவே சிந்தித்து எடுத்த முடிவு என்ற இரகசியத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் வெளிப்படையாகப் பதிவு செய்துகொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியர்வை சிந்தி உழைத்த பின்பு வீடு திரும்பும் ஏழைகளுக்கு வேலை செய்த களைப்புத் தீர விசிறி வழங்கும் திட்டமாம், மின் விசிறி வழங்கும் திட்டமாகும். இல்லத்தரசிகளின் கரங்களுக்கு விடுதலை அளித்தது மட்டுமே போதாது எனக் கருதி, தன்னிகரில்லா தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், குடும்பப் பெண்கள் சமைக்கும் இடமான அடுக்களையும் காற்றோட்டத்துடன் இருந்தால்தான் அவர்கள் ஆரோக்கியமாக, காற்றோட்டமான சூழ்நிலையில் தம் இல்லக் கடமைகளைச் செய்வதற்கு அம்மா அவர்கள் மிக்சி, கிரைண்டருடன் மின் விசிறியும் அளித்துள்ளார்கள் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றோட்டமான சமையலறைக்கு மகளிருக்குத் தேவையான சாதனங்களை வழங்கி, அவர்களது பணிகளை எளிதாக்கி, வசதியுறச் செய்வது, நவீன வீட்டு உபயோகச் சாதனங்களை வழங்குவதன்மூலம் வறிய நிலையில் உள்ள மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன், அவர்களுக்குச் சம வாய்ப்பு வழங்குவது, மின் விசிறி பயன்பாட்டின்மூலம் அடுப்படியிலுள்ள குடும்பப் பெண்களின் சுற்றுச்சூழல் மேம்படும் என்பது அசைக்க முடியாத உண்மையாகும். தமிழர்களின் தாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் தாய் வீட்டுச் சீதனமாக இல்லத்தரசிகளுக்கு, பெண்களுக்கு மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறிகள் வழங்கி அடுக்களைப் புரட்சி செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் குடும்பப் பெண்களின் சமையல் வேலைக்கு ஆகும் நேரம் வெகுவாகக் குறைக்கப்படும் என்பதில் ஐயம் இல்லை.



தற்போது 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அத்தனை திட்டங்களும் முத்தானவை. அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலவச அரிசி வழங்கும் திட்டம், ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு திறன் வளர் பயிற்சித் திட்டம், ஆதி திராவிட மாணவர்களின் விடுதிகளை மேம்படுத்த நிதியுதவி அளிக்கும் திட்டம், சிறு, குறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்க பண்ணைசார் சிறப்புத் திட்டம், மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்கியுள்ள திட்டம், அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை அளிக்கும்பொருட்டு முதல்வர் பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் 24 மணி நேரமும் செயல்படும் மையங்களாக மாற்றியமைக்கும் திட்டம், நடமாடும் மருத்துவமனைத் திட்டம், கடலூர் மற்றும் கிழக்குக் கடற்கரையை ஒட்டியுள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் திட்டம், முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களையும் நீட்டிக்கும் திட்டம், ஏழைப் பெண்களுக்கு 4 கிராம் தங்கத் தாலியுடன் திருமண உதவியை உயர்த்தி வழங்கும் திட்டம், முதியோர், விதவைகள், கைம்பெண்கள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு மாத உதவித் தொகையை உயர்த்தி வழங்கும் திட்டம், பண்டைய இந்தியாவில் புகழ்பெற்ற மன்னர்களால் கடைப்பிடிக்கப்பட்ட பசு தானம் என்பதை ஏழை மக்கள் நலனில் அக்கறை கொண்டு மகளிரை முன்னிறுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) 12,000 குடும்பங்களுக்கு ஜெர்சி கலப்பினக் கறவை மாடுகள் வழங்கும் திட்டம்; ஒரு இலட்சம் நிலமற்ற ஏழைக் கூலி விவசாயத் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கு ஓர் ஆண் ஆடு மற்றும் மூன்று பெண் ஆடுகள் வழங்கும் திட்டம்; (மேசையைத் தட்டும்

ஒலி) ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம். ஏழை மக்களுக்குக் காற்றோட்டத்துடன்கூடிய சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு வட்டியின்றிப் பயிர்க் கடன் 3,000 கோடி வழங்கும் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழிவின் விளிம்பிலுள்ள அடித்தட்டு ஏழை மக்களுக்காகப் பல்வேறு சிறப்பு மற்றும் முன்னோடித் திட்டங்களை அளித்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்குத் தனியாக ஒரு மானியக் கோரிக்கையை உருவாக்கி, இந்த மாமன்றத்தின் முன்வைப்பதற்கு அனைத்து அறிவுரைகளையும் மனமுவந்து வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் துவக்க நிலையில் சிறப்பாகச் செயல்படுத்தி வந்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்'-முன்பிருந்த ஆட்சியாளர்கள் மற்றும் குடும்பத்தினருக்குப் பொருந்தும். அன்பிலாதவர் பிறர்க்குப் பயன்படார். எல்லா பொருள்களும் தமக்கு உரியன எனச் சொல்வர். 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'-மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஓடியோடி உழைக்கனும், அதைத் தன் குடும்பத்திற்கே சேர்க்கனும் என்பது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்களுக்கு மிகவும் பொருத்தமான வரிகள். ஆனால், ஓடியோடி உழைக்கனும், அதை ஊருக்கெல்லாம் கொடுக்கனும் என்னும் உயரிய பொருளுடைய (மேசையைத் தட்டும் ஒலி) வார்த்தைகளுக்கு முழுமையான சொந்தக்காரர் எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை தயாரிப்பதற்கு எனக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கிய இத்துறையின் சிறப்புப் பணி அலுவலர் முனைவர் திரு. அ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் திரு. ஷிவ்தாஸ் மீனா அவர்களுக்கும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் இணைச் செயலாளர் திரு. ராஜேந்திர ரத்னு அவர்களுக்கும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையில் பணிபுரியும் கூடுதல் இயக்குநர் முனைவர் க. இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்ற அம்மாவின் சூளுரை நிறைவேற, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் என்ற முறையில் எள்ளளவும் குறைவின்றி முழு நிறைவோடு என்றென்றும் அர்ப்பணிப்பு உணர்வோடு அம்மாவின் உண்மை விசுவாசி என்ற முறையில் அயராது உழைப்பேன் என்பதை அம்மாவின் நல்லாசியோடு இந்த மாமன்றத்தில் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற அம்மாவின் சூளுரை நிறைவேற மாண்புமிகு அம்மா அவர்கள் செய்துவரும் புரட்சிகள் ஏராளம். அதாவது, சட்டமன்றத் தேர்தலின்போது மே மாதம் நிகழ்த்திக் காட்டிய மௌனப் புரட்சி; (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் துறை குறித்து இன்றைக்குக்கூட விதி 110-ன்கீழ் அறிக்கை அளித்தார்கள். வேளாண் துறையில் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டுவந்தது இரண்டாம் வேளாண்மைப் புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) கலப்பினக் கறவை மாடுகள் வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்கச் செய்தது வெண்மைப் புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர் நலன் காக்க நல்ல திட்டங்களைக் கொண்டுவந்தது நீலப் புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் தந்தது கல்வியில் ஒரு விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சி என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவை அத்துணைக்கும் மேலாக, இல்லத்தரசிகளின் இன்னல்களைக் களைய மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி போன்றவை விலையேதும் இன்றி வழங்கும் திட்டம் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) இல்லத்தரசிகளுடைய குடும்பங்களுக்கு அடுக்களைப் புரட்சியைச் செய்தது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வரப் போகும் புரட்சித் திட்டங்கள் ஏராளம், ஏராளம், ஏராளம் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காக இந்த அரசு. மக்களுடைய உணர்வுகளை மதித்து நடக்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசினுடைய திட்டங்களைச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் என்ற முறையில் பல்வேறு துறைகளோடு ஒருங்கிணைத்து உடனடியாக அந்தத் திட்டங்களை முழுமையாகக் கொண்டு செல்வதற்கு இந்தச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை முழுமையாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு அம்மா அவர்கள், “நீங்கள் நல்லா இருக்கனும் இந்த நாடு முன்னேற, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு நல்லவங்க எல்லாரும் உங்கள் பின்னாலே, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் நினைச்சதெல்லாம் நடக்குமுங்க கண்ணு முன்னாலே” எனக் கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற, நான் பதிலுரையில் நல்ல கருத்துகளை வழங்கியுள்ளேன். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையின்படி நடப்பேன் என்பதைத் தெரிவித்து,



மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 26-8-2011 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (26-8-2011) வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, 26-8-2011 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-8-2011) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1-57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*- ஏதுமில்லை -*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*56. மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*57. மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*58. மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*59. மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*60. காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011-2012. (தமிழ்)*

## இணைப்பு I

*(280ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண்–26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012

**முன்னுரை**

இந்திய மொத்த மக்கள் தொகையில் 27.82 சதவிகிதம் பேர் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். இயற்கையான மக்கள் தொகை பெருக்கத்தினாலும், கிராமப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்கு மக்கள் இடம் பெயர்ந்து வருவதாலும், கடந்த பத்தாண்டுகளில் நகர்ப்புற மக்கள்தொகை வளர்ச்சியானது 27.16 சதவிகிதமாக வளர்ந்தும், அதே நேரத்தில் கிராமப்புற மக்கள் தொகையானது 6.49 சதவிகித வளர்ச்சியுமாக மட்டுமே உள்ளது.

2011 ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள 7.2 கோடி மக்கள் தொகையில் 3.5 கோடி அதாவது 48.45 சதவிகிதம் மக்கள் நகரப் பகுதிகளில் வசித்து வருவதால் மிக அதிக நகரமயமான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

அபரிமிதமான நகர்ப்புற வளர்ச்சியின் காரணமாக அனைவருக்கும் இயலக்கூடிய அளவில் குடியிருப்பு வசதியளித்தல் மிகப்பெரும் சவாலாக உள்ளது. மேற்படி சவாலின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் 1947 ஆம் ஆண்டு முதலே பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்தி வரும் மாநிலமாக தமிழகம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

வாங்கும் திறன் இன்மை, இடத்தின் உரிமை இன்மை, கிராமப்புறங்களில் சொத்துரிமை இல்லாமை, சாதகமான வீட்டு வசதித் திட்டங்கள் இல்லாமை, கட்டடம் கட்டுதல் குறித்த விழிப்புணர்வு இன்மை, பொது நிதி நிறுவனங்களின் நிதி உதவி இன்மை காரணங்களால் ஏழை மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் போதுமான வீட்டு வசதியின்றி வாழக்கூடிய

[2011 ஆகஸ்ட் 25

நிலை உள்ளது. இதன் காரணமாக வீட்டு வசதி பற்றாக்குறை அதிகரித்துள்ளது. தற்போது ஏறத்தாழ 35 சதவிகித வீடுகள் தற்காலிகமானதாகவும், பகுதி தற்காலிகமானதாகவும் அமைந்துள்ளன. இந்தப் பற்றாக்குறை, கிராமப்புறங்களில் மேலும் அதிகமாக உள்ளது. கிராமப்புறங்களில் ஏறத்தாழ 48 சதவிகித வீடுகள் தற்காலிக மற்றும் பகுதி தற்காலிக கட்டடங்களாகவே உள்ளன.

மாநிலம் முழுமைக்கும் 9.11 இலட்சம் குடியிருப்பு கட்டடங்கள் பற்றாக்குறையாக உள்ளது. அதில் 50 சதவிகிதம் நகரப் பகுதிகளில் தேவையாக உள்ளது.

### கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்கள்

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு மட்டுமல்லாமல் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் தரமான, இயலக்கூடிய அளவிலான விலையில் குடியிருப்பு கட்டடங்கள் அமைத்து திட்டமிட்ட மற்றும் ஏற்றத்தாழ்வற்ற வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதிக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் விதமாக தனியார் பங்களிப்பில் உருவாகும் கட்டடங்களில் 10 சதவிகிதம் கட்டடங்கள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான ஒதுக்கீடாக சட்டபூர்வமாக ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இயலக்கூடிய அளவிலான குடியிருப்புக் கட்டடங்கள் ஏற்படுத்தித்தர பல்வேறு நிறுவனத்தாரும் அரசால் ஈடுபடுத்தப்பட்டு குடியிருப்பு வசதிகள் செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் நில திட்டமிடல் மற்றும் வளர்ச்சியானது, நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின்கீழ் 1,28,869 சதுர கிலோமீட்டர் பரப்பளவும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின்கீழ் 1,189 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் இணக்கமான வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு முழுமைத் திட்டங்கள், விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துதல், நில உபயோக நடைமுறைப்படுத்துதல், திட்ட விதிகள் மற்றும் நெறிமுறைகளை மேற்படி இரு துறைகளும் மேற்கொண்டு வருகின்றன.



2011 ஆகஸ்ட் 25]

சிறப்பான பயன்பாடு கொண்ட சாலை இணைப்புகள் ஏற்படுத்துதல், புறவழிச் சாலைகளின் பாதைகள் வகுத்தல், வட்டச் சாலைகள் திட்டமிடல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி இரு துறைகளும் சில உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி போக்குவரத்து வசதிகளை முறைப்படுத்தி சிறப்பித்து வருகின்றன.

### 2011–2012 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு சுருக்கம்

### 1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

| வ. எண் | துறை/ நிறுவனம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்) | | | |
| 1. | தலைமைச் செயலகம் | 6,67,03 | – | 138,00,01 | 144,67,04 |
| 2. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | 3,16,38,74 | 1 | – | 3,16,38,75 |
| 3. | கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் | 25,90,44 | – | 15,65,00 | 41,55,44 |
| 4. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 3,61,01 | 891,41,81 | 4,00,00 | 899,02,82 |
| 5. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 48,82,03 | 1,40,03 | – | 50,22,06 |
| 6. | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | 94,44,20 | 61,39,02 | – | 155,83,22 |
| | மொத்தம் | 495,83,45 | 954,20,87 | 157,65,01 | 1,607,69,33 |

[2011 ஆகஸ்ட் 25

| | 2011–12 ஆம் ஆண்டு பகுதி – II திட்டங்கள் | |
|---|---|---|
| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | திட்டச் செலவு 2011–12 |
| | தலைமைச் செயலகம் | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | தலைமைச் செயலகத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அலுவலக அமைப்பை தகுந்த தடுப்புகளுடன் வடிவமைப்பு செய்தல் | 40.55 |
| | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | |
| 2. | விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் மேலும் 12 அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் | 140.00 |
| | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | |
| 3. | சென்னை –அடுக்குமாடி குடியிருப்பு திட்டப் பகுதிகளில் உள்ள கழிவுநீர் அகற்று அமைப்புகளை மேம்படுத்துதல் | 152.95 |
| 4. | ஒக்கியம் துரைப்பாக்கம் –மறுகுடியமர்வு திட்டம் – கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் – கழிவுநீர் அகற்று வசதிகள், குடியிருப்புகளுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் குடியிருப்புகளுக்கு இடையே நடைமேடை அமைத்தல் | 30.00 |
| 5. | பீர்க்கன்கரணை – அடுக்குமாடி குடியிருப்புத் திட்டம் – குடிநீர் விநியோக அமைப்புகளை ஏற்படுத்துதல் | 3.50 |
| 6. | செம்மஞ்சேரி – இரு நியாயவிலைக் கடைகள் அமைத்தல் | 9.00 |
| 7. | பி.எஸ்.மூர்த்தி நகர் / சென்னை – குடிநீர் விநியோக அமைப்புகளை ஏற்படுத்துதல் | 22.00 |
| 8. | கோவை மற்றும் திருச்சி நகரங்களில் கோட்ட அலுவலகங்களுக்கான கட்டடங்கள் அமைத்தல் | 80.00 |
| | நகர் ஊரமைப்பு இயக்ககம் | |
| 9. | 4 கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதில் 4 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல் | 22.00 |
| | மொத்தம் | 500.00 |



2011 ஆகஸ்ட் 25]

*மாநிலத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் வீட்டுத் தேவையினை பூர்த்தி செய்யவும் "அனைவருக்கும் வீடு" என்ற நோக்கத்தினை கருத்திற்கொண்டும் 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் துவங்கப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனியாருக்கு இணையாக அனைத்துத் தரப்பு மக்களும் விரும்பத்தக்க வகையில் எளிய நடைமுறையில் ஏற்றமிகு வீட்டு வசதித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை சுமார் 4 இலட்சம் வீட்டு வசதி அலகுகளை உருவாக்கியுள்ளது. இவற்றில் 2,91,000 அலகுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய் பிரிவினர் மற்றும் மத்திய வருவாய் பிரிவினருக்காக உருவாக்கப்பட்டுள்ளன.*

**1.1 செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்:**

*தற்போது ரூ. 742.64 கோடி மதிப்பீட்டில் 6,364 அலகுகளுக்கான வீட்டு வசதித் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டு 2011-12-ல் தமிழ்நாடு முழுவதும் 2,427 அலகுகள் 118.92 ஏக்கரில் ரூபாய் 340 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.*

**1.2 நகர்ப்புற ஏழைகளுக்கான வட்டியில் மானியத்துடன்கூடிய வீடு கட்ட கடன் வழங்கும் திட்டம்:**

*மைய அரசின், நகர்ப்புற ஏழைகளுக்கான வட்டியில் மானியத்துடன்கூடிய வீடு கட்ட கடன் வழங்கும் திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மைய முகவர் அமைப்பு நிறுவனமாக* (Nodal Agency) *நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் சுமார் ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 67,912 தகுதியுள்ள விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 47,001 விண்ணப்பங்கள் உரிய வங்கிகளுக்கு கடன் வழங்க அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை 4,069 தகுதிவாய்ந்த நபர்களுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*

**1.3 பழுதடைந்த வாரிய கட்டடங்களின் மறு கட்டுமானம்:**

*தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், சென்னையில் 6 இடங்களில் பழுதடைந்துள்ள வணிக, அலுவலக மற்றும் சமூகக்கூட வளாகங்களை இடித்துவிட்டு அதே இடத்தில் அதிக*

[2011 ஆகஸ்ட் 25

தரைப்பரப்பு (Floor Space Index) கொண்ட கட்டடங்களை சுமார் ரூ13.90 கோடி மதிப்பீட்டில் கட்டி வாரியத்திற்கு அதிகளவில் வருவாய் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**1.4 ஒருங்கிணைந்த நகரம்**

சென்னைப் பெருநகரில் பெருகிவரும் மக்கள் தொகையினால் முறையற்ற வகையில் உருவாகி வரும் கட்டடங்களைத் தவிர்க்க, அடிப்படை வசதிகளாகிய வரையறுக்கப்பட்ட சாலைகள், தெரு விளக்குகள், மழை நீர் வடிகால், சிறு பாலங்கள், கழிவு நீர் அகற்றல் மற்றும் குடிநீர் வசதிகளுடன் தன்னிறைவு பெற்ற ஒருங்கிணைந்த புதிய நகரத்தை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், திருமழிசைக்கு அருகில் ஏற்கெனவே வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட சுமார் 311.05 ஏக்கர் நிலப்பரப்பில் ஒருங்கிணைந்த நவீன நகரியத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளது. அணுகு சாலைக்காகத் தேவைப்படும் 12.87 ஏக்கர் சிறு நிலப்பரப்பு இவ்வருடத்தில் கையகப்படுத்தப்படும்.

**1.5 சிறப்பு பழுது பார்க்கும் பணிகள்:**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.34.37 கோடிக்கு ஒப்புதல் அளித்து, நிதி ஒப்புதல் வழங்கியுள்ளதற்கேற்ப பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சேலம் அண்ணாநகரில் உள்ள குடிசை மாற்று குடியிருப்புகளின் சிறப்பு பழுது பார்க்கும் பணிக்கென ரூ.1.45 கோடிக்கு ஒப்புதல் அளித்து, நிதி ஒப்புதல் செய்துள்ளதற்கேற்ப பணிகள் நடைபெற்று வருகின்றன.

**1.6 பிற துறைப் பணிகள் (Deposit Works) கூட்டுறவு சங்கங்களுக்கான திட்டங்கள்:**

தமிழகத்தில் 15 மாவட்ட தலைநகரங்களில் கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட பதிவாளர் மற்றும் இணைப் பதிவாளர்களின் அலுவலக வளாகங்கள் மற்றும் 3 இடங்களில் பயிற்சி நிறுவனங்கள் ஆகிய திட்டங்களை சுமார் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களில் 9



2011 ஆகஸ்ட் 25]

இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்ற இடங்களில் நிலம் ஒப்படைப்பு செய்த பின்னர் பணிகள் துவங்கப்படும்.

**1.7 விற்பனைப் பத்திரம் வழங்குதல்:**

வீட்டு வசதி வாரிய மனைகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்குவது குறித்த பிரச்சினை நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. முந்தைய ஆணையின்படி, பல வருடங்களாக காத்துக் கொண்டிருக்கும் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விற்பனைப் பத்திரங்கள் குறித்து தீர்வு காண இயலவில்லை. எனவே, தற்போதைய அரசு இப்பிரச்சினை குறித்து ஒதுக்கீடுதாரர்கள் மனநிறைவு அடையும் வகையில் விரைவில் வட்டித் தள்ளுபடிக்கான ஆணைகள் வெளியிடும்.

**1.8 விற்பனையாகாமல் உள்ள அலகுகள்**

2011-12-ஆம் நிதியாண்டில் விற்பனையாகாமலுள்ள 2,056 குடியிருப்புகள் மற்றும் 1,356 வணிக மனைகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் ரூ.1,201 கோடி வருவாய் கிடைக்கும்.

**1.9 பகுதி-I திட்டங்கள்**

பகுதி-I திட்டத்தின்கீழ், 2010-11ஆம் நிதியாண்டில் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள், சட்டமன்ற உறுப்பினர் விடுதி மற்றும் தொழிலாளர் மானிய வீட்டு வசதித் திட்ட குடியிருப்புகளின் வருடாந்திரப் பராமரிப்புப் பணிக்காக ரூ.1,240.97 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டது.

பகுதி-I திட்டத்தின்கீழ், 2011-12 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள், சட்டமன்ற உறுப்பினர் விடுதி மற்றும் தொழிலாளர் மானிய வீட்டு வசதித் திட்டக் குடியிருப்புகளின் வருடாந்திர பராமரிப்புப் பணிகள் ரூ.1,796.21 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படவுள்ளது.

[2011 ஆகஸ்ட் 25

### 1.10 பகுதி-II திட்டங்கள்

2011-12 ஆம் நிதியாண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ், விழுப்புரத்தில் 12 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்ட ரூ.1.40 கோடி ஒதுக்கீடு செய்ய மாநில திட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது.

## 2. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

தமிழகத்தின் மொத்த மக்கட் தொகையில் 48.45 விழுக்காடு நகரப் பகுதிகளில் வாழ்வதாக 2011 ஆம் ஆண்டின் மைய அரசின் கணக்கெடுப்புத் துறையினரால் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களுள் 20 விழுக்காடு குடிசைப் பகுதியில் மிகவும் சுகாதாரமற்ற நிலையில் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்பங்களுக்கு வீட்டு வசதி, குடிசைப் பகுதி மேம்பாடு போன்ற பணிகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நிறைவேற்றி வருகிறது.

(அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டது முதல் இதுவரை 1.13 இலட்சம் வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகள் அமைத்துள்ளது.

(ஆ) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 504 குடிசைப்பகுதிகளில் மனை உரிமத்துடன்கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகள்மூலம் 1.30 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளார்கள்.

### 2.1 குடிசைப் பகுதிகளுக்கான கொள்கை

(i) நகர குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் மற்றும் நகர குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களின் நிலையினை உயர்த்தும் நோக்கத்துடன் கீழே கூறப்பட்டுள்ள முறைகளைப் பின்பற்றி மேற்கூறப்பட்டுள்ள திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.



2011 ஆகஸ்ட் 25]

### 2.1 (அ) குடியிருக்கும் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்

நகரப் பகுதிகளில் ஆட்சேபகரமற்ற புறம்போக்கு இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் நிலத்தினை அனைவருக்கும் சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல் உள்ள பகுதிகளில், குடிசைகளை அகற்றி அப்பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படுகின்றன.

### 2.1 (ஆ) குடியிருக்கும் பகுதிகளில் மனை மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு

கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ள குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு மேம்படுத்த, கள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அந்நிலம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்ட பின் ஒதுக்கீடுதாரர்களுக்கு நில உரிமம் வழங்கப்படுகிறது.

### 2.1 (இ) மறுகுடியமர்வு திட்டப் பணிகள்

மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களுக்கு (குறிப்பாக நீர்வழித் தடங்கள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு) அருகில் உள்ள மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் உரிய அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன. குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டபின் அப்பகுதி உரிய பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்படுகிறது.

### 2.2 திட்டப் பணிகள் – 2011–16

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2011-16 ஆம் ஆண்டுகளில் 1.58 இலட்சம் குடியிருப்புகள் ரூ.10,076.77 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | திட்டப்பணியின் பெயர் | | மொத்த குடியிருப்புகள் | திட்ட செலவினம் (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள் | | | | |
| 1. | ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம் | | 38,570 | 1573.02 |
| 2. | சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல் | | | |
| | அ | அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டம் | 3,500 | 154.68 |
| | ஆ | இராஜீவ் காந்தி மறுகுடியமர்வு திட்டம் பகுதி–1 | 263 | 3.34 |
| | இ | இராஜீவ் காந்தி மறுகுடியமர்வு திட்டம் பகுதி–2 | 970 | 34.17 |
| 3. | இதர திட்டங்கள் | | | |
| | | புதிய குடியிருப்புகள் | 508 | 5.10 |
| தொடங்கப்பட உள்ள திட்டங்கள் | | | | |
| 1. | இராஜீவ் வீட்டு வசதித் திட்டம் | | 100,000 | 7500.00 |
| 2. | 13–வது நிதிக் குழு – சிறப்பு மானியம் –வீட்டு வசதி மற்றும் இதர பணிகள் | | 7,479 | 355.22 |
| 3. | சென்னை மதுரவாயல் –உயர விரைவு சாலை – பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி மற்றும் இதர பணிகள் | | 2,769 | 200.00 |
| 4. | ஒருங்கிணைந்த மெரினா மேம்பாடு – பழுதடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்து புதிய வீடுகள் அமைத்தல் | | 2,600 | 143.00 |
| 5. | நீலகிரி மாவட்டத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் திட்டம் | | 1,968 | 108.24 |
| | மொத்தம் | | **158,627** | **10,076.77** |



## 2.3. 2011–12 ஆம் ஆண்டுகளுக்கான திட்டங்கள்

மேற்கூறப்பட்டுள்ள திட்டங்களின் ஒரு பகுதியாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கீழே கூறப்பட்டுள்ள திட்டப் பணிகளை 2011-12 ஆம் ஆண்டில் அமைக்க திட்டமிட்டுள்ளது.

## 2.3.(i) ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம்

அ. தமிழ்நாட்டின் சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகரங்களில் குடிசைப் பகுதிகளில் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வரும் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய அனைத்து அடிப்படை வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மைய, மாநில அரசு மற்றும் பயனாளிகளின் பங்களிப்புடன் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக நகர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் பெருமளவில் வீடுகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

ஆ. இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகரங்களில் 44,870 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1,939.48 கோடி செலவில் கீழே கூறப்பட்டுள்ள இடங்களில் “ஒருங்கிணைந்த நகரங்களாக” அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2011 ஆகஸ்ட் 25

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்டப் பகுதியின் பெயர் | குடியிருப்புகள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடி) |
|---|---|---|---|---|
| 1 (அ) | காஞ்சிபுரம் | சென்னை, எழில் நகர் ஒக்கியம் துரைப்பாக்கம் | 6000 | 198.10 |
| (ஆ) | ” | எழில் நகர் பெரும்பாக்கம் | 3936 | 175.36 |
| (இ) | ” | பெரும்பாக்கம் பகுதி–1 | 10452 | 51 5.58 |
| (ஈ) | ” | பெரும்பாக்கம் பகுதி–2 | 9476 | 449.76 |
| | | | 29864 | 1338.80 |
| 2 (அ) | கோவை | கோவை, உக்கடம்–1 | 2232 | 67.50 |
| (ஆ) | ” | உக்கடம், பகுதி–2 | 816 | 22.22 |
| 3. | ” | கோவை, அம்மன் குளம் | 792 | 27.77 |
| 4. | ” | உக்கடம், பகுதி–3 | 9600 | 435.43 |
| | | | 13440 | 552.92 |
| 5. | மதுரை | மதுரை, பெரியார் நகர், ராஜாக்கூர் | 1566 | 47.76 |
| | | மொத்தம் | 44870 | 1939.48 |

இத்திட்டத்தின்கீழ் 6,300 குடியிருப்புகள் முன்னதாக அமைத்து முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 38,570 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 2013 ஆம் ஆண்டிற்குள் அமைத்து முடிக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக ரூ. 1,573.02 கோடி செலவிடப்படும். இந்நிதியாண்டில் 12,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்படும். ரூ.607.06 கோடி செலவிடப்படும்.



2011 ஆகஸ்ட் 25]

**2.3(ii) சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி**

அ. கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளை தாக்கிய சுனாமி ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பேரிடர் காரணமாக அப்பகுதிகளில் குடியிருந்தோர் திடீரென தங்கள் வீடுகளை இழந்தனர். இக்குடும்பங்களுக்கு உடனடியாக வீட்டு வசதி அமைக்கும் பொருட்டு அடுக்குமாடி குடியிருப்புகள்/ வீடுகள் அமைக்க திட்டமிடப்பட்டது. கடலோர மாவட்டங்களில் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டம் மற்றும் மைய அரசின் நிதி உதவியுடன் இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டங்களின்கீழ் மறுகுடியமர்வு திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஆ. சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்படும் இடங்களில் 0 முதல் 200 மீட்டர் வரை உள்ள இடங்களில் வாழும் குடும்பங்கள் இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மறுகுடியமர்வு செய்யப்பட்டு வருகின்றன.

இ. அவசர சுனாமி மறுகுடியமர்வுத் திட்டத்தின்கீழ் 6,292 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இந்நிதியாண்டில் அமைத்து முடிக்கப்படும். இராஜீவ் காந்தி மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் 6,800 வீடுகள் அமைக்க திட்டமிடப்பட்டு, அவற்றுள் 5,581 வீடுகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,219 குடியிருப்புகள் இந்நிதியாண்டில் அமைத்து முடிக்கப்படும். அதன் விவரம் பின்வருமாறு:-

[2011 ஆகஸ்ட் 25

## 2.4 அவசர சுனாமி மறுகுடியமர்வுத் திட்டம்

(ரூ.கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | குடியிருப்புகள் | திட்ட மதிப்பீடு | முடிவுறும் மாதம் |
|---|---|---|---|---|
| அ | அகில இந்திய வானொலி நிலைய நிலம் | 3616 | 139.51 | 12/2011 |
| ஆ | நொச்சிக்குப்பம், நொச்சிநகர் | 628 | 36.01 | 3/2012 |
| இ | தற்காலிகக் குடியிருப்புகள் | **2468 *** | 17.23 | - |
| ஈ | ஒக்கியம் துரைப்பாக்கம் / தென் சென்னை | 2048 | 106.11 | 6/2012 |
| | மொத்தம் | **6292** | **298.86** | |
| | * மொத்த எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை | | | |

மேலே அட்டவணையில் கண்ட இனங்களில் வ.எண் (அ)—வை பொறுத்தமட்டில் குடியிருப்புகளுக்குமான கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. தற்போது மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. வ.எண் (ஆ) மற்றும் (ஈ) பொறுத்தமட்டில் குடியிருப்புக் கட்டுமானப் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

## 2.5 இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டம்-I

(ரூ.கோடியில்)

| மாவட்டங்களின் பெயர் | மொத்த வீடுகள் | திட்ட செலவினம் | முன்னேற்றத்தில் உள்ளவை |
|---|---|---|---|
| விழுப்புரம் | 325 | 10.70 | 62 வீடுகள் முடிவுற்று பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 263 வீடுகள் 31–10–2011க்குள் முடிவுறும். |



2011 ஆகஸ்ட் 25]

## 2.6 இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டம்-II

(ரூ.கோடியில்)

| வ. எண் | மாவட்டங்களின் பெயர் | குடியிருப்புகள் | திட்ட செலவினம் | முடிவுற்றவை | முன்னேற்றத்தில் உள்ளவை |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 32 | 1.10 | 32 | 0 |
| 2 | திருவள்ளூர் | 358 | 10.23 | 297 | 61 |
| 3 | விழுப்புரம் | 276 | 8.89 | 167 | 109 |
| 4 | கடலூர் | 1013 | 34.21 | 464 | 549 |
| 5 | நாகப்பட்டினம் | 266 | 7.52 | 266 | 0 |
| 6 | தூத்துக்குடி | 1623 | 60.14 | 1440 | 183 |
| 7 | இராமநாதபுரம் | 1027 | 38.10 | 1027 | 0 |
| 8 | கன்னியாகுமரி | 988 | 33.79 | 934 | 54 |
| | மொத்தம் | **5583** | **193.98** | **4627** | **956** |

## 2.7 பதின்மூன்றாவது நிதிக் குழு–மாநில சிறப்பு மானியம்

நகர குடிசைப் பகுதிகளில் உரிய அடிப்படை வசதிகளின்றி குடிசைகள் அமைத்து வாழும் குடும்பங்களுக்கு வீட்டு வசதி, குடிநீர் மற்றும் கல்வி போன்ற வசதிகளை தமிழ்நாட்டின் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்காக அமைக்க மைய அரசின் பதின்மூன்றாவது நிதிக் குழு ரூ.300.00 கோடி சிறப்பு மானியமாக வழங்கியுள்ளது. மைய அரசால் இத்திட்டப் பணிகளுக்காக ஆண்டொன்றிற்கு ரூ.75.00 கோடி வீதம் 2011-12 முதல் 2014-15 வரை வழங்கப்படும்.

இந்நிதியுதவியினைக் கொண்டு 2011-15 ஆம் ஆண்டுகளில் 7,479 புதிய குடியிருப்புகள் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் நடப்பு நிதியாண்டில் 2,595 குடியிருப்புகள் கட்டவும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.105.43 கோடி செலவில் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

[2011 ஆகஸ்ட் 25

## 2.8 இராஜீவ் வீட்டு வசதித் திட்டம்

அ. மைய அரசு கணக்கெடுப்புத் துறையின் 2011 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 13.96 இலட்சம் குடும்பங்கள் நகர குடிசைப் பகுதிகளில் வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இக்குடிசைப் பகுதிகளில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி கூரை வீடுகள் அமைத்து புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கும் மற்றும் தீ விபத்து போன்ற இன்னல்களுக்கும் உட்பட்டு மக்கள் வாழ்கின்றனர். அனைத்து நகர குடிசைப் பகுதிகளையும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் ஒருங்கிணைந்த மேம்பாட்டின்கீழ் செயல்படுத்தும் நோக்கத்துடன் மைய அரசு இராஜீவ் வீட்டு வசதித் திட்டத்தினை அறிவித்துள்ளது.

ஆ. முதற்கட்டமாக 2001 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 3.00 இலட்சத்திற்கு அதிக மக்கட்தொகை உள்ள சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர், வேலூர் மற்றும் ஈரோடு ஆகிய 9 நகரங்களில் வசிக்கும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீட்டு வசதி முழுமையாக அமைக்கப்பட்டு இந்நகரங்கள் குடிசைகளற்ற நகரங்களாக மேம்படுத்தப்படும்.

இ. இத்திட்டப் பணிகள் மைய அரசின் இராஜீவ் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மைய அரசின் மானியம் (50%), மாநில அரசின் மானியம் (40%) மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை (10%) பெற்று செயல்படுத்தப்படும். மைய அரசின் அறிவுரைகளுக்கிணங்க இத்திட்டப் பணிகளுக்காக குடிசைப் பகுதி வாழ் குடும்பங்கள் பற்றிய கணக்கெடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. குடிசைப் பகுதிகள் பற்றிய கணக்கெடுப்புப் பணிகளை அடிப்படையாகக் கொண்டு நகரங்கள் வாரியாகத் திட்ட அறிக்கைகள் மைய அரசுக்கு அனுப்பப்படும். இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 2011-16 ஆம் ஆண்டுகளில் சுமார் 1.00 இலட்சம் வீடுகள் ரூ.7.500/- கோடி செலவில் 2012-16 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்படும்.



2011 ஆகஸ்ட் 25]

## 2.9 சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர சாலை – திட்டப் பணிகளால் பாதிக்கப்படும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்

அ. சென்னை துறைமுகத்தினரால் மைய அரசின் இந்திய தேசிய நெடுஞ்சாலை குழுமம் மற்றும் சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர் மட்டச் சாலை கூவம் நதிக்கரையின் வழியாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் உயர் மட்டச் சாலை திட்டத்தின்கீழ் பாதிக்கப்படும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும் பணிகளை செயலாக்கும் முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. கூவம் நதிக்கரையில் உயர்மட்டச் சாலை வழித்தடங்களில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்கள் தன்னிறைவான அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாயப் பணிகளுடன்கூடிய புதிய குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுவர்.

ஆ. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 7,400 குடும்பங்களுக்கு மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகளும் மற்றும் இத்திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் இடங்களில் வணிக நிறுவனங்கள் நடத்திவரும் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள், சென்னை சிங்கப்பெருமாள் கோவில் நகருக்கு அருகே ஆட்டோ நகர் பகுதியில் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவினம் ரூ.400.00 கோடி. ஆப்பூர் பகுதியில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இ. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 818 குடும்பங்களை அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்துள்ளது. மீதமுள்ள குடும்பங்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுவர். சென்னை துறைமுகக் கழகம் செலுத்த வேண்டிய ரூ.200.00 கோடி நிதியில் ரூ.46.00 கோடி அளித்துள்ளது.

[2011 ஆகஸ்ட் 25

**2.10 ஒருங்கிணைந்த மெரினா மேம்பாடு – பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து புதிய வீடுகள் அமைத்தல்**

*சென்னை மெரினா கடற்கரைக்கு அருகே சீனிவாசபுரம் மற்றும் பட்டினபப்பாக்கம் பகுதியில் சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்டு மிகவும் பழுதான நிலையில் உள்ள குடியிருப்புகளை இடித்து மீண்டும் அதே இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைக்கும் பணிகள் உலக வங்கியின் நிதி உதவியின்கீழ் நிறைவேற்ற இயலவில்லை. மேற்கூறப்பட்ட குடும்பங்களுக்கு 2,600 குடியிருப்புகள் ரூ.143.00 கோடி செலவில் மாநில அரசின் நிதி ஆதாரத்துடன் தேவையான ஒப்புதல் பெற்று கட்டப்படும்.*

**2.11 நகர குடிசைப் பகுதிகளுக்கு சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகள்**

*நகர குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் மக்கள் வாழ்வதற்கேற்றவாறு அமைக்கவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின்விளக்கு, குடிநீர் வசதி, மழை நீர் வடிகால், கழிப்பறைகள் போன்ற பணிகளை 20,000 குடும்பங்களுக்கு ரூ.10.00 கோடி செலவில் 2011-12 ஆம் ஆண்டில் பல்வேறு நகரங்களில் அமைக்கப்படும்.*

**2.12 பகுதி-II திட்டம் 2011–12**

*தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 2011-12 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழே கூறப்பட்டுள்ள பணிகளை ரூ.297.45 இலட்சம் செலவில் நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது:—*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | செலவினம் (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|
| 1. | சென்னை –அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் கழிவு நீரகற்று வசதிகளை மேம்படுத்துதல் | 152.95 |
| 2. | ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் குடியிருப்பு தொகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் கான்கிரீட் பணிகள் | 30.00 |
| 3. | பீர்க்கன்கரணை – அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் அமைத்தல் | 3.50 |
| 4 . | கோவை மற்றும் திருச்சி நகரில் கோட்ட அலுவலகங்கள் அமைத்தல் | 80.00 |
| 5 . | செம்மஞ்சேரி திட்டப்பகுதியில் நியாய விலைக் கடைகள் அமைத்தல் | 9.00 |
| 6 . | பி.எஸ்.மூர்த்தி நகர் திட்டப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகித்தல் | 22.00 |
| | மொத்தம் | 297.45 |



2011 ஆகஸ்ட் 25]

**2.13 சிறப்பு உள்ளடக்கத் திட்டம், 2011–12**

**நகரப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கான திட்டப் பணிகள்**

*நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுள் 26 விழுக்காடு ஆதி திராவிடர் மக்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2011-12 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின்மூலம் அவர்கள் பயன்பெறுவர். அதன் விவரம் பின்வருமாறு:—*

| திட்டத்தின் பெயர் | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் | |
|---|---|---|
| | குடியிருப்புகளின் எண்ணிக்கை | செலவினம் (ரூ.கோடியில்) |
| நகரக் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல் | 5,073 | 253.65 |

[2011 ஆகஸ்ட் 25

## 2.14 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்குதல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் மனைகளில் வாழும் குடும்பங்களுக்கு அக்குடியிருப்புகள் மற்றும் மனைகளுக்கான விற்பனைப் பத்திரங்களை வழங்கி வருகின்றது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2011-12 ஆம்ஆண்டில் பல்வேறு திட்டங்களில் 10,000 குடியிருப்புகளுக்கு ஒதுக்கீட்டாணைகளும் 4,000 குடியிருப்புகள்/ மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்களும் வழங்கப்படும். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதுபோன்ற ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகள் மனைகளுக்கான விற்பனைப் பத்திரங்கள், இத்திட்டப் பகுதி அமைந்துள்ள நிலங்கள் மாற்றம் செய்யப்பட்டவுடன் வழங்கப்படுகின்றன.

## 2.15 சமுதாய வளர்ச்சிப் பணிகள்

சென்னை மற்றும் மாநிலத்தின் இதர மாவட்டங்களில் குடிசைப் பகுதி வாழ் மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக முக்கிய திட்டங்களாக வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம், மறுகுடியமர்வுக்கு பின்னர் வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 400 நபர்களுக்கு ரூ.40.00 இலட்சம் செலவில் 2011-12 ஆம் ஆண்டில் பல்வேறு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்.



2011 ஆகஸ்ட் 25]

# 3. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்

தமிழக மக்களின் அவசியத் தேவைகளில், உறைவிடம் என்பது பல்லாண்டு காலமாக மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்தேவையைப் பூர்த்தி செய்ய தமிழக அரசின் வீட்டு வசதி கொள்கைக்கு ஏற்ப வீட்டு வசதியினை மேம்படுத்துவதில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1,034 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் நகர்ப்புற மக்களின் சேவைக்கென 837 தொடக்க நிலை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் தேவையினை பூர்த்தி செய்ய வட்ட அளவில் 197 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும் மக்கள் சேவையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளன. மேற்கண்டுள்ள 1,034 சங்கங்களில் 816 வீட்டு வசதி சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள சார்புச் சங்கங்களாகும். அடிப்படை வசதிகளுடன்கூடிய வீட்டுமனைகள் உறுப்பினர்களுக்குக் கிடைக்க, மனைப் பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் புதிய வீடுகள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்குதல் போன்றவை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் நோக்கமாகும்.

## 3.1 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கு ஒருங்கிணைப்பு நிறுவனமாக இருப்பதால் சார்புச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டத் தேவைப்படும் நிதியுதவியைத் திரட்டித் தரும் பணியினைச் செய்கிறது. வீட்டுக் கடன் வழங்க மாநில வீட்டு வசதி இணையத்திற்குத் தேவைப்படும் நிதியாதாரங்கள் தமிழ்நாடு அரசு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து அரசு பொறுப்புறுதியின் பேரில் பெறப்படுகின்றன. தொடக்கக் காலத்திலிருந்து இணைக்கப்பட்ட சார்புச் சங்கங்களுக்கு 31-5-2011 வரை 11,64,434 வீடுகள் கட்ட ரூ.4,752.88 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், மிகச் சிறந்த கூட்டுறவு நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு பரிசும் பெற்றுள்ளது.

[2011 ஆகஸ்ட் 25

**3.2 வட்டி தள்ளுபடித் திட்டம்**

2007-2008 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தள்ளுபடி திட்டத்தின் சலுகைக் காலம் 31-03-2009 வரை இருந்தது. அரசாணை (நிலை) எண் 236, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீ.கூ.ச) துறை., நாள் 29-10-2010 மூலம் இச்சலுகை காலத்தை 30-06-2011 வரை கால நீட்டிப்புச் செய்து அரசாணை வெளியிட்டுள்ளது. புதியதொரு வட்டித் தள்ளுபடிச் சலுகைத் திட்டம் கடனாளிகளின் பயனுக்காக அரசின் பரிசீலனையில் உள்ளது.

**4. அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டம்**

4.1 அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்கு, வீடுவாங்குவதற்கு, வீட்டினை விரிவாக்க, மேம்படுத்த மற்றும் பிற இனங்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்கும் திட்டம், வீடுகட்டும் முன்பண விதிகளுக்குட்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.2 இத்திட்டம், இலாபநோக்கினை மையமாக கொண்டு இயங்கும் வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் வீட்டுக்கடன்களைப் போல் அல்லாமல் அரசு ஊழியர்களுக்கான நலத் திட்டமாகவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முன்பணத்திற்கான வட்டி மாதாந்திர கழிவு அடிப்படையில் (Monthly diminishing balance) ஒவ்வொரு மாத இறுதியிலும் நிலுவையாக உள்ள தொகைக்கு வட்டி வீதம் கணக்கிடப்படுவதாலும், படிவீத முறைப்படி (slab rates) ஒவ்வொரு நிதியாண்டில் அரசு நிர்ணயிக்கும் வட்டி வீதங்களின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு வட்டிப் பிடித்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது. இம்முன்பணத்திற்கான வட்டி, வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களின் வட்டி வீதத்தைவிட குறைவாக இருப்பதாலும், முன்பணக் கடனை எப்பொழுது வேண்டுமானாலும் முழுவதுமாக திரும்பச் செலுத்தி கடனை முன்முடிவு செய்ய வழிவகையுள்ளதாலும் மற்றும் அதற்கான முன்முடிவு கட்டணம் ஏதும் கடனாளி செலுத்தத் தேவையில்லை என்பதாலும் மற்றும் அரசு ஊழியர் இறக்க நேரிட்டால் நிலுவையில் உள்ள அசல் மற்றும் வட்டித்தொகை முழுவதையும் வீடுகட்டும் முன்பண சேம நல நிதியின்கீழ் தள்ளுபடி செய்யப்படுவதாலும் வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களைக் காட்டிலும் இத்திட்டத்தின்கீழ் முன்பணத்தினைப் பெறுவதற்கு அரசுப் பணியாளர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.



2011 ஆகஸ்ட் 25]

4.3 2011-2012 ஆம் ஆண்டு திருத்த-வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, அரசு ஊழியர்கள் மற்றும் அனைத்திந்திய பணி அலுவலர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்குவதற்காக ரூ.138 கோடி நிதி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.4 இத்திட்டம் மேலும் சிறப்புறச் செயல்பட முதற்கட்டமாக அனைத்து இந்தியப் பணிகளின்கீழ் பணியாற்றும் அலுவலர்களுக்குக் கூடுதல் நிதிஒதுக்கீடு மற்றும் தலைமைச் செயலக ஊழியர்களுக்கு அடையாள நிதிஒதுக்கீடு (Token provision) சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக அனைத்துத் துறைகளின் 2011-2012 ஆம் ஆண்டு திருத்த-வரவு செலவுத் திட்ட விரிவான மானியக் கோரிக்கையிலேயே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. இடவசதி கட்டுப்பாடு**

5.1 1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டமானது (திருத்தப்பட்ட சட்டம் 23/1973)

(i) வீடுகள் வாடகைக்கு விடுவதை சீர் செய்வது முறைப்படுத்துவது

(ii) வாடகைகளைக் கட்டுப்படுத்துவது

(iii) முறையற்ற வெளியேற்றங்களைத் தடுப்பது போன்ற நோக்கங்களைக் கொண்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியர் இடவசதி கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பானவர் ஆவார்.

5.2 பொதுப் பணித் துறையின் கணக்கீட்டு முறைப்படி கணக்கிடப்படும் வாடகை மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால் கடந்த 20 வருடங்களாக சென்னை மாநகரில் எந்த கட்டடங்களும் அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படவில்லை. தற்போது அரசு ஊழியர்களின் இடவசதிக்கான தேவைகளைக் கவனிக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வீடுகட்ட முன்பணம் வழங்குதல் போன்ற வசதிகள் உள்ளன.

[2011 ஆகஸ்ட் 25

5.3 தனிப்பட்ட குடியிருப்பாளர் அந்த வீட்டின் உரிமையாளர் இடையே பிரச்சினை இருக்கும் பட்சத்தில் அந்த வீட்டிற்கான வாடகை வசூலிக்கும் அதிகாரியாக நீதிமன்ற அறிவுரைப்படி சென்னை மாவட்ட ஆட்சியர் செயல்படுகிறார். தற்போது மாதிரி குடிவாரச் சட்டம் (Model Tenancy Act) அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 6. நகர் ஊரமைப்பு இயக்ககம்

6.1 தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 7.2 கோடியாக உள்ளதில் 3.5 கோடி மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். மாநிலத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 48.44 விழுக்காடாகக் கணக்கிடப்படுகிறது. அதே வேளையில் நாட்டின் நகர்ப்புற மக்கள்தொகை 30 விழுக்காடாகத்தான் உள்ளது. மாநிலத்தின் மொத்த புவிப்பரப்பு 1,30,011 சதுர கிலோ மீட்டராகும். நகர்ப்புற குடியிருப்புகளின் மொத்தப் பரப்பு 13,755 சதுர கிலோ மீட்டராகும். இது மாநிலத்தின் மொத்தப் பரப்பில் 11.61 விழுக்காட்டையே கொண்டுள்ளது. 2011-ல் மாநிலத்தின் சராசரி மக்கள் தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 554 நபர்கள் ஆக இருந்தது. ஆனால் நகர்ப்புறங்களில் இது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 3,521 நபர்கள் என அமைந்துள்ளது.

6.2 வளரும் நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையை வடிவமைப்பதில் நகர்மயமாதல் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது. ஆனால், நகர்ப்புற மக்கள் தொகையின் திடீர் உயர்வு நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதி மற்றும் சேவைகளில் பாதிப்பை ஏற்படுத்தி நகர்ப்புற வாழ்க்கையின் தரம் சீர்கெட வழிவகுக்கிறது. இது நகர்ப் பகுதியின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கான சூழல் ஆகியவற்றின்மீது திட்டவட்டமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நகர்ப்புற மக்கள் தொகையின் அளவு, குவிதல் மற்றும் பரவல் ஆகியன நகர மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து கிடைக்கச் செய்வதில் மற்றும் பராமரிப்பதில் கடுமையான சவால்களை ஏற்படுத்துகிறது. அச்சவால்கள் பலதரப்பட்டவை மற்றும் சிக்கலானவை. வசிப்பவர்கள் அனைவருக்கும் தரமான தேவையான தரத்துடன் அமைந்த ஆரோக்கியமான, பாதுகாப்பான, வசதியான வாழ்க்கையைத் தொடர்ந்து கிடைக்கச் செய்ய மற்றும் அதற்கு வழிவகுக்க நகர்ப்புற அமைப்பு முறையின் ஆற்றலை மேம்படுத்த ஒருமுகப்பட்ட முயற்சி தேவைப்படுகிறது.



2011 ஆகஸ்ட் 25]

### கொள்கைக் குறிக்கோள்கள்

6.3 முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-இன்படியான திட்டங்களைத் தயாரிப்பதிலும் மற்றும் செயல்படுத்துவதிலும் உள்ளாட்சிகளுக்கு/திட்டக் குழுமங்களுக்கு உதவுதல் இத்துறையின் முக்கியப் பணியாக உள்ளது. அச்சட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட திட்டங்களில் அடங்கியுள்ள உத்தேசங்களை உள்ளாட்சிகள் செயல்படுத்துவதற்கு ஏதுவாக பல்வேறு சிறப்புத் திட்டங்களின்கீழ் நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து உள்ளாட்சி/திட்டக் குழுமங்களுக்கு வெவ்வேறு விகிதங்களில் இத்துறை மானியம் வழங்குகிறது. மனைப் பிரிவுகள் மற்றும் கட்டடத் திட்டங்களுக்குச் செயல் குழுமங்களாக விளங்கும் உள்ளாட்சிகளால் இறுதி ஒப்புதல் வழங்க உள்ளாட்சி/உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு குடியிருப்பு/ வணிகம்/ தொழிற்சாலை/ நிறுவனங்கள் அல்லது மற்ற பிற நோக்கங்களுக்கான நில மேம்பாடு மற்றும் கட்டடப் பணிகளுக்குத் தொழில்நுட்ப அறிவுரை வழங்குவதும் இத்துறையின் முக்கிய செயல்பாடாக உள்ளது.

### 6.4 சட்டப்படியான திட்டங்கள் தயாரித்தல்

### 6.4 (i) முழுமைத் திட்டங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்

முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் என்பது நகரங்களுக்காகத் தயாரிக்கப்படும் திட்டப் பகுதியில் ஒழுங்கான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான ஒழுங்குபடுத்தும் வழிகாட்டி நெறிமுறைகளுடன்கூடிய திட்டமாகும். பெரும்நோக்கில், நிலப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல் மற்றும் திறன்வாய்ந்த சாலை அமைப்பு, புறவழிச் சாலைகள், வட்டச் சாலைகளுக்கான போக்கினை நிர்ணயித்தல் ஏனையவை இதன் நோக்கமாக அமைந்துள்ளது. நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மறுசீரமைப்பிற்கான பெரிய அளவிலான ஒருமித்தத் திட்டத்தை வரையறுத்தல், ஒருமுகப்படுத்துதல் மற்றும் வழங்குதல் போன்ற ஒரு தொடர் முறையை இது உள்ளடக்கியதாகும். நலமான வாழ்வுக்கான உள்ளூர் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலும், மேலும் உடனடி மற்றும் வருங்காலத் தேவை ஆகியவற்றின்

[2011 ஆகஸ்ட் 25

அடிப்படையிலான சமூக மற்றும் பொருளாதார சம்பந்தமானவற்றை மறைமுகமாக உள்ளடக்கியதாக இது வடிவமைக்கப்படுகிறது. இதுகாறும் 123 முழுமைத் திட்டங்கள் அனைத்து நகராட்சிப் பகுதிகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளன. 2010-11 ஆம் ஆண்டில் 6 முழுமைத் திட்டங்கள் அதாவது ஊட்டி, கோத்தகிரி, ஈரோடு, வேலூர், கோயம்புத்தூர், கூத்தாநல்லூர் ஆகியவை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 2011-12 ஆம் ஆண்டில் 6 முழுமைத் திட்டங்கள் அதாவது தூத்துக்குடி, தஞ்சாவூர், நெல்லிக்குப்பம், காரைக்குடி, சித்தோடு மற்றும் திருநெல்வேலி ஆகியன மறு ஆய்வு / தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 1,28,869 சதுர கிலோ மீட்டர் முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்ட பரப்பளவு - 6,950 சதுர கிலோ மீட்டர் (5 விழுக்காடு) திட்டமில்லா பகுதியின் பரப்பு -1,21,919 சதுர கிலோ மீட்டர் (95 விழுக்காடு). மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகள் திட்டமில்லாப் பகுதியாக இருப்பதால் கட்டுப்பாடற்ற நகர்ப்புற வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இந்தக் கட்டுப்பாடற்ற நகர்ப்புற வளர்ச்சியை முறைப்படுத்த 95 சதவிகித திட்டமில்லாப் பகுதி முழுவதற்கும் முழுமைத் திட்ட உத்தேசங்கள் மூன்று ஆண்டுகளில் பல கட்டங்களாக பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.4(ii) விரிவு மேம்பாட்டுத் திட்டம்

இவை நுண்ணிய அளவிலான மற்றும் முழுமைத் திட்டத்தை (பெரிய அளவிலானது) ஒத்து அமையும் வகையில் நகர்ப்புற பகுதிகளுக்கெனத் தயாரிக்கப்படும் செயல் திட்டங்களாகும். முழுமைத் திட்ட வரம்பிற்குள் சமச்சீரான வளர்ச்சிக்கு வசதி செய்வதற்கு குறிப்பிட்ட நில உபயோகம், பூங்கா மற்றும் விளையாடுமிடங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், சிறிய இணைப்புச் சாலைகள், முறையான போக்குவரத்து சுழற்சிக்கான சாலைகள், பொது உபயோகங்கள், வணிகம் மற்றும் தொழிற் பகுதிகள் மற்றும் பிறவற்றின் சீரான வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் விரிவான வகையில் நிலப் பங்கீடு செய்யப்படுகிறது. இத்துறை ஒவ்வொரு ஆண்டும் தரம் 1 (1,00,000 மக்கள் தொகைக்கு மேல்) மற்றும் தரம் 2 (மக்கள் தொகை 50,000-லிருந்து 99,999 வரை)



2011 ஆகஸ்ட் 25]

நகரங்களுக்கு மற்றும் அதனைத் தொடர்ந்து மூன்றாம் தர நகரங்களுக்கும் விரிவு மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் பணியை மேற்கொள்கிறது. முழுமைத் திட்டப் பகுதிக்குள் அமையும் இடங்களுக்கு இத்துறையால் இதுகாறும் 1,625 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன்கீழ் வரும் மொத்தப் பரப்பு 1,300 ச.கி.மீ விரைவாக வளர்ச்சியடையும் பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 2011-12 ஆம் ஆண்டில் 50 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.4(iii) கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் உருவாக்குவதற்கான உத்தேசம்

இம்மாநிலத்தில் 88 தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்கள் இயங்கி வருகின்றன. இந்தத் தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்கள் தனது எல்லையைக் கடந்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வரை விரிவடைந்துள்ளன. துரித நகர்மயமாதல் மற்றும் நகராட்சிகளில் போதுமான நிலப் பரப்பின்மை காரணமாக ஒரு சில தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்களின் வளர்ச்சி அதனை ஒட்டியுள்ள கிராமங்கள் வரை அமைந்துள்ளது. நகராட்சிகளின் எல்லைகளைத் தாண்டி உள்ள வளர்ச்சிகளை ஒழுங்குபடுத்த கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் 27 கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் உள்ளன.

## 6.5 நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து தொடர்ந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

### 6.5(i) புராதன நகர மேம்பாட்டுத் திட்டம்

நமது பண்டைய செறிவான கலாச்சாரம், பண்பாடு மற்றும் கட்டடக்கலை திறமைக்குச் சான்றாக புராதன நகரங்கள் திகழ்கின்றன. இப்பகுதிகளை பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. திட்டமிடப்படாத நகர்ப்புற பரவலின் காரணமாக புராதனப் பகுதிகளை சுற்றுச்சூழல் சீர்கேட்டிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனும், வருங்கால சந்ததியினரின் நலனுக்காவும் புராதன நகரங்களை பேணவும் மற்றும் மேம்படுத்தவும் திட்டங்கள் தயாரிக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இக்குறிக்கோளை நிறைவேற்ற புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்ட 39 நகரங்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை இத்துறை தயாரித்துள்ளது. வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் தவிர, நகர் ஊரமைப்பு வளர்ச்சி

[2011 ஆகஸ்ட் 25

நிதியிலிருந்து அதிகபட்சமாக ரூ.50.00 இலட்சம் ஒவ்வொரு புராதன நகரத்திற்கு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை 2011-12 ஆம் ஆண்டில் 5 புராதன நகரங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.5(ii) போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்

நகரங்களின் வளர்ச்சி பெருகியிருப்பதும் மற்றும் பொருளாதாரத் தரம் அதிகரித்திருப்பதும் பெரிய அளவிலான போக்குவரத்துத் தேவைகளையும் மற்றும் நகரச் சாலைகளின் நெரிசலையும் அதிகரித்திருப்பது சுற்றுச்சூழலை விரைவாக சீரழிக்கிறது. இச்சூழலை கருத்தில்கொண்டு, 5 மாநகராட்சிகளில் (சென்னையைத் தவிர) ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்வு மேற்கொண்டும், 58 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கு அவற்றின் குணாதிசயங்கள் மற்றும் போக்குவரத்து நடைமுறைகளைக் கருத்தில்கொண்டு போக்குவரத்து நெரிசலைக் களையும் வகையில் நீண்ட காலத் தேவைகளை வழங்க போக்குவரத்துக்கு மேலாண்மைத் திட்டங்களையும் இத்துறை தயாரித்துள்ளது. போக்குவரத்துத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கி திட்டங்கள் செயல்படுத்த ஒவ்வொரு மாநகராட்சிக்கும் (சென்னை நீங்கலாக) அதிகபட்சமாக ரூ.50.00 இலட்சமும், ஒவ்வொரு நகராட்சிக்கும் அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சமும், திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகவும், 25 விழுக்காடு உள்ளாட்சியின் பங்காகவும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 34 நகரங்களுக்கு திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 2011-12 ஆம் ஆண்டில் 5 நகரங்களில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.5(iii) பூங்காக்கள் மேம்பாடு

பொதுமக்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்கவும், அசதியான பரபரப்பான அலுவல்களுக்கிடையில் சிறிது நேரம் இளைப்பாறவும் பூங்காக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பொதுமக்களின் நலனுக்காகப் பூங்காக்களை மேம்படுத்தி, பராமரிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள பூங்காக்களை மேம்படுத்தத் திட்ட மதிப்பீட்டில் 90 விழுக்காடு அதாவது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம்



2011 ஆகஸ்ட் 25]

ஒவ்வொரு பூங்காவிற்கும் மானியமாக நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கப்படும், மீதமுள்ள 10 விழுக்காடு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி ஏற்கும். 2011-12 ஆம் ஆண்டு 4 பூங்காக்களை மேம்படுத்த இத்திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## 7. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னை பெருநகரப் பகுதியின் பரப்பு 1,189 ச.கி.மீ. மற்றும் அதன் மக்கள் தொகை தற்பொழுது சுமார் 88 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு மாநில நகர மக்கள் தொகையில் 25 விழுக்காட்டிற்கு மேலாகவும் மற்றும் மாநில மொத்த மக்கள் தொகையில் 12 விழுக்காட்டிற்கு மேலாகவும் உள்ளது . மாநகரப் பகுதியின் மக்கள் தொகை 2026-ல் சுமார் 1.26 கோடிகளாக இருக்கும். தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-ன்கீழ் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சட்ட ரீதியான ஓர் அமைப்பாக அமைக்கப்பட்டது. இது சென்னை பெருநகர் பகுதிக்கான திட்டங்கள் மற்றும் வளர்ச்சிகளில் முக்கிய பங்காற்றி வருகிறது. முழுமைத் திட்டம், விரிவான வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நில உபயோக மண்டலத்தின்மூலம் வளர்ச்சிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் பகுதியான வளர்ச்சி விதிகள் ஆகியவற்றை தயாரித்தல் ஆகியன சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கியப் பணிகள் ஆகும்.

### 7.1 சென்னை பெருநகர் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம்

அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சென்னை பெருநகர் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் 02-09-2008 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. அந்நாளிலிருந்து இரண்டாம் முழுமைத் திட்டம் நடைமுறையில் உள்ளது. சென்னை பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் பரந்த அடிப்படையும் நோக்கும் கொண்ட திட்டம் ஆகும். இது பெருநகர பகுதிக்குள் மக்கள் தொகை பெருக்கத்தை, பல கால கட்டங்களில், எதிர்காலத் தேவைகளை எதிர்கொள்ள பகிர்ந்தளிக்கும் வழிவகைகளை குறிப்பிடுகிறது. முந்தைய திட்டங்கள்போல் இல்லாமல் இரண்டாம்

[2011 ஆகஸ்ட் 25

முழுமைத் திட்டத்தினை செயல்படுத்தும்போது அதனை மறு ஆய்வு செய்யவும் கொள்கைகளிலும் செயல்முறை திறனிலும் தேவையான திருத்தங்களை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக பிரிவு வாரியாக ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் முழுமைத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளையும், செயல்முறைத் திறன் மற்றும் செயல் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் மற்றும் முகமைகள் மூலம் வரையறுக்கப்பட்ட காலகட்டத்திற்குள் இவற்றை செயல்படுத்துவதன்மூலம், பெருநகர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இக்குழுக்களின் முக்கியப் பணி ஆகும்.

இக்குழுக்கள் கூடி பல பிரச்சினைகளை விவாதித்து சென்னை பெருநகரில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கூறப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் செயல்முறைத் திறன்களை செயல்படுத்தவும் திட்டத்தின் தொலைநோக்குப் பார்வையை அடைய, முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளன. இக்குழுக்கள் காலமுறைதோறும் கூடி இரண்டாம் முழுமைத் திட்டத்தின் குறிக்கோள்களை அடைய தன் பங்கினை அளிக்கும்.

இரண்டாவது முழுமைத் திட்டத்தின்கீழ் அமையும் வளர்ச்சி விதிகளில் பாரம்பரியமிக்க கட்டடங்களை பாதுகாப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாரம்பரியமிக்க கட்டடங்களின் அழகை பாதுகாத்து, அவற்றைப் பாராமரிக்க இயலாத தனியார் கட்டட சொந்தக்காரர்களுக்கு நிதியுதவி அளிக்க வளர்ச்சி விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் கலந்தாய்வு, கட்டடம்/இடத்தின் சொந்தக்காரர்கள் மற்றும் பங்கீட்டாளர்களுடன் கலந்தாய்வு, அரசு ஒப்புதலுக்குப்பின் அறிவிக்கை வெளியிடுதல் போன்றவற்றை உள்ளடக்கிய பாரம்பரியமிக்க கட்டடங்கள் / இடங்களைப் பட்டியலிடுவதற்கான பணியை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் துவக்கி நடைபெற்று வருகிறது.



2011 ஆகஸ்ட் 25]

### 7.2 விரிவான வளர்ச்சித் திட்டங்கள்

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க வழிவகை செய்துள்ளது. குழுமம் இதுவரை 57 பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரித்துள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின் நிலப் பயன்பாடு மற்றும் யுக்திகளின் அடிப்படையில் மீதமுள்ள பகுதிகளுக்கும் தொடர் நடவடிக்கையாக விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முன்னோடியாக வில்லிவாக்கம், வேளச்சேரி, அம்பத்தூர், நசரத்பேட்டை, பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேளச்சேரி மற்றும் அம்பத்தூர் பகுதிகளின் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரித்து முடிக்கவும் அரசின் ஒப்புதல் பெறவும் இரண்டு ஆண்டுக் காலம் தேவைப்படும்.

### 7.3 உள் கட்டமைப்பு வளர்ச்சிக்காக வளர்ச்சி உரிமை மாற்றத்தின் மூலம் நிலத்தினை பெறுதல்

2-9-2008 அன்று நடைமுறைக்கு வந்த சென்னை பெருநகர் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தில், வளர்ச்சி உரிமை மாற்றக் கோட்பாடு (TDR) சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அமல்படுத்த சென்னை பெருநகர் பகுதிக்கான வளர்ச்சி ஒழுங்குமுறை விதி 9, அரசு ஆணை (நிலை) எண் 140, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-8-2009 மூலம் தேவையான திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையைத் தொடர்ந்து செப்டம்பர் 2009-ல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு முறைகளை இக்குழுமம் அங்கீகரித்தது.

இதன்கீழ் 151 விண்ணப்பங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்பட்டு, 137 விண்ணப்பதாரர்களிடமிருந்து 4.86 ஹெக்டேர் பரப்பும் சுமார் ரூ.85 கோடி மதிப்பும் கொண்ட நிலங்கள் பெறப்பட்டுள்ளன. சென்னை பெருநகர் மெட்ரோ இரயில் திட்டத்தைப் பொறுத்தவரை 4 சொத்து உரிமையாளர்கள்

[2011 ஆகஸ்ட் 25

தங்களுடைய நிலத்தின் ஒரு பகுதியை இந்தத் திட்டத்திற்கெனக் கொடுத்து அதற்கு பதிலாக வளர்ச்சி உரிமை சான்றிதழ்பெற விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

வளர்ச்சி உரிமை மாற்றத்தின்மூலம் ஒப்புவிக்க இருக்கும் நிலங்களால் அண்ணாசாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, ஜவஹர்லால் நேரு சாலை, இராஜீவ்காந்தி சாலை, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, வேளச்சேரி பிரதான சாலை மற்றும் மறைமலையடிகள் இரும்புலியூர் சாலை போன்ற சாலைகள் பலனடையும்.

### 7.4 குடிசை மாற்றுத் திட்டங்களுக்கான சிறப்பு வளர்ச்சி உரிமை மாற்றம்

சென்னை நகர மக்கள் தொகையில் குடிசைவாழ் மக்கள் தொகை சுமார் 8 இலட்சம் ஆகும். அதில் 40% ஆட்சேபணைக்குரிய பகுதிகளான சாலையோரங்கள், ஆற்றங்கரைகள், கால்வாய்க்கரைகள் போன்ற பகுதிகளில் வசிக்கின்றனர். இந்த குடிசைவாழ் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு செய்ய வேண்டியுள்ளது. ஆட்சேபணைக்குரிய பகுதிகளில் வாழும் இந்த குடிசைவாழ் மக்களின் மறுகுடியமர்வுக்கான நிலங்களை அடையாளம் காண்பதில் உள்ள இடையூறுகளைக் கருதி இந்தக் குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதில் தனியார் துறைகளையும் ஈடுபடுத்துவது அவசியம் என உணரப்பட்டது. எனவே, குடிசைவாழ் மக்களின் மறுகுடியமர்வில் தனியார் துறைகளின் பங்களிப்பை ஊக்குவிக்க வேண்டியுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் குடிசைவாழ் மக்களின் மறுகுடியமர்விற்காக வளர்ச்சி மேம்பாட்டு விதிகளில் சில மாற்றங்களைச் செய்து அரசின் ஒப்புதலை அரசாணை (நிலை) எண் 161, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 15-07-2010 அன்று பெற்று, சிறப்பு வளர்ச்சி உரிமை மாற்றத்தில் வரன்முறைகளை அமைத்துள்ளது. எந்தத் தனியார் அபிவிருத்தியாளரும், அரசு மற்றும் அரசு சார் நிறுவனத்தின் நிலத்தில் வாழ்ந்துவரும் குடிசைவாழ் குடும்பங்களுக்கு மறுகுடியமர்வு செய்ய வீடுகள் கட்டி கொடுத்தால், அவர்களுக்குச் சிறப்பு வளர்ச்சி உரிமை மாற்றத்தின் தளபரப்பு குறியீட்டு விகிதம்



2011 ஆகஸ்ட் 25]

வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஒருங்கிணைப்பாளராகவும் ஏற்பாடு செய்பவராகவும் செயல்படும்.

குடிசைவாழ் மக்களின் மறு அமர்வு செய்வதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தனியார் அபிவிருத்தியாளர்களுடன் இணைந்து திட்டங்களை உருவாக்கலாம். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடமிருந்து இது சம்பந்தமாக குறிப்பிட்ட திட்டங்களை பெற்ற பின் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மேல் நடவடிக்கை தொடரும்.

### 7.5 மறைமலைநகர்—திருப்போரூர் பகுதிக்கான வளர்ச்சித் திட்டம்

வண்டலூர் மற்றும் கேளம்பாக்கத்திற்கு அருகில் பிரதான தெற்கத்திய சாலை (GST Road) மற்றும் கிழக்குக் கடற்கரை சாலைகளுக்கு (ECR) இடைப்பட்ட பகுதி எந்த ஒரு முழுமைத் திட்டமோ அல்லது நீண்டகாலத் திட்டமோ இன்றி நெறிமுறை இல்லாமல் நகர்ப் பகுதியாக வளர்ந்து வருவதை தமிழக அரசு அரசாணை (நிலை) எண் 75, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 02-03-2007 கருத்தில் கொண்டது. எதிர் காலத்தில் உலகத்தரம் மிக்க ஒரு புதிய நகராக வளர வாய்ப்புள்ள இப்பகுதி முறையான நெறிமுறை இல்லாவிடில் சாதாரணமான புறநகராக சென்னைக்கருகே மாறி விடும் அபாயம் உள்ளது. எனவே, அரசு, மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு மேம்பாட்டுத் திட்டக் குழுவினை அமைத்துள்ளது.

சென்னை பெருநகர எல்லைக்கு வெளியே தென் பகுதியில் 134 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 562 ச.கி.மீட்டர் பகுதிக்கான திட்டத்தை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தெரிவு செய்துள்ளது. இதில் மறைமலை நகர் நகராட்சி, கூடுவாஞ்சேரி—நந்திவரம் பேரூராட்சி, திருப்போரூர் பேரூராட்சி மற்றும் காட்டாங்கொளத்தூர் மற்றும் திருப்போரூர் ஊராட்சி ஒன்றியங்களின் சில பகுதிகள் அடங்கும்.

இத்திட்டமானது வெகுவேகமாக வளர்ந்து வரும் இப்பகுதியில் நிலங்கள் அதிக அளவில் கையகப்படுத்தாமல், நிலப் பயன்பாடு மற்றும் முக்கிய சாலை அமைப்புகளுடன்கூடிய வளர்ச்சி விதிமுறைகளை மட்டும் கருத்தில்கொண்டு சீரான வளர்ச்சிக்கு

[2011 ஆகஸ்ட் 25

வழிவகை செய்யும். இந்தத் திட்டத் தயாரிப்பு நடப்பு நிதியாண்டின் இறுதியில் முடிக்கப்படும்.

**7.6 சென்னை பெருநகர அதிகார வரம்பின் மறுபரிசீலனை**

1,189 சதுர கிலோ மீட்டர் உள்ளடக்கிய சென்னை பெருநகரத்தின் பரப்பு நாட்டிலேயே மிகவும் சிறியதாகும். பிற பெருநகரங்களில் தில்லிக்கான தேசியத் தலைமை மண்டலம், மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, ஐதராபாத் பெருநகர மண்டலங்கள் பரந்த மண்டலப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டு முழுமையான மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, 1973-74-ல் அறிவிக்கப்பட்ட சென்னை பெருநகர திட்டப் பகுதியை திருப்பெரும்புதூர், கேளம்பாக்கம், திருவள்ளூர், மறைமலைநகர் போன்ற பெருநகரப் பகுதிகளுக்கு வெளியில் உள்ள பகுதிகளில் நடைபெறும் வேகமான வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு மறு ஆய்வு செய்வது அவசியமாகிறது.

நாட்டின் பிற பெருநகரங்களில் அறிவிக்கப்பட்ட மண்டல திட்டப் பகுதிகளையும், தமிழகத் தலைநகர் சென்னையைச் சுற்றி ஒரு விரிவான திட்டப் பிராந்தியமாக அறிவிக்க வேண்டிய தேவையையும் ஆய்வு செய்து ஒரு விரிவான அறிக்கை குழுமத்தால் அரசின் முடிவிற்காக தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் முடிவு எடுக்கப்படும்.

**7.7 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III**

7.7(i) சென்னை பெருநகர் எல்லைக்குள் மிக விரைவான வளர்ச்சியினால் ஏற்படும் போக்குவரத்துச் சவால்களை சமாளிக்கும் விதமாக, ஒரு விரிவான நகர்ப்புற போக்குவரத்துத் திட்டத்தை தமிழக அரசு, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகின்றது. இந்த 5 ஆண்டுக் காலத் திட்டம் கடந்த அக்டோபர் 2005 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின்படி, இத்திட்டமானது மார்ச், 2012-ல் முடிவு பெறும்.

7.7(ii) சென்னைக்கான நகர்ப்புற போக்குவரத்து துணைத் திட்டத்தில் உள்ளடங்கிய திட்டங்கள் பின்வருவன: (i) நெடுஞ்சாலைத் துறையினரால் செயல்படுத்தப்படும் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் (ii) சென்னை போக்குவரத்துக் காவல்



2011 ஆகஸ்ட் 25]

துறையினரால் செயல்படுத்தப்படும் போக்குவரத்து மேலாண்மை போக்குவரத்து அமலாக்கம் மற்றும் (iii) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஆலோசகர்மூலம் சென்னைக்கான விரிவான போக்குவரத்து ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டமானது 150 மில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.650 கோடி) முதலில் மதிப்பீடு செய்யப்பட்டது.

7.7(iii) ஜூலை 2008-ல் நடைபெற்ற தமிழக அரசு மற்றும் உலக வங்கியின் விரிவான இடைக்கால மறு ஆய்வுக்குப்பின் திட்டத்தின் மொத்த அளவு ரூ.187.95 கோடியாக குறைக்கப்பட்டது. இதன் விளைவாக நெடுஞ்சாலைத் துறைமூலம் செயல்படுத்தப்படும் உபதிட்டங்களில் அடங்கும் 5 முக்கிய சாலைகளின் அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதலின் மொத்த நீளம் 36 கி.மீ.-ன் மதிப்பீட்டுத் தொகை ரூ.145 கோடி ஆகும். இந்த ஐந்து உபதிட்டங்களுக்கான பணி ஆணை அளிக்கப்பட்டு ஜூன் 2011 வரை ரூ.45.03 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த 5 சாலை உபதிட்டங்களிலும் பணிகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. போக்குவரத்து மேலாண்மை அமலாக்கப் பகுதியின்கீழ் போக்குவரத்து கட்டுப்பாடு நிர்மாணத்திற்கும், அமலாக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், “போக்குவரத்துக் கல்வி கட்டடம்” கட்டுவதற்காகவும் ரூ.15.6 கோடி செலவினமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. சென்னைப் போக்குவரத்துக் காவல் துறை இதுவரை ரூ.10.24 கோடி மதிப்பிற்கு சாதனங்களை கொள்முதல் செய்துள்ளது. மேலும், மீதமுள்ள சாதனங்களை கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இத்துணைத் திட்டத்தில் கிடைக்கப்பெற்ற ரூ.10 கோடி சேமிப்பிலிருந்து கூடுதலாக சாதனங்களைக் கொள்முதல் செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சாலை துணைத் திட்டத்தில் கிடைக்கப்பெற்ற சேமிப்பிலிருந்து நெடுஞ்சாலைத் துறையினரால் ஏழு இடங்களில் பாதசாரிகளுக்கான நடை மேம்பாலம் ரூ.28 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

[2011 ஆகஸ்ட் 25

### 7.8 பெருந்திரள் துரித இரயில் திட்டம்-II விரிவாக்கம்

பெருந்திரள் துரித இரயில் திட்டம் பகுதி-II, இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து தென்னக இரயில்வேயின் பெருநகர போக்குவரத்து (இரயில்) திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான ஒத்துழைப்பு நிறுவனமாக செயல்படுகிறது. இத்திட்டம் 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 19-11-2007 அன்று முழுத் திட்டமும் பயன்பாட்டிற்காக துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ.877.59 கோடியாகும். திட்டம் ஆரம்பித்தது முதல் இதுவரையிலான செலவு ரூ.850.98 கோடியாகும். இத்திட்டத்திற்கான செலவை இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் 33:67 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கிறது. இத்திட்டற்காக தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.564.675 கோடி அளித்துள்ளது.

இரயில் இணைப்பினை ஒரு முழு வளையமாகக் கொண்டு வரும் முகமாக பெருந்திரள் துரித இரயில் திட்டம்-II வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை வரை 5 கி.மீ. தூரத்திற்கு ரூ.495.74 கோடி திட்ட மதிப்பீட்டில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏப்ரல் 2008-ல் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. இத்திட்டம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ.114.71 கோடியாகும். தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.106.67 கோடி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் பணிகள் டிசம்பர் 2012-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது,

### 7.9 கனரக வாகனங்கள் நிறுத்துமிடம் (கோயம்பேடு)

ரூ.5.14 கோடி செலவில் 193 வாகனங்கள் நிறுத்தும் வகையில் பல்வேறு வகையான வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களுக்கும் இடமளிக்கக்கூடிய வகையில் கனரக வாகனங்கள் நிறுத்தும் இடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில் மூன்று கழிவறை வசதிகளுடன்கூடிய கட்டடம், உணவகங்கள், பணியாளர் ஓய்வு அறை, வாகனப் பதிவு அலுவலகம் மற்றும் சேவைக் கடைகள், உள்வாயில் மற்றும் வெளிவாயிலில் பாதுகாவலர் கூண்டுகள் முதலானவை ரூ.2 கோடி செலவீட்டில் இந்த நடப்பு நிதியாண்டு முடிவிற்குள் கட்டி முடிக்கப்படும்.



2011 ஆகஸ்ட் 25]

### 7.10 வெளிவட்டச் சாலை

சென்னை பெருநகரத்தின் (CMA) நகர்ப்புறப் பகுதியை ஒட்டி ஒரு பெரிய முக்கிய சாலை அதாவது வெளிவட்டச் சாலை (ORR) அமைக்கத் திட்டமிடப்பட்டது. நகரத்தில் உள்ள நெரிசலைக் குறைக்கவும் மற்றும் நகர வளர்ச்சியை பரவலாக்குவதும் இதன் நோக்கமாகும்.

இத்திட்டம் முக்கிய சாலை அமைப்புகளுக்கு உதவுவதுடன், சென்னை பெருநகரத்தின் வெளிப்புறப் பகுதிகளில் நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் நன்கு இணைக்கப்பட்ட நகரக் குடியிருப்புகளைப் பரவலாக வளர்ச்சி அடையச் செய்ய உதவும். 62.3 கி.மீட்டர் தூரம் கொண்ட வெளிவட்டச் சாலையானது ஜி.எஸ்.டி. சாலை (NH45)யை வண்டலூரிலும் ஜி.டபிள்யூ.டி. சாலை (NH4)யை நசரத் பேட்டையிலும், சென்னை—திருவள்ளூர் நெடுஞ்சாலை (NH205)யை நெமிலிச்சேரியிலும் மற்றும் மீஞ்சூரில் திருவொற்றியூர்—பொன்னேரி-பஞ்செட்(TPP) சாலையையும் இணைக்கிறது. இச்சாலையானது 6 வழிச்சாலையாக சேவை சாலை மற்றும் நடைபாதையை இருபுறமும் உள்ளடக்கியதுடன் இதன் மத்தியப் பகுதியில் எதிர்கால இரயில் போக்குவரத்து அபிவிருத்திக்காக 22 மீட்டர் அகலமுள்ள இடத்தையும் உள்ளடக்கியுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை 45 (NH45) முதல் தேசிய நெடுஞ்சாலை 205 (NH205) வரையிலான 29.2 கி.மீ நீளத்திற்கு 29 கிராமங்களில் வருகின்ற முதல் கட்டத்திற்கான நிலம் கையப்படுத்தும் பணி (1.07 ஹெக்டேர் நீங்கலாக) முடிவு பெற்றுள்ளது. தேசிய நெடுஞ்சாலை 205 முதல் TPP சாலை வரையிலான 32.8 கி.மீட்டர் நீளத்திற்கு 27 கிராமங்களில் வெளிவட்டச் சாலையின் இரண்டாம் கட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது; 253.08.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ளவை 2011 ஆம் ஆண்டு இறுதிக்குள் கையகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2011 ஆகஸ்ட் 25

வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டத்தின் முதற்கட்ட தேசிய நெடுஞ்சாலை 45 (வண்டலூர்) முதல் தேசிய நெடுஞ்சாலை 205 (நெமிலிச்சேரி) வரையிலான 30 கி.மீ. தூரத்திற்கு ஆறுவழிச் சாலையினை ரூ.1081.40 கோடி செலவில் கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) முறையில் அமைப்பதற்காக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகத்தை மேலாண்மைக் கூட்டாளியாக (Managing Associate) அரசு நியமித்துள்ளது. தற்போது நடைபெற்று வருகின்ற இதன் பணிகள் டிசம்பர் 2012-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



2011 ஆகஸ்ட் 25]

## இணைப்பு II

*(280 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண்—49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011—2012

### முன்னுரை

மனிதவள மேம்பாட்டின் முக்கிய அங்கமாக திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும்.

அனைத்துத் தரப்பு இளைஞர்களிடையே நல்ல குடிமகனாக விளங்குவதற்கான தகுதிகள், சமுதாயப் பணிக்காக தங்களை அர்ப்பணித்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதே இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முதன்மையான குறிக்கோளாகும். தனிநபர் பண்புகளை வளர்த்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் குறிக்கோளுக்காக பொறுப்பேற்கும் எண்ணத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக இளைஞர்களிடையே தொண்டு செய்யும் மனப்பான்மையை நிலைநிறுத்த மற்றும் வலுவூட்டுவதை இத்துறை வலியுறுத்துகிறது.

விளையாட்டு மற்றும் போட்டிகள் தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப் பணித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் இளைஞர்களிடையே அடிப்படை பண்புகளை வளர்த்து, அவர்களை பொறுப்புமிக்க குடிமகன்களாக மலரச் செய்கின்றன. சிறந்த விளையாட்டுத் திறன் மற்றும் சமூகச் செயல்பாடுகள், சாதனைத் திறனையும் தேசத்தின் பெருமையையும் நாட்டுப் பற்றையும் உயர்த்துகின்றன. விளையாட்டு மற்றும் இளைஞர் அமைப்புகள் சமூக இசைவினையும், ஒழுக்கத்தையும் மேம்படுத்துகின்றன.

நமது மாநிலம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் பெற்றிருக்கும் உறுதியான உள்ளாற்றல் மற்றும் போட்டி மனப்பான்மைகளைக் கண்டறிந்து, தீவிரமாக வளர்க்க

முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள இளைஞர்களின் திறமைகளைக் கண்டறிய முயற்சித்து, அதன்மூலம் அவர்களின் திறமையை மேம்படுத்த சந்தர்ப்பம் அளிப்பதற்கும், போட்டியில் சிறந்து விளங்கும் நாட்டத்தினை மேம்படுத்துவதற்கும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

நாட்டு நலப் பணித் திட்டத்தில் இந்திய நாட்டிலேயே அதிகமான தொண்டர்களைக் கொண்டிருப்பது தமிழ்நாடே (3,70,018 நபர்கள்). இம்மாநிலத்தில் 98,790 மாணவர் மற்றும் மாணவியர் தேசிய மாணவர் படையில் உள்ளனர்.

புதுதில்லியில் 3-10-2010 முதல் 14-10-2010 வரை நடைபெற்ற 19-வது காமன்வெல்த் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் 1 தங்கப் பதக்கம் 2 வெள்ளிப் பதக்கம் மற்றும் 6 வெண்கலப் பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

சைனா, க்வாங்க்ஜோவில் 12-11-2010 முதல் 27-11-2010 வரை நடைபெற்ற 16-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு விளையாட்டு வீரர்கள் 1 தங்கப் பதக்கம் மற்றும் 9 வெண்கலப் பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

ஜார்க்கண்டில் 12-2-2011 முதல் 26-2-2011 வரை நடைபெற்ற 34-வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு விளையாட்டு வீரர்கள் 15 தங்கப் பதக்கங்கள், 12 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 29 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வளர்ச்சிக்கு "மிகப்பெரிய உத்வேகம்" கொடுத்துள்ளார்கள்.

**2011–12 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு**

2011-12 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 49-ன்கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.6,977.60 இலட்சம் ஆகும். இதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ரூ.4,178.29 இலட்சமும், தேசிய மாணவர் படைக்கு ரூ.2,735.74 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**படலம்–1**

**1.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு அரசாணை எண் 641, கல்வி (ஒய்1) துறை, நாள் 18-7-1992-ல் அதற்கு முன்பு இயங்கி வந்த இளைஞர் மற்றும் விளையாட்டு பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டு குழும அமைப்பிற்கு இணையானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார். தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

**1.2 குறிக்கோள்களும், இலக்குகளும்**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:**

1 தமிழ்நாட்டில் விளையாட்டுகளின் தரம் உயர்த்துவதற்கான திட்டங்களை உருவாக்கி அதனை முறையாக செயல்படுத்தி தமிழ்நாட்டில் விளையாட்டுகளை மேம்பாடு செய்தல்.

2 தற்சமயம் நடைமுறையிலுள்ள விளையாட்டுகளுக்கான திட்டங்களை மேம்படுத்தும் பொருட்டும் விளையாட்டின் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடனும், இந்திய அரசு மற்றும் பிற தமிழக அரசு நிறுவனங்களின் திட்டங்களின்மூலம் செயல்படுத்துதல்.

[2011 ஆகஸ்ட் 25

3. விளையாட்டு முன்னேற்றம் மற்றும் விளையாட்டு சார்ந்த மருத்துவம், உயிர் வேதியியல், உளவியல் மற்றும் இணையான விஞ்ஞான வளர்ச்சிக்கான ஆராய்ச்சிகளை ஊக்குவித்து, ஆதரவு தந்து உற்சாகமளித்து செயல்படுத்துதல்.

4. தமிழ்நாட்டில் விளையாட்டுக் கட்டுமானத்திற்கான இடத்தினைக் கையகப்படுத்தி, பராமரித்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் மற்றும் விளையாட்டு வசதிகள் மற்றும் அது சார்பான கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு அரங்கங்கள் சார்பான நிலங்களை உபயோகித்தல்.

5. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை பெறச் செய்தல்.

6. தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன், அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும் வகையில் விருதுகளும், மேலும் அவர்களைச் சாதனை படைக்கும் வகையில் உருவாக்கிட பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

7. பெருமளவிலான மக்களிடம் ஆரோக்கியமான உணர்வை வளர்க்கவும், முறையான பயிற்சி மேற்கொண்டு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செய்து அதிகப்படியான விளையாட்டுகளில் கலந்து கொண்டு தமிழகத்தை வலிமைமிக்க மாநிலமாக்குதல்.

**1.3.** தமிழ்நாடு, கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் மற்றும் குழுப் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.



2011 ஆகஸ்ட் 25]

### 1.4 விளையாட்டில் தமிழ்நாடு உன்னத நிலையை அடைவதற்கான புதிய உத்திகள்

உலகத்தில் உள்ள வளரும் மற்றும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் விளையாட்டுத் துறையில் தொலைநோக்கு உத்தியினை மிகச் சரியாகக் கடைபிடிப்பதன்மூலம் வெற்றியினை வெளிக்கொணர்கிறார்கள். பிரமிடு முறையிலான அடித்தளத்தைக் கொண்டு கீழ்நிலையிலிருந்து உயர்ந்த நிலையை அடையும் வண்ணம் உத்தியைப் பலரும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் பல நாடுகள் தமிழகத்தைவிட மக்கள் தொகையில் குறைவாக இருப்பினும், வெற்றிகளைப் பெற்று அவர்களின் நாட்டிற்குப் பெருமை தேடி தருவதற்கு இந்தத் தொலைநோக்கு உத்தியினைக் கடைபிடிப்பதே காரணமாகும். தமிழ்நாடு நீண்ட காலத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருவதன் மூலம் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் 5 பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான தர வரிசையினை விளையாட்டுத் துறையில் செயல்படுத்திட நீண்ட காலத் திட்டத்தினை இக்கொள்கை குறிப்பில் விளக்கப்படுகிறது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை-1 அடித்தளத் திறன் கொண்ட அளவிலும், நிலை-5 அதிகபட்ச திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது. இதனை விளக்கும் பொருட்டு, பிரமிடு முறையிலான வரைபடம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.



[2011 ஆகஸ்ட் 25

இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் விளையாட்டுக் கலை வடிவமைக்கப்பட்டு வருகிறது.

**1.5 நிலை—1: பெருவாரியான அடித்தள அளவு பங்கேற்பு:**

அதிக அளவிலான வீரர்கள் கலந்துகொள்ள செயல்படுத்தப்படும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு:— மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8—வது வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் உடல் திறனறியும் சோதனை நடத்தப்படுகிறது. இதிலிருந்து நல்ல திறனுள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அடுத்த நிலை பங்கேற்பிற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.

**1.6 நிலை 2: மாவட்ட அளவு:**

ஏற்கெனவே திருப்பூர் மற்றும் தேனியைத் தவிர, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 400 மீ ஓடுதளப் பாதை கொண்ட விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 19 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த வசதிகள் படிப்படியாக உலகத் தரத்திற்கு உயர்த்தப்படும். மாவட்ட அளவிலான போட்டிகள் அந்தந்த விளையாட்டு மாவட்டச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் 20 வகையான விளையாட்டுகளில் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்த தொலைநோக்குத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

**1.7 நிலை 3: மாநில அளவு:**

மாநில அளவில் உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே சென்னை, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் 400 மீ செயற்கை இழை ஓடுதளமும், சென்னை, திருச்சி மற்றும் நெல்லையில் செயற்கை இழை ஆக்கி மைதானமும், சென்னை, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மதுரை, கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளமும் உருவாக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் உலகத்தரம் வாய்ந்த ஒரு வசதியையாவது உருவாக்கித் தரும் தொலைநோக்குத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் முதல் நிலைப் போட்டிகளை நடத்தி, மாநில அளவில் இறுதிப் போட்டியை



2011 ஆகஸ்ட் 25]

நடத்தும் மாநில ஆக்கிப் போட்டிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக விளையாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இது தொடர் போட்டி (League Basis) முறையில் நடத்தப்படுகிறது. இதுதவிர, Knock-out அடிப்படையில் தடகளம், நீச்சல் உட்பட எட்டு விளையாட்டுகளுக்கு மாநிலப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதுபோன்று 20 விளையாட்டுகளுக்கான மாநில அளவிலான போட்டிகளை நடத்தும் திட்டம் வரும் ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இதுதவிர, அந்தந்த விளையாட்டு மாநிலச் சங்கங்கள் ஆண்டுதோறும் மாநிலப் போட்டிகள் நடத்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் கண்டறியப்படும் திறனாளர்களுக்கு மாநில அளவுப் பயிற்சிகளும், போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. உண்டு, உறைவிட விளையாட்டு விடுதிகள்மூலம் இந்தத் திறனாளர்களுக்குச் சத்தான உணவு, பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**1.8 நிலை 4 & நிலை 5: தேசிய அளவு/உலகளவு:**

அடித்தள அளவில் எடுக்கும் அனைத்து முயற்சிகளின் பலன்கள் தேசிய/உலகளாவிய வெற்றிகளில்தான் முழுமை பெறும். ஏற்கெனவே இத்தகைய வெற்றிகளில் தம்மைப் பதிவு செய்துள்ளனர். கிரிக்கெட், தடகளம், கால்பந்து, வாலிபால், கூடைப்பந்து, டென்னிஸ், ஸ்குவாஷ், கபடி, வாள்வீச்சு ஆகிய விளையாட்டுகளில் தமிழ்நாட்டவர் தேசிய அணிகளில் பங்கேற்றுள்ளனர். இந்த முனைப்புகளைக் கூர்ப்படுத்தும் வகையில், உலகத் தரமுள்ள விளையாட்டு அரங்கங்கள் சென்னை, கோவை, மதுரை மற்றும் நெல்லை ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே சிறப்பான சாதனை புரிந்தோரை வளர்த்தெடுக்கும் "செம்மாப்பு விளையாட்டு விடுதிகள்" நடத்தப்பட்டு வருகின்றன. பெண் வீராங்கனையரை வளர்த்தெடுக்கும் "செம்மாப்பு விளையாட்டு விடுதிகள்" ஆரம்பித்திட வரும் ஆண்டும் நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய, உலகளவு போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்தவும், வெளி இடங்களில் நடைபெறும் இப்போட்டிகளில் தமிழக வீரர்கள் கலந்து கொள்ளவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. தேசிய, உலகளாவிய சாதனை புரிவோருக்கு உயரிய ஊக்கத் தொகை தமிழக அரசு வழங்குகிறது.

[2011 ஆகஸ்ட் 25

படலம்–2

**விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்**

இதற்கான கீழ்வரும் மூன்று செயல் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன:

1. உலக அளவிலான திறமை மிக்கவர்களைக் கண்டறியும் திட்டம்
2. விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு
3. சிறப்பு விளையாட்டு விடுதிக்கானத் தேர்வு

**2.1 உலக அளவிலான திறமை மிக்கவர்களைக் கண்டறியும் திட்டம் (4 அடுக்கு)**

**2.1.1 பள்ளிகளில் உடற் திறன் தேர்வுகளை நடத்தி அவர்களுக்கு விளையாட்டு அறிக்கை அட்டை வழங்குதல்**

தமிழ்நாட்டில் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற் திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசு வழிகாட்டுதலின்படி, உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில், பள்ளி சிறுவர் / சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது. அந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர்/சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்து கொள்ளவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் முடிகிறது.

**2.1.2 கல்வி மாவட்ட அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்**

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும், சிறுவர்/ சிறுமியர்களின் உடற்திறனைக் கண்டறிய, வேகமாக ஓடுதல் (Speed), அதிகமாகத் தாக்குப்பிடிக்கும் திறனைக்



2011 ஆகஸ்ட் 25]

கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனைக் கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு, அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில் 10-க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10-க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. 100மீ, 200மீ, 400மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகளப் பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இத்தேர்வினை நடத்துகிறது. இந்தப் போட்டியில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 2500 முதல் 3000 சிறுவர்/ சிறுமியர் கலந்து கொண்டு வருகிறார்கள். மாநில அளவில் ஒரு இலட்சம் பேர் கண்டறியப்படுகின்றனர்.

**2.1.3 மண்டல அளவில் விளையாட்டு திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்**

கல்வி மாவட்டங்கள் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, விளையாட்டுத் திறனைக் கண்டறிய மண்டல அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அப்போட்டிகளில் பங்கேற்க, கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்ற சிறுவர்/சிறுமியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. உள்ளூர் அளவில் அதிக திறமை வாய்ந்த சிறார்களைக் கண்டறியும் பொருட்டு, இம்முயற்சி ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் போட்டியில் ஒவ்வொரு மண்டலத்திலும் 600 சிறுவர்/ சிறுமியர் கலந்து கொண்டு வருகிறார்கள். மாநில அளவில் 5400 பேர் கலந்து கொள்கின்றனர்.

**2.1.4 மாநில அளவில் விளையாட்டு திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்.**

மண்டல அளவில் நடத்தப்படும் போட்டிகளில் திறமை மிக்கவர்களைக் கண்டறிந்து, கோடைக் காலத்தில் 15 நாட்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, இதில் திறன் மிக்கவர்களைக் கண்டறிந்து, சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு, சிறப்புப் பயிற்சி தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. இந்த அகாடமிகளில் 1200 மாணவ/மாணவிகள் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள்.

[2011 ஆகஸ்ட் 25

## 2.2 விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கானத் தேர்வு (2 அடுக்கு)

விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளில் ஒவ்வோர் ஆண்டும் 7, 8, 9 மற்றும் 11-வது வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இதற்குரிய தேர்வானது 2 அடுக்கு முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

### 2.2.1 மாவட்ட அளவு தேர்வு

மாவட்ட அளவில் நடத்தப்படும் உடற்கூறு திறன் தேர்வு போட்டிகளில் ஏறத்தாழ 3,500 மாணவர்களும், 500 மாணவிகளும் ஆண்டுதோறும் கலந்துகொண்டு வருகின்றார்கள்.

### 2.2.2 மாநில அளவு தேர்வு

மாவட்ட அளவுப் போட்டிகளில் கண்டறியப்படும் 1,200-1,500 மாணவ/மாணவியர்கள் மாநில அளவிலான தேர்வில் கலந்துகொண்டு வருகிறார்கள். இவர்களில், திறமை மிக்கவர்களாக 300-350 வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுகிறார்கள்.

## 2.3 சிறப்பு விளையாட்டு விடுதிக்கானத் தேர்வு

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்தவர்களைக் கண்டறிந்து, சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்ப்பதற்கான தேர்வுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 200 முதல் 300 மாணவர்கள் கலந்துகொள்வர். இதில் 20-30 சிறந்த விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.



2011 ஆகஸ்ட் 25]

## படலம்—3

## விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துதல்

விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்த ஏழு நிலைகளில் செயல்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன:

(1) சிறப்பு அகாடமிகள்

(2) விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள்.

(3) கல்லூரிகளில் இணை விளையாட்டு மையங்கள்

(4) திறன் மேம்பாட்டு மையங்கள்

(5) சிறப்பு மேம்பாட்டு மையங்கள்

(6) பயிற்சி மையங்கள்

(7) சாம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டம்

## 3.1 சிறப்பு அகாடமிகள்

கீழ்க்காணும் விளையாட்டுகளில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி | சென்னை |
| 2. | கிரிக்கெட் அகாடமி | சென்னை |
| 3. | பெண்கள் கையுந்து பந்து அகாடமி | சென்னை |
| 4. | டைவிங் அகாடமி | சென்னை |
| 5. | ஆண்கள் வளைகோல் அகாடமி | சென்னை |
| 6. | பெண்கள் வளைகோல் அகாடமி | சென்னை |
| 7. | சந்திரா மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 8. | ஏ.கே.ஜி மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 9. | டால்பின் நீச்சல் அகாடமி | சென்னை |

[2011 ஆகஸ்ட் 25

| | | |
|---|---|---|
| 10 | தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி | சென்னை |
| 11. | ஆண்கள் கால்பந்து அகாடமி | நாகப்பட்டினம் |
| 12. | எறிதல் அகாடமி | விருதுநகர் |
| 13. | குறுந்தூர ஓட்ட அகாடமி | திருவண்ணாமலை |
| 14. | நீள் தூர ஓட்ட அகாடமி | உதகமண்டலம் |
| 15. | சிறுமியர் கால்பந்து அகாடமி | திண்டுக்கல் |
| 16. | எல்லீஸ் நகர் மேசைப்பந்து அகாடமி | மதுரை |

இந்த அகாடமியைச் சார்ந்த 1,200 விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான சத்துணவு, விளையாட்டுக் கருவிகள், காலணிகள் வழங்கப்பட்டு அகாடமிகள் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.

### 3.2.1 விளையாட்டுப் பள்ளி/விடுதிகள்

கீழ்வரும் 12 விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள் (Sports Schools / Hostels) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

| வ. எண் | விளையாட்டுப் பள்ளி/விடுதி பெயர் | பயிற்சி விளையாட்டுகள் |
|---|---|---|
| 1. | ஓய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து மற்றும் வளைகோல்பந்து |
| 2. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 3. | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து, வளைகோல் பந்து மற்றும் நீச்சல் |



2011 ஆகஸ்ட் 25]

| வ. எண் | விளையாட்டுப் பள்ளி/விடுதி பெயர் | பயிற்சி விளையாட்டுகள் |
|---|---|---|
| 4. | விளையாட்டு விடுதி, ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், மதுரை | தடகளம், கால்பந்து மற்றும் கூடைப்பந்து |
| 5. | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் நீச்சல் |
| 6. | விளையாட்டு விடுதி, வ.உ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு (மாணவியருக்கு) | தடகளம், கையுந்துபந்து மற்றும் கால்பந்து |
| 7. | பாரதி வித்யாபவன், திண்டல், ஈரோடு (மாணவியருக்கு) | கூடைப்பந்து |
| 8. | செல்வம் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் (மாணவியருக்கு) | தடகளம் மற்றும் வாள்சண்டை (ஆண் மற்றும் பெண்) |
| 9. | அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர், சென்னை | கிரிக்கெட் |
| 10. | டான் பாஸ்கோ இளைஞர் மையம், செங்குன்றம், சென்னை | கால்பந்து |
| 11. | விளையாட்டு விடுதி, திருவண்ணாமலை (மாணவியருக்கு) | தடகளம், கைப்பந்து மற்றும் வளைகோல்பந்து |
| 12 | விளையாட்டு விடுதி, கிருஷ்ணகிரி (மாணவருக்கு) | தடகளம், கைப்பந்து மற்றும் டேக்வோண்டோ |

### 3.2.2. சிறப்பு விளையாட்டு விடுதி

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்த, கல்லூரி மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகிறது. 60 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறும் இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(1) தடகளம், (2) கூடைப்பந்து, (3) குத்துச்சண்டை, (4) கையுந்துபந்து.

மேற்கண்ட விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பினை தொடர்வதோடு, அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதுமே இவ்விடுதியின் குறிக்கோளாகும். இந்த விடுதி, தேசிய-சர்வதேச அளவில் 20 விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது.

**3.3 கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்**

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றிவாகை சூடிப் பெருமை சேர்த்திடும் வகையில், வெவ்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பல்வேறு விளையாட்டுகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அந்தந்தக் கல்லூரி நிர்வாகமே, தனது சொந்தப் பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். ஒவ்வொரு பயிலுநருக்கும் ஆண்டுதோறும் அரசு ரூ.6,500/- வழங்குகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.10.71 இலட்சம் செலவிடப்படுகிறது.

**3.4 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்**

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து விளையாட்டு திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவியுள்ளது. இம்மையங்களில் ஒவ்வொரு விளையாட்டிலும் திறன்படைத்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக ரூ.15.00 இலட்சம் செலவழிக்கப்படுகிறது.





| வ. எண் | மையத்தின் பெயர் |
|---|---|
| 1. | புனித வளனார் கல்லூரி, திருச்சி |
| 2. | ஊரீஸ் கல்லூரி, வேலூர் |
| 3. | யாதவா கல்லூரி, மதுரை |
| 4 . | ஹாக்கி அகாடமி, அரசு உயர் நிலைப்பள்ளி, வாடிப்பட்டி |
| 5. | இஎஸ். அகாடமி, விழுப்புரம் |
| 6. | ஜிஎஸ் . இந்து மேல்நிலைப் பள்ளி, திருவில்லிப்புத்தூர் |
| 7. | நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை |
| 8. | பிஷப் அப்பாசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை |
| 9. | ராஜம்மாள் ரங்கசாமி நிறைநிலை மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு |
| 10. | லோட்டஸ் பெண்கள் கையுந்து பந்து சங்கம், தடாகம் |
| 11. | பயஸ் XI மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி |
| 12. | தடகளத்திறன் மேம்பாட்டு மையம், புனித பிரான்ஸிஸ் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் |
| 13. | மேசைப்பந்து திறன் மேம்பாட்டு மையம், அரசு மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் |
| 14. | பளுதூக்குதல் திறன் மேம்பாட்டு மையம், சி.எஸ்.ஐ மேல்நிலைப் பள்ளி, இரணியபுரம், நாகர்கோவில் |
| 15. | தமிழ்நாடு கூடைப்பந்து கழகம், சென்னை |
| 16. | டான் பாஸ்கோ இளைஞர் மையம், செங்குன்றம், சென்னை |
| 17. | டான் பாஸ்கோ இளைஞர் மையம், பேசின் பாலம், சென்னை |
| 18. | நெல்லை நண்பர்கள் சங்கம், சென்னை |
| 19. | தடகள அகாடமி, சென்னை கிருத்துவ கல்லூரி, தாம்பரம் |
| 20. | டென்னிஸ் திறன் மேம்பாட்டு மையம், சிங்காரம் பிள்ளை மேல்நிலைப் பள்ளி, சென்னை |
| 21. | டென்னிஸ் திறன் மேம்பாட்டு மையம், மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கம், சென்னை |
| 22. | விளையாட்டு திறன் மேம்பாட்டு மையம், குடிசைப் பகுதி குழந்தைகள் மற்றும் கல்விச் சங்கம், வியாசர்பாடி, சென்னை |

[2011 ஆகஸ்ட் 25

### 3.5.1 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் சிறப்பு மேம்பாட்டு மையம்

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ளனர்.

இக்காரணத்தினால் அங்கு ஒரு சிறப்பு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள்மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கும், (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) 12 மாணவியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.5.2 திருநெல்வேலி வளைகோல்பந்து சிறப்பு மேம்பாட்டு மையம்

திருநெல்வேலி மாவட்டம் அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த தேசிய விளையாட்டு நிறுவன (NIS) பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்விளையாட்டு வீரர்கள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை புல் மைதானத்தில் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.5.3 டென்னிஸ் சிறப்பு மேம்பாட்டு மையம்

சென்னை நேரு பூங்கா விளையாட்டு மைதானத்தில் 2 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் வகையில், டென்னிஸ் சிறப்பு பயிற்சி மையம் துவக்கப்பட்டு, மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளைச் சார்ந்த 10 சிறுவர்களும், 10 சிறுமிகளும் நாள்தோறும் இலவசமாக டென்னிஸ் பயிற்சி பெற்று வருகின்றனர்.



2011 ஆகஸ்ட் 25]

பள்ளி மாணவ, மாணவியருக்கு டென்னிஸ் பயிற்சி அளிப்பதற்காக காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை டென்னிஸ் மைதானங்களை அதிக அளவில் பயன்படுத்தவும், இவ்விளையாட்டினை பிரபலப்படுத்தவும், சிறப்பு மேம்பாட்டு மையத்தினை ஏற்படுத்த, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது.

### 3.5.4 கழைக் கூத்தாடிகள் மற்றும் மீனவர்களுக்கான சிறப்பு அகாடமி

தமிழ்நாட்டில் பாரம்பரியமிக்க கழைக் கூத்தாடிகள் மற்றும் மீனவர்களுக்காக உடற்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் திறனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் நீர் விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு எதிர்கால சேம்பியன்களாக அவர்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி, கழைக் கூத்தாடிகளுக்கான ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி மையம் ஈரோடு மாவட்டத்தில் கரட்டுபாளையம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டு, 10 ஆண்கள் மற்றும் 10 பெண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். நீர் விளையாட்டிற்காக நாகப்பட்டினம் மாவட்டத்தில் 10 ஆண்கள் மற்றும் 10 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்று வருகிறார்கள்.

## 3.6 பயிற்சி மையங்கள்

### 3.6.1 நீச்சல் பயிலகம்

“நீந்தக் கற்றுக்கொள் பயிற்சிகள்” வேளச்சேரியில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்திலும், அண்ணா நீச்சல் குளத்திலும், செனாய் நகர் நீச்சல் குளத்திலும் பல பிரிவுகளாக நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளங்களிலும் ‘நீந்தக் கற்றுக்கொள்’ பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பங்குபெறும் நபர் 12 நாட்களில் தினமும் 1 மணி நேரப் பயிற்சியில் நீச்சல் கற்றுக்கொள்கின்றனர். இந்த நீச்சல் பயிற்சி திறன்மிக்க மற்றும் அனுபவம் மிக்க பயிற்றுநர்களால் அளிக்கப்படுகிறது. தற்சமயம் இப்பயிற்சியானது ஆண்டு முழுவதும் செயல்பட்டு வருகிறது.

[2011 ஆகஸ்ட் 25

### 3.6.2 கிராமப் பயிலகம் (கிராம விளையாட்டு வளர்ச்சி மையங்கள்)

*கிராமங்களில் பிரபலமாக விளங்கும் குறிப்பிட்ட விளையாட்டினை மேம்படுத்தும் வண்ணமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு கிராம விளையாட்டு வளர்ச்சி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு விளையாட்டு மைதான வசதி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு, விருப்பமுள்ள அனைவரும் தினமும் பயிற்சி மேற்கொள்வதற்கு ஏதுவாக, கிராம விளையாட்டு வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இதற்காக ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படும் கிராம விளையாட்டு வளர்ச்சி மையங்கள் பின்வருமாறு:*

**கிராம விளையாட்டு வளர்ச்சி மையம்**

| வ. எண் | மாவட்டம் | கிராமம் | விளையாட்டு |
|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | சாலமேடு | மால்காம் |
| 2. | வேலூர் | ஆற்காடு | ஜிம்னாஸ்டிக்ஸ் |
| 3. | காஞ்சிபுரம் | மேல்வசலை | டேக்–வொண்–டோ |
| 4. | கடலூர் | சங்கொலி குப்பம் | கையுந்துபந்து |
| 5. | திருவண்ணாமலை | கோலக்குடி | கோ–கோ |
| 6. | திருவள்ளூர் | நொச்சிக்குப்பம் | சிலம்பம் |
| 7. | பெரம்பலூர் | S.ஆடுதுறை | கையுந்துபந்து |
| 8. | தஞ்சாவூர் | அவனியாபுரம் | கையுந்துபந்து |
| 9. | திருவாரூர் | எடமலையூர் | கையுந்துபந்து |
| 10. | நாகப்பட்டினம் | திட்டச்சேரி | கடற்கரை கையுந்துபந்து |
| 11. | திருச்சி | பெருங்குடி | கபாடி |



2011 ஆகஸ்ட் 25]

| வ. எண் | மாவட்டம் | கிராமம் | விளையாட்டு |
|---|---|---|---|
| 12. | மதுரை | உசிலம்பட்டி | கால்பந்து |
| 13. | தேனி | கொண்டம நாயக்கன்பட்டி | கூடைப்பந்து |
| 14. | புதுக்கோட்டை | நாதம்பண்ணை | தடகளம் |
| 15. | திண்டுக்கல் | ஜம்புலிங்கம் பட்டி | கால்பந்து |
| 16. | கரூர் | குளித்தலை | ஜூடோ |
| 17. | நாகர்கோவில் | அலதக்கரை | கபாடி |
| 18. | திருநெல்வேலி | கோசல்நெல் நகர் | வளைகோல் பந்து |
| 19. | விருதுநகர் | சத்திரரெட்டிப் பட்டி | குத்துச்சண்டை |
| 20. | சிவகங்கை | கஞ்சிரங்கால் | கூடைப்பந்து |
| 21. | இராமநாதபுரம் | சக்கரை கோட்டை | தடகளம் |
| 22. | ஈரோடு | அந்தியூர் | வாள்சண்டை |
| 23. | நீலகிரி (ஊட்டி) | உபதலை | வளைகோல் பந்து |
| 24. | சேலம் | மாதையன் கோட்டை | டேக்–வொண்டோ |
| 25. | தருமபுரி | சோலை கோட்டை | பூப்பந்து |
| 26. | கிருஷ்ணகிரி | அனியாலம் | கைப்பந்து |
| 27. | கோவை | சூலூர் | பளுத்தூக்குதல் |
| 28. | தூத்துக்குடி | பிள்ளையான் மலை | வளைகோல் பந்து |
| 29. | நாமக்கல் | பாப்பநாயக்கன்பட்டி | தடகளம் |

### 3.7 சாம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டம்:

*20 வயதிற்கு உட்பட்டு ஏற்கெனவே தேசிய அளவில் தங்கப் பதக்கம் வென்றவர்களை மேலும் உலக அரங்கிற்கு ஏற்றிச் செல்லும் வகையில், அவர்களின் செயல்திறனை மேம்படுத்த*

[2011 ஆகஸ்ட் 25

அவர்களுக்குச் சிறப்பு உதவி வழங்கப்படுகிறது. அவர்களுக்கு ஊட்டச்சத்து, உடை, விளையாட்டுக் கருவிகள் வாங்கவும், வெளிநாடு சென்று பயிற்சி பெறவும், வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், நிதி உதவி அளிக்கப்படுகிறது. உடல்வாகு, உளப்பக்குவம், சத்துணவு வரையறை ஆகியவற்றிற்கு ஆலோசனையும் வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 129 பேருக்கு ரூ.35.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## படலம்—4

## பயிற்சித் திட்டங்கள்

### 4.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்றுநர்கள்

தரமான பயிற்சிகளை முறையான வகுப்புகள் நடத்தி வழங்குவதற்கென தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்றுநர்களைப் பணியமர்த்தி உள்ளது. நிரந்தரப் பணியில் 52 பேரும், ஒப்பந்த அடிப்படையில் 79 பேரும் பணியாற்றுகின்றனர்.

இவர்கள் வார இறுதி நாள் பயிற்சி, கோடைக்காலப் பயிற்சி, சிறப்பு பயிற்சி முகாம் ஆகிய வகைகளில் பயிற்சிகள் அளித்து வருகின்றனர். தேவைக்கேற்ப பள்ளிகள், கல்லூரிகள், சங்கங்கள் வருகின்றனர்.

### 4.2 கோடைக்கால பயிற்சி முகாம்

ஒவ்வொரு வருடமும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவியருக்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் அந்தந்த மாவட்டங்களில் சிறந்து விளங்குகின்ற விளையாட்டுகளில் மாவட்டத் தலைநகரங்களில் கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 4.3 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் 64 கல்வி



2011 ஆகஸ்ட் 25]

மாவட்டங்களிலும் 5 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் தத்தம் திறமைக்கேற்ப பங்குகொள்ளச் செய்வதற்கென இந்த மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டின் அடிப்படை திறமைகள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. 19,000-20,000 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள்.

### 4.4 மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம் திட்டம்

கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் திறமையான 60 மாணவ/மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்கள், அனைத்து மாவட்டங்களிலும் 15 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 4,780 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைகிறார்கள்.

### 4.5 மாநில அளவிலான பயிற்சித் திட்டம்

இந்திய அரசின் பைக்கா (PYKKA) திட்டத்தின்கீழ் நடத்தப்படும் அகில இந்திய விளையாட்டுப் போட்டிகள், தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள், பள்ளிகளுக்கு இடையேயான தேசியப் போட்டிகள் போன்ற தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகளுக்கு மாநில அளவிலான பயிற்சி முகாம் 7 முதல் 15 நாட்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

### 4.6 பயிற்றுநருக்கான பயிற்சி

பயிற்றுநர்கள் தமது நுட்பத்தை காலத்திற்கேற்றவாறு புதுப்பித்துக் கொள்ளும் வண்ணம், ஆணைய பயிற்றுநர்களுக்கும், பள்ளி உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் ஆண்டுதோறும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இதுதவிர, ஒரு சிலர் வெளியிடங்களிலுள்ள பயிற்சி நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்த ஆண்டு பயிற்றுநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்களுக்குச் சிறப்பு பயிற்சித் திட்டம் இந்திய விளையாட்டுக் குழுமம், பெங்களூரில் உள்ள சிறந்த பயிற்சியாளர்கள் மற்றும் புதிய உபகரணங்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

[2011 ஆகஸ்ட் 25

### 4.6 சிறிய விளையாட்டு அரங்கங்களில் பயிற்சி அளிக்கும் திட்டம்

தற்பொழுது மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்களில் பல்வேறு விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 15 சிறிய விளையாட்டு அரங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட்டார அளவில் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு நிதியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த வசதிகளைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் வகையில் சிறிய விளையாட்டு அரங்கங்களில் உள்ள விளையாட்டு வசதிகளைப் பயன்படுத்தி பயிற்சி முகாமும், விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படும்.

## படலம்–5

## விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

### 5.1 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டில் கண்டறியப்பட்ட திறமை மற்றும் வளர்ந்து வரும் திறமைகளில் தொடர்ச்சியாக போட்டிகள் நடத்துவதன்மூலம், “போட்டிகளில் கலந்துகொள்ளும் மனப்பாங்கினை” வளர்க்க இயலும். சென்னையில் தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுப் போட்டிகள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருவதால், சிறந்த சாதனைகள், சிறப்பாகப் பங்கேற்கும் ஆர்வம் மற்றும் நல்ல முன்னேற்றத்தையும் அளிக்கிறது. அனைத்து வகை வயதினருக்கும் வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் அனைத்து மாவட்டங்களிலும் மாதத்திற்கு ஒரு முறை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டு வீரர்கள் தங்களது திறமை மற்றும் செயல்திறனைக் காண்பிப்பதற்கு வாய்ப்பாக அமைகிறது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் ஓங்கி விளங்கும் விளையாட்டுகளில் மாவட்ட அளவிலானப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் 32 மாவட்டங்களில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறுவர், சிறுமிகளுக்காக நடத்தப்படுகின்றன:



2011 ஆகஸ்ட் 25]

தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து, கால்பந்து, வளைகோல்பந்து, வாள்சண்டை, மேசைப்பந்து, டென்னிஸ், குத்துச்சண்டை, நீச்சல், டேக்வோண்டோ மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ்.

### 5.2 அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்குத் தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.3 அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டுகள்

ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள்சண்டை, குத்துச்சண்டை, நீச்சல், டேக்வோண்டோ, ஜுடோ, ரோடு சைக்கிளிங், கடற்கரை கையுந்து பந்து, செஸ், கேரம், சிலம்பாட்டம் மற்றும் டென்னிகாய்ட் ஆகிய 13 விளையாட்டுகள் பள்ளிகளுக்கிடையேயான குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இளைஞர்களுக்கிடையே இப்புதிய விளையாட்டுகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், விதிமுறைகளைக் கற்றுக்கொள்ளும் வகையில், மாநிலம் முழுவதும் இவ்விளையாட்டு நுணுக்கங்கள் தெரிந்த வல்லுநர்களால் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. பள்ளிக் கல்வி இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இணைந்து, இப்புதிய விளையாட்டுகளுக்கானப் போட்டிகளை நடத்தி வருகின்றன. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இப்புதிய விளையாட்டுகளில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல பதக்கங்களைத் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் வென்றுள்ளார்கள். இத்திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் 2,472 வீரர் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளனர்.

### 5.4 பள்ளிகளில் விளையாட்டினை மேம்படுத்துதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய விளையாட்டுக் குழுமம் இணைந்து பள்ளிகளில் விளையாட்டினை மேம்படுத்தும் நோக்குடன்,

பள்ளிகளுக்கிடையேயான போட்டிகளை தடகளம், கையுந்து பந்து, கூடைப் பந்து, வளைகோல்பந்து, கால்பந்து, இறகுப்பந்து, மேசைப்பந்து மற்றும் பளு தூக்குதல் ஆகிய விளையாட்டுகளில் 16 வயதிற்குட்பட்ட மாணவ / மாணவியருக்கு நடத்தி வருகிறது. இப்போட்டிகள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.4 இந்திய அரசின் "பைக்கா" (PYKKA) திட்டத்தின்கீழ் போட்டிகள் நடத்துதல்

இந்திய அரசின் புதிய திட்டத்தின்கீழ் ஒன்றியங்களில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ், 18 வயதிற்குட்பட்ட மாணவ / மாணவியர் மற்றும் மாணவரல்லாதோருக்கு விளையாட்டுப் போட்டிகள் ஒன்றிய அளவிலும், மாவட்ட மற்றும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு மாநில அளவில் 20 விளையாட்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள், நாட்டின் பல்வேறு மையங்களில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறுகின்றன. இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கத் தொகை பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### 5.6 மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள்

மாநில விளையாட்டுக் கழகங்கள், மாவட்டங்களுக்கு இடையேயான போட்டிகளையும் மாநில சேம்பியன்ஷிப் போட்டிகளையும், தேசிய போட்டிகளையும் நடத்தி வருகின்றன. தேசிய போட்டிகளை நடத்துவதற்காக ரூ.3 இலட்சம் மானியமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படுகிறது. மேலும், தமிழகத்தின் சார்பில் தேசிய அளவிலான போட்டிகளில் அணிகளைப் பங்கேற்கச் செய்யும் மாநிலக் கழகங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.





## 2010–2011 கொடை விவரம்

| வ. எண் | மாநில விளையாட்டு சங்கம் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மாநில தடகள சங்கம் | 497000 |
| 2. | தமிழ்நாடு மாநில மாஸ்டர்ஸ் தடகள சங்கம் | 783620 |
| 3. | தமிழ்நாடு மாநில நீச்சல் விளையாட்டு சங்கம் | 264722 |
| 4. | தமிழ்நாடு மாநில குத்துச்சண்டை சங்கம் | 474540 |
| 5. | தமிழ்நாடு மாநில கேரம் சங்கம் | 220896 |
| 6. | தமிழ்நாடு மாநில சைக்கிளிங் சங்கம் | 30000 |
| 7. | தமிழ்நாடு மாநில வாள்சண்டை சங்கம் | 695625 |
| 8. | தமிழ்நாடு மாநில கால்பந்து சங்கம் | 100000 |
| 9. | தமிழ்நாடு ஜிம்னாஸ்டிக்ஸ் கழகம் | 298390 |
| 10. | தமிழ்நாடு கைப்பந்து கழகம் | 234668 |
| 11. | தமிழ்நாடு ஜூடோ கழகம் | 121026 |
| 12. | தமிழ்நாடு மாநில வலுதூக்கும் சங்கம் | 304862 |
| 13. | தமிழ்நாடு மாநில ரோயிங் சங்கம் | 30090 |
| 14. | தமிழ்நாடு மாநில சிலம்பம் சங்கம் | 250000 |
| 15. | தமிழ்நாடு மாநில மேசை பந்து சங்கம் | 346963 |
| 16. | தமிழ்நாடு மாநில டேக்–வொன்–டோ சங்கம் | 155047 |
| 17. | தமிழ்நாடு மாநில டென்னிகாய்டு சங்கம் | 45520 |
| 18. | தமிழ்நாடு மாநில எறி பந்து சங்கம் | 399588 |
| 19. | தமிழ்நாடு மாநில பளு தூக்கும் சங்கம் | 31040 |
| 20. | தமிழ்நாடு மாநில யுஷூ சங்கம் | 117847 |
| 21. | தமிழ்நாடு மாநில யோகா சங்கம் | 84231 |
| 22. | தமிழ்நாடு பிரிட்ஜ் சங்கம் | 150000 |
| 23. | தமிழ்நாடு நெட்பால் சங்கம் | 77828 |
| 24. | தமிழ்நாடு சைக்கிள் போலோ சங்கம் | 354180 |
| 25. | தமிழ்நாடு கோ–கோ சங்கம் | 32000 |

[2011 ஆகஸ்ட் 25

| வ. எண் | மாநில விளையாட்டு சங்கம் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 26. | தமிழ்நாடு பாட்மிண்டன் சங்கம் | 300000 |
| 27. | தமிழ்நாடு மகளிர் வளைகோல்பந்து சங்கம் | 39504 |
| 28. | தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் கவுன்சில் ஆப் டெப் சங்கம் | 23955 |
| 29. | தமிழ்நாடு கராத்தே–டோ சங்கம் | 19136 |
| | மொத்தம் | 6482278 |

**5.7 விளையாட்டுப் பள்ளி/விடுதிகள் இதர போட்டிகளில் பங்கேற்றல்**

*தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ், பன்னிரண்டு விளையாட்டுப் பள்ளிகள் / விடுதிகள் இயங்கி வருகின்றன. அவ்விளையாட்டுப் பள்ளி/விடுதி மாணவ / மாணவியரின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் வகையில், போட்டிகளில் கலந்துகொள்வதை ஊக்குவிக்கவும், மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளிலும் மற்றும் இதர போட்டிகளிலும் விளையாட்டுப் பள்ளி/விடுதிகள் பங்கு பெறுகின்றன.*

**5.8 தமிழகத்தில் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துதல்**

*தமிழகத்தில் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு மொத்த மானியம் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிகாரம் உடைய குழுவின் பரிந்துரையின் பேரில் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு சர்வதேச மற்றும் ஆசிய அளவிலான போட்டிகள் நடத்துவதற்கு இந்நிதி உதவி வழங்கப்படுகிறது.*

**5.9 "மாநில விளையாட்டுப் போட்டிகள்" ஊராட்சி ஒன்றிய அளவு, மாவட்ட அளவு மற்றும் மாநில அளவில் நடத்துதல்**

*கிராமப்புற இளைஞர்களுக்கு விளையாட்டுகளில் பங்கேற்கும் வாய்ப்பினை அளிப்பது மற்றும் அவர்களிடையே போட்டி மனப்பான்மையை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இந்நோக்கில் "மாநில விளையாட்டுப் போட்டிகள்"*



2011 ஆகஸ்ட் 25]

*2006-2007 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றிய அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக தடகளம், கூடைப் பந்து, கால்பந்து, வளைகோல் பந்து, கபாடி, நீச்சல் மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டிகள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்:—*

| | | |
|---|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய அளவில் | அக்டோபர் |
| 2. | மாவட்ட அளவில் | நவம்பர் |
| 3. | மாநில அளவில் | ஜனவரி |

**5.10 பொங்கல் கபாடி போட்டிகள்**

*அனைத்து மாவட்டங்களிலும் ஆண்களுக்கும், பெண்களுக்குமான கபாடி போட்டிகள் பொங்கல் கபாடி போட்டிகள் என்ற அடிப்படையில் பொங்கல் காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு சிறந்த அணி தேர்வு செய்யப்படுகிறது. இந்தச் சிறந்த அணிகள் மாநில அளவிலான கபாடி போட்டிகளில் கலந்து கொள்கின்றன. இப்போட்டிகளில் வென்றவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.4.32 இலட்சம் ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்குக் கீழ்க்கண்டவாறு ஜனவரி 2011-ல் அரசு வழங்கியது:—*

*முதலிடம்-ரூ.1.20 இலட்சம், இரண்டாமிடம் ரூ.60,000/- மற்றும் மூன்றாமிடம்-ரூ.36,000/-*

**5.11 அகில இந்திய குடிமைப் பணிகள் விளையாட்டுப் போட்டிகள்**

*அரசுத் துறைகளில் பணிபுரியும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தேர்வுப் போட்டிகளை நடத்தி தமிழக அணியினைத் தேர்வு செய்கிறது. அகில இந்திய அளவில் சுழற்சி முறையில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகின்ற அகில இந்திய குடிமைப் பணிகள் அரசுப் பணியாளருக்கான சில விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கேற்கிறது. இந்த ஆண்டு அகில*

[2011 ஆகஸ்ட் 25

இந்திய அரசுப் பணியாளர்களுக்கான கேரம் விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டது.

**5.12 இந்திய அரசின் பைக்கா திட்டத்தின்கீழ் நடத்தப்படும் தேசிய போட்டிகளில் பங்கேற்பு**

இந்திய விளையாட்டுக் குழுமம் பைக்கா திட்டத்தின்கீழ் போட்டிகளை நடத்துகிறது. 2008-2009 ஆம் ஆண்டிலிருந்து கிராமங்களில் உள்ள 18 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு 20 விளையாட்டுகளில் பைக்கா திட்டத்தின்கீழ் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2010-2011 ஆம் ஆண்டு தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாடு அணிகள் பங்கேற்கின்றன. இந்த பைக்கா திட்டத்தின்கீழ் இரண்டாவது தேசிய அளவிலான பகுதி-1 போட்டிகள் 2009 நவம்பர் 21 முதல் 24 வரை சென்னையில் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் 21 மாநிலங்களிலிருந்து தடகளம், கூடைப்பந்து, பளு தூக்குதல், டேக்வோண்டோ மற்றும் மல்யுத்தம் ஆகிய விளையாட்டுகளில் 1300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் அணி மேலாளர்களும் பங்குகொண்டனர். இப்போட்டிகளில் தமிழ்நாடு கூடைப்பந்து விளையாட்டு மாணவ, மாணவியர் அணிகள் தங்கப் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்தனர்.

**5.13 தேசிய மகளிர் விளையாட்டு விழா பங்கேற்பு**

இந்திய விளையாட்டுக் குழுமம் மகளிர் பிரிவினரை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும் வகையில், வயது வரம்பின்றி 13 விளையாட்டுப் பிரிவுகளில் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. தமிழக அணி இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது.

**5.14 சென்னை ஓப்பன்**

தற்போது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் ஐஎம்ஜி (IMG) நிறுவனமும் இணைந்து இந்தப் போட்டியை 2010-ல் “சென்னை ஓபன்” (CHENNAI OPEN) என்ற பெயருடன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியாக நடத்தி வருகின்றது. இந்த ஆண்டு (2011) ஜனவரி 3 முதல் 9 வரை நடத்தியது. சென்னை ஓப்பன் போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டில் புகழ்பெற்ற சேம்பியன் டென்னிஸ் விளையாட்டு வீரர்களும்



2011 ஆகஸ்ட் 25]

மற்றும் அப்போட்டிகளில் வளர்ந்து வருகின்ற விளையாட்டு வீரர்களும் சர்வதேச அளவில் தங்களுக்கென ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ள இயலும். நம் நாட்டின் தலைசிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். இப்போட்டிகள் சர்வதேச அளவிலான விளையாட்டு தொலைக் காட்சி (Channels) நிறுவனங்கள்மூலம் உலகளவில் ஒளிபரப்பப்பட்டன. அதனால், டென்னிஸ் போட்டிகளில் “சென்னை ஓப்பன்” என்ற பெயர் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இப்போட்டிகளை நடத்த தமிழ்நாடு அரசு ரூ.1 கோடி மானியம் வழங்கி வருகிறது.

**5.15 பள்ளி மாணவர்களுக்கான கேரம் போட்டிகள்**

மாவட்ட அளவிலான மற்றும் மாநில அளவிலான மாணவ, மாணவியர்களுக்கான கேரம் போட்டிகள் இரண்டு பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. துவக்கப் பள்ளி சிறார்களுக்கு, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி சிறார்களுக்கு எனத் தனித்தனியாக நடத்தப்படுகின்றன. மாவட்ட அளவு போட்டி வெற்றியாளர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ.4.88 இலட்சம், மாநில அளவிலான போட்டி வெற்றியாளர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ.1.58 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

**5.16 அரசுப் பணியாளர்களுக்கு மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்**

தற்பொழுது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பள்ளி மாணவர்கள் / கல்லூரி மாணவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து நடத்தி வருகிறது. மேலும், அகில இந்திய குடிமைப் பணிகள் அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணியின் சார்பில் அரசுப் பணியாளர்கள் பல்வேறு விளையாட்டுகளில் பங்கேற்று வருகிறார்கள். தமிழ்நாட்டு அணிகளை வலுவடையச் செய்யவும், உடற்தகுதி ஏற்படுத்தவும் அரசுப் பணியாளர்களிடையே விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மனப்பான்மையை வளர்க்கவும், மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு விளையாட்டுகளில் பல்வேறு வயதினரிடையே நடத்தப்படும். இப்போட்டிகள் அரசுத் துறையில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு தனித்தனியாக நடத்தப்படுகின்றன. இதற்காக முதல் முறையாக

[2011 ஆகஸ்ட் 25

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.10,000/-வீதம் செலவினம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

**5.17 மாற்றுத் திறனாளிகளுக்கு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்**

மாற்றுத் திறனாளிகளை பிற விளையாட்டு வீரர்களைப் போன்று போட்டிகளில் பங்கேற்கவும், சாதனை புரிவதற்கும் மற்றும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அவர்களிடையே பல்வேறு பிரிவினருக்கு முதல் முறையாக நடத்தப்பட்டன. இவ்வகையான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.10,000/- வீதம் செலவினம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

## படலம்—6

## உதவித் தொகைகள், விருதுகள், ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

**6.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உதவித்தொகைத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், 33 விளையாட்டுகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் தேசிய அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக (ஆண்டுக்கு ஒருமுறை மட்டும்) உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5,000/-மும், கல்லூரி / பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு உதவித் தொகையாக ரூ.19,88,000/- பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் 358 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.



2011 ஆகஸ்ட் 25]

**6.2 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்**

நலிந்த நிலையிலுள்ள முன்னாள் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2,000/-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.1,000/— வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. அந்த ஓய்வூதியர் இறந்த பிறகும், அவரது மனைவிக்கும் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்நாள் வரை 58 பேர் இத்திட்டத்தில் பலனடைந்து வருகின்றனர்.

**6.3 விளையாட்டு வீரர்கள் நல நிதி**

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**6.4 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்**

தற்போது காவல் துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 5 சதவிகித இட ஒதுக்கீடு முறை, நடைமுறையில் இருக்கிறது. பொறியியல் படிப்பிற்கான சேர்க்கையில் விளையாட்டுச் சாதனையாளர்களுக்கு 100 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**6.5 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது**

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு தலா ரூ.1 இலட்சம் பண முடிப்பும், பாராட்டுப் பத்திரமும் மற்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் 4 நபர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டு வருகிறது.

[2011 ஆகஸ்ட் 25

### 6.6 பயிற்றுநர்களுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது

*ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகப் பணியாற்றி, தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுநர்கள் மற்றும் இரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1.00 இலட்சமும் மற்றும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றன.*

### 6.7 உயர் ஊக்கத் தொகை

*தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில், வீட்டுமனை மற்றும் அடுக்குமாடி வீடு வழங்குவதற்குப் பதிலாக உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.*

**போட்டிகள் மற்றும் வழங்கப்படும் ஊக்கத் தொகை**

| வ எண் | வகை | உயரிய ஊக்கத் தொகையின் அளவு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | ஒலிம்பிக் ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100 | 50 | 25 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20 | 15 | 10 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20 | 15 | 10 |



2011 ஆகஸ்ட் 25]

| வ எண் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப்போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தங்கம் ரூ. | வெள்ளி ரூ. | வெண்கலம் ரூ. | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 4. | தெற்காசிய / தேசிய விளையாட்டு போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை) | 1.00 இலட்சம் | 50,000 | 25,000 | 20,000 | 15,000 | 10,000 |
| | | | | | ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | | |

*மேலும் அரசாணை (நிலை) எண் 30, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 03-06-2008-ன்படி, ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளான சதுரங்கம், கேரம், வளைபந்து* (Tennikoit) *மற்றும் வலுதூக்கல்* (Powerlifting) *ஆகியவற்றில் உலகப் போட்டிகள் மற்றும் தேசியப் போட்டிகளில் பதக்கம் வெல்லுபவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது:—*

| இனம் | விளையாட்டுகளின் வரிசைக் கிரமம் | உயரிய ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | சதுரங்கம், கேரம், வலுதூக்கல் மற்றும் வளைபந்து விளையாட்டுகளில் நடைபெறும் உலகப் போட்டிகள் | ரூ.20 இலட்சம் | ரூ.15 இலட்சம் | ரூ.10 இலட்சம் |
| 2. | சதுரங்கம், கேரம், வலுதூக்கல் மற்றும் வளைபந்து விளையாட்டுகளில் நடைபெறும் தேசிய போட்டிகள் | ரூ.1 இலட்சம் | ரூ.50,000/ | ரூ.25,000/ |

[2011 ஆகஸ்ட் 25

### 6.8 சிறப்பு விருது

சர்வதேச அளவில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு அவர்கள் பெறும் வெற்றியின் அடிப்படையில் சிறப்பு ரொக்கப் பரிசுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

### 6.9 மாவட்ட அளவில் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விருது

தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 சிறந்த விளையாட்டு வீரர், 3 சிறந்த விளையாட்டு வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா ரூ.3,000/— ரொக்கப் பரிசும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விருதும் அந்தந்த மாவட்டங்களில் குடியரசு தின விழா நிகழ்ச்சியில் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.5.76 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

## படலம் – 7

## இளைஞர் நலத் திட்டங்கள்

### 7.1 இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது, அவர்களுக்குக் குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.



2011 ஆகஸ்ட் 25]

தற்சமயம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 4 நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டி முடிக்கப்பட்டது. இளைஞர் விடுதிக்குத் தேவையான தளவாடப் பொருட்கள் வாங்கப்பட்டவுடன், இளைஞர் விடுதி செயல்பாட்டுக்கு வரும்.

### 7.2 இளைஞர் முன்னேற்றத் திட்டங்கள் மற்றும் பயிற்சிக்கு நிதி உதவி அளித்தல்

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்திடவும், வேலையில்லாத இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிடவும், சிறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து தேசிய கட்டுமானப் பணிகளில் பங்குக் கொள்ளவும் :—

1. தொழிற்கல்வித் திட்டம்
2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்
3. கண்காட்சித் திட்டம்

ஆகிய திட்டங்களில் பலவித பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் செயல்பாடுகளை மேம்படுத்தவும் மைய அரசு நிதி உதவி அளித்து வருகிறது. பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகிய கால அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது. 15-35 வயது வரம்பிலுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுதியுடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப பயிலகங்கள், பல்கலைக்கழகங்கள், நேரு யுவகேந்திர சங்கேதன், சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் பொது பொறுப்பாட்சி நிறுவனங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. அவ்வாறான, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மேற்படி நிதி உதவி பெற்றிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி புரிகிறது. இளைஞர்களின் பயிற்சி மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மைய அரசின் நிதி உதவி பெறுவதற்கான

[2011 ஆகஸ்ட் 25

நேரு யுவகேந்திரா மூலமாக அனுப்பப்படும் கருத்துருக்கள்மீது மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை பெறப்பட்டு, அவை மைய அரசுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன.

**படலம்—8**

**தேசிய மாணவர் படை**

**1. தொடக்கம்:**

தேசிய மாணவர் படை சட்டத்தின் (எண் XXXI, 1948)கீழ், தேசிய மாணவா படையானது இராணுவ அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 16 ஏப்ரல் 1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இந்தப் படை 15 ஜூலை 1948 அன்று முறையாக அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியது.

**2. குறிக்கோள்கள்**

(அ) நற்பண்பு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமைப் பண்பு, சமய சார்பற்ற நோக்கம் துணிவு செயலார்வம் மற்றும் உன்னதமான, சுயநலமில்லாத தொண்டின் குறிக்கோள்களை இளைஞர்களிடையே வளர்த்தல்.

(ஆ) மனிதவள மேம்பாட்டை முறையாக இளைஞர்களுக்கு பயிற்றுவித்து, ஊக்குவித்து தலைமைப் பண்பை அன்றாட வாழ்வில் பெற்று, அவர்களை நாட்டுப் பணிக்காக எப்போதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள் ஆயதப் படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்

**3. நிர்வாகம்:**

தேசிய மாணவர் படையானது இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை இயக்கத்தின் நிர்வாகத்தினை திறம்பட செயல்படுத்துவதற்காக மாநில அரசு தேசிய மாணவர் படை துணைத் தலைமை இயக்குநர் அவர்களுக்கு “துறைத் தலைமை அதிகாரங்களை” அளித்துள்ளது.



2011 ஆகஸ்ட் 25]

4. தமிழக அரசு 2011-2012 ஆம் ஆண்டிற்காக, தேசிய மாணவர் படைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூ.26,77,50,000/- வழங்கியுள்ளது.

**5. ஊக்க ஊதியங்கள்:**

தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு தமிழக அரசு கீழ்க்காணும் ஊக்க ஊதியங்களை வழங்குகின்றது:

(அ) ஓராண்டிற்கு ரூ.1200/- வீதம் 80 தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு மாணவர்களுக்கும் மற்றும் ரூ.600/- வீதம் 90 தேசிய மாணவர் படை இளநிலைப் பிரிவு மாணவர்களுக்கும் உதவித் தொகை வழங்குகின்றது.

(ஆ) குடியரசு தின விழா முகாம் மற்றும் அதைச் சார்ந்த முகாமில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ரொக்க, ஊக்க ஊதியமாக ஓராண்டிற்கு ரூ.3.17 இலட்சம் வழங்குகின்றது.

(இ) தமிழ்நாட்டில் இளநிலை ஆசிரியர் மற்றும் முதுகலை பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களுக்கானத் தேர்வு நியமன வாய்மொழித் தேர்வில், 12 மொத்த மதிப்பெண்களில் ½ மதிப்பெண் தேசிய மாணவர் படைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் படை மாணவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| இளநிலைப் பிரிவு மாணவர்கள் (பள்ளி மாணவர்கள்) | — | 66,230 |
| இளநிலைப் பிரிவு மாணவிகள் (பள்ளி மாணவிகள்) | — | 5,450 |
| முதுநிலைப் பிரிவு மாணவர்கள் (கல்லூரி மாணவர்கள்) | — | 21,923 |
| முதுநிலைப் பிரிவு மாணவிகள் (கல்லூரி மாணவிகள்) | — | 5,187 |
| மொத்தம் | | 98,790 |

8. 2011-2012 ஆம் ஆண்டுக்கான பகுதி (PART-II) இரண்டு திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட இனங்களுக்கு ரூ.49.98 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது:

[2011 ஆகஸ்ட் 25

(அ) 66 அதிநவீன வடிவமைப்புக் கருவிகளுடன் LCD மானிட்டர் பிரிண்டர்கள், இடைவிடாது மின்சக்தி வழங்கும் சாதனம் என்.சி.சி. அலுவலங்களுக்கு வாங்க- ரூ.43.56 இலட்சம்.

(ஆ) என்.சி.சி அலுவலகத்தில் உள்ள பழைய மற்றும் உடைந்த மேஜை நாற்காலிகளுக்குப் பதிலாக, புதிய மேஜை நாற்காலிகள் வாங்குவது சம்பந்தமாக - ரூ.1.14 இலட்சம்

(இ) தேசிய மாணவர்படை 16 தொகுதி அலுவலர்களுக்கு, தேசிய மாணவர் படை முகாம்களில் உபயோகப்படுத்த 16 உணவு சூடுபடுத்தும் இயந்திரங்கள் (200 முதல் 300 கிலோ) வாங்குவதற்கு - ரூ.5.28 இலட்சம்.

## படலம் –9

## நாட்டு நலப் பணித் திட்டம்

நாட்டு நலப் பணித் திட்டம் தமிழகத்தில் செப்டம்பர், 1969 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 3,70,018 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் தமிழகத்தில் கல்வி நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. இதற்கான நிதியை மத்திய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் பகிர்ந்து வழங்குகின்றன. தற்போது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப் பணித் திட்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

2010-11 ஆம் நிதியாண்டில், தொடர் பணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ.160/-லிருந்து ரூ.250/-ஆகவும், சிறப்பு முகாம் பணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ.300/-லிருந்து ரூ. 450/-ஆகவும் மைய அரசு மானியத்தை உயர்த்தியுள்ளது. இதன் விளைவாக, மைய அரசின் பங்கும் மாநில அரசின் பங்கும் சேர்த்து பல்கலைக்கழகங்கள் மற்றும் இயக்ககங்களுக்கு மொத்தம் ரூ.12,96,83,550/-ம், பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.4,60,75,000/-ம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டு நலப் பணித் திட்டத்தின் முக்கிய நோக்கம், மாணவத் தொண்டர்களிடம் ஆளுமைத் திறன் வளர்த்தல் ஆகும். இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன:-



2011 ஆகஸ்ட் 25]

தலைமைப் பண்பு வளர்த்தல், யோகா மற்றும் தியானம், வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்விக்கு வழிகாட்டுதல், மென்திறன் வளர்த்தல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு, முதலுதவிப் பயிற்சி, சுற்றுச்சூழல் மேம்பாடு, சாலைப் பாதுகாப்பு மற்றும் சாலை விதிகளை மதித்தல், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு மீண்டும் படிப்பைத் தொடர உதவி செய்தல், குருதிக் கொடை, குருதி வகைப்படுத்தல், குருதிக் கொடையாளர் பட்டியல் தயாரிக்கும் பணி ஆகிய செயல்பாடுகள் தேவைக்கேற்றபடி நாட்டு நலப் பணித் திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழுநோய் கண்டறிதல், கண், பல், மார்பகப் புற்றுநோய் ஒழிப்பு, இதயநோய், தாய்-சிசு நலன், எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இளைஞர்களிடையே சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வு, பாதுகாப்பான போக்குவரத்து முறைகளையும், முதலுதவி மற்றும் காவல் துறை எனது நண்பன் போன்ற முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. ஓசோன் படலத்தைப் பாதுகாத்திட, பொது மக்களின் துயரைக் குறைத்திட, சமுதாய வனத் திட்டங்கள், மாதிரி வனச்சரகம், பசுமை எல்லை மரக்கன்று நடுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிளாஸ்டிக் பாலித்தீன் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பைத் தோற்றுவித்தல், மழை பெறுவதற்கு வனங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துதல் போன்ற விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு முகாம்களின்போது, மாணவர்கள் கிராமத்திலுள்ள இளைஞர்களுடன் இணைந்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான கழிப்பிடம், தண்ணீர் தொட்டிகள், சமூகக் கூடங்கள், சுற்றுச்சுவர் கட்டுதல், விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல், சாலை அமைத்தல் மற்றும் மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர்.

நாட்டு நலப் பணித் திட்டம் மூலமாக நிறைவேற்றப்பட்ட சாதனைகள் :-

1. நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் 79,200 யூனிட் இரத்தத்தை இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

[2011 ஆகஸ்ட் 25

2. *4,87,500 மரக் கன்றுகளை நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் நட்டுள்ளனர்.*

3. *எழுத்தறிவில்லாத 95,000 நபர்களுக்கு நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் எழுத்தறிவு அளித்துள்ளார்கள்.*

4. *மாணவத் தொண்டர்களின் பல்வேறு செயல்பாடுகளால் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உருவாக்கப்பட்ட உத்தேச சொத்தின் மதிப்பு ரூ.6,10,00,000/-*

5. *இத்திட்டத்தின்மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை 4,18,000.*

6. *இது மட்டுமின்றி சிறப்பு முகாம்களின்போது, நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்கள், அரசு அவ்வப்போது அறிவிக்கும் நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடையும் வகையில் தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாகவும் நாடகங்கள் மூலமாகவும் விளக்குகின்றனர்.*

## இணைப்பு – 1

*தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் உருவாக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்க கட்டமைப்பு வசதிகள் பற்றிய விவரங்கள்.*

**சென்னையிலுள்ள விளையாட்டு அரங்க கட்டமைப்பு வசதிகள்**



2011 ஆகஸ்ட் 25]

| | |
|---|---|
| ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை | 40,000 பார்வையாளர்கள் அமரும் வசதிகொண்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1995 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் – 1,400 மீ – 8 வரிசை கொண்ட செயற்கை தரை தடகள ஓடுபாதை மற்றும் அனைத்து விளையாட்டு மைதானங்களும் அமைந்துள்ளன. |
| பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை | 8,000 பார்வையாளர்கள் அமரும் குளிர்சாதன வசதிகொண்ட பல்நோக்கு உள் விளையாட்டரங்கத்தில் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து ஆகிய மைதானங்கள் அமைந்துள்ளன. |
| மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை | 4,000 பார்வையாளர்கள் அமரும் வசதிகொண்ட இந்த அரங்கத்தில் மெகா டர்ப் செயற்கை புல் தரையுடன்கூடிய வளைகோல்பந்து மைதானம், அமைந்துள்ளது. |
| வேளச்சேரி நீச்சல்குள வளாகம், வேளச்சேரி, சென்னை | 4,000 பார்வையாளர்கள் அமரும் வசதி, சர்வதேச தர நீச்சல்குளம் (50 x 25 மீ), டைவிங் நீச்சல்குளம் (19 x 25 மீ), பயிற்சி நீச்சல்குளம் (20 x 25 மீ), உடற்பயிற்சி மையம் ஆகியவை அமைந்துள்ளன. |
| டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை | 5,000 பார்வையாளர்கள் அமரும் வசதியுடைய மைய செயற்கை மைதானம் மற்றும் 2,000 பார்வையாளர்கள் அமரும் வசதிகொண்ட 6 செயற்கை மைதானங்கள். |
| நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை | சர்வதேச தர ஸ்குவாஷ் ஆடுகளங்கள் – 8, (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் –தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகம் இணைந்து), 400 மீ தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் ஆகியவை அமைந்துள்ளன. |
| அண்ணா நீச்சல்குளம், சென்னை | 50 மீ நீச்சல்குளம் மற்றும் 25 மீ நீச்சல்குளம் |
| ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி, நந்தனம், சென்னை | செயற்கை புல்தரையுடன்கூடிய வளைகோல்பந்து ஆடுகளம் |
| தெற்காசிய விளையாட்டுக் கிராமம், கோயம்பேடு, சென்னை | இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம். |

[2011 ஆகஸ்ட் 25

## மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு அரங்க கட்டமைப்பு வசதிகள்

| | |
|---|---|
| சென்னை (சௌாய் நகர்) | நீச்சல்குளம் (36x13மீ), சிறகுப்பந்து உள் விளையாட்டுக் கூடம், உடற்பயிற்சி கூடம் |
| கடலூர் | 400 மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1, வளைகோல்பந்து மைதானம்–1, உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் மற்றும் அனைத்து விளையாட்டு மைதானங்களும் அமைந்துள்ளன. |
| காஞ்சிபுரம் | 400 மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் –1, வளைகோல்பந்து மைதானம்–1, கூடைப்பந்து மைதானம் உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் மற்றும் அனைத்து விளையாட்டு மைதானங்களும் அமைந்துள்ளன. |
| திருவள்ளூர் | 400 மீ தடகள ஓடுபாதை, கால்பந்து / வளைகோல்பந்து மைதானம் – 1, கூடைப்பந்து மைதானம் மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய மைதானங்கள் அமைந்துள்ளன. முகப்பேர் விளையாட்டு வளாகம்: செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2, செயற்கை இழை கூடைப்பந்து ஆடுகளம் 2, நீச்சல்குளம் 25x13 மீ மற்றும் வீராபுரத்தில் துப்பாக்கி சுடுதல் பயிற்சி மையம் ஆகியவை அமைந்துள்ளன. |
| திருவண்ணாமலை | 400 மீ தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம், வளைகோல்பந்து மைதானம், கூடைப்பந்து மைதானம்– 2 மற்றும் நீச்சல் குளம் ஆகியவை அமைந்துள்ளன. |
| வேலூர் | 400 மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1, கையுந்துபந்து மைதானம் – 1 |



2011 ஆகஸ்ட் 25]

| | |
|---|---|
| விழுப்புரம் | 400மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1 மற்றும் உள் விளையாட்டரங்கம் |
| அரியலூர் | 400மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1 , கூடைப்பந்து மைதானம்– 1, கையுந்துபந்து மைதானம் |
| நாகப்பட்டினம் | 400 மீ தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம்–1, கையுந்துபந்து மைதானம்–2 நீச்சல் குளம் மற்றும் உள் விளையாட்டரங்கம் |
| நாமக்கல் | 400 மீ தடகள ஓடுபாதை அமைந்துள்ளது |
| பெரம்பலூர் | 400 மீ தடகள ஓடுபாதை, கால்பந்து ஆடுகளம், கையுந்துபந்து |
| தஞ்சாவூர் | 400மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்– 1, வளைகோல்பந்து மைதானம்– 1 மற்றும் நீச்சல் குளம். |
| திருவாரூர் | 400மீ தடகள ஓடுபாதை, கால்பந்து / வளைகோல் பந்து மைதானம் மற்றும் நீச்சல் குளம். |
| திருச்சி | 400 மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் – 1, செயற்கை இழை வளைகோல் பந்து மைதானம் நீச்சல்குளம் 25x 21 மீ மற்றும் உள் விளையாட்டரங்கம். |
| திண்டுக்கல் | 400 மீ தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம்–2, கூடைப்பந்து மைதானம்–1 உடற்பயிற்சி மையம், நீச்சல்குளம் 25x13 மீ . |
| கரூர் | 400மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் – 1, கூடைப்பந்து மைதானம் – 1 |
| மதுரை | 400 மீ செயற்கை இழை தடகள ஓடுபாதை (மின்னொளி வசதியுடன்), கால்பந்து மைதானம்–1 (இயற்கை புல்வெளி), இழை டென்னிஸ் ஆடுகளம்–2 மற்றும் உள் விளையாட்டரங்கம், நீச்சல் குளம். |

[2011 ஆகஸ்ட் 25

| | |
|---|---|
| புதுக்கோட்டை | 400மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1, கையுந்துபந்து மைதானம்–1, கூடைப்பந்து மைதானம் மற்றும் நீச்சல் குளம். |
| தேனி | கால்பந்து மைதானம்–1, கூடைப்பந்து மைதானம்–1, ஸ்குவாஷ் ஆடுகளம்–1, உடற்பயிற்சி மையம் மற்றும் உள் விளையாட்டரங்கம். |
| கன்னியாகுமரி | 400மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1 நீச்சல்குளம் 25x13 மீ, இந்திய விளையாட்டு குழுமம் –பயிற்சி மையம் |
| இராமநாதபுரம் | 400மீ. தடகள ஓடுபாதை, கையுந்துபந்து மைதானம்–1 (மின்னொளி வசதியுடன்), கூடைப்பந்து மைதானம்–1 மற்றும் நீச்சல் குளம், உள் விளையாட்டரங்கம். |
| சிவகங்கை | 400 மீ. தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் – 1, நீச்சல்குளம் 25x13 மீ, உள் விளையாட்டு அரங்கம். |
| தூத்துக்குடி | 400மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1, வளைகோல்பந்து மைதானம் நீச்சல்குளம் 25x13 மீ. |
| திருநெல்வேலி | 400மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1, செயற்கை புல்வெளி வளைகோல்பந்து மைதானம்–2 (சிறகுப்பந்து உள்விளையாட்டு கூடம் (மரத்தாலானது), நீச்சல்குளம் 25x13 மீ. |
| விருதுநகர் | 400மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1, வளைகோல்பந்து மைதானம்–1, கையுந்துபந்து மைதானம்–1. |
| கோயம்புத்தூர் | 400மீ. தடகள ஓடுபாதை (செயற்கை புல்வெளி), கூடைப்பந்து மைதானம் – 2 (1 மின்னொளி வசதியுடன்), கையுந்துபந்து மைதானம் –2, கால்பந்து மைதானம் – 1 (இயற்கை புல்வெளி). |
| தருமபுரி | 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் –1, கூடைப்பந்து மைதானம் – 1, நீச்சல்குளம் 25x13மீ மற்றும் உள் விளையாட்டரங்கம். |



2011 ஆகஸ்ட் 25]

| | |
|---|---|
| ஈரோடு | 400 மீ. தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம்–1, கூடைப்பந்து மைதானம்–2, சிறகுப்பந்து உள்விளையாட்டு கூடம்–1, நீச்சல்குளம் 25x13 மீ, விளையாட்டு விடுதி. |
| கிருஷ்ணகிரி | 400 மீ. தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம்–1, வளைகோல் பந்து மைதானம் 1, கூடைப்பந்து மைதானம்–2, உள் விளையாட்டரங்கம் மற்றும் நீச்சல் குளம். |
| சேலம் | 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் –1, கூடைப்பந்து மைதானம் –1, கையுந்துபந்து மைதானம், நீச்சல்குளம் 25 x13 மீ, சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம் மற்றும் இந்திய விளையாட்டுக் குழும பயிற்சி மையம். |
| நீலகிரி | 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம்–1 (இயற்கை புல்வெளி), கையுந்துபந்து மைதானம்–1, கூடைப்பந்து மைதானம்–1, உடற்பயிற்சி மையம், செயற்கை டென்னிஸ் ஆடுகளம்–1, சிறகுபந்து உள் விளையாட்டு கூடம். |

## இணைப்பு–2

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுச் சங்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தடகள சங்கம் | 25. | பில்லியர்ட்ஸ் & ஸ்நூக்கர்ஸ் சங்கம் |
| 2. | நீச்சல் சங்கம் | 26. | உடற்கட்டமைப்பு சங்கம் |
| 3. | கூடைப்பந்து சங்கம் | 27. | பிரிட்ஜ் சங்கம் |
| 4. | பூப்பந்து சங்கம் | 28. | கேரம் சங்கம் |
| 5. | குத்துச்சண்டை சங்கம் | 29. | சதுரங்க சங்கம் |
| 6. | சைக்கிளிங் சங்கம் | 30. | கிரிக்கெட் சங்கம் |

[2011 ஆகஸ்ட் 25

| | | | |
|---|---|---|---|
| 7. | வாள்வீச்சு சங்கம் | 31. | சைக்கிள் போலோ சங்கம் |
| 8. | கால்பந்து சங்கம் | 32. | கோல்ப் சங்கம் |
| 9. | ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கம் | 33. | கபடி சங்கம் |
| 10. | ஹாக்கி சங்கம் | 34. | கோ-கோ சங்கம் |
| 11. | ஜூடோ சங்கம் | 35. | பவர்லிப்டிங் சங்கம் |
| 12. | கராத்தே-டோ சங்கம் | 36. | ஹாக்கி சங்கம் மகளிர் |
| 13. | ரோயிங் சங்கம் | 37. | சிலம்பாட்டம் சங்கம் |
| 14. | துப்பாக்கி சுடுதல் சங்கம் | 38. | துப்பாக்கி சுடுதல் சங்கம் |
| 15. | ஸ்குவாஷ் சங்கம் | 39. | காது கேளாதோர் விளையாட்டு சங்கம் |
| 16. | மேசைப்பந்து சங்கம் | 40. | டென்னிகாய்டு சங்கம் |
| 17. | டென்னிஸ் சங்கம் | 41. | எறிபந்து சங்கம் |
| 18. | டேக்-வொன்டோ சங்கம் | 42. | மாஸ்டர்ஸ் தடகள சங்கம் |
| 19. | ட்ரையத்லான் சங்கம் | 43. | யோகாசன சங்கம் |
| 20. | வாலிபால் சங்கம் | 44. | யுஷூ சங்கம் |
| 21. | பளுதூக்கும் சங்கம் | 45. | ரக்பி கால்பந்து சங்கம் |
| 22. | மல்யுத்த சங்கம் | 46. | பெண்கள் கிரிக்கெட் சங்கம் |
| 23. | ஒலிம்பிக் சங்கம் | 47. | கைப்பந்து சங்கம் |
| 24. | பால் பாட்மின்டன் சங்கம் | 48. | வலைப்பந்து சங்கம் |



2011 ஆகஸ்ட் 25]

## இணைப்பு—3

### தேசிய இளைஞர் விருது பெற்றோர் விவரம் (தமிழ்நாடு)

| வ.எண் | வருடம் | பெயர் திருவாளர்கள் |
|---|---|---|
| 1. | 1985 | ஏழுமலை மணி |
| 2. | 1987-1988 | பி. நடராஜன் |
| 3. | 1987-1988 | ஸ்டான் தக்கச்சரா |
| 4. | 1988-1989 | ஆர். வேலுச்சாமி |
| 5. | 1989-1990 | யு. கருணாநிதி |
| 6. | 1989-1990 | எஸ். உமா |
| 7. | 1990-1991 | மாரியப்பன் |
| 8. | 1990-1991 | வி.பி. ரோஹினி ஷில்லி |
| 9. | 1990-1991 | எம்.ஐ. ஹபிபுல்லா |
| 10. | 1995-1996 | எஸ். ஜாஹீர் |
| 11. | 1995-1996 | பி. டேனியல் அகஸ்டோஸ் பிரபாகர் |
| 12. | 1996-1997 | ஆர்.எல். நந்தகுமார் |
| 13. | 1996-1997 | செல்வகுமார் |
| 14. | 1996-1997 | எம். கிரி |
| 15. | 1996-1997 | ஜி. கார்த்திகேயன் |
| 16. | 1997-1998 | ரதிகலா |
| 17. | 1998-1999 | பி. வில்பெரடு சவுந்தரம் |
| 18. | 1999-2000 | சி. தேவிகா |
| 19. | 1999-2000 | டி. சோமசுந்தரம் |
| 20. | 1999-2000 | கே. விஜயராகவன் |
| 21. | 2000-2001 | பி. சந்தானலட்சுமி |
| 22. | 2001-2002 | ஆர். ஞானசேகரன் |
| 23. | 2001-2002 | பி.என். லட்சுமணன் |

[2011 ஆகஸ்ட் 25

| வ.எண் | வருடம் | பெயர்<br>திருவாளர்கள் |
|---|---|---|
| 24. | 2001-2002 | ஜி.எம். எழில் ஏழுமலை |
| 25. | 2002-2003 | ஏ. வெள்ளியங்கிரி |
| 26. | 2003-2004 | ஏ.பி.என். கதிர்வேலு |
| 27. | 2004-2005 | கே .மருதாச்சலம் |
| 28. | 2005-2006 | மணிக்ஷா |
| 29. | 2006-2007 | வி. ரமேஷ். |
| 30. | 2008 | நிவேதிதா |
| 31. | 2008 | கே. தாரணி |
| 32. | 2008 | ஆர். ஸ்ரீராம் |
| 33. | 2007-2008 | ஈ. சதீஷ் குமார் |
| 34. | 2007-2008 | எஸ். சுதா |
| 35. | 2007-2008 | எஸ். அசோக் குமார் |
| 36. | 2008-2009 | எ.ஆர். ராஜ ராஜன் |
| 37. | 2008-2009 | எம். ஹரிப்பிரியா |
| 38. | 2009-2010 | எ. மாரிமுத்து |
| 39. | 2009-2010 | எ. நெல்சன் |



2011 ஆகஸ்ட் 25]

## இணைப்பு–4

### புதுதில்லியில் 3–10–2010 முதல் 14–10–2010 வரை நடைபெற்ற 19–வது காமல்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்களின் பெயர் பட்டியல்

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | விளையாட்டு | பிரிவு | வென்ற பதக்க விவரம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ். சத்யா | தடகளம் | 4 x 100 மீ. தொடர் ஓட்டம் | வெண்கலம் |
| 2. | சி. ஸ்ரீதர் | வில்வித்தை | காம்பவுண்ட்– குழுப்போட்டி | வெள்ளி |
| 3. | ஏ. சரத்கமல் | மேசைப்பந்து | இரட்டையர் | தங்கம் |
| | | | தனிநபர் | வெண்கலம் |
| | | | குழுப்போட்டி | வெண்கலம் |
| 4. | ஏ. அமல்ராஜ் | மேசைப்பந்து | குழுப்போட்டி | வெண்கலம் |
| 5. | ஆர். அபிஷேக் | மேசைப்பந்து | குழுப்போட்டி | வெண்கலம் |
| 6. | செல்வி கே. ஷாமினி | மேசைப்பந்து | குழுப்போட்டி | வெள்ளி |
| 7. | செல்வி ருஷ்மி சக்ரவர்த்தி | டென்னிஸ் | இரட்டையர் | வெண்கலம் |

[2011 ஆகஸ்ட் 25

## இணைப்பு–5

### சீனாவில் 12–11–2010 முதல் 27–11–2010 வரை நடைபெற்ற 16–வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்களின் பெயர் பட்டியல்

| வ. எண் | பெயர் | விளையாட்டு மற்றும் விளையாட்டுப் பிரிவு | பதக்கம் விபரம் |
|---|---|---|---|
| 1. | செல்வி எஸ். கவிதா | கபாடி | தங்கம் |
| 2. | திரு. சௌரவ் கோஷல் | ஸ்குவாஷ் – தனிநபர் போட்டி | வெண்கலம் |
| | | ஸ்குவாஷ்–குழுப் போட்டி | வெண்கலம் |
| 3. | திரு. ஹரிந்தர் பால் சிங் | ஸ்குவாஷ்–குழுப் போட்டி | வெண்கலம் |
| 4. | செல்வி தீபிகா பாலிகல் | ஸ்குவாஷ் – குழுப் போட்டி | வெண்கலம் |
| 5. | செல்வி அனகா | ஸ்குவாஷ் – குழுப் போட்டி | வெண்கலம் |
| 6. | செல்வி அன்வீஷா ரெட்டி | ஸ்குவாஷ் – குழுப் போட்டி | வெண்கலம் |
| 7. | செல்வி ஜோஷ்னா சின்னப்பா | ஸ்குவாஷ் – குழுப் போட்டி | வெண்கலம் |
| 8. | திரு. அதிபன் | சதுரங்கம் – குழுப் போட்டி | வெண்கலம் |
| 9. | திரு. கே. சசிகிரன் | சதுரங்கம் – குழுப் போட்டி | வெண்கலம் |



2011 ஆகஸ்ட் 25]

## இணைப்பு–6

*34வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் ஜார்கண்ட் மாநிலத்தில் 12-2-2011 முதல் 26-2-2011 வரை நடைப்பெற்றன.*

### பதக்கம் பெற்றவர்கள் பட்டியல்

| வ. எண் | விளையாட்டு | வெற்றி பெற்ற வீரர்/வீராங்கனை பெயர் | | விளையாட்டுப் பிரிவு | பதக்கம் பெற்ற விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | தடகளம் (ஆண்கள்) | 1 | சுரேந்தர் ஜெயகுமார் | 110 மீ. தடை ஓட்டம் | தங்கம் |
| | | 2 | பெனடிக்ட் ஸ்டார்லி ஜார்ஜ் | உயரம் தாண்டுதல் | வெள்ளி |
| | | 3 | பிரேம்குமார் குமாரவேல் | நீளம் தாண்டுதல் | வெண்கலம் |
| | தடகளம் (பெண்கள்) | 4 | மோகனாள் என்.எம்.சின்னசாமி | 800 மீ. ஓட்டம் | வெண்கலம் |
| | | 5 | சரஸ்வதி சுந்தரம் | ஈட்டி எறிதல் | வெண்கலம் |
| | | 6 | கற்பூரமாலா தர்மபாலன் | ஹெப்டத்லான் | வெண்கலம் |
| 2. | கூடைபந்து (பெண்கள்) | 1 | கோகிலா சுப்ரமணி | | தங்கம் |
| | | 2 | சங்கீதா வெங்கடாஜலம் | | |
| | | 3 | சியாமளா சுகுணஜோதி ஆர் .நல்லையா | | |
| | | 4 | எம். காயத்ரி | | |
| | | 5 | அழகு தமிழ்மொழி ராஜேந்திரன் | | |
| | | 6 | பி. தனலட்சுமி | | |
| | | 7 | அபூர்வா முரளிநாத் | | |
| | | 8 | கீத்து அண்ணா ஜோஸ் | | |
| | | 9 | ஆனிதா ஜி. பால்துரை | | |
| | | 10 | ஐ. சந்திரா | | |
| | | 11 | ஆர்.எஸ். கற்பகம் | | |
| | | 12 | ரெஞ்சினி பீட்டர் | | |

[2011 ஆகஸ்ட் 25

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | இறகுபந்து (ஆண்கள்) | 1 | ஜெபின் சித்தார்த் | குழு போட்டி | வெண்கலம் |
| | | 2 | மணிகண்டன் முருகப்பன் | | |
| | | 3 | இளங்கோ ஆதித்யா | | |
| | | 4 | வேலவன் வாசுதேவன் | | |
| | | 5 | சுப்ரமணியன் செந்தில் | | |
| | | 6 | அஸ்வின் சந்திரசேகர் | | |
| 4. | குத்துச் சண்டை | 1 | சண்முக பிரபு கோவிந்தராஜ் | சூப்பர் ஹெவி ஒவர் 91 கிகி | வெண்கலம் |
| 5. | சைக்கிளிங் (ஆண்கள்) | 1 | ராஜேஷ் சந்திரசேகர் | எலிமினேட் ஆன் ரேஸ் | தங்கம் |
| | | 2 | ராஜேஷ் சந்திரசேகர் | ரோட் மாஸ்டர் ரேஸ் | வெண்கலம் |
| 6. | வாள் சண்டை | 1. | கிஷோநிதி குமரேசன் பத்மா | சபரி | வெள்ளி |
| | | 2 | வினோத்குமார் வேலாயுதம் | பாயில் டீம் | வெண்கலம் |
| | | 3 | செல்வகுமார் செல்லமுத்து | | |
| | | 4 | சபரிநாத் முனுசாமி | | |
| | | 5 | தினகர ஆனந்த் சிவகுமார் | | |
| | | 6 | கார்த்திகேயன் ராஜு | சபரி டீம் | வெள்ளி |
| | | 7 | கார்த்திக் கோபிநாதன் | | |
| | | 8 | கிஜோநிதி குமரேசன் பத்மா | | |
| | | 9 | கிஷோநிதி குமரேசன் பத்மா | | |



2011 ஆகஸ்ட் 25]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | கராத்தே (ஆண்கள்) | 1 | அழகேசன் கருப்பையா | குமைட் தனிநபர் 50 கி எடைப் பிரிவு | வெண்கலம் |
| | | 2 | அசோக்குமார் செல்லமுத்து | குமைட் தனிநபர் 50.1 கி முதல் 55 கி எடைப் பிரிவு | தங்கம் |
| | | 3 | சபரி கார்த்திக் குணசேகரன் | குமைட் தனி நபர் 61.1 கி முதல் 67 கி எடைப்பிரிவு | தங்கம் |
| | கராத்தே (பெண்கள்) | 4 | ஹர்ஷா நாராயண மூர்த்தி | குமைட் தனிப்பிரிவு 45.1 கி முதல் 50 கி. எடைப் பிரிவு | வெண்கலம் |
| | | 5. | கருணாம்பிகா ராஜேந்திரன் | குமைட் தனிப்பிரிவு 50.1 கி முதல் 55 கி. எடைப்பிரிவு | வெண்கலம் |
| | | 6 | சுமித்ரா சேகர் | குமைட் தனிப்பிரிவு 55.1 கி முதல் 61 கி. எடைப் பிரிவு | தங்கம் |
| | | 7 | பவித்ரா பழனிச்சாமி | குமைட் தனிப்பிரிவு 61.1 கி. முதல் 68 கி. எடைப் பிரிவு | தங்கம் |
| 8. | ரோயிங் (பெண்கள்) | 1 | பசில்லா உசைன் | தனிநபர் ஸ்கல்ஸ் 500 மீ (W1X) | வெண்கலம் |
| 9. | துப்பாக்கி சுடுதல் (ஆண்கள்) | 1 | சுமீட் சங்கவி | 25 மீ. சென்டர் பயர் பிஸ்டல் ஆண்கள் சாம்பியன் (குழு) | வெண்கலம் |
| | | 2 | சத்தேந்தரா குமார் | | |
| | | 3 | அதுல் யாதவ் | | |

[2011 ஆகஸ்ட் 25

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | ஸ்குவாஷ் (ஆண்கள்) | 1 | ஹரிந்தர் பால் சிங் சந்து | ஒற்றையர் | தங்கம் |
| | | 2 | ரவி டிக்ஷுட் | ஒற்றையர் | வெள்ளி |
| | ஸ்குவாஷ் (பெண்கள்) | 3 | அபரஞ்சிதா பாலமுருகன் | ஒற்றையர் | தங்கம் |
| | | 4 | அன்வேஷா ரெட்டி கங்கலா | ஒற்றையர் | வெள்ளி |
| | | 5 | லக்சயா ராகவேந்திரன் | ஒற்றையர் | வெண்கலம் |
| 11 | நீச்சல் (ஆண்கள்) | 1 | ஜெயவந்த் விஜயகுமார் | 100 மீ. பிரீ ஸ்டைல் | வெண்கலம் |
| | நீச்சல் (பெண்கள்) | 2 | ஜெயவீனா ஆற்காட் விஜயகுமார் | 50 மீ. பிரீ ஸ்டைல் | வெண்கலம் |
| | | 3 | சுஸ்மிதா ரகுராமன் | 100 மீ. பேக் ஸ்ரோக் | வெண்கலம் |
| | | 4 | ஜெயவீனா ஆற்காட் விஜயகுமார் | 100 மீ. பிரீஸ்ட் ஸ்ரோக் | வெண்கலம் |
| | | 5 | ஜெயவீனா ஆற்காட் விஜயகுமார் | 200 மீ. பிரீஸ்ட் ஸ்ரோக் | வெண்கலம் |
| | | 6. | ஜெயவீனா ஆற்காட் விஜயகுமார் | 4 x 100 மீ. மெட்லே தொடர் ஓட்டம் | வெள்ளி |
| | | 7 | சுஸ்மிதா ரகுராமன் | | |
| | | 8 | ஷெர்லின் தேவதாசன் | | |
| | | 9 | மீனாட்சி விகே ஆர் | | |
| | | 10 | மீனாட்சி விகே ஆர் | 4 x 100 பிரீ ஸ்டைல் தொடர் ஓட்டம் | வெண்கலம் |
| | | 11 | சுஸ்மிதா ரகுராமன் | | |
| | | 12 | அனுஷா மேத்தா | | |
| | | 13 | ஜெயவீனா ஆற்காட் விஜயகுமார் | | |
| | | 14 | ஜெயவீனா ஆற்காட் விஜயகுமார் | 50 மீ. பிரீஸ்ட் ஸ்ரோக் | வெள்ளி |
| | | 15 | அனுஷா மேத்தா | 1500 மீ. பிரீ ஸ்டைல் | வெண்கலம் |



2011 ஆகஸ்ட் 25]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | தேக்வோண்டோ (ஆண்கள்) | 1 | கே.அந்தோணி ராஜ் | 54 கி. எடைப்பிரிவு மிகாமல் | வெண்கலம் |
| | | 2 | ஜானி தர்மா பாலசங்கர் | 58 கி முதல் 63 கி. எடைப் பிரிவு | வெண்கலம் |
| | | 3 | பாலசுப்ரமணி அரிபாபு | 74 கி முதல் 80 கி வரை | வெண்கலம் |
| 13. | டென்னிஸ் (ஆண்கள்) | 1 | மிதுன் | ஒற்றையர் பிரிவு | வெள்ளி |
| | | 2 | மிதுன் | இரட்டையர் பிரிவு | வெள்ளி |
| | | 3 | அஜய் செல்வராஜ் | | |
| | | 4 | ராஜுவ் நாயுடு | குழுப்போட்டி | வெண்கலம் |
| | | 5 | அஜய் செல்வராஜ் | | |
| | | 6 | இர்பான் உசைன் | | |
| | | 7 | மிதுன் | | |
| | | 8 | பிரீத்தி சீனிவாசன் | இரட்டையர் | வெண்கலம் |
| | | 9 | சிந்து நிலா பார்த்திபன் | | |
| 14 | மேசைப்பந்து (ஆண்கள்) | 1 | சரத் கமல் அஜந்தா | ஒற்றையர் | தங்கம் |
| | | 2 | சரத் கமல் அஜந்தா | இரட்டையர் | வெள்ளி |
| | | 3 | வினோத் ஏ.ஞானசேகரன் | | |
| | | 4 | ஆபிஷேக் ரவிச்சந்திரன் | இரட்டையர் | வெண்கலம் |
| | | 5 | சிவானந்தா சேஷாத்திரி | | |
| | | 6. | சரத் கமல் அஜந்தா | குழுப்போட்டி | தங்கம் |
| | | 7 | சிவானந்தா சேஷாத்திரி | | |
| | | 8 | பிரபாகரன் ஏகாம்பரம் | | |
| | | 9 | ஆபிஷேக் ரவிச்சந்திரன் | | |
| | | 10 | வினோத் ஏ.ஞானசேகரன் | | |

[2011 ஆகஸ்ட் 25

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | மேசைப்பந்து (பெண்கள்) | 11 | ஷாமினி குமரேசன் | ஒற்றையர் | வெள்ளி |
| | | 12 | ஷாமினி குமரேசன் | குழுப்போட்டி | வெண்கலம் |
| | | 13 | சத்யபாமா நரசிம்மன் | | |
| | | 14 | சுவேதா குமாரவேல் | | |
| | | 15 | வித்யா நரசிம்மன் | | |
| | | 16 | ஆர். ரீத் ரிஷ்யா டென்னிசன் சூசை | | |
| | | 17 | ஷாமினி குமரேசன் | கலப்பு இரட்டையர் | தங்கம் |
| | | 18 | சரத் கமல் அஜந்தா | | |
| 15. | கையுந்துபந்து (ஆண்கள்) | 1 | பி.கலைவாணன் | | தங்கம் |
| | | 2 | என்.ஷெல்டன் மோசஸ் | | |
| | | 3 | கே.பி.சகீம் | | |
| | | 4 | டி.செல்வ பிரபு | | |
| | | 5 | பி.ஜான் கிறிஸ்டோபர் | | |
| | | 6 | எஸ்.பல்விந்தர் சிங் | | |
| | | 7 | ஜின்சன் வர்கீஸ் | | |
| | | 8 | பிரதீப் குட்டி கோண்டா | | |
| | | 9 | எம். உக்கிரபாண்டியன் | | |
| | | 10 | எஸ். கனகராஜ் | | |
| | | 11 | நவீன் ராஜா ஜேக்கப் மணிதுரை | | |
| | | 12 | கார்த்திகேயன் கதிர்வேல் | | |
| 16. | பளுதூக்குதல் | 1 | தமிழ்செல்வன் மகாதேவன் | 56 கி எடைப்பிரிவு | வெண்கலம் |



2011 ஆகஸ்ட் 25]

# இணைப்பு III

*(281ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண்—53 சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011—2012

**முன்னுரை**

இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்திடும் வண்ணம், தமிழக அரசு அறிவியல் சார்ந்த ஆக்கபூர்வமான மக்கள் நலன் காக்கும் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை முன்னோடியாக செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையில், அவர்களது தொலைநோக்குப் பார்வையில் தமிழக அரசு, பொதுத் (சிறப்பு-அ) துறையின் அரசாணை நிலை எண்-423-இன் படி "சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை" எனும் புதிய அரசுத் துறையினை 16-5-2011 அன்று உருவாக்கி செயல்படுத்தி வருகின்றது.

அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும், அவற்றைக் கண்காணிக்கவும் இதற்கெனத் தனியாக ஒரு துறை தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு பல்முனை சிறப்புத் திட்டங்களை அறிவியல் தொழில்நுட்பம்மூலம் செயல்படுத்தி அனைத்துத் தரப்பினரும் சமூக, பொருளாதார வளர்ச்சியும் மேம்பாடும் பெற்ற ஒரு புதுயுகத்தை நோக்கி மாநிலத்தை அழைத்துச் செல்ல விழைந்துள்ளது.

வேளாண்மை, கல்வி, நீர், சுகாதாரம், ஊரக வளர்ச்சி, தொழில்கள் மற்றும் கட்டமைப்புப் போன்ற முக்கிய துறைகளில் சீரான திட்டமிடப்பட்ட, நீடித்த வளர்ச்சியினை அடைய இத்துறை தொடர்புடைய துறைகளுடன் இணைந்து செயலாற்றும்.

[2011 ஆகஸ்ட் 25

இத்துறையானது, அனைத்துத் தரப்பு மக்களும் பொருளாதார வளர்ச்சியில் ஏற்றம் பெற, குறிப்பாக, ஏழைகள் மற்றும் மகளிர் பயனுறும் வகையில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இவ்வித நோக்கங்களை அடைவதற்காகவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும் மற்றும் வாழ்வாதாரத்திற்கு வலுச்சேர்க்கத் தேவையான திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இவ்வகையில் சிறப்புத் திட்டங்களான கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழை எளிய குடும்பங்களுக்கு விலை ஏதுமின்றி கறவை மாடு, ஆடுகள் வழங்குதல், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலை ஏதுமின்றி 20 கிலோ அரிசி வழங்குதல், திருமாங்கல்யத்திற்காக 4 கிராம் தங்க நாணயமும், உயர்த்தப்பட்ட திருமண நிதி உதவியும் அளித்தல், மகளிருக்கு மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி போன்ற வீட்டு உபயோகச் சாதனங்களை விலை ஏதுமின்றி வழங்குதல், மாணவ/மாணவியர்களுக்கு விலை ஏதுமின்றி மடிக்கணினி கொடுத்து உதவுதல் போன்றவற்றை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

இச்சிறப்புத் திட்டங்களைக் குறிப்பிட்ட வேகத்தோடும், காலத்தோடும் உரிய வகையில் முறையாகச் செயல்படுத்தி, பயனாளிகள் நன்மைபெறும் வகையில் வெற்றியடையச் செய்திட, தொடர்புடைய துறைகள் மட்டுமல்லாது சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் "சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை" சிறப்பாக இயங்கி வரும்.

## 2. துறையின் பணிகளும் செயல்பாடுகளும்

- தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்து, அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்தல்.
- கள ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் குறித்த காலங்களில் மாவட்ட அளவில் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கலந்தாய்வுகள் நடத்துதல்.



2011 ஆகஸ்ட் 25]

- சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அலுவலர்களை, களப்பணி ஆய்வுகளை அடிக்கடி மேற்கொள்ளச் செய்து, திட்டங்களின் தரம் மற்றும் திறன் விவரங்களை ஆய்ந்து அவைகுறித்த கருத்துகளை அரசிற்கு இத்துறை அளிக்கும். மேலும், திட்டங்களின் செயலாக்கத்தைச் செம்மைப்படுத்தி, மேம்படுத்தும் வழிமுறைகளை, தேவைப்படும்போது அரசிற்கு இத்துறை பரிந்துரைக்கும். இத்துறை, பிற துறைகளுடன் இணைந்து செயலாற்றுவதுடன், கள ஆய்வு விவரங்களின் அடிப்படையில், திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் பயன்களைப் பெற, உரிய கொள்கை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பதற்கான தக்க பரிந்துரைகளை வழங்கும்.
- அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செவ்வனே செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் அமைப்பாக இத்துறை செவ்வனே செயல்படும்.

2.2. திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பது என்பது இத்துறையின் முக்கிய நோக்கமாக இருப்பதால், முறையான தொடர் கள ஆய்வை விழிப்பாக மேற்கொள்ளும் கண்காணிப்பு அமைப்பு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. திட்டப் பணிகளை மேற்பார்வையிடவும், கள ஆய்வுகளை நடைமுறைப்படுத்தவும், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல், ஊரக வளர்ச்சி, வருவாய்த் துறை போன்ற பல்வேறு துறைகளிலிருந்து அனுபவமிக்க அலுவலர்களும், பணியாளர்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## 3. கண்காணிப்பு

3.1. கண்காணிப்பு என்பது ஒரு நிர்வாக அமைப்பாக இயங்கி, திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டமிட்ட பாதையில் பயணிக்கிறதா என்பதை முழுமையாகவும் மற்றும் நேர்மையாகவும் கவனமுடன் ஆய்வு செய்வதாகும். திட்டப் பணிகளின் தொடர் கண்காணிப்பு, அப்பணிகள் நோக்கத்தை விட்டு விலக நேரிடின், அவற்றை உடன் தெரிவிப்பதுடன், நிர்வாகத்தினர் அத்திட்டங்களை மீண்டும்

[2011 ஆகஸ்ட் 25

சரியான பாதையில் முறைப்படுத்துவதற்குத் துணை புரிகிறது. இந்த நோக்கத்தோடு, இத்துறை சிறப்புத் திட்டப் பணிகளின் முன்னேற்றத்தினைக் கூர்ந்து கண்காணிக்கும்.

**3.2 சிறப்புத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்**

இந்த அரசு மாநிலத்தின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காகவும் மற்றும் மக்களின் நீண்டநாள் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் பல முன்னோடித் திட்டங்களை அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் அரசின் பல்வேறு துறைகளால் நிறைவேற்றப்படுவதால், இத்துறை தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து சிறப்புத் திட்டங்களின் செயல்பாட்டு நிலையினை அறிந்துகொள்ளும். இத்திட்டங்களின் முன்னேற்றம் பொருத்தமான தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் உடன் நிகழ் (On-line) முறையில் கண்காணிக்கப்படும்.

**3.3 அரசின் அறிவிப்புகளைக் கண்காணித்தல்**

மேதகு ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்து வளர்ச்சித் திட்ட அறிவிப்புகள் மற்றும் சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்பு அறிவிப்புகள் முறையாகச் செயலாக்கப்படுவதை இத்துறை கூர்ந்து கண்காணிக்கும். திறமையான கண்காணிப்பிற்கு ஏதுவாக இந்த அறிவிப்புகள் துறைவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிவிப்புகளின் செயல்பாட்டு நிலையினைத் தொடர்புடைய துறைகள் பதிவு செய்வதற்காக உரிய மென்பொருள், இத்துறையால் வடிவமைக்கப்பட்டு, தலைமைச் செயலகத்தின் உள் வலையதளத்தில் (Intranet) நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு துறைகளில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு தொகுப்பறிக்கை தயாரிக்கப்பட்டு, ஆய்வுகளை நடத்துவதற்கும் அவற்றைக் குறிப்பாக வைத்துக்கொள்வதற்கும் பயன்படுத்தப்படும்.

3.4. சிறப்புத் திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக மாவட்ட வருவாய் அலுவலர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை



2011 ஆகஸ்ட் 25]

போன்ற மூத்த அலுவலர்கள், ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்திற்கு முக்கிய மையப் பொறுப்பாளர்களாகச் செயல்படுவர். மேலும், இத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து உரிய நேரத்தில் தகவல் அளிப்பவராகவும் மற்றும் திட்டங்களின் சீரிய செயல்பாட்டிற்கு உதவிடும் நடவடிக்கைகளை எடுப்பவராகவும் செயல்படுவர்.

3.5. இத்துறையின் மூலமாக, அரசு, பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டின் முன்னேற்றம் குறித்த தகவல்களைத் தொடர்ந்து பெறவும், இத்திட்டங்களின் பயன்களை அறிந்து கொள்ளவும் இயலும். இந்தக் கண்காணிப்பு முறையின் மூலம், திட்டங்கள் செயல்படும்போதே தேவையானத் திருத்தங்களையும் செய்து கொள்வதற்கு அரசுக்கு இத்துறை வழி வகுக்கிறது.

**4. இத்துறையால் நேரடியாக செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

அரசின் சிறப்புத் திட்டங்களைக் கண்காணிப்பது மட்டுமல்லாது, இத்துறை, அரசின் திருப்புமுனைத் திட்டங்களான மாணவ/மாணவியர்களுக்கு விலை ஏதுமின்றி மடிக்கணினி வழங்கல் மற்றும் மகளிர் பயனாளிகளுக்கு விலை ஏதுமின்றி மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

**4.1 மாணவ/மாணவியர்களுக்கு விலை ஏதுமின்றி மடிக்கணினி வழங்கல்**

உள்நாட்டு மற்றும் பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. இது தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கான புதிய பாதைகளை உருவாக்கியுள்ளது. இன்றைய உலகில் மாணவ சமுதாயத்திற்கு மடிக்கணினி ஒரு இன்றியமையாக் கல்விச் சாதனமாக உள்ளது. மேலும், சமூக, பொருளாதார அடுக்கின் அடித்தட்டுப் பிரிவைச் சார்ந்த மாணவ/மாணவியர்களும், வளர்ந்து வரும் உலகளாவிய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில்

[2011 ஆகஸ்ட் 25

பங்குகொள்ள ஏதுவாக அவர்கள் தயார் செய்யப்பட வேண்டும். தற்போதுள்ள மின்னியல் கல்வியின் இடைவெளியைக் குறைத்திடவும், மாணவ/மாணவியருக்குச் சமவாய்ப்பு நல்கிடவும் இவ்வாயிரமாண்டின் வளர்ச்சி இலக்கிற்கு இயைந்தவாறு மாணவர்களின் திறனை மேம்படுத்துவது அவசியமானது என்பதால், மாணவ/மாணவியருக்கு அரசு மடிக்கணினி வழங்க முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும், பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ/மாணவியர்களுக்கும் விலை ஏதுமின்றி மடிக்கணினி வழங்கப்படும்.

**ஆண்டுவாரியாக மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கல்**

| ஆண்டு | மாணவ / மாணவியர்கள் | | | |
|---|---|---|---|---|
| | பள்ளிகள் | கலை (ம) அறிவியல் கல்லூரிகள் | பொறியியல் கல்லூரிகள் | பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் |
| 2011-12 | 12–ஆம் வகுப்பு | 1–ஆம் (ம) 3–ஆம் ஆண்டு | 2–ஆம் (ம) 4–ஆம் ஆண்டு | 1–ஆம் (ம) 3–ஆம் ஆண்டு |
| 2012-13 | 12–ஆம் வகுப்பு | 3–ஆம் ஆண்டு | 2–ஆம் (ம) 4–ஆம் ஆண்டு | 1–ஆம் (ம) 3–ஆம் ஆண்டு |
| 2013-14 முதல் | 12–ஆம் வகுப்பு | ---- | ––– | 1–ஆம் ஆண்டு |

இத்திட்டத்தின் முதலாண்டாகிய 2011-12-இல், ஏறத்தாழ 9.12 இலட்சம் மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினி பின்வருமாறு வழங்கப்படும்:



2011 ஆகஸ்ட் 25]

**2011–12 ஆம் ஆண்டில் மடிக்கணினி வழங்குதல்–நிறுவனங்கள் வாரியாக மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை**

| வரிசை எண் | கல்வி நிறுவனங்களின் விவரம் | மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பள்ளிகள் | 5.47 |
| 2. | கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 2.91 |
| 3. | பொறியியல் கல்லூரிகள் | 0.24 |
| 4. | பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் | 0.50 |
| மொத்தம் | | 9.12 |

நடப்பு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக அரசு ரூ.912 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்திடும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (ELCOT)ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவான செப்டம்பர் 15, 2011 அன்று மாணவ / மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் சிறப்புத் திட்டப் பணி தொடங்கப்படும். சம்பந்தப்பட்ட பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வித் துறைகள் மூலமாக மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும்.

மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினி சேவைக்கும் மற்றும் பழுது நீக்கல் போன்ற பணிகளுக்காகவும், வட்டங்கள்தோறும் 'சேவை மையங்கள்' அமைக்கப்படவுள்ளன.

[2011 ஆகஸ்ட் 25

### 4.2 மகளிர்க்கு விலை ஏதுமின்றி மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்

பொருளாதார அடிப்படையில், மேலும் வளம்பெற காற்றோட்டமான சமையல் அறைக்கு மகளிர்க்குத் தேவையான சாதனங்களை வழங்கி அவர்களது பணிகளை எளிதாக்கி வசதியுறச் செய்வது அவசியமானதாகும். எனவே, அரிசி பெறத் தகுதி உள்ள குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பங்களிலும் உள்ள மகளிர்க்கு மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் ஆகியவற்றை ஒரு தொகுப்பாக வழங்க இந்த அரசு தீர்மானித்துள்ளது. இத்தகைய நவீன வீட்டு உபயோக சாதனங்களை வழங்குவதன்மூலம் வறிய நிலையில் உள்ள மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் அவர்களுக்குச் சமவாய்ப்பு வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

30-06-2011 அன்றைய நிலையில் அரிசி பெறத் தகுதியுடைய குடும்பங்களைச் சார்ந்த ஏறக்குறைய 1.85 கோடி மகளிர் இத்திட்டத்தில் பயனடைவர். நடப்பு நிதியாண்டு 2011-12 இல் 25 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும். மேலும், தகுதியுடைய பயனாளிகள் அனைவருக்கும் மேற்குறிப்பிட்ட வீட்டு உபயோக சாதனங்கள் படிப்படியாக வழங்கப்படும். இத்திட்டத்திற்கென நடப்பு நிதி நிலை அறிக்கையில் ரூ.1,250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் கொள்முதல் செய்யும் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் (TNCSC) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் பணி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவான செப்டம்பர் 15, 2011 அன்று தொடங்கப்படும்.

சென்னையில் மாநகராட்சி ஆணையரின் கட்டுப்பாட்டிலும், பிற மாவட்டங்களில் வருவாய்த் துறைமூலம் மாவட்ட ஆட்சியர்களின் பொறுப்பிலும் இச்சாதனங்கள் வழங்கப்படும். இவற்றைத் தயாரித்து அளிக்கும் நிறுவனங்களின் மூலமாக இச்சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்க, உரிய சேவை மையங்கள் வட்ட அளவில் நிறுவப்படும்.



2011 ஆகஸ்ட் 25]

இத்திட்டத்தை விரைவாகவும் திறன்மிக்க வகையிலும் செயல்படுத்துவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் வருவாய்த் துறையில் கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும் அரசு பரிசீலித்து வருகிறது.

தகுதியான குடும்பத்தில் உள்ள ஒரு பெண்ணிற்கு இச்சாதனங்கள் வழங்கப்படும். எனினும், அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள ஒரு குடும்பத்தில் பெண் உறுப்பினர்களே இல்லை எனில் அக்குடும்பத் தலைவரிடம் இச்சாதனங்கள் வழங்கப்படும். இப்பயன்களை வழங்கும்போது ஊரகப் பகுதிகளிலுள்ள மகளிர்க்கு முதலில் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து பேரூராட்சி, பின்னர் நகராட்சி அதன் பின்னர் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மகளிர்க்கு வழங்கப்படும்.

### 5. நிறைவுரை

சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசு பல சிறப்புத் திட்டங்களை, சமூக நீதி கட்டமைப்புக்குள்ளாக, தீர்க்கமான பொருளாதார வளர்ச்சியினை அடையும் நோக்கத்துடன் செயல்படுத்தவுள்ளது. அதன் முதல்படியாக உரிய காலத்தில் திட்டங்கள் நடைபெறுவதைக் கண்காணிக்க புதிய துறையை இவ்வரசு உருவாக்கி செயல்படுத்தி வருகின்றது.

தளராத அர்ப்பணிப்பு, நீடித்த பொறுப்புணர்வு மற்றும் இலக்கு நோக்கிய ஆர்வத்துடன், திறன்மிக்க கண்காணிப்பின் வாயிலாக தமிழகத்தில் செயல்படுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களில் குறிப்பிடத்தக்க ஆக்கப்பூர்வமான மாறுதல் சமுதாயத்தில் மலரும் வண்ணம் இச்சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாற்ற விரும்புகிறது.

**மாணவ / மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், 2011–12**
**(மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை – இலட்சத்தில்)**






**மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்குதல் பயனாளிகளி – ஊரகப்பகுதி மற்றும் நகர்ப் பகுதி**
**(எண்ணிக்கை கோடியில்)**



[2011 ஆகஸ்ட் 25




மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்



2011 ஆகஸ்ட் 25]

# இணைப்பு IV

*(281ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண்–31 தகவல் தொழில்நுட்பவியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012

### அத்தியாயம்–I

### குறிக்கோள்

**தகவல் தொழில்நுட்பவியல் துறை**

1. மிக விரைவாக குடிமக்களுக்கு அரசின் தகவல்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றை இணையம் வாயிலாக அவர்கள் இருப்பிடத்திலேயே வழங்குவதற்கும்,

2. கிராமம் மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கும்,

3. தமிழ்நாட்டை, தகவல் தொழில்நுட்பத்திலான மின் ஆளுமையில் சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கும்,

4. தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை கணிசமான அளவுக்கு உயர்த்துவதற்கும்,

5. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கம்பிவட தொலைக்காட்சி சேவைகளை விரைவாக நியாயமான விலையில் வழங்குவதற்கும்,

6. கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச் செல்வதற்கும்,

7. குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் மேம்படுத்துவதற்கும் பாடுபடும்.

[2011 ஆகஸ்ட் 25

**முன்னுரை**

தகவல் தொழில்நுட்பத் தொழில் முதலீட்டிற்கு இன்றியமையாத தேவைகளான அறிவியல் மற்றும் சமூகக் கட்டமைப்பையும், மனித ஆற்றலையும் தமிழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதை முழுமையாகப் பயன்படுத்தி தகவல் தொழில்நுட்பத் தொழிலை வளர்ச்சி அடையச் செய்யவும், மக்களுக்கு அரசின் முழு பயன்களையும் பெற்றுத்தந்திடும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய கருவியாக பயன்படுத்திடவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க சீரிய தலைமையின்கீழ் இந்தியாவிலேயே, தமிழகத்தை தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒப்புயர்வற்ற முதன்மை மாநிலமாக உருவாக்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தகவல் தொலைத் தொடர்பு சார்ந்த தேசிய மின் ஆளுமைத் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் பல்வேறு மின் ஆளுமை திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில், மற்ற மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. சாமானிய மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து அரசு சேவைகளும் அவர்களது இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே திறம்படவும், வெளிப்படையாகவும், நம்பகத்தன்மையுடனும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று உறுதி பூண்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு பார்வை, தற்போதுள்ள அரசு நடைமுறைகளை மாற்றி உலக தரத்தில் தனியார் துறையினரின் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடிக்க உதவும். தற்போது அரசு அலுவலகங்களில் கணினிகள் தட்டச்சு செய்வதற்கும், மின் அஞ்சல் அனுப்புவதற்கும் பயன்படுத்தப்படும் நிலையில், பல துறைகள் இணையவழி சேவைகளை வழங்க தொடங்கியுள்ள நிலையில், அதிநவீனமயமான ஆளுமை இன்னும் எட்டப்படவில்லை. மின் ஆளுமை, குடிமக்கள், வணிகம் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கும் சேவைகளை மேம்படுத்தி வழங்குவது மட்டுமல்லாமல், அரசின் செயல்முறையை மறுவடிவமைத்து, திறம்படவும், வெளிப்படையான முறையில் அரசு நிறுவனங்கள் செயல்படவும் வழிவகை செய்யும். இதன்மூலம் நமது சமுதாயம் ஒரு தன்னிறைவு பெற்ற சமுதாயமாகத் திகழும். தற்போது, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்திறம் மிகுந்த சீரிய தலைமையின்கீழ் செயல்பட்டுவரும்



2011 ஆகஸ்ட் 25]

தமிழக அரசு, தகவல் தொலைத் தொடர்புத் தொழில்நுட்ப கருவிகளின் உதவியுடன், ஒளிவுமறைவற்ற, திறன் மிகுந்த வேகமான ஆளுமையை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

தொழில்நுட்பத்தைப் புகுத்தி உலகத் தரத்திலான வசதிகளை, அரசு அலுவலகங்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன்மூலம், மக்களுக்கான தமது பணி மற்றும் செய்யும் சேவைகள் குறித்த மன நிலையில் நல்ல மாற்றத்தைக் கொண்டு வரலாம். ஆகவே, தகவல் தொழில்நுட்பவியல் துறை, அரசுத் துறைகளில் மின் ஆளுமையின் நோக்கங்களைச் செயல்படுத்துவதில் உறுதுணையாக இருந்து வருகிறது.

ஒரு குடிமகன், அரசு அலுவலகத்திற்குச் சென்று, தனது குறைகளை முறையிட்டுத் தீர்வு கண்டு வர பயணச் செலவுக்காகக் குறிப்பிடத்தக்க அளவில் பணத்தையும் நேரத்தையும் செலவிட வேண்டியுள்ளது. மேலும் ஊதிய இழப்பு மற்றும் இதர செலவுகளும் இதில் அடங்கும்.

அரசியல் அமைப்பில், அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டுமானால் இந்த நிலையை நாம் அடியோடு மாற்ற வேண்டும். ஒவ்வொரு குடிமகனும், அரசு அலுவலகங்களுக்குப் போகாமலேயே, இணையத் தொடர்பின் வாயிலாகவே, அரசு சேவைகளைப் பெறச் செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய குறிக்கோளாகும். வழக்கமான அரசு சேவைகளைப் பெற இணையதளம் மக்களுக்கும் அரசுக்கும் இடையே தொடர்பு கொள்ளும் ஒரு முக்கிய வழியாக இருக்க வேண்டும். இந்த மாற்றத்திற்கான மந்திரச் சொல் — "அரசு அலுவலகங்களுக்கு மக்கள் அலைவதைக் குறைப்போம். மக்களுடன் அரசின் தொடர்பை வளர்ப்போம்".

மேற்கண்ட செயல் திட்டத்தை வடிவமைத்து, அரசு மின் ஆளுமை கொள்கையை விரைவில் வெளியிட உள்ளது.

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்புத் துறைகளில் முதலீடு மற்றும் உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடத்தைப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த ஏற்றுமதியை கணிசமான அளவில் உயர்த்துவதே மாண்புமிகு முதலமைச்சர்

[2011 ஆகஸ்ட் 25

அவர்களின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையில், ஏறத்தாழ 700 நிறுவனங்களில் 2,00,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இது 2011-2012 ஆம் ஆண்டில் மேலும் 30 விழுக்காடு உயரக்கூடும். 40,000 புதிய மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் துறைகளில் ஏறத்தாழ 1,50,000 பேர் பணியாற்றுகின்றனர். 2011-2012 ஆம் ஆண்டில் மேலும் 60,000 பேர்களுக்கு, தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த துறைகளில் வேலை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப சேவைகளின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டு ரூ.25,000 கோடி ஏற்றுமதி வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் ஏறத்தாழ 1,000 நிறுவனங்கள் உள்ளன.

தமிழ்நாட்டினை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் உலக அளவில் விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாக மிக விரைவாக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.

உயிரிழந்து, செயலற்றுக் கிடந்த அரசு கேபிள் நிறுவனத்திற்கு புத்துயிரூட்டி, அனைத்து மக்களுக்கும் நியாயமான கட்டணத்தில், கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகளை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார்கள்.

## அத்தியாயம்-II

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

## (Electronics Corporation of Tamil Nadu)

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சி இந்தியாவில் வேரூன்றிய சமயத்தில் மின்னணுத் தொழிலை மேம்படுத்திடும் நோக்கத்தோடு துவக்கப்பட்ட "தமிழ்நாடு மின்னணு நிறுவனம்" தன்னை தமிழக



2011 ஆகஸ்ட் 25]

அரசின் தகவல் தொழில்நுட்பத்தின் முக்கிய அங்கமாக மாற்றிக்கொண்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசோடு இணைந்து, அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு வாரியங்கள் போன்றவற்றிற்கு தகவல் தொழில்நுட்பம், மின் ஆளுமை, இணையதள இணைப்பு மற்றும் திறன் கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் சேவையாற்றி வருகிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் வன்பொருள் கொள்முதல், மென்பொருள் உருவாக்கம் மற்றும் இந்திய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் திட்டமான பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) முதலியவற்றை செயல்படுத்திட உகந்த ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது. தற்போது இந்திய அரசின் மற்றுமொரு திட்டமான மாநில தரவு மையத்தை (State Data Centre) செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிற்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே வழி காட்டுகின்ற வகையில் உலகத்திலேயே முதன்முறையாக, அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கிடும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் அனுபவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த வரலாற்று சிறப்புமிக்க திட்டத்திற்கான மடிக்கணினி கொள்முதல் பணியினை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளார்கள்.

### கணினிப் பயிற்சி மையம் (லினக்ஸ் மற்றும் பயன்பாட்டு மென்பொருள்) (Linux and Application Software)

300 நபர்கள் அமரும் இடவசதியுடன் சென்னையிலும், 25 நபர்கள் அமரும் இடவசதியுடன் மாவட்ட அளவிலும் கணினி பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம், இதுவரை கிட்டத்தட்ட 18,000 அரசு ஊழியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

[2011 ஆகஸ்ட் 25

## அத்தியாயம்–III

## தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

## (Tamil Nadu e-Governance Agency)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, இந்திய அரசின் மின் ஆளுமை முயற்சிகளை முனைப்புடன் செயல்படுத்தும் மாநிலத்தின் ஒருங்கிணைந்த முகமையாக செயல்படுகிறது. மேலும், இது தமிழக அரசின் அனைத்து மின்ஆளுமை திட்டங்களைச் செயல்படுத்தும் ஆதரவு முகமையாகவும், திறன் கட்டமைப்பை உருவாக்கி, திட்டங்களை திட்ட மேலாண்மைமூலம் செயல்படுத்தவும் உதவுகிறது.

### மின் ஆளுமை திட்டங்கள்

### முன்னோடி மின் மாவட்டம்

தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் அதன் பெரும்பாலான சேவைகள் மாவட்டங்கள்மூலம் மக்களைச் சென்றடைகின்றன. அதனால், அரசின் சேவைகள் அடிமட்டம் வரை சிறப்பாக செயல்படுவதற்கு மின் ஆளுமை திட்டம் பெரும்பங்கு வகிக்கிறது. மக்களுக்கு சேவைகள் செய்வதற்காக வருவாய்த் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, சமூக நலத் துறை போன்ற துறைகளை ஒன்றாக இணைத்து, தமிழக அரசின் நிர்வாகத்தினை கணினிமயமாக்குவதில் மின்னணு மாவட்டத் திட்டம் பெரும்பங்கு வகிக்கின்றது. இத்திட்டத்தின்மூலம் மாவட்ட நிர்வாகத்தின் பணிப்போக்கு தானியக்க முறையில் உருவாக்கப்படுவதால் துறைகளின் சேவைகள் செம்மையாக வழங்கப்படும். இது மாநிலத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். இத்திட்டம் முதற்கட்டமாக அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நீலகிரி மாவட்டமும் முன்னோடி மின் மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அனைத்து கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் / வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு, தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பின் மூலமாக (TNSWAN) மாநிலத் தரவு மையத்துடன் (State Data



2011 ஆகஸ்ட் 25]

Centre) இணைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியயோரின் அலுவலகங்களுக்குத் தேவையான வன்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகிய அலுவலர்களுக்குத் தேவையான வன்பொருட்கள் வழங்கப்படவுள்ளன. பல்வேறு துறை சார்ந்த அரசு சேவைகளைத் துரிதமாகவும், இணையதளம் வாயிலாகவும் மற்றும் பொதுச் சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்கத் தேவையான சிறப்பு மென்பொருளும் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

**(1) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கான மின் மாவட்ட மென்பொருள்**

முன்னோடி மின் மாவட்டங்களிலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பள்ளி மேற்படிப்பிற்கு கல்வி உதவித் தொகை, முதற்கட்டமாக இணைய வழியாக வழங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களது அடையாள அட்டையைப் பயன்படுத்தி தங்களது விண்ணப்பம் குறித்த நிலையினை பொதுச் சேவை மையங்கள்மூலம் சரிபார்த்துக்கொள்ள முடியும். இந்த வெளிப்படையான அணுகுமுறை உதவித் தொகைக்கென பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்டவை, நிலுவையிலுள்ளவை மற்றும் மாணவர்களின் குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைத் தீர்க்கவும் அந்தத் துறைக்கு உதவுகிறது.

**(2) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கான மின் மாவட்ட மென்பொருள்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக பள்ளி மேற்படிப்பு உதவித் தொகைத் திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது.

**(3) சமூக நலத் துறைக்கான மின்மாவட்ட மென்பொருள் பின்வரும் திட்டங்களை உள்ளடக்கியது**

- ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்
- விதவை மறுமண நிதியுதவித் திட்டம்
- ஏழை விதவை மகளின் திருமண நிதியுதவித் திட்டம்
- ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம்

[2011 ஆகஸ்ட் 25

- கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்
- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

**வருவாய்த் துறைக்கான மின் மாவட்ட மென்பொருள்**

வருவாய்த் துறையின் சேவைகளை பொதுச் சேவை மையங்கள் மற்றும் இணையம் மூலமாக வழங்கும் திட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அரசு அலுவலகத்திற்குச் செல்லாமலே, இணையம் வழியாக விண்ணப்பித்து, எண்ணிலக்க வடிவச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- குடும்பத்தில் பட்டதாரிகள் இல்லை என்பதற்கான சான்றிதழ்
- ஆதரவற்ற பெண்களுக்கான சான்றிதழ்
- வருமானச் சான்றிதழ்
- வகுப்புச் சான்றிதழ்
- குடியிருப்புச் சான்றிதழ்

**பொதுச் சேவை மையங்கள் (Common Service Centres)**

பொதுமக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்த இவ்வரசு அவர்களது இருப்பிடத்திலேயே பொதுச் சேவை மையங்கள்மூலம் செம்மையாகவும், வெளிப்படையாகவும் மற்றும் நம்பகத்தன்மையுடனும், மிகக் குறைந்த செலவில் அரசின் அனைத்து சேவைகளையும் எளிதாக வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது. தேவையான பொதுச் சேவை மையங்களை கிராமப்புறங்களில் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார்கள்.

**திறன் கட்டமைப்பு (Capacity Building)**

அரசுத் துறைகளின் மின் ஆளுமை திட்டத்தின் வழிமுறைகளை தயாரித்தலும், மின் ஆளுமை திட்டம் குறித்த அரசு அலுவலர்களின் பயிற்சித் திறன் உருவாக்கம் ஆகியவற்றை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மின்



2011 ஆகஸ்ட் 25]

ஆளுமை திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள துறைகளுக்கான மின் ஆளுமை திட்ட ஊக்குவிப்பு, திட்ட மேலாண்மை மற்றும் கணினிப் பயிற்சி ஆகிய பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு பிரிவின் கீழான ஆலோசகர்கள் அடங்கிய மாநில மின் ஆளுமைக் குழு (SeMT) ஒன்று இதற்கென தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**மாநில மின் குறிக்கோள் குழு (State e-Mission Team or SeMT))**

- தேசிய மின் ஆளுமை திட்டத்தின் குறிக்கோளை அரசுத் துறைகள் செயல்படுத்த உதவிடும் பொருட்டு, “மாநில மின் ஆளுமைக் குழு” அமைக்கப்பட்டுள்ளது.
- தேசிய மின் ஆளுமை திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்டு ஆலோசனை வழங்கி, தகுந்த ஒத்துழைப்பை இக்குழு வழங்குகிறது.
- துறைகள், தங்கள் சேவைகளை இணையதளம் வாயிலாகவும் பொது சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்க “திட்ட மின் குறிக்கோள் குழு” (Project e-Mission or e-Team) அமைக்க இக்குழு உதவும்.
- துறைகள், தங்கள் சேவைகளை இணையதளம் வாயிலாகவும் பொது சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்குவதற்கு ஏதுவான திட்ட வழிமுறைகளைத் தயாரிக்க இக்குழு உதவும்.
- துறைப் பணியாளர்கள் தங்கள் துறைச் சேவைகளை இணையதளம் வாயிலாகவும், பொது சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்கத் தேவையான பயிற்சி மற்றும் திறன் உருவாக்கத்தை இக்குழு வழங்கும்.
- மாநில மின் ஆளுமைக்குழு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசகர்களைக் கொண்டுள்ளது:—

[2011 ஆகஸ்ட் 25

- முதன்மை ஆலோசகர்
- முதுநிலை ஆலோசகர் (தொழில்நுட்ப மேலாண்மை)
- முதுநிலை ஆலோசகர் (மாற்றுமுறை மேலாண்மை)
- ஆலோசகர் (தொழில்நுட்ப மேலாண்மை)
- ஆலோசகர் (திட்ட மேலாண்மை)
- ஆலோசகர் (நிதி மேலாண்மை)

**தேசிய தகவல் மையம் (NIC)**

தமிழ்நாட்டில் மின் ஆளுமைக்கு வித்திட்ட முன்னோடியான, தேசிய தகவல் மையத்தின் பங்கினை மாநில அரசு அங்கீகரிக்கிறது. மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின்கீழ் இயங்கிவரும் ஒரு முதன்மையான அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனமான தேசிய தகவல் மையம் அரசுத் துறைகளில், தகவல் தொலைதொடர்பு குறித்த தீர்வுகளைச் செயல்படுத்துவதில் முன்னிலை வகிக்கிறது.

தேசிய தகவல் மையம், நாட்டில் மின் ஆளுமையைப் புகுத்தி கடந்த 30 ஆண்டுகளில் ஒரு வலிமையான அடித்தளத்தை உருவாக்கி சிறந்த மற்றும் மிக வெளிப்படையான ஆளுமையை ஏற்படுத்தி கடைநிலை மக்களையும் எட்டிட எண்ணும் தமிழக அரசின் முயற்சிக்கு உதவுகிறது.

மத்திய அரசு, மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாகங்கள், மாநில மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தகவல் தொலைதொடர்பு தொழில்நுட்பவியலைக் கொண்டு மின்ஆளுமை தொடர்பான ஒத்துழைப்பு வழங்குவதில் தேசிய தகவல் மையம் முதுகெலும்பாக திகழ்கிறது. இம்மையம், பல்வகை தகவல் தொலை தொடர்பு சேவைகளை வழங்கி வருகிறது. அவற்றுள் நிக்நெட் (NICNET) எனும் தேசிய அளவிலான தொலைதொடர்பு வலையமைப்பு நுழைவாயில்மூலம், 53 மத்திய அரசின் துறைகள், 35 மாநில / யூனியன் பிரதேசங்கள், தலைமைச் செயலகங்கள் மற்றும் 603 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குத் தகவல் தொலை தொடர்புச் சேவைகள் வழங்கப்படுகின்றன.



2011 ஆகஸ்ட் 25]

நிக்நெட், பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல், அரசு சேவைகளில் முன்னேற்றம், தேசிய மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பரந்த வெளிப்படைத்தன்மை மற்றும் மக்களிடம் அவற்றின் பொறுப்பினை மேம்படுத்துதல் ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**அத்தியாயம்–IV**

**தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு**

தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பானது, இணைய அகன்ற அலைவரிசைத் தடங்கள், கணினித் திறன், அகன்ற அலைவரிசையாக்கம், தரவு சேமிப்பு, கட்ட வாரியான வளப் பகிர்மானம் முதலான பலதரப்பட்ட தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்புக்குத் தேவையான சாதனங்கள், வசதிகள் மற்றும் வளங்களை உள்ளடக்கியுள்ளது.

தடையற்ற சேவைகளை அளிக்கும் விதத்தில் கீழ்க்கண்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

(அ) மாநில தரவு மையம் (State Data Centre)

(ஆ) தமிழ்நாடு மின்னணு நிறுவன தரவு மையம்

(இ) தேசிய தகவல் மைய தரவு மையம்

(ஈ) தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

**பின்தளம் (Back end)**

செயலாக்கத் திட்டத்தின் பகுதியாகவும், மாநில அரசின் நிதி உதவி பெறும் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், ஒவ்வொரு அரசுத் துறையும் தங்கள் துறையின் "தற்போதைய நிலை குறித்த ஆய்வு", அரசின் செயல்முறை மறுவடிவமைப்பு ஆய்வு மற்றும் "செயல்படுத்தப்பட வேண்டியவை குறித்த ஆய்வு" ஆகியவற்றை மேற்கொண்டு மென்பொருளை உருவாக்கி, குடிமக்களுக்கு சேவைகளை அவர்களது இருப்பிடத்திலேயே கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும். இத்தகைய மென்பொருள் உருவாக்கத்தில் கூடியவரை திறந்த நிலை தொழில்நுட்பத்தையே பயன்படுத்த அரசு முயலும்.

[2011 ஆகஸ்ட் 25

## முன்தளம் (Front end)

குடிமக்கள்/வணிக நிறுவனங்கள் தங்களுக்கான தகவல் மற்றும் பரிமாற்ற சேவைகளை வீட்டிலிருந்தும், இணைய உலா மையம், பொது சேவை மையங்கள், அலுவலகங்கள் மற்றும் இணைய தளம் வாயிலாக பெறுவதற்கு உரிய வழிவகை செய்யப்பட வேண்டும்.

குடிமக்கள் இச்சேவைகளைப் பெறுவதற்கான முகப்பு, மாநில சேவை இணையதளமாகும். www.tn.gov.in என்ற மாநில சேவை இணையதளமானது மாநில சேவை விநியோக நுழைவாயில் மற்றும் மின் படிவங்களுடன் விரைவில் துவக்கப்படவுள்ளது.

## இணைப்பு (CONNECTIVITY)

### தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) – செங்குத்து இணைப்பு (Vertical Connectivity)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பை ரூ.181.69 கோடி செலவில் உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பில் 708 இருப்பு முனைகள் உள்ளன. தரவு, ஒளி, ஒலி இணைப்புகளின் வாயிலாக குடிமக்களுக்கு சேவைகளை துரிதமாகவும், வெளிப்படையாகவும் வழங்க ஏதுவாக இந்த வலையமைப்பின்மூலம் அனைத்து அரசுத் துறைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) – கிடைமட்ட இணைப்பு (Horizontal Connectivity)

அரசுத் துறைகள் தங்களது பயன்பாடுகளை அளிப்பதற்கும், ஒலி இணையம் மற்றும் ஒளி வாயிலான கலந்துரையாடல் வசதிகளை பெறுவதற்கும் ஏதுவாக தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இருப்புமுனைகள் (Point of Presence) வாயிலாக இணைக்கப்படுவது அவசியமாகிறது.

வணிகவரித் துறை, குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம் (TNHSP), கருவூலக் கணக்குத் துறை, பத்திரப் பதிவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வனத் துறை, தமிழ்நாடு மின்னாளுமை முகமை, மாநில சுகாதாரக் குழுமம், வீட்டு வசதித் துறை, நில அளவைத் துறை, தமிழ்நாடு



2011 ஆகஸ்ட் 25]

சிமெண்ட் நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த 5,000 அலுவலகங்களுக்கும் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பிலிருந்து கிடைமட்ட இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

### அகன்ற அலைவரிசை இணைப்பு (Broadband Connectivity)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி வாயிலாக பாரத் சஞ்சார் நிகாம் (BSNL) நிறுவனத்தை தேர்ந்தெடுத்து, அந்நிறுவனத்தின் வாயிலாக சுமார் 7,000 அரசுத் துறை அலுவலகங்களுக்கும் பள்ளிகளுக்கும் அகன்ற அலைவரிசை இணைப்பை வழங்கியுள்ளது.

### தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network)

தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு ஒரு அதிவேகத் திறனுடைய (10 Gbps மற்றும் அதன் மடங்குகளின் அளவு வேகத்திறன் கொண்ட) ஒரு வலையமைப்பாகும். மத்திய அரசின் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ள இவ்வலையமைப்பு நாடு முழுவதிலுமுள்ள கல்வி நிறுவனங்களை இணைக்கிறது. இவ்வலையமைப்பில் உள்ள நிறுவனங்கள் 1 Gbps மற்றும் அதற்கு மேலான வேகத்திறனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒட்டுமொத்த வலையமைப்பும் உலகளாவிய அறிவியல் சமூகத்துடன் பன்மடங்கு வேகத்திறனுடன் தடையின்றி இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு இவ்வலையமைப்பின் அனுகூலங்களை சாதகமாக்கிக் கொண்டு, தனது மின் ஆளுமை முயற்சிகளை மேம்படுத்துவதுடன், கல்வி நிறுவனங்களை இவ்வலையமைப்புடன் இணைக்க ஊக்கமளிக்கும்.

### வழித்தட உரிமைக் கொள்கை (Right of Way Policy)

தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தமிழகத்தின் இதர சாலைகளில் கண்ணாடி இழை வடங்கள் பதிக்க பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழித்தட உரிமைக் கொள்கையின்கீழ் அனுமதி வழங்கிட நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அரசு வெளியிட்டுள்ளது.

## தரவு ஏற்றுதல் (HOSTING)

### மாநில தரவு மையம் (State Data Centre)

தேசிய மின் ஆளுமை திட்டத்தின் மின் ஆளுமை முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில், அதன் முக்கிய கட்டமைப்புகளில் ஒன்றான மாநில தரவு மையத்தினை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கியுள்ளது. இத்தரவு மையம் அரசுத் துறைகளுக்கிடையேயும் (G2G), அரசிடமிருந்து மக்களுக்கும் (G2C) மற்றும் அரசிடமிருந்து வணிகத்திற்கும் (G2B) சேவைகளை சிறப்பான வகையில் வழங்க ஏதுவாக தனது சேவைகள், பயன்பாடுகள் மற்றும் கட்டமைப்புகளை ஒருங்கிணைக்கும். மாநில தரவு மையமானது, தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் பொதுச் சேவை மையங்கள் வாயிலாக தனது பெரும்பாலான சேவைகளை அளிக்கும்.

அரசுத் துறைகளின் அனைத்து பயன்பாடுகளும் மாநில தரவு மையம், தமிழ்நாடு மின்னணு நிறுவன தரவு மையம் மற்றும் தேசிய தகவல் மைய தரவு மையத்தில் ஏற்றப்பட்டுள்ளன. மாநில தரவு மையத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவு மீட்பு மையம் ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

## அத்தியாயம்—V

## கொள்கைகள்

### மின் ஆளுமைக் கொள்கை (e-Governance Policy)

கணினிப் பயன்பாட்டினால் மட்டுமே அரசின் செயல்பாட்டுத் திறனில் முன்னேற்றத்தினைக் கொண்டு வந்துவிட முடியாது. அரசின் செயல்திறனை மேலும் உயர்த்திட உதவிடும் மின் ஆளுமையை செயல்படுத்திடும் வகையில், ஒரு வழிகாட்டி அணுகுமுறை மற்றும் தொலைநோக்குடன்கூடிய பொதுவான கொள்கை அவசியமாகிறது. மின் ஆளுமை கொள்கையானது தெரிந்த அளவுருக்களையும், தெளிவான பார்வையையும் கொண்டதாக அமைய வேண்டும். எனவே விரைவில் ஒரு மின் ஆளுமைக் கொள்கையை அரசு செயல்படுத்தவுள்ளது.

ஏற்கெனவே மின் பாதுகாப்புக் கொள்கை நடைமுறையில் இருந்த போதிலும், அதனைச் செயல்படுத்துவதில் கவனம்





செலுத்தப்பட வேண்டும். அதைப் போலவே, மின் கழிவுக் கொள்கையும் செயல்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசின் "குடிமக்களை ஈடுபடுத்தும் நெறிமுறைகளைப்" பின்பற்றி, அரசின் அனைத்து மின் ஆளுமை செயலாக்கத்திலும் மக்களை ஈடுபடுத்திட அரசு தீவிரமாக முயன்று வருகிறது.

### மின்னணு சேவைகள் அளித்தல் சட்டம் (Electronic Services Delivery Bill)

குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் மக்களுக்கு மின்னணு சேவைகளை அளித்திடும் சட்டத்தினை 2011-2012 ஆம் ஆண்டிலேயே நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்வதற்கான பணிகளில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இது குறித்த ஒரு வரைவு சட்டமுன்வடிவை மக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கென இணையத்தில் வெளியிட்டுள்ளது.

## அத்தியாயம்—VI

## மின் ஆளுமை முயற்சிகளில் பிற துறைகளுக்கு தகவல் தொழில்நுட்பவியல் துறை அளித்துவரும் சேவைகள்

### (அ) வன்பொருள் கொள்முதல் (Hardware Procurement)

அரசுத் துறைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான வன்பொருட்களைக் கொள்முதல் செய்திட தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தையும் ஒரு கொள்முதல் முகமையாகக் கருதிட அரசு ஆணையிட்டுள்ளது.

சந்தை விற்பனை விலையைக் காட்டிலும் 20-லிருந்து 30 சதவிகிதம் வரை குறைவான விலையில் தரம் உயர்ந்த பொருட்களை கொள்முதல் செய்திட உதவிடும் புதுமையான, திறந்த மற்றும் வெளிப்படையான மின்னணுக் கொள்முதல் கொள்கை, விற்பனையாளர்களிடம் போட்டியை ஊக்குவிக்கிறது.

### (ஆ) மென்பொருள் உருவாக்கம் (Software Development)

அரசுத் துறைகளின் மென்பொருள் தேவைக்கென அவற்றின் தேவை மற்றும் கருத்துரு உருவாக்கல், மின்னணு ஒப்பந்தப்

புள்ளிகள் கோரல் மற்றும் மென்பொருள் உருவாக்குபவர்களைத் தேர்ந்தெடுத்தல் போன்ற பணிகளில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவை முனைப்புடன் உதவிகள் வழங்கி வருகின்றன. மென்பொருள் உருவாக்கல் நிலை சுழற்சி அணுகுமுறையினை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மேற்கொண்டு வருவதன்மூலம், மென்பொருள் உருவாக்கலின் அனைத்து நிலைகளும் அறியப்பட்டு, முறையாக ஆவணப்படுத்தப்படுகிறது.

**துறை வாரியான மின் ஆளுமை முயற்சிகள்(Department-wise e-Governance Initiatives)**

**(1) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (Adi-Dravidar & Tribal Welfare Department)**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் கல்வி உதவித் தொகை வழங்கிட இணையம் சார்ந்த மென்பொருள் பயன்பாட்டில் உள்ளது. இம்முறை அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 3,470 கல்வி நிறுவனங்களிலும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, இதன் மூலம் 2.60 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

**(2) வேளாண்மைத் துறை (Agirculture Department)**

**அக்ரிஸ்நெட் (AGRISNET)**

விவசாயிகளுக்கு ஒற்றைச் சாளர முறையில் தகவல்கள் மற்றும் சேவைகளை வழங்கிட மென்பொருள் ஒன்று வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள், பயிர், பருவநிலை போன்ற தகவல்களை விவசாயிகளுக்கு அளிக்கும்.

(http://www.tnagrisnet.tn.gov.in/website/index.php)

**(3) கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை (Animal Husbandry, Dairying & Fisheries Department)**

அவசர காலங்களில் மீனவர்களின் படகிற்கும் கரையில் உள்ள மையத்திற்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்தி, தேடுதலை விரைவுபடுத்திடவும் மற்றும் உயிர்காத்திடவும் உதவிடும் வகையில் வி.எச்.எப். கருவிகள் பொருத்தப்பட்டு, தடையற்ற தொடர்புத் திட்டம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





**(4) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (BC, MBC & Minorities Welfare Department)**

முன்னோடி மின் மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதன்மூலம் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பத்தாம் வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடர உதவித் தொகை வழங்கும் பணி முழுமையாக இணையதள வழியாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் அடையாள அட்டையின்மூலம் தங்களது விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை பொது சேவை மையங்கள் வாயிலாக அறிந்துகொள்ள இயலும். இத்தகைய வெளிப்படையான அணுகுமுறையின்மூலம் இதுவரை வழங்கப்பட்டுள்ள மற்றும் நிலுவையில் உள்ள கல்வி உதவித் தொகை குறித்த விவரங்கள் மற்றும் மாணவர்களின் குறைகளை துறையினால் கண்டறிய இயலும்.

**11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி (Free Cycles for Plus One Students)**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்கென மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் இம்மென்பொருள்மூலம் நேரடியாக தமது பள்ளிகளிலுள்ள உரிய மாணவர்களின் விவரங்களைப் பதிவு செய்ய இயலும். தேவைப்படும் எண்ணிக்கையைக் கணக்கிடவும், கொள்முதல் செய்திடவும் மற்றும் விநியோகத்தினைக் கண்காணிக்கவும் இம்மென்பொருள் வழி செய்கிறது.

**(5) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (Co-operation, Food and Consumer Protection Department)**

குடும்ப அட்டைகள் வழங்கிட தமிழகத்திலுள்ள இரண்டு கோடி குடும்பங்களின் தரவுகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கி, அவை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலக்கணினியில் இணையதளம் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. தற்போது மாவட்ட ஆட்சியர்களால் இத்தரவுகள் பல்வேறு திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

[2011 ஆகஸ்ட் 25

**மத்தியக் கூட்டுறவு வங்கிக்கான மென்பொருள் (Central Co-operative Banking Software)**

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டினை தன்னியக்கமாக்கிட தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஒரு வலைதள மென்பொருளை உருவாக்கியுள்ளது.

இம்மென்பொருள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளில் நிறுவப்பட்டுள்ளது.

இதுதவிர, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டினைத் தன்னியக்கமாக்கிடும் வகையில் வலைதள மென்பொருள் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

**கையடக்க ரசீது கருவி (Hand Held Billing Machines)**

கூட்டுறவு பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் செயல்படும் 28,500 கூட்டுறவு சில்லரை விற்பனை நிலையங்கள் மற்றும் மண்ணெண்ணெய் நிலையங்களுக்கு கையடக்க ரசீது கருவிகளை வழங்கும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கையடக்க ரசீது கருவிகளை சென்னை மாநகரிலுள்ள 1,411 நியாய விலைக் கடைகள் மற்றும் மண்ணெண்ணெய் நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இதுவரை தமிழ்நாடு மின்னணு நிறுவனம், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 1,156 நியாயவிலைக் கடைகளுக்கு இந்தக் கருவிகளை வழங்க உத்தரவு கிடைக்கப்பெற்றுள்ளது.

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையை கணினிமயமாக்குதல் (e-Services of Civil Supplies and Consumer Protection Department)**

வலைதளம்மூலம் மாவட்ட வழங்கல் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம், பொதுமக்களுக்கு விரைவாக மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவது இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.



2011 ஆகஸ்ட் 25]

இம்முறையின்மூலம் பல்வேறு சேவைகளை வலைதளம் வாயிலாக வழங்கலாம். இம்மென்பொருள், துறை மற்றும் பொதுமக்களிடையே பாலமாக செயல்படும்.

**(6) வணிக வரி மற்றும் பதிவுத் துறை (Commercial Taxes and Registration Department)**

வணிகர்கள் இணையதளம்மூலம் தங்களது விவரங்களைப் பதிவு செய்யவும், மாதாந்திர மதிப்புக் கூட்டு வரி விவரங்களைத் தாக்கல் செய்திடவும், மென்பொருள் ஒன்றினைத் தயாரித்து இணையம் வாயிலாக வெளியிட தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினை வணிக வரித் துறை கேட்டுக்கொண்டது. அதனடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மென்பொருள் ஒன்றினைத் தயாரித்து, அது சோதனை அடிப்படையில் வணிகவரித் துறையினால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"http://tnvat.gov.in" என்ற இணையதள முகவரியைப் பயன்படுத்தி வணிகர்கள் தங்களது மாதாந்திர மதிப்புக் கூட்டு வரி விவரங்களைத் தாக்கல் செய்திடவும் மற்றும் இணையம் மூலம் கட்டணம் செலுத்திடவும் முடியும்.

**(7) எரிசக்தித் துறை (Energy Department)**

திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தினை (Restructured Accelerated Power Development and Reforms Programme) மத்திய அரசு துவங்கியுள்ளது. தமிழ்நாடு மின் நிதிக் கழகம் இதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

தகவல் தொழில்நுட்பத்தினை முதுகெலும்பாகக் கொண்டு, மின் பகிர்மான நிலையில் தரவுகளைப் பெற்று, அதன் முடிவுகளின் அடிப்படையில் மின் பகிர்மானத்தை வலிமைப்படுத்திட இத்திட்டம் உதவுகிறது.

பெருநகரம், மாநகரம் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தாழ்வழுத்த மின் கட்டண வசூல் முறை முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்டு "பெஸ்ட்" எனும் திட்டத்தின்மூலம் (Project BEST - Billing of Energy Services in TNEB) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2011 ஆகஸ்ட் 25

**(8) சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (Environment & Forests Department)**

**தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் இணைய வழி விண்ணப்ப ஒப்புதல் (Online Application for Consent for TNPCB)**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இணைய வழியாக விண்ணப்பம் தாக்கல் செய்து ஒப்புதல் பெறுவதற்கான மென்பொருள் ஒன்றினை தேசியத் தகவல் மையம், சென்னை உருவாக்கியுள்ளது.

இம்மென்பொருள், நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை எந்நேரத்திலும், எவ்விடத்திலிருந்தும் தாக்கல் செய்திட வகை செய்கிறது. மேலும், இம்மென்பொருளில் மாவட்ட அலுவலகங்கள் தங்களிடம் பெறப்பட்ட விண்ணப்பங்களின் ஒவ்வொரு நிலையையும் பின்நிலை இயக்கங்களின்மூலம் (Back Office operations) பதிவு செய்திடும் வசதி உள்ளது.

**(9) நிதித் துறை (Finance Department)**

**மின்னணு ஓய்வூதிய முறை (e-Pension System)**

ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திற்கென "மின்னணு ஓய்வூதியம்" என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இது உள்ளமைந்த இணையத்தில் பணிப்போக்கு வழி வடிவமைப்பினைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள் ஓய்வூதிய விண்ணப்பத்தினைப் பெறுவதிலிருந்து மாநில கணக்காயர் அலுவலகத்தின்மூலம் ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்வது வரையிலான அனைத்துக் கட்டங்களையும் கையாளுவதன்மூலம் ஓய்வூதியதாரர்களுக்கு பெரிதும் உதவி புரிகிறது.

**தானியங்கி கருவூலப் பட்டியல் ஏற்பு முறை (Automated Treasury Bill Passing System)**

கருவூலக் கணக்குத் துறைக்கென ஒரு இணையவழி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள், பணிகளை எளிதாக்குவதுடன், பட்டியல்களை சரிபார்த்து அன்றைய தினமே ஒப்புதல் வழங்கிட வகை செய்கிறது. இம்மென்பொருள் வழியாக அறிக்கைகளை உருவாக்குவதனால் தற்போதுள்ள புத்தக வடிவ கையேடு முறையினைத் தவிர்க்கலாம்.



2011 ஆகஸ்ட் 25]

**(10) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை (Health and Family Welfare Department)**

**சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (Health Management Information System-HMIS)**

தமிழக அரசின் இரண்டாம் நிலை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஒரு மையப்படுத்தப்பட்ட வலை சார்ந்த பயன்பாட்டினை 60 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இதன்மூலம் தகவல் தொடர்புத் திறனைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதும் சுகாதாரம் குறித்த தரவுகளை சேகரித்து, சேமித்து, துல்லியமாக ஆராய்வதே இத்திட்டத்தின் பரந்த நோக்கமாகும்.

தமிழ்நாட்டின் அனைத்து சுகாதாரத் தலைமையகங்களுக்கும் துரிதமாகவும் சரியான நேரத்திலும் சுகாதார தரவுத் தொடர் மூலம், தரவுகளை வழங்குவதற்காக இத்திட்டம் கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 43 இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகள் தமிழ்நாட்டின் பெரும்பரப்பு வலையமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், 2011-2012 ஆம் ஆண்டில் 272 மருத்துவமனைகள் இதன்மூலம் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் நோயாளிகள் குறித்த மின் ஆவணங்கள் மற்றும் மேலாண்மைத் தகவல் அறிக்கை (MIS) ஆகியவை தயாரிக்கப் பயன்படுகிறது.

**பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் (Pregnancy and Infant-Cohort Monitoring & Evaluation System)**

தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் பதிவு செய்துள்ள கர்ப்பிணி பெண்களின் உடல் நலத்தின் நிலையையும் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் உடல்நலத்தையும் இணையதளம்மூலம் கண்காணிக்கவும் ஒரு இணையதள கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**(11) உயர் கல்வித் துறை (Higher Education Department)**

சுமார் 450-க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 450 பொறியியல் கல்லூரிகள் பற்றிய அடிப்படைத் தகவல்களை வலை சார்ந்த பயன்பாடுமூலம் பொதுமக்கள் தெரிந்துகொள்ள

[2011 ஆகஸ்ட் 25

ஏதுவாக ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப இயக்ககம் வழங்கியுள்ள தரவுகளைக் கொண்ட வலை சார்ந்த அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இச்சேவை இணையதளம் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் இடைமுகமாக உள்ளது.

**(12) உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை (Home, Prohibition & Excise Department)**

குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு, தேசிய மின் ஆளுமை திட்டத்தின் ஒரு குறிக்கோள் திட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குற்றங்களை விசாரிப்பதற்கும், குற்றவாளிகளை விசாரிப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் பரவலான மற்றும் ஒருங்கிணைந்த நாடு தழுவிய இணையதள உள்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது குற்றங்களைக் கண்டுபிடிக்கும் திறனை மேம்படுத்தும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த ஒரு கண்காணிப்பு அமைப்பாகும். இக்கட்டமைப்பு நாட்டின் அனைத்து காவல் நிலையங்களையும் உள்ளடக்கியுள்ளது.

**(13) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (Housing and Urban Development Department)**

நகர்ப்புற மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககம், கட்டடம் கட்டுவதற்கான நில வரைபட ஒப்புதல் மற்றும் கட்டுமானத் திட்டம் ஆகியவற்றை தன்னியக்கம்மூலம் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக ஒரு மென்பொருள் உருவாக்கும் பணியினைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இம்மென்பொருள் குடிமக்கள் தொடர்பு மென்பொருள் ஆகும்.

**(14) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை (Highways and Minor Ports Department)**

போக்குவரத்து கணக்கெடுப்பு, மதிப்பீடு, அளவுகளின் எண்ணிக்கை, ஒப்பந்தப்புள்ளி, படிவங்கள் தயாரித்தல், ஒப்பந்தங்கள், அளவீடுகள், கட்டணங்கள் கணக்கிடுதல் மற்றும் தணிக்கை செய்தல் போன்றவற்றைக் கணினிமயமாக்கும்



2011 ஆகஸ்ட் 25]

செயல்களில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சாலை விபத்து பற்றிய தரவு பராமரிப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு புவிசார் தகவல்களைப் பயன்படுத்தி வருகிறது.

**(15) தகவல் தொழில்நுட்பவியல் துறை (Information Technology Department)**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தொழில் வளத் திட்டம் (ERP) என்ற மென்பொருளை லினக்ஸ் திறந்த இயங்குதளத்தில் பயனாக்கம் செய்துள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் செயல்பாடுகளை எந்த இடத்திலிருந்தும் எந்த நேரத்திலும் செய்யக்கூடிய அளவில் இம்மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருளின் பயனை தனிப்பயனாக்கத்திற்கு ஏதுவானதா என மதிப்பீடு செய்த பின்னர் அனைத்து அரசுத் துறைகளிலும் விரிவுபடுத்தப்படும்.

**மாநில சேவை இணையதளம் மற்றும் பொருளடக்க மேலாண்மை அமைப்பு(State Portal & Content Management System)**

பொதுமக்களும் வணிக நிறுவனங்களும் அரசின் தகவல்கள் மற்றும் சேவைகளை ஒற்றை சாளர முறையில் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் அணுகி பெற்றுக் கொள்வதே இச்சேவை இணையதளத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சேவைதளம்மூலம் மாநிலம் முதல் மாவட்ட அல்லது பஞ்சாயத்து நிர்வாகம் வரையுள்ள அனைத்து நிலைகளிலும் தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை மாநில சேவை இணையதளம் மற்றும் தேசிய சேவை இணையதள பொருளடக்கக் கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வலை தகவல்களை அணுகும் வழிக்காட்டுதல்களைப் பின்பற்றி இம்மாநில சேவை இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

**மாநில சேவை இணையதளம், மாநில சேவை நுழைவாயில் மற்றும் மின் படிவங்கள் (State Portal, SSDG and e-Forms)**

அரசின் ஒருங்கிணைந்த சேவைகளை மக்களுக்கு வழங்கிடவும், தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கும், அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையே பாலமாக செயல்படுவதற்காக தமிழக அரசு,

[2011 ஆகஸ்ட் 25

மாநில சேவை நுழைவாயிலை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வழியாக செயல்படுத்துகிறது. இது, மாநில சேவை நுழைவாயில் மற்றும் மின் படிவங்கள் வாயிலாக அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையே தடையில்லாத் தொடர்பினை ஏற்படுத்திட உதவும். இத்திட்டம் 16.13 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்திட தயார் நிலையில் உள்ளது.

**(16) தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை (Labour and Employment Department)**

வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்வதற்கும், தொழில் வழிகாட்டுதல், தரவுகளை தொடர்ந்து சேகரித்து தொகுத்தல் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற செயல்களைத் திறம்பட மக்களுக்கு வழங்குவதற்காக 24 மணி நேர வலைதளச் சேவை ஒன்று பிரத்தியேகமாக வேலைவாய்ப்பு இயக்ககத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புமூலம் மாநில தரவு மையத்துடன் இணைக்கப்பட்டு தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் முழுவதும் இணையவழியாக்கப்பட்டுள்ளது.

**கட்டுமானத் தொழிலாளர் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்திற்கான வலைதள மென்பொருள் (Web-based Application Software for Construction and Manual Workers Welfare Board)**

கட்டுமானத் தொழிலாளர் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்திற்கென வலைசார்ந்த மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு, அதன்மூலம் பல நல உதவித் திட்டங்களும், ஓய்வூதியத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

**17) சட்டமன்றப் பேரவைச் செயலகம் துறை (Legislative Assembly Secretariat)**

தமிழக சட்டமன்றப் பேரவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்-அஞ்சல் முகவரி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் எந்த நேரத்திலும் தங்களுடைய பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டு தங்களின் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளலாம். அனைத்து சட்டமன்றப் பேரவை



2011 ஆகஸ்ட் 25]

உறுப்பினர்களும் தங்கள் மின் அஞ்சல் வசதியை இணையதளத்தின்மூலம் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**(18) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (Municipal Administration and Water Supply Department)**

சென்னை மாநகராட்சிக்கென விரிவான வலைதள மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு, அதன்மூலம் பலதரப்பட்ட செயல்களான நகராட்சி கணக்கியல், தொழில் மேலாண்மை, சொத்து வரி, சொத்து மேலாண்மை, பண்டக மற்றும் இருப்பு மேலாண்மை, நில மற்றும் தோட்ட மேலாண்மை போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**(19) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை (Planning, Development and Special Initiatives Department)**

**சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான தரவு மேலாண்மை மென்பொருள்(Data Management System for Chennai Metro Rail Project)**

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இம்மென்பொருள் உருவாக்கும் பொறுப்பை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இம்மென்பொருள் பயன்பாடு, இத்திட்டத்தின் பங்கேற்பாளர்கள் அனைவரும் தங்களுக்கிடையே ஆவணங்களையும் தகவல்களையும் பரிமாறிக்கொள்வதற்கு உதவும். இம்மென்பொருள் ஆவணங்கள் சேகரித்தல், மீளப்பெறுதல், ஆலோசனை செய்தல், ஆய்வு செய்தல், தொடர்புகொள்ளுதல் ஆகியவற்றை உறுதி செய்யும்.

**சென்னை புவிவரைபட பயன்பாடு (Chennai Utility Mapping)**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சேவை முகமைகளுக்கு பயன்படும் விதத்திலும், நகர நிர்வாகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலும் நகர பரப்பிலான இடம்சார் தரவு கட்டமைப்பை உருவாக்குவதாகும். பலதரப்பட்ட அரசு நிறுவனங்கள் இத்தகவல்களை உபயோகித்து வருகின்றன.

**(20) பொதுப் பணித் துறை (Public Works Department)**

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்திற்காக நிறுவன மேலாண்மை மென்பொருளை வடிவமைத்து, உருவாக்கி

[2011 ஆகஸ்ட் 25

செயல்படுத்திட தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்களை பணியமர்த்துதல். (Hiring Services of IT consultants for Design, Development and Implementing Enterprise Information Management System for TNIAMWARM)

இத்திட்டம் நீர்வள நிலவளத் திட்டத்தின் கருவில் தோன்றிய பல்நோக்குத் திட்டமாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பாசன விவசாயத்தின் செயல்திறனை மேம்படுத்துவதேயாகும். நிறுவன தகவல் மேலாண்மை அமைப்பினை இத்திட்டத்தில் பயன்படுத்துவது அவசியமாகிறது.

**(21) வருவாய்த் துறை (Revenue Department)**

**வட்ட அலுவலகங்களில் கணினி வழி சேவைகள் (e-Services of Taluk offices)**

- வட்ட அலுவலகங்களை இணைப்பதன்மூலம் வலைதள பயன்பாடுகளை நிறுவி பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை விரைந்து வழங்குதல்
- இணையவழிமூலம் சேவை வேண்டி விண்ணப்பித்தல்
- பொதுமக்களுக்கு ஒப்புகை அளித்தல்
- விண்ணப்பத்தின் நிலை அறியும் வசதி

பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் பின்வருமாறு :—

- பொதுமக்கள் சிட்டா குறித்த விவரங்களை அறிதல்
- `அ' பதிவேடு குறித்து அறிதல்
- முகவர்கள் சிட்டா குறித்த விவரங்களை சரிபார்த்தல்
- முகவர்களுக்கான 'அ' பதிவேடு குறித்த விவரங்களை சரிபார்த்தல்
- அரசு நிலமா (அ) தனியார் நிலமா என சரிபார்த்தல்

நிலப் பதிவுகள் தொடர்பான சேவைகள்:—

- சிட்டா விவரங்களைப் பார்த்தல் மற்றும் விண்ணப்பித்தல்



2011 ஆகஸ்ட் 25]

- 'அ' பதிவேடு விவரங்களைப் பார்த்தல் மற்றும் விண்ணப்பித்தல்
- பட்டா மாற்றம் வேண்டி விண்ணப்பித்தல்
- விண்ணப்பத்தின் நிலையறிதல்

**மாவட்ட வருவாய்த் துறை—சான்றிதழ்களை இணையதளம் வழியாகப் பெறுவதற்கு விண்ணப்பித்தல் (District Revenue Department - Online filing for Certificates)**

பொதுமக்கள் இணையதளம் வழியாகச் சான்றிதழ்களையும், அலுவலக செயல்பாடுகள் குறித்த விவரங்களையும் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கலாம். எண்ணிலக்க முறையில் வெளியிடப்பட்ட பின்வரும் சான்றிதழ்களை அரசு அலுவலகத்திற்குச் செல்லாமலேயே இணையதளம் வழியாக பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- குடும்பத்தில் பட்டதாரி இல்லை எனும் சான்றிதழ்
- கைவிடப்பட்ட பெண்கள் சான்றிதழ்
- வருமானச் சான்றிதழ்
- வகுப்புச் சான்றிதழ்
- இருப்பிடச் சான்றிதழ்

**கொலாப் லேண்ட் திட்டம் (Collab Land Project)**

இம்மென்பொருளின் அடிப்படை நோக்கமானது —

- லேடர் அட்டவணையில் விவரங்களைப் பெறுதல்
- புலம் அளவீட்டுப் புத்தகத்தைப் பார்வையிடுதல் மற்றும் அச்சிடுதல்
- உட்பிரிவு மற்றும் இணைத்தல் போன்ற பரிமாற்றங்களைக் கையாளுதல்

[2011 ஆகஸ்ட் 25

- இடம்சார் மற்றும் இடம்சாரா தரவு தகவல்களை பொது மக்களுக்கு வழங்கும் வகையில் `தமிழ்நிலம்' மென்பொருளோடு இடம் சாரா தகவல்களை ஒருங்கிணைத்தல்.

**எந்நேரமும்/ எங்கேயும் நில ஆவணம் (Anytime/Anywhere Land Record)**

இணையதளம்மூலம் கிராமப்புற நிலம் சார்ந்த விவரங்கள் அனைத்தையும் பொதுமக்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வழிவகை செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

**மாவட்டங்களுக்கான இணையதளம்மூலம் மக்கள் குறைதீர்க்கும் மென்பொருள் (Online Grievance Redressal System for Districts)**

பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதென்பது மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து அரசுத் துறைகளின் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம், சென்னை தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் இணையதளம் மூலம் மக்கள் குறைதீர்க்கும் மென்பொருள் ஒன்றினை உருவாக்கியுள்ளது. இம்மென்பொருள், பொதுமக்கள் தங்கள் குறைகளை மாவட்ட நிர்வாகத்திற்கு இணையதளம் வழியாகத் தெரிவிப்பதற்கான ஒரு வழியாகும். இது பின்புல செயல்பாட்டினைக் கையாள உதவுவதுடன், முக்கியமான அலுவலக நடைமுறைகளை கையாளவும், மாவட்ட நிர்வாகத்திற்கு பொதுமக்கள் அனுப்பிய மனுக்களைத் திறம்படக் கண்காணிக்கவும் உதவுகிறது. திறந்தவெளி தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட வலைசார்ந்த இம்மென்பொருள் 27 மாவட்டங்களில் பயன்பாட்டில் உள்ளது. 5.32 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் இதுவரை பெறப்பட்டுள்ளன.

**வலைசார்ந்த சான்றிதழ் மேலாண்மை மென்பொருள் (Web based certificate Management System)**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களில் உள்ள பிறப்பு / இறப்பு பதிவேடுகளை இம்மென்பொருள் பராமரிக்கிறது. இம்மென்பொருள்மூலம் வகுப்புச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் போன்றவற்றின் விவரங்களை பதிவு செய்யவும் வழிவகுக்கிறது.



2011 ஆகஸ்ட் 25]

**(22) ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை (Rural Development and Panchayat Raj Department)**

**தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தினை கண்காணிக்கும் மென்பொருள் (NREGA Monitoring System)**

தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தைத் திறம்பட செயல்படுத்திடவும், கண்காணிக்கவும் இம்மென்பொருள் வழிவகுக்கிறது.

இம்மென்பொருள் 385 வட்டங்களிலும் மற்றும் 31 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் கிராம அளவிலான விவரங்கள், வட்டார அளவில் பதிவு செய்யப்படுகிறது.

**இணைய வழி திட்டக் கண்காணிப்பு மென்பொருள் (Online Scheme Monitoring System)**

இணையவழி திட்டக் கண்காணிப்பு மென்பொருள் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைக் கண்காணிக்க உதவுகிறது. ஒரு இலட்சத்திற்கும் அதிகமான திட்டங்கள் மாநிலம் முழுவதிலும் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்காக 9,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது.

**(23) பள்ளிக் கல்வித் துறை (School Education Department)**

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி வாரியத் தேர்வு முடிவுகள் (Tamil Nadu Board Results)**

இந்த இணையதள மென்பொருளின்மூலம் தமிழ்நாட்டில் நடத்தப்படும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கானத் தேர்வுகள், துணைத் தேர்வுகள் மற்றும் சிறப்புத் துணைத் தேர்வுகளுக்கான முடிவுகள் மற்றும் மதிப்பெண் விவரங்களைப் பெற இயலும். இந்த முடிவுகள் ஒரு வருடத்தில் 6 முறை வெளியிடப்படுகின்றன.

[2011 ஆகஸ்ட் 25

**மின் சேவைப் பதிவேடு (e-Service Register)**

பள்ளிக்கல்வி இயக்ககத்தைச் சேர்ந்த 1,03,712 ஆசிரியர்களின் பணி விவரங்கள் இலக்க முறையாக்கப்பட்டு வருகிறது. கடந்த காலாண்டில் 35,802 ஆசிரியர்கள் குறித்த தகவல்கள் இதில் பதியப்பட்டுள்ளன. தற்போது 1,00,080 ஆசிரியர்கள் குறித்த தகவல்கள் உள்ளன.

இப்பதிவேட்டில் 6,892 பள்ளிகள் மட்டுமின்றி, 32 தலைமைக் கல்வி அலுவலகங்கள் மற்றும் 68 மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பயனர் குறியீடு அளிக்கப்பட்டு ஆசிரியரல்லாத அலுவலர் குறித்த தகவல்கள் பதியப்பட்டு வருகின்றன. பொது விவரங்கள், பணி குறித்த விவரங்கள், குடும்ப விவரங்கள், வாரிசுதாரர் நியமனம், கல்வித் தகுதி விவரங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பள்ளிக்கும் பயனர் குறியீடு அளிக்கப்பட்டுள்ளது.

**(24) சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை (Micro, Small and Medium Enterprises Department)**

தொழில் முனைவோர்களுக்கான குறிப்பாணை விண்ணப்பம் பகுதி-1 மற்றும் பகுதி 2-ஐ இணையதளம் வாயிலாக பதிவு செய்தல். (Online Filing of Entrepreneur Memorandum Form Part-I and Part-II)

மாவட்ட தொழில் மையங்களிலுள்ள அலுவலக பின்னணி செயலாக்கத்துடன்கூடிய இணைய வழி தொழில் முனைவோர் குறிப்பாணை பகுதி 1, 2 மற்றும் மூலதன மானியம் கோரும் விண்ணப்பங்களை தொழில் முனைவோர் சமர்ப்பிப்பதற்கு வழிவகை செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

**(25) சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட துறை (Social Welfare and Nutritious Meal Programme Department)**

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வாயிலாக முன்னோடி மின் மாவட்டத் திட்டத்தின்கீழ் மாவட்ட சமூகநல அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதால் பயனாளிகள் இணையதளம் வாயிலாகப் பின்வரும் திட்டங்களின்கீழ் பயனடையலாம் :—



2011 ஆகஸ்ட் 25]

- ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்
- விதவை மறுமண நிதியுதவித் திட்டம்
- ஏழை விதவை மகளுக்கான திருமண நிதியுதவித் திட்டம்
- ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்
- கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்
- பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

பயனாளிகள் தங்களது விண்ணப்பத்தின் நிலையை அறிந்திட இவ்வெளிப்படையான அணுகுமுறை உதவுகிறது. இதன் வாயிலாக பல்வேறு திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை அரசு கண்காணிக்க முடியும்.

**(26) தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை (Tamil Development, Religious Endowments & Information Department)**

தமிழ் இணையக் கல்விக் கழக இணையதளத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழ் புத்தகங்கள் வெளியிடப்படும்.

**(27) சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை (Tourism and Culture Department)**

இத்துறையின் பல்வேறு சேவைகள் கணினிமயமாக்கப்பட்டு, பின்வரும் சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

- இணையவழி முன்பதிவு முறை (Online Reservation System)
- தமிழக சுற்றுலாத் துறைக்கான இணையதளம் (Website for Tamil Nadu Tourism)
- உணவக மேலாண்மை மென்பொருள்(Hotel Management System)
- சுற்றுலா மேலாண்மை மென்பொருள்(Tours Management System)
- மையமாக்கப்பட்ட முன்பதிவு வசதி (Centralized Reservation System)
- படகு வீடு மேலாண்மை மென்பொருள் (Boat House Management System)

[2011 ஆகஸ்ட் 25

## (28) போக்குவரத்துத் துறை (Transport Department)

### போக்குவரத்துத் துறையின் மின் சேவைகள் (e-Services for Transport Department)

பொது மக்கள் நன்மைக்காக பின்வரும் இணையவழி சேவைகள் மின் சேவைகள் திட்டத்தின்கீழ் போக்குவரத்துத் துறையால் வழங்கப்படுகின்றன:—

- பயிற்சி ஓட்டுநர் விண்ணப்பங்களை இணையவழிமூலம் பதிவு செய்தல்
- வாகன விற்பனையாளர்கள் புதிய வாகனங்களுக்கான விண்ணப்பங்களை இணையவழிமூலம் பதிவு செய்தல்
- தவணை முறை விற்பனை ஒப்பந்தம் (படிவம் 34) மற்றும் தவணை முறை விற்பனையை முற்றுவித்தல் ஆகியவற்றை இணையவழியாகப் பதிவு செய்தல் (படிவம் 35)
- கனரக வாகனங்கள் ஓட்டுநர் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழை இணையவழியாகப் பதிவு செய்தல்
- ஓட்டுநர் உரிமம் தொடர்பான விவரங்களுக்காக, வட்டாரப் போக்குவரத்து அலுவலரை சந்திக்க நேரம் கேட்டு, இணையவழியாகப் பதிவு செய்தல்
- இணையவழி குறைகளை பதிவு செய்தல், அதன்மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் நிலையை அறிதல்
- பயிற்சி ஓட்டுநர் உரிமம் கேட்டு விண்ணப்பிப்பவர்களுக்கான போக்குவரத்துக் குறியீடுகள், அடையாளங்கள் ஆகியவற்றை மென்பொருளின்மூலம் உணரும் திறனை ஆய்வு செய்வதற்காக புதிய திட்டத்தை உருவாக்குதல்.

### அரசு மின் கொள்முதல் மென்பொருள்

- தேசிய தகவல் மையம் PKI மூலம் செயல்படும் மின் கொள்முதல் மென்பொருளினை, அரசு அலுவலகங்களுக்குப் பின்வரும் நோக்கத்துடன் உருவாக்கி உள்ளது:—



2011 ஆகஸ்ட் 25]

- இணைய வழியில் அரசு அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் குறித்த விவரங்களைப் பதிவு செய்தல்
- ஒப்பந்தப் படிவங்கள் உருவாக்குதல் மற்றும் பதிப்பித்தல்
- திருத்தங்களைப் பதிப்பித்தல்
- ஒப்பந்தத்திற்கு முன் நடைபெற்ற கூட்டத்தின் ஆவணங்களை வெளியிடுதல்
- இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளிகளை தாக்கல் மற்றும் மறுதாக்கல் செய்தல்
- ஒப்பந்தப்புள்ளிகளின் இரு கூறுகளை உறுதிப்படுத்துதல்
- வங்கிகளின் இணையவழி பணம் செலுத்தும் வசதிகள்மூலம் கட்டணங்களை வசூலித்தல்
- பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை எண்ணிலக்கக் குறியீட்டுக் கையொப்பம்மூலம் மறைமொழிக் குறியீடுகளாக மாற்றுதல்
- ஒன்று / இரண்டு / பல உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரும் வசதி
- இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளிகளை திரும்பப் பெறுதல்
- இணைய வழியாக ஒப்பந்தப்புள்ளிகளைத் திறத்தல்
- நிதி ஒப்பந்தப்புள்ளிகளைத் தானியக்க முறையில் மதிப்பிடுதல்
- ஒப்பந்தப்புள்ளி குறித்த குழுவின் பரிந்துரைகளை ஒவ்வொரு கட்டத்திலும் பதிவு செய்தல்
- குறுஞ்செய்தி, மின்னஞ்சல்மூலம் பல்வேறு நிலைகளில் அரசு அலுவலர்களுக்கும், ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கும் தகவல் அளித்தல்

[2011 ஆகஸ்ட் 25

- இணைய வழி ஆவணங்களில் எண்ணிலக்கக் குறியீட்டுக் கையொப்பம் இடுதல்
- ஒப்பந்தத்தில், வெற்றி பெற்றவருக்கு ஒப்பந்தம் அளித்தல்
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், ஆசிய மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி அளித்துள்ள நெறிமுறைகளின்படி நடத்தல்.
- தகவல் தொழில்நுட்பவியல் துறை, நிதித் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து இம்மின் கொள்முதல் மென்பொருளினைப் பயன்படுத்தும்.

## அத்தியாயம்–VII

## மின் ஆளுமையின் முக்கியப் பகுதிகள் (Thrust areas in e-Governance)

### மேகக் கணினி பயன்பாடு (Cloud Computing)

கணினிப் பயன்பாட்டினை ஒரு சேவையாக நுகரும் விதத்தில் பங்கிடப்பட்ட வளங்களை உபயோகிக்கும் ஒரு புதிய அணுகுமுறையே மேகக் கணினி பயன்பாடு ஆகும். இச்சேவைகள் பரவலாக மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

- கட்டமைப்பு சேவை
- கணினி தள சேவை
- மென்பொருள் சேவை

மேகக் கணினி பயன்பாடு வாயிலாக, மின் சேவைகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை தகவல் தொழில்நுட்பவியல் துறை கண்டறிந்து வருகிறது.

### இணைய நெறிமுறை பதிப்பு–6 (Internet Protocol Version 6)

இணையதளத்தில் தகவல் பரிமாற்றமானது தரவுகளை சிறு தொகுப்புகளாக வலையமைப்புகளுக்கிடையே இணைய நெறிமுறை (IP-Internet Protocol) எனப்படும் பன்னாட்டு தொடர்பு நெறிமுறை வாயிலாக வழி நடத்துவதன்மூலம் நடைபெறுகிறது. அனைத்து



2011 ஆகஸ்ட் 25]

தகவல் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கும் இணையம் வாயிலாக தொடர்பு கொள்ள ஒரு இணைய நெறிமுறை முகவரி தேவைப்படுகிறது. தற்போது இணைய நெறிமுறை பதிப்பு-4 (IPv4) உபயோகத்தில் உள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சியினால், ஒதுக்கீடு செய்யப்படாத இணைய நெறிமுறை பதிப்பு-4 IPv4-ல் முகவரிகள் விரைவில் முடிந்துவிடும் நிலை ஏற்பட்டு அதனால் இக்கட்டான விளைவுகள் ஏற்படக்கூடும். எனவே, IPv4-லிருந்து IPv6-க்கான மாற்றத்தை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அரசுத் துறைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்கான IPv4 லிருந்து IPv6 பயன்பாட்டு வரைபடம் என்ற கொள்கை ஆவணம் ஒன்றை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

### வணிக நுண்ணறிவு மென்பொருள் வாயிலாக தரவு கிடங்கு சேமிப்பு மற்றும் தரவு அகழ்வு (Data Warehousing, Data Mining using Business Intelligence Software)

திட்டம் மற்றும் வளர்ச்சியில், புள்ளியியல் தரவு முக்கிய பங்கு வகிக்கிறது. அரசின் புள்ளி விவரத் துறை மாவட்டங்கள் மற்றும் கிராமங்களிலிருந்து தினசரி / வாரம் / மாதம் / காலாண்டு / ஆண்டு வாரியாக தரவுகளை அவ்வப்போது சேகரித்து வருகிறது. இதன்மூலம் மிகப்பெரிய அளவில் தரவு சேமிக்கப்பட்டுள்ளது. மாதிரி கணக்கெடுப்பு மற்றும் மக்கள் கணக்கெடுப்பு வாயிலாகவும் அதிக அளவில் தரவு உருவாக்கப்படுகிறது.

அரசு தரவு கிடங்குத் திட்டத்தின் முக்கிய நோக்கம் வணிக நுண்ணறிவு மென்பொருள் சாதனங்களின்மூலம் அதிகாரபூர்வ புள்ளியியல் தரவுகளை ஆராய்வதாகும். இதன்மூலம் திட்ட வல்லுநர்கள், பொருளாதார வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் எங்கிருந்தும் பயன்பெறும் விதத்தில், பகுத்தறியப்பட்ட தகவல்களை இணைய வாயிலாக அளிக்க முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, தரவுக் கிடங்கு ஏற்படுத்துவதற்கான ஆணைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இதன்மூலம் அரசின் இணையதளம் வாயிலாக பகுத்தறியப்பட்ட தரவு மற்றும் சாதனங்களை பயனாளிகள் தேர்ந்தெடுத்து ஆராய முடியும்.

இதனை முன்னிட்டு அரசு, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வாயிலாக, வணிக நுண்ணறிவு மென்பொருள் எனப்படும் தரவு கிடங்கு மற்றும் தரவு அகழ்வு மேம்பட்ட சாதனங்களை உபயோகித்து ஒரு கட்டமைப்பை உருவாக்கவுள்ளது.

### செல்லிடபேசி ஆளுமை (Mobile Governance)

செல்லிடபேசிகள் பொது சேவைகளுக்கான அணுகுமுறைகளை விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளன. விரைவாகப் பெருகிவரும் செல்லிடபேசி சந்தாதாரர்களின் எண்ணிக்கையானது, அதிநவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆளுமையை மேம்படுத்தவும், அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை தொடங்கவும் உதவும்.

தமிழ்நாட்டில் உள்ள அதிக அளவிலான செல்லிடபேசி ஊடுருவலின் அனுகூலங்களைப் பயன்படுத்தி சில சேவைகளை குடிமக்களுக்கு அளித்திடும் விதத்தில் திட்டம் ஒன்றை அரசு தொடங்க உள்ளது. செல்லிடபேசிகள் கிராமப் பகுதிகளுக்கு உகந்த விதத்தில் அதிக அளவு முதலீடு இல்லாமல் கடைக் கோடி இடைவெளியை இணைப்பதன் மூலமாக எங்கேயும் எப்போதும் குடிமக்களுக்கான சேவைகளை அளிக்க உதவும். செல்லிடபேசி சேவை விநியோக தளங்கள் அரசு சேவைகள், நிதி சேர்மானம், சிறுகடன், இடம்சார் சேவைகள் ஆகியவற்றிற்கு மிகவும் உகந்ததாகும்.

செல்லிடபேசி கட்டணங்கள், அரசு சேவைகளுக்கான கட்டணங்கள், வங்கிக் கணக்குச் செயல்பாடுகள், சிறுகடன், மின் ஆளுமை விண்ணப்பங்கள், சேவை விநியோகம், குறை தீர்ப்பு, பேரிடர் மேலாண்மை (எச்சரிக்கை மற்றும் பதில் நடவடிக்கை), இடம்சார் சேவைகள் (பயணம் / வழி தகவல், குற்றம் கண்டறிதல், பேரிடர்) முதலிய சேவைகள் இதில் அடங்கும்.

அரசு தேசிய மின் ஆளுமை பிரிவுடன் இணைந்து ஒரு செல்லிடபேசி அரசு கட்டண நுழைவாயிலை உருவாக்கும். அரசின் சேவை இணையதளம் செல்லிடபேசிக்கு இணக்கமான முறையில் இருக்கும்.





### ஒருங்கிணைந்த நிதிநிலை மேலாண்மை (Integrated Financial Management)

அரசின் செலவினங்கள் மற்றும் வருவாய்கள் பற்றிய சீரான உறுதிபடுத்தப்பட்ட தகவல்களை அளிக்கும் விதத்தில் ஒரு மென்பொருள் கருவியை நிறுவ அரசு முயற்சி செய்யும். நிதித் துறை, கருவூலக் கணக்குத் துறை, ஓய்வூதிய இயக்குநரகம் மற்றும் மாநிலக் கணக்காயர் அலுவலகம், மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூல அலுவலகங்களின் செயல்பாடுகள் இணையம் சார்ந்த சுழற்சி முறையில் இருக்கும்.

### புவிசார் தகவல் அமைப்பு (Geographical Information System)

புவிசார் தகவல் அமைப்பு என்பது, இடம் சார் மற்றும் இடம் சாராத தரவுகளை சீராக இணைத்து மேலாண்மை, பகுப்பாய்வு மற்றும் முடிவெடுத்தலுக்கு உதவும் கருவியாகும். தமிழ்நாடு அரசு புவிசார் தகவல் அமைப்பை திட்டம் மற்றும் கண்காணிப்பு செயல்பாடுகளுக்கு உதவும் வகையில் ஏற்று, அனைத்து மாவட்டங்களிலும் தரப்படுத்தப்பட்ட மாவட்ட / மாநில அளவிலான GIS பயன்பாடுகளை உருவாக்கி செயல்படுத்தும்.

தமிழ்நாடு அரசு புவிசார் தகவல் அமைப்புக்கான வன்பொருள் மற்றும் தரவு ஏற்ற தேவைகளுக்காக ரூ.43.50 லட்சம் நிதி ஒப்புதல் அளித்துள்ளது. தேவையான இடம், தொழில்நுட்ப மனிதவளம் மற்றும் தொடர் செலவினம் ஆகியவை இதற்காக ஒதுக்கப்படும்.

அரசின் நோக்கங்களை உணரச் செய்யும் விதத்தில் தகவல் தொழில்நுட்பவியல் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையுடன் இணைந்து செயல்படும்.

புவிசார் தகவல் அமைப்பை பயனுள்ள வகையில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கும்:—

- தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு—தமிழ்நாடு மாநில இடம் சார் தரவு கட்டமைப்பை தேசிய இடம் சார் தரவு கட்டமைப்பு வழியில் உருவாக்குதல்
- அதிக அளவிலான இடம் சார் தரவு தளத்தை உருவாக்கும் வகையில் போதுமான கட்டமைப்பை மாநில தரவு மையத்தில் பல்வேறு அளவுகளில் உருவாக்குதல்

[2011 ஆகஸ்ட் 25

- ஆரம்ப நிலை மென்பொருள் உருவாக்கம் மற்றும் தரவு தயாரிப்பு முதலியவற்றை உறுதி செய்யும் விதத்தில் போதுமான கட்டமைப்பை உருவாக்குதல்.

### சொத்து மேலாண்மை அமைப்பு (Asset Management System)

ஒரு நிறுவனத்தின் சொத்து விவரங்களின் தொகுப்பினை உருவாக்கி அதன் மேலாண்மையினை மேற்கொள்வதே சொத்து மேலாண்மையின் நோக்கமாகும். தகவல் தொழில்நுட்ப சொத்து மேலாண்மை என்பது இருப்பு மற்றும் நிதி தொடர்பான வழிமுறைகளின் தொகுப்பு ஆகும். தகவல் தொழில்நுட்பவியல் சூழலில், கொள்முதல், தயார்படுத்துதல், மேலாண்மை மற்றும் கழிவு செய்தல் முதலியவை சொத்து மேலாண்மையின் வாழ்க்கை சுழற்சியின் ஒரு பகுதியாகும்.

அனைத்து அரசுத் துறைகளுக்கும் பயன்படும் வகையில் ஒருமுறை செலவினத்தில் ஒரு பொதுவான சொத்து மேலாண்மை மென்பொருள் உருவாக்கப்படும்.

### வசதி மேலாண்மை சேவைகள் (Facility Management Services)

குடிமக்களுக்கு விரைவாக சேவைகளை அளிக்கும் வகையில் வன்பொருள், மென்பொருள், இணைப்பு ஆகிய தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகளை அனைத்து துறைகளும் கொள்முதல் செய்து நிறுவி வருகின்றன. இச்சேவைகளைக் குடிமக்களுக்கு தொடர்ந்து அளிப்பதில் உள்ள மிகப்பெரிய சவால் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை பராமரிப்பதாகும். அனைத்து கட்டமைப்புகளும் குறிப்பிட்ட உத்தரவாதம், சேவைக் காலம் மற்றும் சுழற்சிக் காலத்தை கொண்டுள்ளன. போதுமான பராமரிப்பு இல்லாவிடில், இக்குறிப்பிட்ட காலத்திற்குப்பின் அனைத்து கட்டமைப்புகளும் மிகவும் பாதிக்கப்படும்.

பொதுமக்களுக்கான சேவைகளைத் தொடர்ச்சியாக அளிப்பதற்காக தகவல் கட்டமைப்பைக் கிடைக்கச் செய்தல் மற்றும் ஆதரவு சேவைகளை உறுதிப்படுத்தல் ஆகியவையே வசதி மேலாண்மை சேவைகளின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

அனைத்து அரசுத் துறைகளிலும் இந்த வசதி மேலாண்மை சேவை பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.



2011 ஆகஸ்ட் 25]

### தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்தும் திட்டம் (NLRMP)

வருவாய், நில அளவை மற்றும் பதிவுத் துறைகள் ஆகியவை இணைந்து தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்தும் திட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு, ஒரு கருத்துருவினை சமர்ப்பிக்கும். இதற்குத் தகவல் தொழில்நுட்பவியல் துறை உதவும்.

### அரசின் தொழில்நுட்ப மன்றம் (Technology Forum)

அரசின் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரிகளுக்கு அவர்கள் பணி தொடர்பான தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தொழில்நுட்ப மன்றம் ஒன்று உருவாக்கப்படும்.

## அத்தியாயம்–VIII

### மின்னணுப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம்

### (Society for Electronic Transactions and Security - SETS)

தகவல் பாதுகாப்பு நுட்பங்களை உருவாக்கி அதன்மூலம் நாட்டின் தகவல் செல்வத்தைப் பாதுகாப்பதும் அத்தகைய கண்டுபிடிப்புகளால் தகவல் பாதுகாப்பு மின்னணுப் பொருட்களை உருவாக்கிப் பயன்படுத்துவதற்காகவும் மின்னணுப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் உருவாக்கப்பட்டது. மேலும், இது தனியார் மற்றும் பொதுத் துறையின் கூட்டமைப்பில் நாட்டின் தகவல் பாதுகாப்பிற்காக முதன் முதலாக உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு இலாப நோக்கு இல்லாத ஒரு சங்கமாக 1860 ஆம் ஆண்டைய இந்திய சங்கங்களின் சட்டத்தின்கீழ் 2002 மே திங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வமைப்பின் நிதி ஆதாரம் அரசு மற்றும் பொதுத் துறைகள், தனியார் நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களிலிருந்து ஒரு முறை மட்டுமே செலுத்தப்படும் உறுப்பினர் கட்டணத்தின்மூலம் பெறப்படுகிறது. தமிழ்நாடு அரசு இதற்கு 60 இலட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

**தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழிக்கான நவீன ஆய்வு மையம் (Advanced Facility for Information Security and Cryptology-AFISC)**

தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழிக்கான நவீன வசதிகளுடன்கூடிய ஆய்வு மையத்தினை நிறுவ இந்திய அரசு 24.5 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இவ்வமைப்பிற்கான கட்டடம் கட்டுவதற்கு, சென்னை தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர் அறிவுசார் நகரத்தில் 2.9 ஏக்கர் நிலத்தினை நீண்டகால குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஆய்வு மையத்தின் நோக்கம், தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழியியலில் உலகின் (தலை) சிறந்த ஆய்வு மையமாக விளங்க வேண்டுமென்பதே ஆகும்.

இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியின் ஒரு அமைப்பான “பாரதீய ரிசர்வ் பேங்க் நோட் முட்ரான் பிரைவேட் லிமிடெட்” (BRBNMPL- Bharatiya Reserve Bank Note Mudran Private Limited) போன்ற நிறுவனங்களுக்கும், தமிழக அரசிற்கும் ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் பாதுகாப்புக் கொள்கையினை உருவாக்குவதில் இந்நிறுவனம் பங்காற்றியுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் பாதுகாப்பு மற்றும் மின்னணுப் பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றில் இந்நிறுவனத்தின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக்கொள்ள தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை முடிவு செய்துள்ளது.

## அத்தியாயம் – IX

## தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலப் பூங்காக்கள்

(Information Technology Special Economic Zone Parks)

2002 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையில், அறிவுசார்ந்த தொழில் நகரியத்திற்குத் (Knowledge Industry Township) தேவையான முதன்மைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த முதனிலை செயல் திட்டம் (Blue Print) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டது.





அறிவுசார்ந்த தொழில் நகரியம் சென்னையில் தகவல் தொழில்நுட்பவியல் நெடுஞ்சாலையில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் முதலீட்டைப் பெருக்குவதற்கு சிந்திக்கப்பட்டது. அந்தத் தொலைநோக்குப் பார்வையின் (Vision) அடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 8 இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முதனிலை செயல்திட்டத்தின்படி, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் பின்வரும் இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலப் பூங்காக்களை உருவாக்கியுள்ளது :—

1. சென்னையில் சோழிங்கநல்லூர்
2. கோயம்புத்தூரில் விளாங்குறிச்சி
3. மதுரையில் இலந்தைக்குளம்
4. மதுரையில் வடபழஞ்சி—கிண்ணிமங்கலம்
5. திருச்சியில் நவல்பட்டு
6. திருநெல்வேலியில் கங்கைகொண்டான்
7. சேலத்தில் ஜாகீர் அம்மாபாளையம்
8. ஓசூரில் விஸ்வநாதபுரம்

**தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலப் பூங்காக்களின் நிலை:—**

**சென்னை – சோழிங்கநல்லூர் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Chennai-Sholinganallur IT SEZ)**

சோழிங்கநல்லூரில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்க தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு 377.08 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு உரிமை மாற்றம் செய்துள்ளது.

377.08 ஏக்கரில், 215 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் பல்வேறு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்திற்கு 80 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் எச்.சி.எல். மற்றும் மகிந்திரா சத்யம் ஆகிய நிறுவனங்களுக்கு தலா 50 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவாளர்கள் சதர்லேண்ட் நிறுவனத்திற்கு 15 ஏக்கர் நிலமும் மற்றும் திருவாளர்கள் சி.டி.எஸ். நிறுவனத்திற்கு 20 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 42 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. இப்பூங்காவில் திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் 18,000 பணியாளர்கள் பணிபுரிவதற்கு ஏதுவாக 23 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 12,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், 5 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

திருவாளர்கள் எச்.சி.எல். நிறுவனம் 10 இலட்சம் சதுரஅடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 4000 பணியாளர்களுடன் தங்களுடைய அலுவலகத்தை நடத்தி வருகிறது. திருவாளர்கள் மகிந்திரா சத்யம் 4.5 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தைக் கட்டத் தொடங்கி, அதில் 80 விழுக்காடு பணியினை இதுவரை பூர்த்தி செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் 91.22 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 92.36 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

**கோயம்புத்தூர்—விளாங்குறிச்சி தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Coimbatore-Vilankurichi IT SEZ)**

கோயம்புத்தூரில் விளாங்குறிச்சி கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அரசு 61.59 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்துள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், திருவாளர்கள் விப்ரோ மற்றும் திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் ஆகிய இரு நிறுவனங்களுக்குத் தலா 9.5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 19 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் 16.40 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 26.19 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

**மதுரை—இலந்தைக்குளம் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Madurai Ilandhaikulam IT SEZ)**

மதுரையில் இலந்தைக்குளம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அரசால் 28.91 ஏக்கர் நிலம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுரஅடி பரப்புள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மொத்தமாக 6.75 ஏக்கர் நிலம் இரண்டு நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 4.50 ஏக்கர் நிலம் மற்றும் திருவாளர்கள் செல்லா சாஃப்ட்வேர் நிறுவனத்திற்கு 2.25 ஏக்கர் நிலம்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காகத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 7 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடத்திற்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 18 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

[2011 ஆகஸ்ட் 25

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் எச்.சி.எல். டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலம் அரசு குத்தகை அடிப்படையில் ஒதுக்கியது. ஆனால், இந்நிறுவனம் இப்பூங்காவில் தங்களது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில், தான் செலுத்திய பணத்தை திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும், மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 8.16 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 14 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

### மதுரை—வடபழஞ்சி மற்றும் கிண்ணிமங்கலம் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Madurai-Vadapalanji-Kinnimangalam IT SEZ)

மதுரையில், வடபழஞ்சி கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தமிழக அரசால் 245.17 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் முடிவடைந்துள்ளன.

மதுரை — வடபழஞ்சி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், மொத்தமாக 7 ஏக்கர் நிலம் இரண்டு நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் காலிஃபர் பாயின்ட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம் (இந்தியா) நிறுவனத்திற்கு 2 ஏக்கர் நிலமும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 15 கோடி ரூபாயையும், சாலை மேற்புற பாலம் கட்டுவதற்காக 12 கோடி ரூபாயையும் முதலீடு செய்துள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், திருவாளர்கள் எச்.சி.எல். டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு 60 ஏக்கர் நிலமும்,



2011 ஆகஸ்ட் 25]

திருவாளர்கள் சத்தியம் லிமிடெட் நிறுவனத்திற்கு 50 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் சின்டெல் நிறுவனத்திற்கு 25 ஏக்கர் நிலமும் மற்றும் சதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட நிறுவனங்கள் இப்பூங்காவில் தங்களது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில், தாங்கள் செலுத்திய பணத்தை திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளனர்.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 57.02 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 181.15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

### திருச்சி—நவல்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Trichy-Navalpattu IT SEZ)

திருச்சியில் நவல்பட்டு கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப்பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு 147.61 ஏக்கர் நிலத்தை உரிமை மாற்றம் செய்துள்ளது. இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 26 ஏக்கர் நிலம், ஏழு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் அசிஸ்ட் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 3 ஏக்கர், திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 2 ஏக்கர், திருவாளர்கள்-ஐ-வேவ் சிஸ்டம்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர், திருவாளர்கள் அன்லிமிடெட் இன்னொவேஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர், திருவாளர்கள் ஜைலாக் சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர்,

திருவாளர்கள் ஐ.லிங்க் நிறுவனத்திற்கு 1 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் டபிள்யூ எம்.எஸ் நிறுவனத்திற்கு 5 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் எச்.சி.எல். இன்போ நிறுவனத்திற்கு 2 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலமும், அரசு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது. ஆனால், மேற்கண்ட நிறுவனங்கள் இப்பூங்காவில் தங்களது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில் தாங்கள் செலுத்திய பணத்தைத் திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளனர்.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காகத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 14.23 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடத்திற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 18 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 40.88 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 80.73 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

**திருநெல்வேலி—கங்கைகொண்டான் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Tirunelveli-Gangaikondan IT SEZ)**

திருநெல்வேலியில் கங்கைகொண்டான் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க, சிப்காட் நிறுவனம் 500 ஏக்கர் நிலத்தினை குத்தகை அடிப்படையில் நில மாற்றம் செய்துள்ளது. அவற்றில், 290 ஏக்கர் நிலம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இப்பூங்காவில் முதற்கட்டமாக 100 ஏக்கர் பரப்பளவிற்கு தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 102 ஏக்கர் நிலம், இரண்டு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுனத்திற்கு 100 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் டெக்கான் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 2 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதியில் திருவாளர்கள் ஏ மற்றும் டி காஸ்மிக் பவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, கங்கைகொண்டான் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலம் அரசு குத்தகை அடிப்படையில் முதலில் ஒதுக்கியது. ஆனால் இந்நிறுவனம் இப்பூங்காவில் தனது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில், தான் செலுத்திய பணத்தைத் திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீடு மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 12.76 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடத்திற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ரூ.13.92 கோடியை முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 142 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 231 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

[2011 ஆகஸ்ட் 25

**சேலம்—ஜாகீர் அம்மாபாளையம் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Salem-Jagir Ammapalayam IT SEZ)**

சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசால் 164.26 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 53.33 ஏக்கர் பரப்பளவிற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 8.50 ஏக்கர் நிலம் மூன்று தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் டி.பி. புரொபஷனல்ஸ்—3 ஏக்கர், திருவாளர்கள் மகிமா டெக்னாலாஜிஸ் பி. லிட்—3 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் ஜி.டி.பி. இன்போடெக் சொலுயூஷன்ஸ் லிமிடெட்—2.5 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காகத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 9.43 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 16.45 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 28.38 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

**ஓசூர்—விஸ்வநாதபுரம் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Hosur-Viswanathapuram IT SEZ)**

ஓசூர்—விஸ்வநாதபுரம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு, தமிழக அரசால் 174.47 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது.



2011 ஆகஸ்ட் 25]

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 27 ஏக்கர் நிலம் ஆறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் ஒகியா இன்ஃபோகாம் பி. லிட்.—10 ஏக்கர், திருவாளர்கள் தேஜாஸ் நெட்வொர்க் லிட்—5 ஏக்கர், திருவாளர்கள் சி.ஆர்.எம்.ஐ.டி. சொல்யூஷன்ஸ் பி. லிட்.—3 ஏக்கர், திருவாளர்கள் சி.ஆர்.எம். இன்ஃபோடெக் இந்தியா பி. லிட்.—2 ஏக்கர், திருவாளர்கள் அசென்ட் சர்க்யூட்ஸ் பி. லிட்.—5 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் நௌஸ் இன்ஃபோ சிஸ்டம்ஸ் பி. லிட்.—2 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், அடிப்படைக் கட்டமைப்பு பணிகளுக்காக, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 24.27 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 66.22 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 81.25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

**வேலூர் மற்றும் விழுப்புரம் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்**

வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கண்டறியுமாறு சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள நிலத்தை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் முதலீட்டை ஈர்த்திடும் வண்ணம் அந்நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்திட 2011-2012-ல் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2011 ஆகஸ்ட் 25

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் இருக்கின்ற மந்த நிலையைப் போக்கி, சீரழிந்த நிலையைப் போக்கி பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக, இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களின் தரத்தினை மேம்படுத்தி, அந்நிறுவனங்களின் முதலீடுகளைக் கவரும் வகையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டினை உகந்த மாநிலமாக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்பேரில், தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் தொடங்க ஏதுவான சூழ்நிலையை உருவாக்கிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் உதவி மையம் (TN IT Help Desk)**

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பிரிவுகளை தொழில் முனைவோர் நிறுவிட உதவுவதற்காக வலைசார்ந்த உதவி மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-X

### தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICT Academy)

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தனியார் தொழில் துறையின் பிரதிநிதியாகத் திகழும் சி.ஐ.ஐ. (CII)-ன் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயற்படாத ஒரு சங்கமாகும். அது சிறப்பு வாய்ந்த தகவல்



2011 ஆகஸ்ட் 25]

தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னோடிகள் மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நோக்கம், தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் சார்ந்த செயற்களத்திலுள்ள உயர் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், அதன்மூலம் அவர்களுடைய மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கும் மற்றும் பணியில் அமர்த்தப்படக்கூடிய அளவுகளுக்கான தகுதியைப் பெற்றுப் பயனடைவதற்குமேயாகும்.

முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை அமைவிடங்களிலுள்ள மாணவர்களுக்கு ஒரே சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதில் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் தன் கவனத்தை ஒருமுகப்படுத்துகிறது. இதன்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனைக்கேற்ற வகையில் திறமை வாய்ந்த ஒரு புதிய தலைமுறையை உருவாக்கி தமிழகத்தில் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் துறை ஆதாயம் அடையச் செய்கிறது.

## அத்தியாயம்-XI

### தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy)

**தொடக்கம்**

உலகு தழுவி வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் கற்க விரும்புவோர் தமிழ் மொழியைக் கற்கவும் தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை அறிந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கும் வகையில், இணைய வழிக் கல்வி வழங்குவதற்காக தமிழ் இணையக் கல்விக்கழகம் நிறுவப்பட்டது.

**கல்வித் திட்டங்கள்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது மழலையர்க் கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது.

[2011 ஆகஸ்ட் 25

87 நாடுகளைச் சேர்ந்த 9,773 மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 1,280 மாணவர்கள் சான்றிதழ் படிப்பிலும், 19 மாணவர்கள் மேற்சான்றிதழ்ப் படிப்பிலும், 235 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 90 மாணவர்கள் மேற்பட்டயத் தேர்விலும் மற்றும் 77 மாணவர்கள் பட்டத் தேர்விலும் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர்.

பட்டயம் / மேற்பட்டயம் / பட்டப் பாடங்கள் அனைத்தும் முழுமை பெற்றுத் தளத்தில் இடப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைப்பு மையங்கள்**

தமிழர்கள் பயனடையும் வகையில் இந்தியா, அமெரிக்கா, கனடா, மலேசியா, இலங்கை, மொரீசியஸ், சுவிட்சர்லாந்து, செர்மனி, ரியூனியன், ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், பிரான்சு, மியான்மர், தென்னாப்பிரிக்கா, நியூசிலாந்து, பிஜி தீவுகள் ஆகிய 16 நாடுகளில் 46 ஒருங்கிணைப்பு மையங்கள்மூலம் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படுகிறது. மேலும், கல்வி தொடர்பு மையங்களை உலகம் முழுவதும் தமிழர்கள் அதிகம் வசிக்கும் நாடுகளில் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**மின் நூலகம்**

தமிழ் இணையக் கல்விக்கழக மின் நூலகத்தில் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள், அகராதிகள், தமிழ் தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கலைக்களஞ்சியம், பண்பாட்டுக்காட்சியகம், சுவடிக்காட்சியகம் (ஓலை) ஆகியவை மாணவர்கள் மற்றும் பார்வையாளர்கள் உபயோகத்திற்காகத் தளத்தில் இடப்பெற்றுள்ளன.

**குறுந்தகடு வெளியீடு**

பாட நூல்களைக் குறுந்தகடாக வெளியிடும் திட்டத்தின்கீழ், மழலையர், சான்றிதழ், இடைநிலை மற்றும் மேல் நிலை, தமிழ்ப் பயிற்சி, தமிழ்க் கற்போம் ஆகிய குறுந்தகடுகள் உருவாக்கப்பட்டு மாணவர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டுள்ளன.

**சுவடிக் காட்சியகம்**

உ.வே.சாமிநாத ஐயர் சேகரித்த பழந்தமிழ் நூல்களின் சுவடிகளை தேடும் வசதியுடன் மின்நூலகத்திலிடும் பணி



2011 ஆகஸ்ட் 25]

நிறைவுற்றுள்ளது. இதுவரை 6,000 ஓலைகள் தட்டச்சு வடிவில் உரையுடன் தரப்பட்டுள்ளன.

**பண்பாட்டுக் காட்சியகம்**

நாட்டுப்புற கலைகள், கோவில்கள், திருவிழாக்கள், நினைவுச் சின்னங்கள், விளையாட்டுகள் பற்றிய ஒளி—ஒலிப் படத்துண்டுகள் பண்பாட்டுக் காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

**தமிழ்க் கலைக்களஞ்சியம்**

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள 10 தொகுதிகளைக்கொண்ட தமிழ்க் கலைக்களஞ்சியம் தலைப்புச்சொல் தேடும் வசதியுடன் தமிழ் இணையக் கல்விக் கழக இணையதளத்தில் இடப்பட்டுள்ளது. மேலும், தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள குழந்தைகள் கலைக்களஞ்சியத்தை இணையதளத்திலிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இணைய வகுப்பறை**

தமிழை கற்பிக்கத் தேவையான பாடங்களும், இளங்கலை தமிழியல் பட்டக் கல்விக்கான ஒளிவழிப் பாடங்களும் இணையத் தளத்தில் இடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் You Tube-லும் இடப்பட்டுள்ளன.

**தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி**

ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், கையெழுத்துப் பிரதியிலிருந்து ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், மின் அகராதி, தமிழ் சொற்களஞ்சியம் போன்ற பல தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் பல மென்பொருள்களை உருவாக்கும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**TAM/TAB-லிருந்து ஒருங்குறியில் மாற்றம்**

தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அனைத்துப் பாடங்களும் TAM/TAB எழுத்துருவிலிருந்து ஒருங்குறியில் மாற்றப்பட்டுள்ளது. மின் நூலகப் புத்தகங்களும் ஒருங்குறியில் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது.

[2011 ஆகஸ்ட் 25

### செந்தர எழுத்துருக்கள்

ஒருங்குறி (Unicode) மற்றும் அனைத்து எழுத்துரு (TACE) முறைகள் தமிழ்நாடு அரசின் செந்தரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, எழுத்துருக்களையும், விசைப்பலகை இடைமுகங்களையும் உருவாக்கி இலவசமாக அளிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### கலைச்சொல் பேரகராதிகள் வெளியீடு

பல்வேறு பல்கலைக்கழகங்கள் தொகுத்து அளித்துள்ள ஏறத்தாழ 2,50,000 கலைச்சொற்கள் துறைவாரியாகப் பகுக்கப்பட்டு 14 தொகுதிகளாய் வெளியிடப்பட்டுள்ளன.

2,30,000 கலைச்சொற்கள் அனைத்தும் தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் விக்கிபீடியாவின் தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை குறுந்தகடு வடிவிலும் வெளியிடப்படும்.

### தமிழ் இணையக் கல்விக்கழகக் கட்டடம்

தமிழ் இணையக் கல்விக்கழகக் கட்டடத்தின் தரைத்தளம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு, அங்கு தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது இயங்கி வருகிறது. முதல் தளமும், படத்தளம் மற்றும் காட்சி அரங்கமும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## அத்தியாயம்-XII

## அரசு கேபிள் டிவி நிறுவனம்

## (Arasu Cable Television Corporation)

உயர்தரத்திலான கம்பிவட சேவைகளை நியாயமான கட்டணத்தில் உள்ளூர் கம்பிவட இயக்குபவர்கள் வழியாக பொது மக்களுக்கு வழங்கிட அரசு கேபிள் டிவி நிறுவனம் நிறுவப்பட்டது.

தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் நான்கு இலக்கமுறைத் தலைமுனைகளும் (Digital Head ends) விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம் கிராமத்தில் ஒரு தொடர்முறைத் தலைமுனையும்



2011 ஆகஸ்ட் 25]

(Analog head end) நிறுவப்பட்டது. பின்னர், இந்நிறுவனம் செயல்படாமல் முழுமையாக முடங்கியது.

இந்நிலையில், அரசு கேபிள் டிவி நிறுவனத்தை உடனடியாக மறுசீரமைத்து கம்பிவடத் தொலைக்காட்சி சேவையை நியாயமான கட்டணத்தில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணைக்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்திட்ட வழிகாட்டுதலைக்கொண்டு இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளை மறுசீரமைப்பதற்கான அனைத்துத் தீவிர முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தை மறுசீரமைத்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, இந்நிறுவனத்திற்கு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோரை அரசு நியமனம் செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி இந்நிறுவனத்திற்கு வழிவகை முன்பணமாக 3 கோடி ரூபாய் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களை (சென்னை நீங்கலாக) சேர்ப்பதற்காகச் செய்தித் தாள்களில் விளம்பரம்வெளியிடப்பட்டுள்ளது. அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் சேருவதற்கு உள்ளூர் கேபிள் டிவி இயக்குபவர்கள் பேரளவில் ஆர்வம் காட்டியுள்ளனர். இந்நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ள வரையறுக்கப்பட்ட கடைசி நாளான 09-08-2011 வரை 35,030 உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களும்(LCOs), 2,640 பன்முக ஏற்பாட்டுத் துறை இயக்குபவர்களும் (MSOs) ஆக மொத்தம் 37,670 இயக்குபவர்கள் இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளனர். தமிழ்நாட்டில், மொத்தம் உள்ள 40,000 கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களுள் 94 சதவீதம் இயக்குபவர்கள் அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் சேர்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள இலக்கமுறைத் தலைமுனைகள் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், 16 மாவட்டங்களில் புதிய தொடர்முறைத் தலைமுனைகள் நிறுவப்பட்டு வருகின்றன. 11 மாவட்டங்களில் தற்போதுள்ள தனியார் இயக்குபவர்களின் (Private Operators) கட்டுப்பாட்டு

[2011 ஆகஸ்ட் 25

அறைகளை இந்நிறுவனம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகளை வழங்க உத்தேசித்துள்ளது.

தங்களுக்கென தனியாக கட்டுப்பாட்டு அறைகளைக் கொண்டுள்ள பல பன்முக ஏற்பாட்டுத் துறை இயக்குபவர்களும் தங்களுடைய கட்டுப்பாட்டு அறைகளை அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்குத் தர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மிக விரைவில் அரசு கேபிள் டிவி சேவையினைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம்-XIII

## 2011–2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

### தகவல் தொழில்நுட்பத் துறையை நவீனமயமாக்குதல் (Modernisation of Information Technology Department)

தகவல் தொழில்நுட்பத் துறையினை நவீனமயமாக்குதலின் முதற்படியாக, துறையினை முழுமையாக மறு கட்டமைத்து, நவீன பணிச் சூழலை ஏற்படுத்துவதற்காக 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி—2 திட்டத்தின்கீழ் 23 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது. இது மற்ற துறைகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழும்.

### தலைமைச் செயலகத்திற்கான தொழில் வளத்திட்ட (ERP-Enterprise Resource Planning) மென்பொருள்

காகிதப் பயன்பாடற்ற அலுவலகமாக தலைமைச் செயலக தகவல் தொழில்நுட்பத் துறையினை உருவாக்கிடும் பொருட்டு, தொழில் வளத்திட்ட மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இம்மென்பொருளின் பயன்பாட்டுத்திறன் மற்றும் பயனாக்கத்தைப் பொறுத்து இது தலைமைச் செயலகத்தின் மற்ற துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இதற்கென 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் 14.80 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.



2011 ஆகஸ்ட் 25]

### மாநில சேவை விநியோக நுழைவாயில் (State Service Delivery Gateway)

மாநில சேவை விநியோக நுழைவாயில் பல்வேறு துறைகளின் சேவைகளை வழங்கும். தேசிய தகவல் மையத்தினால் ஆதார/திறந்த நிலை மென்பொருள்மூலம் உருவாக்கப்பட்ட மின் மாவட்டத் திட்ட மென்பொருள் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியின்மூலமே கையாளப்படும். மூன்றாம் நபர் விற்பனையாளர்கள்மூலம் தயாரிக்கப்பட்ட மரபு வழி மென்பொருட்களை இதன்மூலம் கையாளும் வகையில் அவற்றை உருமாற்றம் செய்திடவும், தரவுகளை புலம்பெயர்த்திடவும், எழுத்துருக்களை மாற்றிடவும், தொழில்சார் உதவிக்கும் நிதி தேவைப்படுவதால், 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் 10.20 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

### தமிழ் இலக்கியத்திற்கான உரைவிளக்கத் தொகுப்பு (Annotated Corpus for Tamil Literature)

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழிலக்கியங்களைச் செழுமையாகக் கொண்டுள்ளது. மொழியியல் சார்ந்த தமிழ் உரைவிளக்கத் தொகுப்பினை உருவாக்குவதற்கென 2011—2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் 25 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

### பேச்சுத் தரவுதளம் (Speech Database)

தமிழ் இணையக் கல்விக்கழகம் மாணவர்களுக்கென மெய்நிகர் கற்பித்தலை வழங்கத் தொடங்கியுள்ளது. அதற்காக மொழி மற்றும் இலக்கியப் படிப்புகளுக்கான பேச்சுத் தரவுதளங்கள் உருவாக்கப்படும். தமிழ் மொழி மற்றும் இலக்கியங்களைக் கற்பிப்பதற்காக பொதுவான ஒரு பேச்சுத் தரவுதளத்தினை தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கி வருகிறது. இதற்கென 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் 10 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

### அரங்க உபகரணங்கள் (Auditorium Equipments)

தமிழ் இணையக் கல்விக்கழகம் சொந்தக் கட்டடத்தில் அரங்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கத்திற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திட 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் 17 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.